
# சுதேசமித்திரன்


ஜூலை ... 29, 30
16, 23 ஆகஸ்ட் 59

DIGITIZED

JL
m211, N30s
N59.30, 29.30.
208219


தேசமித்திரன்
சுதந்தர மலர்
1959


நிகரற்றது...
உண்மை அழகு...
நீங்கள்
பாராட்டுவது
மர்பி மாடல் 0322
மர்பி 0322 மாடலைப்பற்றி வர்ணிக்கும்பொழுது "அழகு" என்ற பதத்தைத் தான் மக்கள் உபயோகிக்கின்றனர். அதன் அழகான தோற்றத்திற்கும் உன்னத உழைப்புக்கும் பல்லாண்டுகள் பாராட்டப்படவேண்டுமென்றே தயாரிக்கப்பட்டது மர்பி ரேடியோ!
6 வால்வ் • ஆல்வேவ் • 3 பாண்ட் • நிகர விலை ரூ. 375
உள்ளூர் வரிகள் தனி
சிறந்த—
...தோற்றம்
...நாதம்
murphy radio
இல்லத்திற்கு இன்பமூட்டுவது!
விநியோகஸ்தர்கள்:
மஹமத் இப்ரஹீம் கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
லிபர்டி ஹவுஸ், மவுண்டு ரோடு, சென்னை-2.


BUILT FOR ECONOMY
11/12 H.P. ★ 550 R.P.M.
11/13 H.P. ★ 600 R.P.M.
50 வருடங்களுக்கு மேலாக பிரசித்தி பெற்றவை.
காம்ப்பெல்
ஆயில் என்ஜின்கள்
குணாம்சங்கள்:
• திறமை • சிக்கனம்
• உழைப்பு • நம்பகத்தன்மை
• எளிய அமைப்பு
மத்திய, ராஜ்ய அரசினரால்
அங்கீகாரம் பெற்ற தக்காவிக் கடன்
அடிப்படையில் விற்பனையாகின்றன.
6 H.P. ★ 650 R.P.M.
15/16½ H.P. ★ 450 R.P.M.
18/20 H.P. ★ 475 R.P.M.
இந்திய யூனியனுக்கு பூரண விற்பனை ஏஜண்டுகள்:
பாட்லிபாய் அண்ட் கம்பெனி
உரிமையாளர்: போகிலால் லெஹர்சந்த் பிரைவேட் லிமிடெட்
3/153, பிராட்வே, சென்னை. (தலைமை ஆபீஸ்: பம்பாய்)
கிளைகள்: கல்கத்தா, டில்லி, ஆமதாபாத், கான்பூர், விஜயவாடா, செகந்தராபாத் & கோயமுத்தூர்.
Rajesh

—16-8-'59.



# பொருளடக்கம்

Vol: XXX] [No. 29
விகாரி௵ ஆடி 31 (ஆகஸ்ட் 16

வேலைக்கு வழியுண்டா? 3
மக்கள் மன்றம் 9
அரசியல் துக்கடா 10
அஞ்சலி —பாரதிமோகன் 11
இன்பம் எங்கே?
—ஸரோஜா ராமமூர்த்தி 12
ஸினிமா விமர்சனம்
—சாண்டில்யன் 18
நாடகமும் நாட்டியமும்
—ஸஞ்சாரி 20
தலைநகர்த் தபால் 21
இலங்கை லிகிதம் 22
ஸ்ரீ ஸ்வாதித் திருநாள்
—ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் 24
நட்சத்திர பேட்டி 32
மனித குணமும், மிருக குணமும்
—ஜெயலக்ஷ்மி 34
நிழலும் நிஜமும் —சியாமா 44
உங்கள் கால பலன் —பி. வி. ராவ் 53
உள்ளம் ஆனால் வெள்ளம்
—வை. சுப்ரமண்யன் 69
மந்திரவாதி —'கல்வி' 101
எல்லாம் நன்மைக்கே
—கோமதி ஸ்வாமிநாதன் 109

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.


# வேலைக்கு வழி உண்டா?


**1965-66**-ம் ஆண்டு இறுதிக்குள் 6-லிருந்து 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்க வகை செய்வதென்ற முடிவை ராஜ்ய கல்வி மந்திரிகள் மகாநாடு உறுதிப்படுத்தியிருக்கிறது. அரசியல் சட்டத்தில் குறித்த இலக்குக்கு இது மிகவும் குறைந்ததேயாயினும், இதையும் தற்போது அதிகாரிகள் உத்தேசித்துள்ள முறையில் நிறைவேற்றி வைப்பது எளிதல்ல. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கல்வி பெறக்கூடிய குழந்தைகளின் தொகை 337 லட்சம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் அத்தொகையை ஏறக்குறைய மும்மடங்காக்க வேண்டுமென்பது தற்போதைய குறி. இந்நோக்கம் ஈடேற 40 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வைத்துக்கொண்டால் மேற்கொண்டு சுமார் 6½ லட்சம் ஆசிரியர்கள் வேண்டும். இதற்கேற்ப ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களைப் பெருக்குவதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு இந்திய சர்க்கார் உருவான உதவி அளிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். கல்வியை விஸ்தரிப்பதில் சிறுவர்களுக்குப் பகல் உணவு, பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவது போன்ற இனங்களில் ஸ்தல மக்களின் ஒத்துழைப்பைப் பெற சென்னை சர்க்கார் கையாண்டு வரும் முறையை மற்ற ராஜ்யங்களுக்கும் மேற்குறித்த மகாநாடு சிபார்சு செய்திருக்கிறது.


ஆனால், கல்வி விஸ்தரிப்பு நோக்கத்தை இந்நாட்டுப் பொருளாதார நிலைக்கேற்ப இன்னும் குறைந்த செலவில் நிறைவேற்றி வைப்பது சாத்தியமில்லையா என்று மேற்குறித்த மகாநாடு ஆராய்ந்திருக்கலாம். ஆரம்பக் கல்வி கூட்டத்தில், அதாவது 6 முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ஒருவேளைக் கல்வி போதும் என்ற கருத்தைப் பல பிரபல கல்வியாளர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அது ஏற்கப்பட்டிருந்தால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள்,


ஆசிரியர்கள் முதலிய வகைகளில் தற்போதுள்ள வசதிகளைக் கொண்டே ஏறக்குறைய இரு மடங்குச் சிறுவர்களுக்குப் போதிக்க முடியும். மேலும் இதனால் சிறுவர்கள் முக்கியமாக கிராமாந்திரங்களிலுள்ள ஏழைக் குடும்பங்களைச், சேர்ந்தவர்கள், ஒரு நாளில் ஒருவேளை தங்கள் குடும்பத்திற்கு உதவிகரமான வேலைகளைச் செய்யக்கூடும்; அல்லது குடும்பத் தொழில்களைக் கற்றுக்கொள்ளலாம். அவர்களுடைய உழைப்பின் மூலம் உடனடியாகக் கிடைக்கும் அனுகூலத்தைக் கிராமாந்திரங்களில் பல குடும்பங்கள் இழக்கத் தயாராயில்லாதிருப்பதே அவற்றைச் சேர்ந்த சிறுவர்கள் பள்ளி செல்லாததற்குக் காரணம். ஆனால், இத்தகைய அம்சங்களைப்பற்றி மேற்குறித்த மகாநாட்டில் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ஸெகெண்டரி கல்வி கட்டத்துடன் படிப்பை முடிப்பவர்களுக்கு ஏதாவது ஒரு பிழைப்பு கிடைக்கத்தக்கவாறு அக்கல்வி அமைய வேண்டுமென்று மத்திய கல்வி மந்திரி வலியுறுத்தியுள்ளார். தற்போது அத்தகைய நிலைமை இல்லாததால்தான் இளைஞர்களில் பலர் வேறு வழியின்றி கல்லூரிகளில் போய் அடைகின்றனர். உயர்தரப் படிப்புக்கு ஒரு சிலரே இலாயக்காக இருக்க முடியும். அத்தகையோரை மட்டும் பொறுக்கியெடுத்து அவர்களுக்கு சர்வகலாசாலைக் கல்வி அளிப்பதால், அவர்களுக்கும் நன்மையுண்டு; நாட்டுக்கும் க்ஷேமமுண்டு. மற்ற பெருவாரியான இளைஞர்கள் ஸெகெண்டரி கல்வியை முடித்தவுடனே, அல்லது அதற்குப் பிறகு இரண்டு மூன்று வருஷங்கள் ஏதாவது ஒரு தொழில் பயிற்சி பெறுவதைத் தொடர்ந்தோ வேலையில் அமர்வதற்கு வசதி இருக்கவேண்டும். தற்போதுள்ள அத்தகைய பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை போதியதன்று. நம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப நமது இளைஞர்கள் தொழில் பயிற்சி பெறவும், அதே நோக்குடன் ஸெகெண்டரி கல்வி அமையவும் கல்வியாளர்கள் பொருளாதாரத் திட்ட அமைப்பாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தை மத்திய மந்திரி வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு படித்துத் தேறும் மாணவர்களுக்கெல்லாம் வேலை கிடைப்பதெனில் அவ்வளவுக்கவ்வளவு நாட்டில் தொழில்கள் பெருக வேண்டும். அத்தகைய தொழில் வளர்ச்சிக்கு முற்றிலும் அனுகூலமான முறையில் தங்களது தற்போதைய தொழில் கொள்கை அமைந்திருக்கிறதா என்பதை சர்க்கார் ஊன்றிக் கவனிக்கவேண்டும்.





இருவகைத் தந்திரம்
அயூப்கான் சமாதானமுறையிலும்
போர் முறையிலும் பேசுகிறார்



சுதந்திரக் கட்சி
பிறந்து, துரித
வளர்ச்சியடைகிறது


யு.எஸ். வெளிநாட்டுக் கொள்கை
டல்ஸஸ் பாதை


திபேத்
சீனு

## முடியாத பந்தயம்




# மக்கள் மன்றம்

26–7–59 மித்திரன் மிகவும் நேர்த்தியுடன் இருக்கிறது. நேரில் காண முடியாத நட்சத்திரங்களை, மித்திரனில் காண முடிகிறது. ஷா ஹா, எழுதிய புதிரும், விடையும் புதுமையுடன் இருக்கிறது. சினிமா விமர்சனம் மற்ற பத்திரிகைகளைவிட ஒருபடி அதிகமாகயிருக்கிறது. லலிதா ஜகந்நாதன் எழுதிய, 'காதல் பரிட்சை' படிக்கப் படிக்க பரவசம் ஊட்டுகிறது.

இரா. ஆறுமுகம்.
மலையாங்குளம்.

ஃ ஃ ஃ

2–8–59 இதழ் கண்டேன். ஓவியர் ராமு வரைந்த அட்டைப்படம் மித்திரன் வளர்ச்சிக்கு ஒரு சுடர்விட்டு எரியும் தீபம். இத்துடன் அரசியல் துக்கடா, நட்சத்திரப் பேட்டி, திரையில் கண்டிராத காட்சிகள், மனதை உருக்கும் சிறு கதைகள், இவையெல்லாம் சேரும்போது வார ஏடுகளுக்கு, மித்திரன் ஒரு முதல் மந்திரி.

கே. ஆர். ராசியப்பன்.
பெருந்துறை.

ஃ ஃ ஃ

மற்ற எல்லா ஏடுகளும், ராஜாஜி அவர்கள் கூறும் ஒவ்வொரு யோசனையையும் ஏற்காமல் எழுதிவரும்போது, உற்பத்தி தொழில்பற்றி ராஜாஜி அவர்கள் கூறிய நல்லயோசனையைத் தாங்கள் ஆதரித்து, பாராட்டி எழுதியதுபற்றி மிக்க மகிழ்ச்சி. மேலும்–மற்ற பத்திரிக்கைகளில் ஒரு கவிதைகூட வராத போது, 'மித்திர'னில் மட்டும் ஒவ்வொரு இதழிலும் மூன்று கவிதைகள் வருவது பாராட்டக்கூடிய விஷயம். ப. ராதா கிருஷ்ணனின் 'குலப்பெருமை' சிறந்த படைப்பு.

கே. என். உமாபதி.
என். உமா, கோயம்புத்தூர்.

2–8–59ம் வார அட்டைப்படம் மிக பிரமாதம். ஓவியர் ராமு தனது கைத்திறமையெல்லாம் துஷ்யந்தனையும் சகுந்தலையையும் ஓவியத்தின் மூலம் வரைந்து காட்டியது மித்திரன் வாசகர்கள் அனைவர் உள்ளத்திலும் ஆழப் பதிந்துவிட்டது. 'உயிரின் தாகம்' 'குலப் பெருமை' 'தாரா' முதலிய கதைகள் ஒரு நல்ல நீதியை வைத்து எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல நல்ல கதைகளை மித்திரன் தாங்கி வருவதை வரவேற்கிறோம்.

எஸ். ரமணி.
திருச்சி.

ஃ ஃ ஃ

2–8–59–ந் தேதி இதழில் வெளியான உயிரின் தியாகம், மறுமலர்ச்சி, இந்த இரு சிறு கதைகளும் திருப்பித் திருப்பி எத்தனை முறை படித்தாலும் சலிப்புறாத முறையில் அமைந்திருந்தது.

குறைந்த விலையில், பல அம்சங்களைத் தாங்கி வெளியாகும் வாரப் பிரதி சுதேசமித்திரன் ஒன்றுதான் என்பதை துணிவோடும், மகிழ்ச்சியோடும் சொல்லிக் கொள்கிறேன்.

ர. கந்தசாமி,
ராஜகவுண்டம்பாளையம்.

ஃ ஃ ஃ

2–8–59–ந் தேதி இதழில் வெளியான 'அன்புத் தீர்ப்பு' என்ற கதையைப் படித்தவுடன் என்னையும் அறியாமல் கண்ணீர்விட்டேன். அக்கதையை எழுதிய ஆசிரியர் ஸ்ரீ கு. வா. கிருட்டின மூர்த்திக்கு எனது பாராட்டுக்கள். 'தாரா'வை எழுதிய ஆசிரியருக்கும் எனது பாராட்டுக்கள். மித்திரனில் இனிமேல் இப்படிப்பட்ட கதைகளைப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இரா. சீனிவாசன்.
விண்ணமங்கலம்

# அரசியல் துக்கடா...

சுதந்திரக் கட்சியைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய நேருஜி, அதைப் 'பின் தங்கிய கட்சி' என்று வர்ணித்தார்.

—ஒரு செய்தி

'பின்தங்கிய கட்சியா? அப்படியானல் எங்களுக்கு சர்க்கார் பல சலுகைகள் காட்டவேண்டும்' என்று ராஜாஜி கேட்கலாம்!

ஃ ஃ ஃ

இராக் பிரதமர் ரஷ்யா செல்வார்.

—ஒரு செய்தித் தலைப்பு.

'இராக் பிரதமர் ரஷ்யாவிலிருந்து திரும்பினர்' என்ற செய்தித் தலைப்பு சீக்கிரம் வெளியாகும் என நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

இலங்கையில் பத்திரிகைத் தொழில் அபிவிருத்திபற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் நிறுவுவது விரும்பத் தக்கது.

—இலங்கை பிரதமர்.

பத்திரிகைத் தொழில் அபிவிருத்தியடைய கமிஷன் ஒன்றும் நிறுவவேண்டாம்; நிறைய கமிஷன் கொடுங்கள் போதும் என்கிறார் ஒரு பத்திரிகை ஏஜண்ட்.

ஃ ஃ ஃ

இந்த ஆண்டில் கோழி வளர்ப்பு குறித்து 50 விவசாயிகளுக்கு அனுபவ பயிற்சித் தரப்படும்.

—சென்னை செய்தி.

கூரை ஏறிக் கோழி பிடிக்கக் கற்றுக் கொள்ளும் இவர்கள் கூடிய சீக்கிரம் வானம் கீறி வைகுண்டத்தையும் காட்டலாம்!

ஃ ஃ ஃ

செங்குக் கட்டிகளினல் தொல்லைப் பட்டு வந்த கேரள கவர்னர் உடல்நிலை இப்போது குணமாகிவிட்டது.

—ஒரு செய்தி.

கேரள கவர்னர் கம்யூனிஸ்டு ஆட்சியை அமுக்கின மாதிரி கண்ட மருந்தைச் செங்கின் மேல் பூசி, அதை அடக்கி இருந்தால் இரண்டுமே சீக்கிரம் கிளைத்து, அவருக்குத் தொந்தரவு தரலாமென அஞ்சுகிறோம்!

ஃ ஃ ஃ

மேலும் 12 நவீன ஜெட் விமானங்களை வாங்கி இலங்கையின் விமானப் படை பலத்தை விஸ்தரிக்கப்போவதாக பிரதமர் பிரதிநிதிகள் சபையில் அறிவித்தார்.

—கொழும்புச் செய்தி

ஜெட் விமானங்கள் 12 வாங்குவதற்கு இலங்கை பட்ஜெட் அனுமதித்தால் யார் ஆட்சேபிப்பார்கள்?

ஃ ஃ ஃ

சுதந்திரா கட்சித் தலைவர்கள் பரந்த உலகைச் சுற்றிப் பார்க்கவேண்டும்.

—நேருஜி.

சுதந்திரா கட்சித் தலைவர்கள் மந்திரிகளானதும் உலகைச் சுற்றி வராமலா இருந்துவிடுவார்கள்?

ஃ ஃ ஃ

மத்திய அரசாங்க அமைச்சர்கள் தங்கள் அலுவலர்களில் 10 சதவிகிதம் குறைத்துக்கொள்ளலாம்.

—செய்தி.


மத்திய அரசாங்க அமைச்சர்கள் தொகையிலேயே 20 சதவிகிதம் குறையலாமென்ற செய்திக்கு ஆதாரமில்லை!

ஃ ஃ ஃ

சென்னையிலிருந்து திருச்சிக்கு நேரடி பஸ் விட யோசனை செய்யப்பட்டு வருகிறது.

—ஒரு செய்தி.

யோசனை உடனடியாக அமுலுக்கு வரவேண்டியதே!






**27**

## இதயத்தில் விழுந்த அடி!

ராஜாராமன் வீட்டில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ரங்கம்மாள் நிலத்தில் கால் பாவாமல் ஆடி ஓடி வேலைகளைக் கவனித்தாள். தவசுப்பிள்ளை பரமசிவத்துக்குத் தான் பூலோகத்தில் இருக்கிறோமா என்று சந்தேகம் வந்துவிட்டது. சரிகைக் கரை வேஷ்டியும், பட்டு ஜிப்பாவும் கல்யாணப் பரிசென்றால் பூமியா சுவர்க்கமா என்று புரியாமல் விழித்ததில் வியப்பென்ன இருக்கிறது? அருணாசலமும் ஆனந்தக் கடலில் நீந்தினான். ராஜாத்தி மட்டும், 'இந்தாங்க! நீங்களும், உங்கக் கும்மாளமும்! யசோதாம்மாவைப் பாக்க முடியலை. உடம்பு துரும்பா இளைச்சிடிச்சி. சும்மா கிடந்து துள்ளாதீங்க' என்று ஜாடை மாடையாகச் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அருணாசலம் மீசை துடிக்க அவளைப் பார்த்தான். 'என்ன பெண்பிள்ளை நீ? நடக்க வேண்டியபடி நடக்குது. மாமன் மகளைக் கட்டறதுக்கு அத்தை மகன் சொந்தக்காரன். அதுக்குப் போய் ஆயிரம் குத்தம் பேசுறியே' என்று அவளைக் கடிந்து கொண்டான்.

'எல்லாம் நடக்கிறபடி நடந்தாத்தான் மனசு சந்தோஷப்படும். அது கண்ணைக் கசக்கிக்கிட்டு இருக்கறப்போ எப்படி சந்தோஷமா இருக்கிறதாம்?'

ராஜாத்தி பதிலுக்கு அவனைக் கடிந்துகொண்டாள். அந்த வீட்டில் இருந்த ஒன்றிரண்டு பேர்களைத் தவிர, அனைவரும் மகிழ்ச்சியால் பூரித்து இருந்தபோது யசோதா வாடி வதங்கினாள். கவலை இன்னதென்று அறியாமல் வளர்ந்த அந்தப் பேதை கவலையே உருவானாள். கதைப் புத்தகங்களில் வருவதுபோல் திடும் என்று ஏதாவது எதிர்பாராமல் நிகழ்ந்து தன் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைக்காதா என்று ஏங்கினாள். நேற்றுவரை அன்பே உருவாகக் காணப்பட்ட தந்தை இன்று எதிரியாகத் தோன்றினார். பெற்றெடுத்த மகளைப் பாடுபட்டு வளர்த்துப் பெரியவளாக்கிய பின்பு, அவள் மனத்தைப் புரிந்துகொள்ளாமல் இப்படி சதி செய்கிறாரே என்று கலங்கினாள்.

ஒரு வருஷத்துக்கு முன்பு கூடக் குழந்தைபோல் இருந்த அந்த மனம்தான் எப்படி மாறி



விட்டது? இந்த மாறுதலை உண்டாக்கிய அந்தப் பொல்லாத மனிதரை நினைத்து ஏங்கி ஏங்கி ஏன் இப்படி மாய வேண்டும்? 'நான் காதலிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனா? கடிமணம் புரிய வேண்டும் என்றுதான் விரும்பினேனா? தெளிந்த நீரைப்போல் இருந்த என் வாழ்வில் ஏன் இந்த பாஸ்கரன் வந்து குறுக்கிட வேண்டும்?' யசோதா அறைக்குள் அடைந்து தன் மனத்தையே ஏசினாள்.

'உங்கள் மகளுக்கா கல்யாணம்? மிக்க மகிழ்ச்சி' என்று வாழ்த்துப் பாடிவிட்டுச் சென்றவர் காதலில் வாகை சூடவா போகிறார்?'

வெளியே ராஜாத்தி வந்து நின்று கதவை லேசாகத் தட்டினாள். கண்களில் பெருகும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு யசோதா கதவைத் திறந்ததும் அவள், 'அம்மா! விருந்தாளிங்க எல்லாம் வருவாங்களாம். நல்ல புடவையா கட்டிக்கிட்டு பளிச்சின்னு இருங்கன்னு அத்தையம்மா சொல்றாங்க' என்று கூறிவிட்டு, 'அழுதீங்களா அம்மா?' என்று விசாரித்தாள். யசோதாவின் நெஞ்சம் உலர்ந்தது. 'ஆமாம்...ராஜாத்தி! அழுதேன். அழாமல் எனக்குச் சிரிப்பு எப்படி வரும். சொல். உனக்குத் தெரியாதா என் மனத்தைப் பற்றி?'

ராஜாத்தியும் கண்ணீர் பெருக்கினாள்.

'என்னம்மா இப்படி அழறீங்க? கல்யாணமே வேண்டாம்னு அப்பா கிட்டே சொல்லுங்களேன். படிச்சவங்க நீங்க. பயந்தா முடியுமா?'

அதன் பிறகு ராஜாத்தி அங்குதான் நிற்கிறாளா அல்லது வெளியே சென்றுவிட்டாளா என்று எதையும் கவனிக்காமல் யசோதா ஒரு முடிவுக்கு வந்தாள்.

பகல் சாப்பாட்டுக்கு ராஜாராமன் வீட்டுக்கு வரும்போது தன் மனத்தை அவரிடம் ஒளிக்காமல் கூறிவிட வேண்டும். இதனால் இடி இடிக்கும். பூகம்பம் ஏற்படும். ஏன்? பிரளயமே வந்தாலும் வரும். ஆனால், கலங்கக் கூடாது. லதாவைப்போல் துணிவுடன் நிமிர்ந்து நிற்க வேண்டும்.

யசோதா முகத்தைக் கழுவி பொட்டிட்டு வேறு உடை மாற்றிக்கொண்டாள். உற்சாகமாக இருக்க முயன்றாள்.

தெருவில் கார் வரும் சத்தம் கேட்டது. வெளியே வந்தவளை பாலையா புன்முறுவலுடன் எதிர்கொண்டான்.

'என்ன யசோதா! எங்காவது வெளியே போகிறாயா? கொஞ்சம் இரு. ஒரு நிமிஷம். நானும் வருகிறேன்...'

'வேண்டாம்...நான் எங்கும் போகவில்லை.'

'அமர்க்களமாக உடுத்திக் கொண்டிருக்கிறாயே. அதனால் கேட்டேன்.'

'உடுத்திக்கொண்டால் வெளியில்தான் போக வேண்டுமா? வீட்டில் இருக்கக்கூடாதா என்ன?'

பாலையாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

'எதற்கெடுத்தாலும் உனக்குத் தர்க்கம்தான். இந்த லட்சணத்தில் நம் இருவருக்கும் சேர்த்து முடி போடப் பார்க்கிறாங்க...'

யசோதா அலட்சியமாக அவனைப் பார்த்தாள்.

'அத்தான்! உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால் தாராளமாக அப்பாவிடம் சொல்லிவிடுங்கள். நான் கொஞ்சம்கூட வருத்தப்படமாட்டேன். நீங்களும் உங்கள் வாழ்க்கையிலே முதன் முதலாகப் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதாக நான் பெருமைப்படுவேன்...'

'அடடா கற்பனையே!' என்று வியப்பதுபோல் கூவினான் பாலையா. 'அப்படியெல்லாம் யார் சொன்னார்கள்? உனக்கு நான் என்றும் எனக்கு நீ என்றும் தான் தீர்மானமாகிவிட்டதே. இனிமேலா மாறப்போகிறது. நாளைக்குப் பாக்கு வெற்றிலை மாத்திடப் போறாங்க...'

யசோதா ஏதும் கூற வாய் திறப்பதற்குள் ராஜாராமன் காரில் வந்து இறங்கினார். இருவரும் ஒன்றாகப் பேசிக்கொண்டு நிற்பதைப் பார்த்து மகிழ்ந்தவாறு படி ஏறி உள்ளே வந்தார். யசோதா தந்தையைக் கவனியாதவாறு விருட்டென்று உள்ளே சென்றுவிட்டாள். அவர் பாலையாவின் பக்கம் திரும்பி, 'என்ன தம்பீ! எங்காச்சும் வெளியே கிளம்பினீங்களா என்ன?' என்று கேட்டார்.

'இல்லை மாமா.' பாலையாவின் குரல் உற்சாகம் இழந்து ஒலித்தது


'காரை எடுத்துக்கிட்டுப் போயிட்டு வாங்களேன்.'

'அது வராது மாமா.'

'வராம என்னப்பா? கல்யாணம் முடிஞ்சிட்டா யசோதா தங்கமா நடந்துக்கிடும். பரம சாதுப் பொண்ணப்பா அது. எல்லா குணமும் திலகத்தைப்போல. எதிர்த்து ஒரு வார்த்தை பேசாது.'

ராஜாராமன் உற்சாகத்துடன் பேசிக்கொண்டு போனார். சொற்கள் அனைத்தும் கணீரென்று ஒன்றுவிடாமல் யசோதாவின் அறைக்குள் புகுந்து ஒலித்தன. செவிகள் இரண்டையும் பொத்திக்கொண்டாள் அவள். சுருதி கலைந்த வீணையின் ஒலியைப் போல், மணமிழந்த மலரைப் போல், இனிமை இல்லாத் தமிழைப்போல் அந்தச் சொற்கள் அவளுக்கு வேதனையை அளித்தன. சற்றுமுன் துணிவுடன் எது வந்தாலும் எதிர்த்து நிற்க வேண்டும் என்று உறுதி பூண்டவள் சடுதியில் கோழையானாள். கண் மை கரைய கண்ணீராகப் பெருக்கினாள்.

மாமனும் மருமகனும் பேசிக்கொண்டே உள்ளே வந்தார்கள். வீட்டில் எங்கு பார்த்தாலும் வரப்போகும் திருமணத்தை வரவேற்கும் சின்னங்கள். நாளை நிச்சயதார்த்தத்துக்கென்று



எமது மனமார்ந்த
சுதந்திர தின வாழ்த்துக்கள்!

ஜெயபாரதம் பிரம்பு நாற்காலிகளையே வாங்குங்கள். அவை ஊக்கமான உழைப்பினால் பொருத்தமான அளவினால் கண்ணைக் கவரும் எனாமல் வர்ணங்களால் தயாரிக்கப்பட்டவை.

ஸ்ரீ ஜெயபாரதம் & கோ,
சென்னை-14.

செண்டு செண்டாக மல்லிகைச் சரங்கள் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. அத்தனையும் அன்று காலை கமலாபுரத்திலிருந்து பம்பாய் எக்ஸ்பிரஸ் மூலமாக வந்தவை. வாழைப்பழக் குலைகள் பசுமையும், மஞ்சளுமாக சாமான் அறையில் தொங்கின. கறிகாய்கள் கூடைகள் நிரம்பக் காணப்பட்டன. ரங்கம்மாள் சரிகைக் கரையிட்ட புடவை உடுத்தி வாயில் ஈ புகுந்தது தெரியாமல் அலைந்துகொண்டிருந்தாள். மாமனும், மருமகனும் ஒன்றாகப் பேசிக் களித்தவாறு வருவதை மகிழ்ச்சியுடன் கண்டாள். நெடுநாளைய கனவு நினைவாக மலரும் தருணமல்லவா?

'என்ன தம்பி! சாப்பாட்டுக்கு நேரம் செஞ்சிட்டியே' என்று கூறி இலையைப் போட்டாள்.



''சில்க் கொடி வேணுமா? கதர் கொடி வேணுமா? இல்லே, காகிதக் கொடியே போதுமா?''

''துணி உலர்த்தக் கொடி வேணும்!''

'யசோதா சாப்பிட்டதா?' என்று ஒரு நாளும் இல்லாத திருநாளாக விசாரித்தார் ராஜாராமன்.

'இல்லே தம்பி! அதையேன் கேக்குறே போ. அது 'ரூம்பி'லேயே அடைஞ்சுகிட்டு வெளியே வரதே இல்லே. கல்யாணப் பொண்ணாவா இருக்குது அது? காலையிலே ராஜாத்தி காப்பி பலகாரம் எடுத்துட்டுப் போனா. ஒண்ணுகூடத் தொடவே இல்லே. கேட்டா தலைவலி அது இதுன்னு...'

பாலையா தாயைக் கோபத்துடன் விழித்துப் பார்த்தான்.

'சும்மா இரும்மா! ஏதாச்சும் பேசிக்கிட்டு...'

'பார்த்தியா தம்பி பார்த்துக்கோ! கழுத்திலே மூணு முடிச்சு போடறத்துக்குள்ளே நீயும், நானும் வேண்டாதவங்களாயிட்டோம்...' கேலியும், கோபமும் கலந்த குரலில் நீட்டி முழக்கினாள் ரங்கம்மாள்.


ராஜாராமன் இதொன்றையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. பரமசிவத்தை அழைத்து யசோதாவைக் கூப்பிடச் சொன்னார்.

கலைந்த கேசத்துடனும், சிவந்த கண்களுடனும் யசோதா சாப்பிடும் கூடத்துக்கு வந்தாள். மகளின் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டார் ராஜாராமன். கோடையில் நீரின்றித் துவளும் முல்லைக் கொடியைப்போல் வாடி வதங்கிய தோற்றம். 'கன்னத்தில் இருந்த செம்மை எங்கே? ஏனிப்படி குழந்தை இளைத்துவிட்டாள்?'

'சாப்பிடவில்லையாமே அம்மா. சாப்பிட வாயேன்...'

'வேண்டாம்ப்பா...'





'ஏம்மா?'

'ஒண்ணும் பிடிக்கலே அப்பா.' குழந்தைப்போலப் பேசினாள் அவள்.

ராஜாராமன் கடகடவென்று சிரித்தார்.

'ஏம்மா பிடிக்கலே? கல்யாணம் ஆனதும் வேப்பம்பட்டுக்குப் போகணுமேன்னு நெனக்கிறே. அதாங் கிடையாது! தம்பி இருக்கிற நில புலன்களை வித்துட்டு இங்கே வந்திருவான். நீ அங்கே போயிட்டா எனக்கு யாரும்மா இருக்காங்க?'

அவள் தலை கவிழ்ந்தவாறு நின்றிருந்தாள்.

பரமசிவம் தட்டை எடுத்து வந்து வைத்தான். யசோதா அவனை நிமிர்ந்து பார்த்துக் கோபத்துடன் விழித்தாள்.

'ஏ! பரமசிவம்! தட்டை எடுத்துப் போ...'

யசோதா உரத்துப் பேசி அன்றுதான் அவன் முதன் முதலில் பார்த்தான். மகளின் கோபத்தைக் கண்டு தந்தை அதிர்ந்து போனார்.

'பாத்தியா தம்பி பாத்துக்கோ' என்று அடங்கியிருந்த தம்பியின் கோபத்துக்கு விசிறினாள் ரங்கம்மாள். முன்கோபியான ராஜாராமனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. எழுந்தார் விருட்டென்று. அடுத்தகணம் யசோதாவின் பட்டுக் கன்னத்தில் பளாரென்று ஒரு அறை விழுந்தது. அந்த வீட்டில் இருந்த அத்தனை பேரும் செயலிழந்து நின்றார்கள். தெருவில் கார் கிளம்பும் சத்தம் கேட்டது. கன்னத்தில் விழுந்த அடி இதயத்தில் விழுந்தது. துணிவே உருவானாள் யசோதா.

(தொடரும்)

சினிமா விமர்சனம்: சாண்டில்யன்

# 'மனைவியே மனிதனின் மாணிக்கம்'

'ரேஸம் டி வி என்' தயாரிப்பான 'மனைவியே மனிதனின் மாணிக்கம்' சம்பிரதாயப் பாதையில் செல்லும் ஒரு பழங்கதை. அநேக வருஷங்களுக்கு முன்பு டைரக்டர் எச். எம். ரெட்டி தயாரித்த 'கிருகலக்ஷ்மி' என்ற படத்தைப்போன்ற ஒரு படம் இது. அன்பான மனைவி வீட்டிலிருக்க புருஷன் சாகசக்காரியிடம் சிக்குண்டு தன் மனைவி மக்களைத் துன்பத்திற்குள்ளாக்கும் பழைய பல்லவி இந்தப் படத்திலும் திரும்ப பாடப்படுகிறது. இதில் நாம் ரசிக்கக்கூடிய அம்சமும் ஒன்றிருக்கிறது. தக்ஷிணாமூர்த்தி என்ற புது நடிகர் ஒருவர் இதில் தோன்றித் தமது பாகத்தைப் பிரமாதமாகச் செய்திருக்கிறார்.

## கதை, வசனம்

படத்தில் காணப்படும் கதை இது:

அன்பும் பண்பும் பொங்க ஆனந்தமாக வாழ்ந்து வந்தாள் லக்ஷ்மி. லக்ஷ்மியின் இன்ப வாழ்வில் துன்பப் புயல் வீச ஆரம்பித்துவிடுகிறது. அவள் கணவன் சுந்தர், கலிவரதன் என்ற மோசக்காரனின் வலையில் விழுந்துவிடுகிறான். அதன் பயனாக மேனகா என்ற சாகசக்காரியின் அழகில் மயங்கி, அவளது ஆசைக் காதலனாக மாறுகிறான். அதன் விளைவாக ஆடம்பரச் செலவுகளுக்குப் பணத்தை வாரி இறைக்க ஆரம்பிக்கிறான்.

சுந்தரின் தவறான போக்கைக் கண்டு அவன் தந்தை சண்முகத்தின் உள்ளத்திலே வேதனைப் பூகம்பம் வெடிக்கிறது. லக்ஷ்மி சோகத்தின் சிகரமாகக் கண்ணீர் வடிக்கிறாள். லக்ஷ்மியின் சகோதரனான மணி, அவமானமும் ஆத்திரமும் அடைகிறான். அவனது அன்புக்காதலி கமலா, சுந்தர் திருந்த வேண்டுமானால் கலிவரதனின் பூர்வாங்கத்தைக் கண்டுபிடித்துப் போலீஸில் ஒப்படைக்க வேண்டுமென யோசனை கூறுகிறாள். மணி தன் தங்கையின் நல்வாழ்வுக்காக அந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறான். இதற்கிடையில் சுந்தர் மேனகாவிற்கு வீடு வாங்கக் கையில் பணமில்லாத நிலையில் வீட்டில் திருடுகிறான். அதோடு அளவுக்கு மீறிய குடிபோதையோடு வீட்டிற்கு வருகிறான் அவன் நடவடிக்கையைக் காண இஷ்டப்படாத சண்முகம் தீர்த்த யாத்திரைக்குக் கிளம்பிவிடுகிறார்.

கேட்பாரற்ற நிலையில் தனது வியாபார ஸ்தாபனமான இந்தியா ஏஜன்ஸியை விற்கிறான் சுந்தர். அதோடு வீடு வாசலையும், லக்ஷ்மியின் நகை நட்டுகளையும் விற்கிறான். குழந்தை ரவியையும் லக்ஷ்மியினிடமிருந்து பிரிக்கிறான். இந்நிலையில் ஏற்கெனவே லக்ஷ்மியின்மீது மையல் கொண்டிருந்த கலிவரதன் ஒரு சதி திட்டத்தை வகுக்கிறான். அதன் விளைவாக ரவியைத் தந்திரமாகக் கடத்திச் சென்று, பல்லாவரம் ஒண்டி பங்களாவில் அடைத்து வைக்கிறான். அதோடு சுந்தரையும் மேனகாவையும் சரோஜாவின் நடனத்தைப் பார்க்க அழைத்துக் கொண்டு போய் அமர்த்திவிட்டு, சுந்தரின் வீட்டிற்குச் செல்கிறான். எதிர்பாராதவிதமாக அவனைப் பார்க்க நேர்ந்த மணி, சந்தேகத்தின்பேரில் அவனைப் பின்தொடர்ந்து செல்கிறான். இதற்கிடையில் கலிவரதன் லக்ஷ்மியினிடம் ரவியின் சங்கிலியைக் காட்டி, ரவியும் சுந்தரும் கார் விபத்துக்கு ஆளாகிப் பேச்சு மூச்சற்ற நிலையில் பல்லாவரம் ஒண்டி பங்களாவின் அருகில் விழுந்து கிடப்பதாகப் பொய் சொல்லி, அவளைக் கடத்திக்கொண்டு போய்விடுகிறான்.

கடைசியாக மணியின் உதவியாலும் வேலைக்காரன் முயற்சியாலும் லக்ஷ்மியும் குழந்தையும் காப்பாற்றப்பட்டு, துஷ்டர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

இந்தக் கதைக்கு 'மக்களன்பன்' தீட்டியுள்ள வசனத்தில் உள்ளத்தைத் தொடக்கூடிய இடங்கள் ஏதுமில்லை யென்றாலும் பொதுவில் வசனம் பாதகமில்லை.





'மனைவியே மனிதனின் மாணிக்கத்'தில் சுந்தராக நடிக்கும் பாலாஜியும் மேனகாவாகத் தோன்றும் விஜயகுமாரியும்.

## நடிப்பு, டைரக்ஷன்

இந்தப் படத்தைப் பார்த்த பின்பு நம் மனத்தில் நிற்பவர் சுந்தர் வீட்டு வேலைக்காரனாக வேஷம் போட்டுள்ள தக்ஷிணாமூர்த்தி என்பவர்தான். முதல் தரமாக நடித்திருக்கிறார். பெரிய காவி அங்கிசை அவர் 'அல்கா' பாஷையில் பேசி நடித்துக் காட்டுவது ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது. அவர் இப்படத்தில் கையாளும் பாஷை கீழ்த்தரமானாலும் நடிப்பு உயர்தரம். இந்த ஹாஸ்ய நடிகரைப் படமுதலாளிகள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


கதாநாயகன் வேஷத்தைப் போட்டுள்ள பாலாஜியின் நடிப்பு திருப்திகரமாயில்லை. பல இடங்களில் அவர் சிவாஜி கணேசனைப்போல் நடிக்கப் பிரயத்தனப்படுகிறார். ஆனால், இமிடேஷன் இமிடேஷன்தானே. அதற்குள்ள மதிப்புதான் பாலாஜியின் நடிப்பிலும் இருக்கிறது.

கதாநாயகியாகவரும் பண்டரிபாய் வழக்கம்போல் அடக்கமாக நடித்திருக்கிறார். உணர்ச்சி பொங்க வேண்டிய கட்டங்களிலும் அதிக அடக்கத்தைக் காட்டியிருக்கிறார். சாகசக்காரி மேனகாவாகத் தோன்றும் விஜயகுமாரிக்கு நடிக்க அதிக சந்தர்ப்பமில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் ஓரிரண்டு இடங்களில் நடிப்பு சுகமில்லை.

தங்கவேலு காமிக் நன்றாயிருக்கிறது. திருட்டுக் காதல் செய்யுமிடங்களில் சாமர்த்தியத்தை நிரம்பக் காட்டியிருக்கிறார்.

இப்படத்தில் வேம்புவின் டைரக்ஷன் பிரமாதமில்லை, ஆனால் பாதகமில்லை. படத்தில் குழப்பமில்லாததே அதற்குச் சான்று. ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு அம்சங்கள் பாதகமில்லை.

பொதுவில் படம் பரம சுமார்.



## விடை கொடு தாயே

பாண்டியன் நாடக மன்றத்தின் முதல் நாடகமான 'விடை கொடு தாயே'. ஆகஸ்ட் 9-ந் தேதி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி சபை ஹாலில் மேடை ஏறியது.

அந்நாடகத்தின் மிகச் சிறப்பான அம்சம் வசனம். 'முரசொலி' ஸ்வர்ணம் எழுதியது. முழுக்க முழுக்க துடிதுடிப்புடன் துள்ளி ஓடும் நடை. அவசியமான இடங்களில் அழகான அடுக்கு மொழிகள், சுவையான சொற்றொடர்கள். கதைப் போக்கின் காட்சிகள் சிற்சில சமயம் சுணங்கி நின்றபோதெல்லாம் வசன ஜோடனை வாகாக முட்டுக் கொடுத்து சுரத்து கெடாமல் பார்த்துக் கொண்டது.

நவீனமான ஓர் சூழ்நிலையை நாசூக்காக உருவாக்கி, கற்பின் உண்மை சொரூபத்தை எக்கச்சக்கமான கோணங்களிலிருந்து சித்தரித்துக் காட்டி, நாடகக் கதைக்கு நிரவலாக ஊட்டமளித்திருக்கிறார் அதன் ஆசிரியர்.

'தேவி'யாகத் தோன்றிய மனோரமாவின் நடிப்பு பிரமாதம். சோகக் கட்டங்களிலும்சரி, மற்றும் இசை கேடாக சிக்கித் தவித்து சமாளிக்கும் கட்டங்களிலும்சரி அவரது பேச்சும், நடிப்பும் சரியாக போட்டியிட்டன.

அடுத்தபடி 'கணக்குப் பிள்ளை' வேஷம் ஏற்றியவரைக் குறிப்பிடவேண்டும். அவர் அப்படியே அப்பாகத்தோடு ஒன்றிப்போய், ஊறித் திளைத்தார்.

'வைரம்' ஓர் முரடன். ஆகவே, முரட்டு நடையுடன் துடுக்கான பேச்சும் அவரிடம் சேர்ந்திருந்தது. ஆனால், அப்பாகத்தில் வந்தவரது நடிப்பில் பேச்சுக்கேற்றளவு வேகம் இல்லை. யாரோ ஒரு பிரபல சினிமா 'வில்லன்' நடிகரை மனதில் வைத்துக்கொண்டு அவர் நடிக்க முயன்றதாகத் தோன்றியது.

'தேவி'யின் தந்தையாகவும், சிற்றன்னையாகவும் வந்தவர்கள் சிரமப்பட்டு நடித்தனர். 'காவேரி'யும் அவரது காதலனும் பரவாயில்லை. 'செல்வ'மாக நடித்தவர் இன்னும் அதிகமாக கருத்தூன்றி பிரயாசைப்பட்டிருந்தால், அப்பாகத்துக்குச் சிறப்பு கூடியிருக்கும்.

கவர்ச்சிகரமான ஓரிரு நடனங்களும் நாடகத்தில் இடம் பெற்றிருந்தன.

தி. மு. க. அன்பர்களின் நாடகமானதால், இன்றைய அரசியலும் ஆங்காங்கு கிண்டலாக தலைநீட்டியது. தெய்வ நிந்தனையும் புரையோடி இருந்தது.

சட்ட சபை உறுப்பினர் ஸ்ரீ மு. கருணாநிதி நாடகத்துக்குத் தலைமை தாங்கி நடிகர்களின் திறமையைப் புகழ்ந்தார்.

## மிஸ். கமலி

காலஞ்சென்ற எஸ். வி. சௌந்தரராஜன் நேர்த்தியான ஹாஸ்யச்சுவையுடன் வசனங்களை அமைத்திருக்கும் 'மிஸ் கமலி' நாடகம் 'மதராஸ் ஆர்டிஸ்ட்ஸ்' எனும் புது சபையின் துவக்க விழாவையொட்டி ஆகஸ்ட் 8-ந் தேதி நடிக்கப்பட்டது. ஸ்ரீராம் கலைச் சங்கத்தினர் அதில் பங்கெடுத்துக்கொண்டனர்.

அக்கதைக்கு ஆசிரியர் வி. வி. ரங்கப்பா. திறம்பட அந்நாடகத்தை கே. கே. சம்பத்குமார் டைரக்ட் செய்தார்.

'தம்பி' கே. கோபாலன், 'வேம்பு' கிருஷ்ணசாமி ஆகிய இருவரது ஹாஸ்யக் கூத்து பலே ஜோர். 'கோபாலய்



யர்' வி. நாகராஜன் நடிப்பு ஒரே ஜோராக இருந்தது.

'கமலா' பாகத்தில் தோன்றிய குமாரி ஜயலக்ஷ்மி சுமாராக நடித்தார். முயற்சித்து உழைத்தால் அப்பாத்திரத்துக்கு நிறைய அவர் களையூட்டலாம். 'லைலா' சாந்தா தேவலை.

நாகராஜுனாக வந்த ஜே. வி. எஸ். பரவாயில்லை. 'மங்களம்' எஸ். வாசன், 'அத்தை' ரேவதி, 'கருப்பாயி' எம். ஆர். ராதா முதலியவர்களும் கூடிய மட்டில் உணர்ந்து நடித்தனர். சுப்பிரமணியன், எஸ். ராமசுப்பிரமணியன் இருவரும் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

காட்சிக்கு காட்சி, படுதா இழுக்கும் காட்சி ரசிகர்களின் பொறுமையை மிகவும் சோதித்தது.

நல்ல பொழுது போக்குக்கேற்ற அந்நாடகத்துக்கு அன்றைய தினம் சபா நாயகர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் வந்திருந்து பாராட்டினார். சிவாஜி கணேசனும் மேடைக்கு வந்து நடிகர்களின் திறமையை மெச்சினார்.

—ஸஞ்சாரி.

★

# கலைக்கப்பல்

## ஸ்ரீ ராமச்சந்திரனின் உரை

நாகார்ஜுனக்கொண்டா சிற்பங்களின் நேர்த்தியையும் அவற்றின் வரலாற்றையும் கருத்தையும் சென்ற வியாழக்கிழமையன்று பேரறிஞர் ஒருவர் எடுத்துரைக்கக் கேட்டார்கள். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், சங்கத்தை அடுத்த மைதானத்தில் நடந்த கூட்டத்தில் இந்தியாவின் தொல் பொருள் இலாகாவின் துணை டைரக்டர் ஜெனரல் ஸ்ரீ டி. என். ராமச்சந்திரன், சிற்பப் படங்களைக் காட்டி அரியதொரு உரை நிகழ்த்தினார். புத்த பிரானின் வாழ்க்கை வரலாற்றை ஜீவகளைத் ததும்பும் அற்புத சிற்பங்களில் வடித்திருப்பதைக் கண்டு மகிழும் வாய்ப்பு இங்கு கிடைத்தது. பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற தொல் பொருள்துறை நிபுணர் ஸ்ரீ ராமச்சந்திரன் வெவ்வேறு ஆதாரங்களை அழகுற எடுத்துக்காட்டி நாகார்ஜுனக் கொண்டாவின் விந்தை சிற்பங்களை விளக்குவதை, டாக்டர் கிருஷ்ணன் தலைமையில் திரளான தமிழ் மக்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீ அ. வெ. குப்புசாமி, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஆகிய இருவருடைய புது நிர்வாகம் வெகு ஜரூராக சங்க அலுவல்களைத் துவக்கியிருக்கிறது. இம்மாதம் ஐந்து இலக்கிய கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து முன்கூட்டியே அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இந்த உத்சாகம் இறுதிவரை நீடித்து ஆண்டு பூராவும் மிக வெற்றிகரமாக கூட்டங்கள் பல நடக்க வேண்டும். இலக்கிய நடவடிக்கைகள் பெருக வேண்டும் என்ற விருப்பம் நடைமுறையில் நிறைவேறுமாக!

## தென்னகத்திற்குப் பெருமை

தென்னாட்டினர் ஒருவருக்குத் தனிச் சிறப்பு ஒன்று கிட்டியிருக்கிறது. அகில இந்திய வைத்ய விஞ்ஞானக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ பி. கே. துரைஸ்வாமி என்ற பிரபல பேராசிரியரை, இங்கிலாந்து ராயல் காலேஜில் பேராசிரியர் பட்டங் கொடுத்துக் கௌரவித்திருக்கிறார்கள். குழந்தைகள் ஊனத்தைப் போக்கும் துறையில் உலகப் புகழ்கொண்ட அவரை பிரிட்டிஷ் வைத்யர்கள் மட்டுமின்றி, அமெரிக்க வைத்யர்களும் ஏற்கனவே கௌரவித்துவிட்டனர். வைத்திய விஞ்ஞானத் துறையில் சிறப்பான பணி செய்துவரும் பேராசிரியர், நாடே பெருமிதங்கொள்ளக்கூடிய புகழடைந்தவர். அவரது மேதையினால் அவர் பணி செய்யும் அகில இந்தியக் கழகம் மேன்மேலும் சிறப்புறுமாக!

## ஸம்ஸ்கிருத போர்டு

இந்திய அரசாங்கம் மத்ய சம்ஸ்கிருத போர்டு ஒன்றை நிறுவியுள்ளது. சம்ஸ்கிருத மொழியைப் பிரபலப் படுத்துவது பற்றியும், அதைப் பேணி வளர்ப்பது பற்றியும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறி உதவுவதற்கானது இந்த போர்டு. இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதியும் சம்ஸ்கிருத பேரறிஞருமான ஸ்ரீ பதஞ்சலி சாஸ்

நிரியார் போர்டின் தலைவராக இருப்பார். ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து இயங்கத் துவங்கும் இந்த போர்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பதவியில் இருக்கும்.

சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் வி. ராகவன், காசி சர்வகலாசாலையைச் சேர்ந்த ஸ்ரீ ஏ. என். ஜா, ஹரித்வார் குருகுல காங்கிரி சர்வகலாசாலையைச் சேர்ந்த ஸ்ரீ இந்திரா வாசஸ்பதி முதலானோர் இந்த போர்டில் அங்கம் வகிக்கிறார்கள். வெவ்வேறு கட்டங்களிலுமான வடமொழிக் கல்வி முறை, பாடத் திட்டம், போதனைமுறை பயிற்சி பரீட்சை ஆகியவை குறித்து இந்த போர்டு யோசனை கூறும். பழங்காலத்திய பாடசாலை முறை மலர்ச்சிக்கும் வடமொழி ஆராய்ச்சிக்கென மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்கும் இந்த மத்ய போர்டு திட்டம் வகுக்கும். வடமொழியில் சிறப்பான நூல்களுக்கு அரசாங்க விருதுகள் வழங்குவது சம்பந்தமாகவும் சம்ஸ்கிருத போர்டு இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறி வரும்.

## ஸ்தல வசதிகள்

தலை நகரில் பால் சம்பந்தமான நிலைமை வரும் செப்டம்பரில் திருந்திவிடும். தில்லி பால் சப்ளைத் திட்டம் செப்டம்பர் மாதம் அமுலுக்கு வரப் போகிறது. தலைநகரில் பாலுக்கு ஏகப்பட்ட விலை சொல்லிக் கொள்ளை லாபம் அடித்தவர்களின் அட்டகாசம் முடிவுறும். அதுவும் நிறையத் தண்ணீர் ஊற்றி மக்களை ஏமாற்றியவர்களுக்கு இந்த பால் சப்ளைத் திட்டம் படிப்பினையாக இருக்கும். இந்தத் திட்டம் ஆகஸ்டிலேயே அமுலாயிருக்க வேண்டியது. இதை முன்னிட்டுத்தான், பால்காரர்கள் இப்போது பால் விலையை வழக்கத்திற்கு விரோதமாகக் குறைத்திருக்கிறார்கள். மத்ய பால் பண்ணை இயங்கத் துவங்கியதும் தரமான பாலை நியாய விலையில் கொடுத்தால் மக்கள் அதுவும் நடுத்தர வகுப்பினர் பெரிதும் பயனடைவார்கள்; அரசாங்கத்தை வாயார வாழ்த்துவார்கள்.

★

# இலங்கை விஷயம்

★

இலங்கை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பொதுச் சபைக் கூட்டம் இவ்வாரம் நாவலர் மண்டபத்தில் பேராசிரியர் ஸ்ரீ மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற பொழுது பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ரூபாய் பதின்மூன்று லட்சம் செலவில் திருகோணமலையிலே தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்காக அஸ்திவாரமிடப்பட்டிருக்கும் ஸ்தலத்தில் விஞ்ஞானக் கல்விக் கூடங்களை உடனடியாக அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதென்றும் மற்ற பிரிவுக் கட்டடங்களைக் காலக்கிரமத்தில் கட்டுவதென்றும் பொதுச் சபை முடிவு செய்திருக்கிறது. பல்கலை இயக்கத்தைப்பற்றி பொதுஜனங்களிடையில் தீவிரமாகப் பிரசாரம் செய்வதற்கும் பல்கலைக் கட்டடங்களைக் கட்டியெழுப்பத் தேவைப்படும் பல லட்சம் ரூபாய்களை நன்கொடையாக வசூலிப்பதற்கும் வழிவகைகளைச் சிபார்சு செய்வதற்காக ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் தலைமையில் ஸ்ரீ ராஜதுரை, ஸ்ரீ நித்தியானந்தன் ஆகியோரடங்கிய உபகமிட்டியின் அறிக்கை விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தானங்களிலே சிறந்ததான கல்வித் தானத்துக்காக வாரி வழங்கும் கொடை வள்ளல்கள் தமிழ் மக்களிடையில் ஏராளமாக இருக்கிறார்கள் என்றும் தமிழ்க் குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வி பயில ஒரு பல்கலைக் கழகம் இல்லாத குறையை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டினால், போதிய அளவு நிதி கிடைப்பது நிச்சயமென்றும் உபகமிட்டி தனது யாதாஸ்தில் குறிப்பிட்டிருந்தது. தெருத் தெருவாக, வீடு வீடாகச் சென்றும் வீரகேசரியில் கட்டட நிதியொன்று துவக்கியும், கூப்பன்கள் வெளியிட்டும் கட்டடங்களுக்குத் தேவையான ஐம்பது லட்சம் ரூபாயைத் திரட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.



## இரண்டாவது வைத்தியக் கல்லூரி

கொழும்பில் இருக்கும் வைத்தியக் கல்லூரியில் போதிய மாணவர்களுக்கு இடமில்லாதபடியால் இன்னொரு வைத்தியக் கல்லூரியை ஆரம்பிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த வைத்தியக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்துமாறு சுகாதார மந்திரியைப் பேட்டிகண்டு வற்புறுத்துவதென்று தமிழ்ப் பல்கலை இயக்கப் பொதுச்சபை தீர்மானித்திருக்கிறது. கல்வி விஷயத்தில் யாழ்ப்பாணம் புறக்கணிக்கப்படுவதாக ஒரு தப்பு எண்ணம் தமிழ் மக்களிடையில் ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் பல்கலைக் கழகம் கண்டியினருகிலுள்ள பேராதனையாவில் இருப்பதுடன் புதிதாக ஏற்பட்டுள்ள இரு சிங்கள பௌத்தப் பல்கலைக் கழகங்களும் கொழும்பில் இருக்கின்றன. தமிழ் மக்கள் நிறுவவிருக்கும் புதிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும் கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலையில் ஏற்படுத்தவிருக்கிறார்கள். தமிழர்களுக்கு கொழும்பிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் இடமில்லாதபடியால் யாழ்ப்பாணத்தில் ஒரு உயர்தர தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று தமிழர்கள் ஏகமனதாகக் கோரினார்கள். இதற்கு முதலில் தலையசைத்த கல்வி மந்திரி கடைசி நேரத்தில் கை விரித்துவிட்டார். இதுவும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த நிலைமையில் இரண்டாவதாக நிறுவ உத்தேசித்திருக்கும் வைத்தியக் கல்லூரியையேனும் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்குத் தேவையான சகல வசதிகளும் யாழ்ப்பாணத்தில் இருப்பதாயும் தமிழ் மக்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

## லஞ்ச விசாரணை

மந்திரிகள்மீதும் அரசாங்கக் கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் மீதும் சுமத்தப்படும் லஞ்சப் புகார்களுக்கு ஒரு அளவேயில்லாமற் போய்விட்டது. குறிப்பாக தபால் தந்தி இலாகா மந்திரிமீது பார்லிமெண்டிலேயே பகிரங்கமாக லஞ்சப் புகார்கள் செய்யப்பட்டன. இந்த லஞ்சப் புகார்களைப் பற்றி விசாரணை செய்ய ஒரு விசேஷக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்று எல்லா எதிர்க் கட்சிகளும் ஏகமனதாக அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன. ஆனால், இம்மாதிரியான ஒரு விசேஷக் கமிஷனை நியமிக்க அரசாங்கம் தயாராயில்லை. ஏற்கனவே ஒரு லஞ்ச விசாரணைக் கமிஷன் இருப்பதாயும் லஞ்சக் குற்றச்சாட்டுகளை சுமத்துகிறவர்கள் அதனிடம் புகார் செய்து குற்றவாளிகளைத் தண்டனைக்கு உட்படுத்தலாமென்றும் இதைவிட்டு ஒரு விசேஷக் கமிஷன் வேண்டுமென்று அரசாங்கத்தின் பெயரை அசடாக்க அரசாங்கத்தின் எதிரிகள் செய்யும் சதியென்றும் பிரதமர் கூறியிருக்கிறார். தற்சமயமிருக்கும் லஞ்ச விசாரணைக் கமிஷனுக்குப் போதிய அதிகாரமில்லையாதலால், ஒரு விசேஷக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்பது எதிர்க் கட்சிகளின் ஏகோபித்த கோரிக்கை. இது சம்பந்தமாக அவர்கள் பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவும் முன்னறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.



நக்ஷத்திரங்கள் எதனால் பிரகாசிக்கின்றன.
நல்ல நடிப்பினாலும் டைரக்டரின் திறமையினாலும் !




ஸாவேரி ராகம்: ரூபகதாளம்.

பல்லவி

பாவயாமி ரகுராமம் பவ்யஸுகுணாராமம்
4 4 4 3

அநுபல்லவி

பாவுகவிதரண பரா பாங்கலீலா லஸிதம் (பாவயாமி)
4 3 4

சரணம் 1. பாலகாண்டம்—நாட்டகுரஞ்ஜி

தினகரான்வயதிலகம் திவ்யகாதி ஸுதஸவனு
3 3 3 4
வனரசி தஸுபாஹுமுக வத மஹல்யாபாவனம்
4 2 4
அனகம் ஈசசாப பங்கம் ஜனகஸுதாப்ராணேசம்
4 3 3
கனகுபிதப்ருகு ராம கர்வஹரமிதஸாகேதம் (பாவயாமி)
4 3 3 3 4

சரணம் 2. அயோத்யகாண்டம்—தன்யாஸி

விஹிதாபிஷேகமத விபினகத மார்யவாசா
4 2 3
ஸஹிதஸீதா ஸௌமித்ரிம் சாந்ததம சீலம்
குஹநிலயகதம் சித்ரகூடாகத பரததத்த
3 3 3 4 3
மஹித ரத்னமய பாதுகாம் மதனஸுந்தராங்கம் (பாவயாமி)
3 3 3 3 4

சரணம் 3. ஆரண்யகாண்டம்—மோஹனம்

விதத தண்டகாரண்யகத விராத தலனம்
3 3 3 4
ஸுசரிதகடஜதத்தானுபமித வைஷ்ணவாஸ்த்ரம்
4 3
பதகவரஜடாயுனுதம் பஞ்சவடீ விஹிதாவாஸம்
அதிகோர சூர்பணகா வசனாகதக ராதிஹரம் (பாவயாமி)
4 2 3 2 3 4



சரணம் 4. கிஷ்கிந்தாகாண்டம்—முகாரி

கனகம்ருக ரூபதரகல மாரீசஹர மிஹஸு
3 4 2
ஜனவிமதத சாஸ்ய ஹ்ருதஜனக ஜான்வேஷணம்
3
அனகம் பம்பா தீரஸங்க தாஞ்ஜனேய நபோமணி
4 3 3 4
தனுஜஸக் யகரம் பாலி தனுதளனமீஸம் (பாவயாமி)
2 3 3 4

சரணம் 5. ஸுந்தரகாண்டம்—பூர்விகல்யாணி

வானரோத்தமஸஹித வாயுஸூனுக்ரார்பித
பானுசத பாஸ்வர பவ்யரத்னாங்குலீயம்
4 4 4 3
தேனபுனரானீ தாந்யூன சூடாமணி தர்ஸனம்
4 3 3
ஸ்ரீநிதிமுததி தீரா ஸ்ரிதவிபீஷண மிளிதம் (பாவயாமி)
3 4 4 4

சரணம் 6. யுத்தகாண்டம்—மத்யமாவதி

கலிதவரஸேது பந்தம் கலநிஸ்ஸீம பிஸிதாஸன
3 4 2
தலனமுருத ஸகண்ட விதாரமதிதீரம்
3 3 2 3 4
ஜ்வலனபூத ஜனகஸுதா ஸஹிதயாத ஸாகேதம்
விலஸித பட்டாபிஷேகம் விஸ்வபாலம் பத்மநாபம்
4 3 4
(பாவயாமி)
4

**1. ஸாவேரி** பல்லவி ரூபகம் (1 களை)

1 ஸ ரி ம பா ப | ப ப ப ம த ப தா ||
பா . வ யாமி | ர கு ரா . மம் ||
4 4
பா , ப ம த ப தா | ப ம ப த த பா ம கா, ரி ||
பவ் ய . ஸு கு | ணா . . ரா . . மம் . ||
4 3

2 ஸ ரி ம பா ப | ப ப ப ம த ப தா ||
பா . வயாமி | ர கு ரா . . . மம் ||
4 4
, ப த ரி ஸ் நி த தா | ப ம ப த நி த ப ம கா, ரி ||
ப . வ்ய . ஸு . கு . | ணா . . . ரா . . . மம் . ||
3

3 ஸரி மபா பம | ததபம கரி மபதா; ||
பா வயா மி | ர கு . ரா . . மம் ||
4

மபதா பதரிஸ் நிததா | பமபத நிதபம கா,ரி ||
ப . வ்ய. . . ஸு கு | ஹ . . ரா . . . மம். ||
4 3

ஸரி மபாப | ; ; ; ||
பா வயா மி | ரகு ராமம் ||
4

## அநுபல்லவி

பாதநி பாதம பத | ஸ் நித தஸ்ா, ||
பா . வுக விக | ர ண . ப ரா ||
4

பதரிஸ் நிதபம பத | ஸ்ஸ் தரிஸ்நித தபம ||
பா வு க . வித | ரண ப . ரா . . . . ||
4

பதரிஸ் நிதபம பத | ரிஸ்நித ரிஸ்ா, ||
பா . . வு க வித | ர . ண . ப ரா ||
4

தா ரிஸ்ஸ்நித கா, | பமபத நிதபம கா,ரி ||
பாங்க . வீ . லா | ல . வி . தம் . . . . ||
3

ஸரிகஸ ரி | மப தபதா ||
ரிஸ்நிதநித | பம கரிஸத ||
ஸரிமா கரி மபதாபம | பதஸ்ா, நித நிகபமபத ||
க்ரிஸ்தா, ரிஸ்தா, ஸ் | தா, க்ரிநிதபகரிஸத ||

(பாவயாமி)

## 1. நாட்டகுறிஞ்சி (பால காண்டம்)

### சரணம்

, கமா கஸா, , | ஸா ஸநி தாநிஸ நிதநி ||
தின கரான் | வ ய . தி ல . கம். . ||
3

பதநி ஸா ஸ | நிஸ ரிகமா ||
. திவ்ய கா தி | ஸு த ஸவஹ ||
3 3 4

, கமா நிதா மக | கரிகா மபமக ஸா ||
வ ன ர சி தஸு. | பா . ஹஸு மு க. ||
| 3 2

ஸநிரிஸ ஸநி தாநிஸநித | நிப தநிஸ்ா ஸநி ஸா ||
வ த ம . ஹ . . ல்யா | . . பா. . . வ ணம் ||
4

, ஸஸா ஸஸா , ஸ | ஸாநித நிநிதாமமா ||
அ ன க மீ ஸ | ச . . ப பங் . கம் ||
4 | 3 3



. தநிஸ்ஸ்நி தாஸ்நி நிப | தா நி,ரி ஸ்நிஸ்ா ||
ஜனகஸு தா . . . . | ப்ரா ணே. ஸம் . ||
, ஸ்ஸ் ஸ்ாம்க்ஸ்ா | ஸ்ஸ்நித தாநிப தா ||
கன கு பி . த | ப்ரு கு . ரா . . ம ||
4 | 3 3

. நிஸ்ா நிதா மம மக | கரிகா மபமக ஸா ||
க ர்வஹ ர மி த . | ஸா . கே . தம் ||
3

மகஸா நித | நிஸா ரிகம ||
நிதமா கநி | கமபகரிஸ ||
நிதநி ஸரிகம நிதநிபத | நிஸ் நித நிஸ்ரிக்ம்க்ஸ்நி ||

ஸாவேரி

க்ரிஸ்தா, ரிஸ்தா, ஸ் | தா, க்ரிநிதமகரிஸத ||

(பாவயாமி)

## 2. தன்யாஸி (அயோத்யா காண்டம்)

### சரணம்

. பதா பா, மப | பமகா பமபா ||
வி ஹ தா அபி | வே . ஹமத ||
4 | 2

. பகமாபா பநிதப | கா மபமகரிஸா ||
வி பி ன க . த . | மா ர்யா வா. ச ||
3

. ஸஸா மமா, மா, | மப பமமக கா ||
ஸ ஹி த வீ தா | ஸௌ . மி . . . த்ரிம் ||

. கா மபப | பாநிஸ் நிதா, பா, ||
ஸாந்தம | வீ . லம் . . ||

. பாபக மபப | ப பா,ஸ் நிதா, ப ம ||
கு ஹ . வி ல ம | க தம் . சி . . த்ர ||
3 | 3

. பாநிஸ்ா, ஸ்ஸ் | ஸ்க்ரிஸ் ரிநி ஸ்ாஸ் ||
கூ டா க த | ப . ர . த . த த்த ||
3 | 4 3

. ஸ்ஸ்ஸ்ா ம்க்ரிஸ்ா | ஸ்நிரிஸ் தப நிஸ் ||
ம ஹி த ர . . த்ன | ம . ய . பா . து காம் ||
| 3

. நிரிஸ் தா,ப ப | கமபநிதப மகரிஸா ||
ம த ன ஸு. ந்த | ரா . . . . கம். . . ||
3 3 | 3

நிஸகாமப | கமபாநிஸ் ||
ரிஸ்ரிநிஸ்ம | தபகாரிஸ ||
நிஸகமப காமபநிஸ் | பாநிஸ்க்ரி ஸ்நிதபநிஸ் ||

ஸாவேரி

க்ரி ஸ்தா, ரிஸ் தா, ஸ் | தா, க்ரி நி த ம க ரி ஸ ந் ‖

(பாவயாமி)

## 3. மோஹனம். (ஆரண்ய காண்டம்)

சரணம்

, ஸ ரி க கா க | கா கா க க |
வி த த தண்ட | கா ரண் ய க |
3 3

ரி ரி கா ப பா ப | ப க த ப கா ரி க ரி |
. க த வி ரா த | த ல . ணம் . . . |
3 4 | 3

ஸ த் ஸ ரி க ஸ ரி ஸ ரி கா க | கா கா த ப ப க க க |
. . வி த த தண் . . . ட | கா ரண் . . . ய க |
3

ரி ரி கா ப பா , த ப | ப க த ப க க க ரி ‖
. க த விரா த . | த ல . ணம் . . . ‖
3 4 | 3

, க பா க ரி ஸ ஸ | ஸ ஸ த் ரி ஸ தா ப |
ஸு சரி த க ட | ஜ த . . . த்தா னு |
3 | 3

த் ஸ ரி க த ப | ப க த ப க ரி ஸ ; ‖
ப மி தவை.ஷ்ண | வா. . . ஸ்த்ரம்.. ‖

, ப தா க பா பா த | ஸ்ா ஸ் ஸ் ஸ்ா |
ப த க வ ர ஜ | டா யு நு தம் |

, ப த ஸ்ா ஸ் ஸ்ா | ஸ் ஸ் த த ரி ஸ் த ப ப தா, ‖
ப . ஞ்ச வ டி | வி ஹி . தா . . வா . ஸம் . ‖

, த த க் ரி ஸ் | தா த ரி ஸ்ா ஸ் த த ப |
அ தி கோ . ர | ஸு . . ர்பண . கா. |
4 | 2

ப த ஸ்ா த ப | ப க க த த ப க ப க ரி ஸ ரி ‖
வ ச ஞ க த | க . ரா. . . தி . ஹ. ரம். ‖
3 | 2 3

கா , ப க ரி | க ரி ஸ த் ஸ ரி |
கா , ப த ஸ் | த ப க ரி ஸ ரி ‖
க ப க க ரி ஸ ரி க ரி ரி ஸ த் | ஸ ரி க ரி க ப க ப த ப த ஸ் |

ஸாவேரி

க்ரி ஸ் தா, ரி ஸ் தா, ஸ் | தா, க்ரி நி த ம க ரி ஸ த் ‖

(பாவயாமி)



## 4 முகாரி. (கிஷ்கிந்தா காண்டம்)

சரணம்

, ப ப ப த ப | ம ப த ப ப ம க ரி ரி க ஸ |
க ன க ம்ருக | ரு . . . ப . த . ர . . |
3 | 4

ரி ரி மா, மா ம | பா ம நி த த பா ‖
க ல மா ரீ ச | ஹ . ர . மி ஹ ‖
2

ப ரி ம பா ப நி த ப | ம த ப ம க ரி ரி ஸா |
ஸு ஜன வி ம . த . | த . ஸா. . . . ஸ்ய |
| 3

, ஸ ரி ப ம க ரி ஸ | ஸா, ஸ ரி நி த் ஸா ‖
ஹ்ருத ஜ . ன . க | ஜான் வே . ஷ ணம் ‖
, ப ப தா ஸ்ா, ஸ்ா, | ரி ரி ரி க் ஸ் |
அன கம் பம் பா | தி ர ஸங்க . |
4 3 | 3

ஸ்ா ரி ப் ம் க் ரி ஸ் | க் ரி ஸ் நி தா த ஸ்ா ‖
தா ஞ் ஜ னே. . . ய | க . போ . . ம ணி ‖
| 4

, நி தா ரி ஸ்ா ஸ் | ஸ் த தா ரி ஸ் ஸ் த நி த ப |
த னு ஜ ஸ க்ய | க . ரம் . . . . பா. வி |
2 | 3

, ரி ம ப நி நி த ப | ம ப த ப ம க ரி மா ‖
த னு த ன . ன . | மீ . . . . . . ஸம் ‖
3

பா , ம க ரி | ஸா நி த் ஸ ரி |
மா , க ரி ஸ | ரி ம ப ம நி த ‖
ஸ்ா ஸ் நி த ப பா ம க ரி ஸ | நி த் ஸ ரி ம ப நி த ம ப த ஸ் |

ஸாவேரி

க் ரி ஸ் தா, ரி ஸ் தா, ஸ் | தா, க் ரி நி த ம க ரி ஸ த ‖

(பாவயாமி)

## 5. பூர்வி கல்யாணி. (ஸுந்தர காண்டம்)

சரணம்

, க ம கா ரி ஸா | ஸா ரி த் ஸ ரி கா |
வா. . ன ரே ா | த்த ம . ஸஹித |
, பா,ப பா ப ம | ம த ம ம கா க ம ரி |
வா யு ஸு னு. | க . . ரா ர்பித . |
, கா ப ம க ரி ரி | ஸா , ஸ க ரி ஸ ரி த் |
பா னு ஸ . த | பா ஸ்வ. ர . . . |
4 | 4

, ஸா ரி க ரி | க ம பா ப ம ப நி த த ப பா, |
ப வ்ய ர . | த்ஞ ங்கு. லீ . யம் . |
4 | 3 |
, பா ப ம த ப | ஸ்ா ஸ்ா ஸ்ா |
தே ன புன | ரா வீ தா |
ஸ்ா ரி ஸ்ா ஸ்ா, | ஸ்ா ரிக் ரி ஸ் நி த ரி ஸ் ஸ்ா த |
ங்யூன கு டா | ம ணி . த . ஸ்ஸ . . னம் |
3 | 3 |
ப ரீ க் ரி ஸ்ா | த த நி நி த நி த ப ப |
. ஸ்ரீ வி நிம் | உ த நி தி . . ரா . |
4 | 3 |
, ம க க ஸ்ரி த ப பா ,ம | க ம க ரி ஸா . ரி |
. ஸ்ரித வி . பீ . . . | ஷண மிளி தம் . |
4 | |
கா ம க ரி ஸ | த ஸா ரி க ம |
பா , த ப ஸ் | நி த ப ம க ரி |
க ம ப மா ப கா ம ரீ க | ஸா ரி கா ம ப த ப ஸ்ா நி |

ஸாவேரி

க் ரி ஸ் தா, ரி ஸ் தா, ஸ் | தா. க் ரி நி த ம க ரி ஸ த |

(பாவயாமி)

6. மத்யமாவதி. (யுத்த காண்டம்)

சரணம்

, ரி ரி ரி ரி ரி | ரீ ப ம ரி ஸ ஸ |
க லி த வ ர | ஸேது பந் தம் |
| 3 4 |
ரி ஸ ரி ம ரி ஸா , ஸ ரி | ரி ப ரீ ஸ ரி |
க ல நி ஸ்னீ ம . | பினி தா ஸன |
, ரி மா பா, நி ப | ம ப ப ப ம ரி ரி ஸ |
த ல ன மூரு | த ஸ கண் ட வி |
3 | 3 2 |
ரி ஸ ரீ ரீ ரி ஸ | ரீ ப ம ரி ஸா , |
தா ரம் அதி . | தி ரம் . |
3 | 4 |
, ரி ம ரி ம பா ப | ப ப நி நி ப ம பா |
ஜ்வல ன பூ த | ஜன க ஸு தா |
, ப பா ப பா நி நி ப ம | பா ரீ ஸ்ா |
ஸஹி த யா . . த . | ஸா கே தம் |
, ரி ரீ ரி ப் ம் ரி ஸ் | ஸ்ா ஸ் நி நி ப நி |
வில ஸி த . ப . | ட்டா பி . ஷே கம் |
| 4 |




தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும் தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்.

**The School of English Learning**

**ஆங்கிலக் கல்வி நிலையம்,**

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

**தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்**

**ஒரே வருடத்தில்**

**ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு**

இலக்கண ரீதியாக, திருத்தமான முறையில்

**இங்கிலீஷ்** தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

**24-8-59-ந் தேதி**

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

**25-8-59-ந் தேதி**

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும் சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதி உடையவர்கள். (2) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (3) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகத் தபால் மூலம் பயிற்சியளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும், முழு விவரங்களையும் எட்டு நயா பைசா (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.


ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

R. P. S.

சம். கால்கள் வழக்கத்தை யொட்டி நடந்தன தன் போக்கில். உள்ளம்? அது நினைவுச் சுழலில் சிக்கித் தவிக்கலாயிற்று.

முத்தம்மா. அவள் மாரிசாமியின் ஒரே மகள். தாயற்றவளானாலும் அந்தக் குறைமை தெரியாமல் வளரும் பாக்யம் பெற்றவள். மாரிசாமி தன் பெண்ணின் மீது உயிரையே வைத்திருந்தான். தன் மகள் கெட்டிக்காரி, அழகி என்கிற பெருமை அவனுக்குக் கொஞ்சம் கர்வத்தைக் கொடுத்திருந்தது உண்மையே. அவன் பெருமைப் பட்டதில் குற்றமில்லை. முத்தம்மா அவ்வளவு அழகி. சற்றே சிவந்தமேனி; உயரமும் பருமனும் ஒத்தாற்போன்றிருந்த வாளிப்பான உடற்கட்டு. எடுப்பான நாசி; நீண்டு அகன்ற பெரிய கண்கள்; களைபொருந்திய அவள் முகத்தில் சதா புன்முறுவல் தவழ்ந்தபடியே இருக்கும். கொடியை பிணைத்து நிற்கும் பசுமையைப்போல், பருவ எழில் அவளை கவ்விக்கொண்டிருந்தது. பிடிக்கடங்காத தன் சுருண்டு அடர்ந்த கேசத்தை வெகு அலட்சியமாக அவள் அள்ளிச்செருகியிருப்பதே கண்கொள்ளாத காட்சியாக இருக்கும்.

அவளைப்பற்றி இன்பக் கனவு காணும் காளைகளும் கொஞ்சம் அதிகம்தான். அவள் கவனத்தை தன்பால் திருப்ப ஒவ்வொருவரும் தலைகீழாக நின்றார்கள். இவர்களுள் 'சந்தேகமில்லாமல் முத்தம்மா என்னுடையவள் தான்!' என்று உரிமை கொண்டாடினவன் கண்ணப்பன்தான். ஏனெனில் அவன் முத்தம்மாளின் முறைமைக்காரன். அதாவது அவளுடைய மாமன் மகன். அவனுக்கு முத்தம்மா தன் மனைவியாகவே ஆகிவிட்டதாக எண்ணம். அந்த எண்ணத்தில் அவன் அவளிடம் தாறுமாறாகப் பேசி, நடந்துகொள்வதுடன், அப்போதைக்கப்போது மாரிசாமியால் கண்டிக்கப்பட்டும் இருக்கிறான்.



இவ்வளவு போட்டாபோட்டிகளின் நடுவில் முத்தம்மாளின் இதயத்தைக் கவர்ந்தவன் யாருமே இல்லையா என்றால், ஒருவன் இருக்கத்தான் செய்தான். அவன் முத்தம்மாளைக் கண்டால் சீட்டியடிப்பதில்லை. தெம்மாங்கு பாடுவதில்லை. பல்லையும் காட்டுவதில்லை. அப்படியிருந்தும் அவன் முத்தம்மாவை மனதார நேசித்தான். அவனுடைய நடத்தையில் நேர்மையிருந்தது. செயலில் ஆண்மை மிளிர்ந்தது. அந்த நேர்மைதான் அவனுக்கு முத்தம்மாளின் அன்பைக் கொடுத்தது. இவ்வளவுக்கும் அவர்கள் வாய்விட்டுப் பேசிக்கொள்வதே கிடையாது. பேசுவதெல்லாம் நான்கு விழிகள்தான். அவைகளுக்கு இங்கிதம் ரொம்ப ரொம்பத் தெரிந்திருந்தது. அதுவே அவர்கள் ஒருவர்பால் ஒருவர்க்குள்ள அன்புக்கு மெருகேற்றியிருந்தது. முத்தம்மாளுக்கேற்றவன் முத்தையன்தான். இது அவளுடைய தீர்மானம் மட்டுமல்ல,



அவள் தகப்பன் மாரிசாமியின் தீர்மானமும் அதுவே.

காதும் காதும் வைத்தாற்போல் காரியங்கள் நடந்தன. முத்தம்மாளை முத்தையனுக்கு கட்டிக் கொடுக்கப் போகும் விஷயம் கல்யாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முந்திதான் கண்ணப்பனுக்கு தெரிந்தது. வந்தான் மாரிசாமியிடம் உரிமை கேட்டு. மாரிசாமி 'கடகட'வென்று சிரித்துவிட்டு 'தட்டிக் கேட்க ஆளில்லாமல் தறுதலையாகத் திரிகிறாய் நீ. உனக்கு எவன்டா பெண்ணைக் கொடுப்பான்? போடா! வெளியே! முறை பேச வந்துவிட்டான் வெட்கமில்லாமல்' என்று அடிக்க மாட்டாத குறையாகப் பேசியனுப்பிவிட்டான்.

தனக்குப் பரிந்து பேச பஞ்சாயத்தாரை போய் அழைத்தான் கண்ணப்பன். 'உனக்குப் பெண்ணைக் கொடுக்க யாரும் பயப்படத்தான் செய்வார்கள். அதுவும் முத்தம்மாளை உனக்குக் கொடுக்கும்படிச் சொல்ல எங்களுக்கு வாயே கிடையாதப்பா!' என்று கூறி அவர்களும் தட்டிக் கழித்து விடவே கண்ணப்பன் மனமுடைந்து போனான். எப்படியாவது இந்தக் கல்யாணத்தை 'நிறுத்திவிடுவது' என்று பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தான். இவனைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருந்த மாரிசாமியும் முத்தையனும் தக்க ஏற்பாடுகளுடனேயே ஜாக்கிரதையாக இருந்து கல்யாணத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டார்கள்.

கல்யாணம் நடந்த மறுமாதமே நிர்விசாரத்துடன் கண்ணை மூடினான் மாரிசாமி. முத்தம்மாளும் முத்தையனும் ஆதர்ச வாழ்வை ஆனந்தமாக நடத்தி வந்தார்கள். இவர்களைப் பார்த்துப் பார்த்து உள்ளம் பொருமினான் கண்ணப்பன். 'இன்னமும் குடிமுழுகிவிடவில்லை. எப்படியும் அவள் ஒரு நாள் என் கையில் சிக்கித்தான் ஆகவேண்டும்' என்றே 'சூள்' கொட்டினான் அவன். அதற்காக அவன் எவ்வளவோ முயற்சிகளும் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை முத்தையனிடம். 'சரி, இவன் இருக்கிறவரையில் கிளி நம் கைக்கு எட்டாது. முதலில் இவனை அப்புறப்படுத்த வேண்டும்' என்று முடிவு செய்தான் கண்ணப்பன். உடனே அவன் உள்ளத்தில் ஒரு சதித் திட்டம் உருவாகியது. அதன் விளைவு?

திடீரென்று ஒருநாள் போலீஸ்காரர்கள் முத்தையன் வீட்டில் நுழைந்தார்கள். அங்கே இரண்டு சாராய பாட்டில்களைக் கண்டெடுத்தார்கள். முத்தையன் கைகளிலே விலங்கு. இரண்டு மாதம் சிறைவாசம் என்று தீர்ப்பு. கொக்கரித்தான் கண்ணப்பன். ஆச்சர்யத்தால் வாயடைத்துப் போனான் முத்தையன். இவ்வளவும் கண்ணப்பனால்தான் என்று உள்ளூரத் தெரிந்திருந்தும் செய்யும் வகை தெரியாமல் கையைப் பிசைந்தாள் முத்தம்மா.

இப்பொழுது அவள் கவலையெல்லாம் இரண்டு விஷயங்களைப் பற்றித்தான். ஒன்று கண்ணப்பனின் கையில் சிக்கிவிடாமல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டாவது முத்தையன் வரும்வரையில் வயிற்றை வளர்த்தாக வேண்டும் என்பதே!

ஒருவர் வீட்டில் வேலைக்கமர்ந்தாள் முத்தம்மா. வேலை செய்த நேரம் போக, மாலையில் பூ வியாபாரம் செய்ய ஆரம்பித்தாள். இரவில் அவர்கள் வீட்டிலேயே படுத்துக்கொண்டும் விடுவாள். கண்ணப்பன் கண்ட கனவு பகற்கனவாயிற்று. முத்தையன் இன்னும் ஒரு மாதத்தில் விடுதலை பெற்று வந்துவிடுவான். காலம் வீணாகிறதே என்று ஏங்கினான் அவன்.

அவனுடைய நல்ல காலமோ, அல்லது முத்தம்மாளின் போதாத காலமோ தெரியாது. அவள் வேலை செய்து கொண்டிருந்த வீட்டிலே எல்லோரும் கதவைப் பூட்டிக்கொண்டு திருப்பதிக்குச் சென்றார்கள். திரும்பி வருவதற்கு நான்கைந்து நாட்கள் ஆகும். என்ன செய்வது, எங்கே இரவைக் கழிப்பது என்று மனங் கலங்கினாள் முத்தம்மாள். விஷயமறிந்த கண்ணப்பன் உஷாரானான். வலுவிலே கிடைத்த நான்கைந்து தினங்களை தக்கபடி பயன்படுத்திக்கொண்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இன்றைய இரவை வயலிலேயே விட்டு வைக்காமல் கூடையில் வாரிக் கொண்டு வந்து விட்டது தான் அதற்குக் காரணம். இளையான்குடிமாற முத்தம்மாள் தன் ஓலைக் குடிசையில்தான் கழித்தாக வேண்டும் என்பதை அவள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான்.

எதற்கும் நயமாகப் பேசி காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கவே இன்று அவன் முத்தம்மாளை நடுவழியில் வழி மறைத்தான். அதற்கு அவள் இடங்கொடுக்கவில்லை. மேலே செய்ய வேண்டியதைப் பற்றி திட்டம் வகுக்கலானான் கண்ணப்பன்.



"ஊர் போனதும் லட்டர் போடு!...ஆடுவேனே பள்ளுப் பாடுவேனே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டேன் என்று..."

## 2

பூக்களையெல்லாம் விற்றுவிட்டு முத்தம்மா தன் குடிசையை அடைந்தபோது மாலை மணி ஐந்து. 'ஐயோ! இன்னும் சற்றுப் போனால் இருட்டிவிடுமே' என்று பயந்தாள் பேதை. கண்ணப்பன் கையிலிருந்து மீளும் வழி என்ன என்கிற பெருத்த யோசனை திக்குமுக்காடச் செய்தது.

மாப்பிள்ளைப் பையனைப்போல் தன்னை பிரமாதமாக அலங்கரித்துக்கொண்டு ஏழு மணி சுமாருக்கு முத்தம்மாளின் குடிசையை நோக்கி நடந்தான் கண்ணப்பன். குடிசைக்கு சமீபம் வரும்போது அங்கே கேட்ட இரைச்சல் அவனை திகைக்க வைத்தது. முத்தம்மாளின் குடிசைக்கெதிரில் ஒரே கும்பல். அந்தக் கூட்டத்தின் நடுவில் இரண்டு மூன்று சிவப்புத் தலையும் தெரியவே நிலைகுலைந்து போனான் கண்ணப்பன்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு நடுவில் நுழைந்த அவன் கண்கள் கண்ட காட்சி! இரண்டு போலீஸ்காரர்களின் நடுவில் ஒரு துணி

யினால் கைகளை பிணைக்கப்பட்ட கோலத்தில் முத்தம்மா நின்று கொண்டிருந்தாள். 'ஹூம் வா! நேரமாகிறது!' என்று கூறி அவளைப் பலவந்தமாக இழுத்துச் சென்றார்கள் போலீஸ்காரர்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டமும் கலையவாரம்பித்தது.

'ஏன் தம்பி! முத்தம்மாளை போலீஸ்காரங்க அழைச்சிக்கிட்டுப் போறாங்க?' பக்கத்திலிருந்த ஒரு சிறு பையனைக் கேட்டான் கண்ணப்பன்.

'அதுவா? ரோட்டு மேலே ஒரு குழந்தை நின்னுகிட்டிருந்திச்சாம். முத்தம்மா அது கழுத்திலே இருந்த சங்கிலியைக் கழற்றிக்கிட்டு ஓடியாந்ததை போலீஸ் காரய்யா பார்த்துட்டாங்க. கையும் களவுமாகப் புடிச்சிக்கிட்டுப் போயிட்டாங்க!' என்றான் அந்தப் பையன் நடந்து சென்று கொண்டே.

'முத்தம்மா திருடவும் ஆரம்பிச்சிட்டாளா?' வாய்விட்டுக் கூறிக்கொண்டான் கண்ணப்பன்.

'முத்தம்மாளா திருடி! அவள் கால்தூசிக்கூட அந்தக் காரியம் செய்ய நினைக்காதே! பாவி! உன் கிட்டேயிருந்து தப்பிக்கத்தானடா அவள் திருடி ஜெயிலுக்குப் போகவும் துணிஞ்சிட்டா! இனிமேல் அவளை நீ என்னடா செய்ய முடியும்? அவளைச் சுற்றி காய்க்ரிட் சுவரும், கம்பிக் கதவும் காவல் நிற்குமே இப்போது! இப்படி யார் சொல்கிறார்கள்? திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் கண்ணப்பன். அவன் அருகில் ஒருவரையும் காணவில்லை. அவனுடைய மனச்சாட்சிதான் அவனை இப்படி இடித்துரைத்தது.

'நேர்மையே உருவான முத்தையன் உன் நயவஞ்சகத்தினால் சிறையில் வாடுகிறான். இன்று முத்தம்மாளும் தன் மானத்தை காப்பாற்றிக்கொள்ள 'திருடி'யென்று பெயர் எடுத்து சிறைக்கும் போகத் துணிந்துவிட்டாள். இவைகளால் நீ கண்ட சுகம் என்ன? மிருக இச்சைப் படைத்த பேயே! உன்னைப் போன்றவர்களும் நாட்டில் நடமாடுவதால் தானடா பேய்க் காற்றும் கோர மழையும், பெருவெள்ளமும் எளிய மக்களை வதைக்கின்றன! போ! துரோகி! உன்னால் அந்த இளம் தம்பதிகள் படும் பாட்டைக் கண்டு களி! உன்னால் அவர்களுடைய பொன்னான எதிர்காலம் கானல் நீராகிவிட்ட கொடுமையை பார்த்துப் பரவசப்படு!' அவனுள்ளே இதுகாறும் ஒளிந்திருந்த மனிதத் தன்மை அவனை வதைத்தெடுத்தது தன் வசைமாரியால். அதன் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் தத்தளித்தான் கண்ணப்பன்.

அவன் கண்கள்கூட கலங்கின. வாசனைத் தைலம் தடவி வாரி விடப்பட்டிருந்த தலையை கலைத்துக்கொண்டான். மஸ்லின் ஜிப்பாவை கழற்றியெறிந்தான். கழுத்தைச் சுற்றியிருந்த சில்க் கைக்குட்டையை அவிழ்த்து தூர வீசினான். வேஷ்டியை முழங்காலுக்கு மேலே தூக்கி மடித்துக் கட்டிக்கொண்டான். விடுவிடுவென்று நடந்தான் வந்த வழியே திரும்பி. அவன் உள்ளத்திலே ஒரு தீர்மானம். அதை செயல்படுத்த விழைந்தது உள்ளம். அந்தத் தீர்மானம் வழக்கம் போல் இல்லாமல் நல்லதாக இருந்துவிட வேண்டுமே!

## 3

சூனியமாக இருந்த குடிசையின் வாசலில் மூலைக்கொருவ







உங்களுக்கும் — சினிமா நட்சத்திரங்களின்
பூந் தளிர் மேனியழகு

"மேனியழகின் பராமரிப்புக்கான சாதனங்களில் மிகச் சிறந்ததென நான் கருதுவது லக்ஸ் டாய்லெட் சோப்பே; வாசனையும் சுத்தமும் மிகுந்தது அது!" என்கிறார் அழகுநட்சத்திரம் பி. சரோஜாதேவி. தூய, வெண்மையான லக்ஸ் சோப்பின் உதவியால் உங்கள் மேனியும் அதே அழகுடன் மிளிர முடியும்.

தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

LTS. P. 1-30 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

ராக உட்கார்ந்திருந்தார்கள் முத்தம்மாளும் முத்தையனும்.

'முத்தம்மா! நான்தான் அந்தப் பாவியினால் பழியேற்று சிறைவாசம் அனுபவித்தேன். என் கௌரவமெல்லாம் பஞ்சாகப் பறந்து போய்விட இன்று நகைப்பார்க்கிடமாக உட்கார்ந்திருக்கிறேன். நீயுமா சிறையில் புகுந்து வெளிவரவேண்டும்? இதைவிட வயிற்றுக்கு இல்லை என்று நீ தற்கொலை செய்துகொண்டிருந்தால்கூட நான் சந்தோஷப்பட்டிருப்பேனே!' எங்கேயோ பார்த்துக்கொண்டே பேசிய முத்தையன் 'பட்பட்'டென்று தலையில் அடித்துக்கொண்டான் கைகளால்.

'ஊனங்க சொன்னதையெல்லாம் நீங்க நம்புறீங்களா மச்சான்?' பரிதாபமாகக் கேட்டாள் முத்தம்மாள்.

'நம்பாமல் என்ன செய்ய. நேற்று நான் விடுதலை ஆகி வந்ததும் எல்லாம் எனக்குத் தெரிஞ்சுட்டுதே! இன்று உனக்கு விடுதலை என்று சொன்னாங்க. நேரிலே கேட்டுவிட்டு உனக்கு ஒரு முழுக்குப் போட்டுடலாமென்றுதான் காத்திருந்தேன்!' ஆத்திரம் பொங்கக் கூறினான் முத்தையன்.

'நீங்க சொல்றதுபோல உயிரைப் போக்கிக்க எனக்குத் தைரியமில்லை மச்சான். அதனாலே...அதனாலே...அந்தப் பாவி கண்ணப்பன் கிட்டேயிருந்து என் மானத்தைக் காப்பாத்திக்க திருடினேன். திருடி பிழைக்க எண்ணியவளாய் இருந்தால் போலீஸ்காரங்க கண்ணிலே படும்படியா திருடியிருப்பேனா? வேண்டுமென்றே அவர்கள் கையில்தான் அகப்பட்டுக்கொண்டேன்! சிறையிலே இருந்தால் அவன் நம்மை ஒண்ணும் செய்யமுடியாது என்று தோணிச்சு!' முத்தம்மாளின் கண்கள் கண்ணீரை ஆறாகப் பெருக்கின. 'ஓ'வென்று அழுதாள் அவள்.

'முத்தம்மா!' ஓடி வந்தான் அவளருகில் முத்தையன்.

'நீங்கக்கூட என்னை நம்பலையா மச்சான்?' வீறிட்டழுதாள் முத்தம்மா.

'நம்பறேன் முத்தம்மா! நம்பியேவிட்டேன்! என்னை வஞ்சகமாக உள்ளே தள்ளினது உன்னைச் சூறையாடத்தான் என்பதை நான் இவ்வளவு நாளாக அறிந்துகொள்ளவில்லை! என்னை மன்னிச்சுடு முத்தம்மா! நீ திருடியில்லே. என் தங்கம்!' அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் தன் கையால் துடைத்துவிட்டான் முத்தையன்.

'அண்ணே!'

திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தான் முத்தையன். எதிரில் தொங்கிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தான் கண்ணப்பன்.

'பாவி! வந்துவிட்டாயா மறுபடியும்? உன்னைத் தொலைத்துவிட்டுத்தான் மறுவேலை!' என்று ஆத்திரத்துடன் கண்ணப்பன் மீது பாய்ந்தான் முத்தையன்.

'வேண்டாம், மச்சான்! அவனைக் கொன்றால் மறுபடியும் சிறைக்குப் போவதுதான் மிஞ்சும்' என்று கூறிக்கொண்டே எழுந்திருந்து கணவனைத் தடுத்தாள் முத்தம்மாள்.

முத்தையனின் கைகளுக்கு அகப்படாமல், 'பொத்'தென்று கீழே விழுந்தான் கண்ணப்பன். கணவனின் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள் முத்தம்மாள்.



மெள்ள எழுந்திருந்த கண்ணப்பன், 'ஆமாம் அண்ணே! என்னைக் கொல்லாதே! என்னைக் கொன்றால் உனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ! மறுபடியும் முத்தம்மா தனியாக வாழவேண்டிவரும் என்பதுமட்டும் உண்மை. வேண்டாம் நானே உங்களை விட்டு வெகு தூரத்திற்கு போய் விடுகிறேன்' என்றான் குரல் கரகரக்க.

'போவது தானே! இப்போது எதற்காக வந்தாய் இங்கே?' எரிச்சலாகக் கேட்டான் முத்தையன்.

'உங்க வாழ்விலே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டேனே! ஜெயிலுக்குப் போனவங்களுக்கு பிழைக்க வழி கிடைக்காதே! அதுக்காக...அதுக்காக...' வார்த்தை குழறியது கண்ணப்பனுக்கு.

'அதுக்காக எங்களுக்கு சத்திரம் கட்டி வெச்சிருக்கியா?' ஏளனமாக வினவினான் முத்தையன்.

'முத்தம்மா! கொஞ்சம் என்கூட வாருங்கள் இரண்டு பேரும். நான் பழைய கண்ணப்பன் இல்லை. பயப்படாமல் வாங்க...' என்று முத்தம்மாளைப்பார்த்துக் கெஞ்சியழைத்தான் கண்ணப்பன்.

'எங்கே?' வேண்டா வெறுப்பாகக் கேட்டாள் முத்தம்மாள்.

'பக்கத்து தெருவுக்கு...' என்றான் கண்ணப்பன்.

ஏதோ ஒரு சக்தி அவர்களை அவனுடன் போகும்படி உந்தித் தள்ளியது. அவன் பின்னாலேயே சென்றார்கள் இருவரும்.

பக்கத்துத் தெருவின் முனையில் ஒரு டீக்கடையின் முன்பு போய் மூவரும் நின்றார்கள். தலையை நிமிர்த்தி பார்த்த முத்தையனின் கண்களில் 'முத்தம்மா டீக்கடை' என்கிற பெயர் பொறித்த பலகைதான் முதலில் பளிச்சிட்டது.

'அண்ணே! முத்தம்மா இனிமேல் என் தங்கச்சி! நான் உங்களுக்கு செய்த துரோகத்தையெல்லாம் மன்னிச்சுடுங்க. ஒரு மாதமாக உழைத்தேன். பணம் சேர்ந்தது. இந்த டீக்கடையை வாங்கினேன். இதைக்கொண்டு நீங்கள் பிழைத்துக்கொள்ளுங்கள். நான் போகிறேன்...' என்றான் கண்ணப்பன் உணர்ச்சி மிகுந்த குரலில்.

வியப்பினால் திகைப்படைந்து போயிருந்த முத்தையன், 'நீ போவானேன்?' என்று கேட்டான்.

'மனசுலே கல்மிஷம் இல்லாட்டி எங்க கூடவே இருக்கலாமே' என்றாள் முத்தம்மாள்.

'வேண்டாம் தங்கச்சி! எனக்கு மனித குணத்தைவிட மிருக குணமே அதிகமாக இருக்கு. அது எந்த சமயத்திலே எப்படியிருக்குமோ! எனக்கே என்னிடத்திலே நம்பிக்கையில்லை. நான் போகத்தான் வேண்டும். போகிறேன்...' என்று கூறிக்கொண்டே வெகு வேகமாக நடந்தான் கண்ணப்பன்.

கண்களில் கண்ணீர் மல்க அவனையே பார்த்துக்கொண்டு செயலிழந்து நின்றார்கள் முத்தையனும் முத்தம்மாவும்.

# நிழலும் நிஜமும்

## 8. மலையைக் கெல்லி

'ஸ்ரீதப்பா மட்டும் இப்போ இங்கே இருந்தால் இந்நேரம் இந்த சரோஜா வோட ரகஸியத்தை கண்டுபிடிச்சிருக்க 'மாட்டேனு' என்று தன்னையும் மறந்து வாய்விட்டுக் கூறினுள் மாலதி ரமணி.

அப்போது இரவு எட்டரை மணியிருக்கும். சாப்பாட்டிற்குப் பின் கோல் மார்க்கெட்டிற்கு அருகிலுள்ள அவர்கள் வீட்டில் வரவேற்பு அறையில் திருவாளர் ரமணியும் அவர் மனைவியும் உட்கார்ந்திருந்தார்கள். கடோபநிஷத்தில் எமதேவனுக்கும் நசிகேதஸுக்கும் இடையே நடைபெறும் சம்பாஷணையில் மெய்மறந்திருந்த ரமணியை அவர் மனைவியின் வார்த்தைகள் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தன.

'என்ன? என்ன? என்ன சொன்னே?' என்று தடுமாறினுர் அவர், புஸ்தகத்தை மூடிக்கொண்டே.

'அதென்ன அப்படிப்பட்ட புஸ்தகம்?' என்றுள் மாலதி.

'கடோபநிஷத்.'

'நாளைக்கு முதல் காரியமாக உங்கள் உபநிஷத்துக்களை பழைய பேப்பர்காரனிடம் போடாவிட்டால் என் பெயர் மாலதியில்லையாக்கும்' என்றுள் மிஸஸ் ரமணி, கோபமாக.

'ஏன், அந்தப் புஸ்தகங்கள் என்ன பாவம் பண்ணின?' என்றுர் ரமணி பரிதாபமாக.

'அவைகளுக்குப் பதில் துப்பறியும் நாவல்கள், படிச்சாலும் என்னுடை இந்த நெருக்கடியில் எத்தனையோ உபயோகமாக இருக்கும்,' என்றுள் மாலதி கோபம் குறையாமல்.

'இப்போ உனக்கு அப்படிப்பட்ட நெருக்கடி என்ன வந்துவிட்டது?'





என்றார் ரமணி, மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டே.

'தாத்தாச்சாரி வீட்டுக் கல்யாணத்திலேருந்தே என் சிநேகிதி சரோஜா ஒரு மாதிரியாக இருக்கா. அது எதனால்?' என்றாள் மாலதி.

'எந்த சரோஜா?'

'அதான் தரியாகஞ்ஜிலே இருக்காளே, அவ.'

'ஓ! ராஜுவோட சம்சாரமா? அவ எப்படி இருக்கா?'

'எதையோ பறிகொடுத்தவள்போல முகத்தை வச்சிண்டிருக்கா, சோகமே உருவாக.'

'அவாளவாளுக்கு எத்தனையோ இருக்கலாம், நமக்கேன் வீண் வம்பு?' என்றார் ரமணி.

'அவள் என் சிநேகிதி'. இது மாலதி.

'அப்போ அவளையே கேளேன்.'

'சொல்ல மறுக்கிறாள்'.

'ஒரு வேளை சொல்லக்கூடாததாக இருக்கலாம்.'

'அப்போ பார்வதிக்கு மட்டும் சொல்லலாமோ?'

'பார்வதிக்குச் சொன்னாள்னு உனக்கெப்படித் தெரியும்?'

'கட்டாயம் சொல்லியிருப்பாள். அதிலே கூடவா சந்தேகம்?'

சரி, இதிலே நான் என்ன பண்ணணுங்கறே?'

'உங்களாலே ஒண்ணும் பண்ணமுடியாதுன்னு எனக்குத் தெரியாதா? இப்போ இங்கே என் சித்தப்பா இருக்கக்கூடாதான்னு நினைச்சிண்டிருந்தேன்.'

'வேறே வினையே வேண்டாம்'.

'ஏன் சொல்ல மாட்டேன்? முன்னொரு தடவை காசிலே பக்கத்துத் தெருவிலே காண்டா மிருகம் மூஞ்சியை வச்சிண்டு ஒரு ஆத்மா இருந்தது. அதோட மூஞ்சியை இன்னி முழுக்க பாத்திண்டிருக்கலாம். ஒரு நாளைக்கு அதோட போட்டோ இருந்தாத் தேவலேயென்னு சித்தப்பா கிட்டே பேச்சோடு பேச்சாச் சொல்லி வச்சேன். சொன்னதுதான் தாமசம். அதோட வீட்டு வாசல் அறையிலே மாட்டியிருந்த போட்டோவை சாயந்திரத்துக்குள்ளே அவர் எடுத்துண்டு வந்துட்டார்.'

'அவளைக் கேட்டுத்தானே?'

'அதைக் கேட்டா, அதிலே அப்புறம் என்ன விசேஷம் இருக்கு?' ஏதோ அங்கே போறப்பிலே போய், ஒருத்தரும் இல்லாத சமயம் பார்த்து எடுத்துண்டு வந்துட்டார்'.

ரமணிக்கு வியர்த்து விட்டது.

'நெசமாகவா? ஒங்க சித்தப்பா பண்ணினது சட்டப்படி குற்றம் தெரியுமா? முதல் குற்றம் ஒருவர் வீட்டில் அத்துமீறி பிரவேசித்தது; இரண்டாம் குற்றம் போட்டோவைக் கேக்காமல் எடுத்தது'

'சித்தப்பாவுக்கும் ஒங்க சட்டமெல்லாம் தெரியும்' என்றாள் மாலதி அலட்சியமாக.

'தெரிஞ்ச லட்சணத்தான் அப்படிச் செஞ்சாரோ? ஆமாம், ஒனக்கேன் அந்தப் போட்டோ?' என்றார் ரமணி.

'அதான் சொன்னேனே, அந்த போட்டோவிலுள்ள மூஞ்சியைப்பார்த்துண்டே நான் கனக்கா சோறு, தண்ணி கூட இல்லாமல் இருந்துடலாம். வீட்டிலே குழந்தைகளை பயமுறுத்த உதவுமேன்னு கேட்டேன்' என்றாள் மாலதி, உற்சாகமாக.

'அதுக்காகவா, சித்தப்பாவை அந்தக் காரியத்திலே நீ ஏவினே!' என்றார் ரமணி, அதிர்ச்சி நீங்காமல்.

'பின்னே வேறே எதுக்குன்னு நீங்க நினைக்கிறேள்?' என்று கேள்வியைத் திருப்பினாள், மாலதி.

'ஒங்க குடும்பமே ஒரு வைத்தியக் கூட்டம்னு எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம் உண்டு. ஆனால் உண்மையிலேயே வைத்தியம் இந்த அளவுக்கு முத்தியிருக்குன்னு நான்கூட நம்பல்லே. இவள் போட்டோ வேணுமின்னாளாம், அதுக்காக அந்த பிருகஸ்பதி அதை திருடிந்தாம்!'

'திருட்டு கிருட்டுன்னு சொன்னால் எனக்குக் கெட்ட கோபம் வரும், ஆமாம். நீங்க நேரே அந்த ஆத்மாவைப் பார்த்திருந்தால், இப்படிப் பேச மாட்டேள்' என்றாள் மாலதி.

'அது ஒண்ணுதான் பாக்கி. என்னைக் கேட்டால் உன்னையும் ஒங்க சித்தப்பாவையும் பொது ஜனங்களோட நன்மையை உத்தேசிச்சு, எங்கேயாவது பூட்டி வச்சாக்கூடத் தேவலே' என்றார் ரமணி, தனக்கே வழக்கமான பொறுமையை மறந்து.

'நீங்க சொல்றதைதான் இப்போ சித்தி பண்ணிண்டிருக்காரே? முன் போல இப்பல்லாம் சித்தப்பா பாவம் எங்கே கலகலப்பாக இருக்கார்' என்று கண்ணைக் கசக்கினாள் மாலதி.

'சரி, சரி, உன்னையும் திருத்த முடியாது, ஒங்க சித்தப்பாவையும் திருத்த முடியாது' என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த உபநிஷத்தில் கவனத்தைத் திருப்பினார் ரமணி.

மாலதியும் 'எதற்கும் சரோஜா விஷயத்தை சித்தப்பாவுக்கு விவரமாக எழுதி வைக்கிறேன், அவர் கட்டாயம் உண்மையைக் கண்டுபிடிக்காமலிருக்க மாட்டார்' என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் சென்றாள்.

ஃ ஃ ஃ

முதன் முதலாகப் பார்வதியும், சரோஜாவும் தரியா கஞ்ஜிலுள்ள டாக்டர் ரிஷிராமின் வீட்டிற்குச் சென்ற சமயம் அவர் வெளியே போயிருந்தார். டாக்டரின் மனைவி சந்தோஷ் தேவி தான் தோழிகளை வரவேற்று உபசரித்தாள். அந்தம்மாளுடன் அவர்கள் வீட்டைச் சுற்றி வந்தார்கள். வீட்டிலுள்ள ஒரு அம்சம் பார்வதியை உடனேயே கவர்ந்துவிட்டது. அதுதான் டாக்டரின் பூஜை அறை. முதலில் அவள் அதை சந்தோஷ் தேவியின் பூஜையென்றுதான் நினைத்தாள். ஆனால், பூஜை செய்வது டாக்டரென்று அறிந்தவுடன் அவளுக்கு மூர்ச்சையே போட்டுவிட்டது.

'அவருக்கு இதிலெல்லாம்கூட நம்பிக்கையுண்டா என்ன!' என்று திணறினாள்.

'நம்பிக்கை கொஞ்சம் குறைவாக இருந்தால்கூடத் தேவலே. அவருக்கு நோயாளிகளோ, புத்தகங்களோ கிடைக்காவிட்டால் இந்த அறைக்கு வந்து உட்கார்ந்து விடுவார்,' என்று சொல்லிச் சிரித்தாள் சந்தோஷ் தேவி.

இந்தச் செய்தி பார்வதிக்கு ஒரு தெம்பையும் திருப்தியையும் கொடுத்தது. தன்னுடைய பயங்களையும், சந்தேகங்களையும் அவர் உதறித் தள்ளி விட மாட்டார் என்ற நம்பிக்கை பிறந்தது. தோழியின் உள்ளத்தில் இந்தப் பேச்சால் ஏற்பட்ட மாறுதலை சரோஜா கவனிக்கத் தவறவில்லை. அவளும் உள்ளூர மகிழ்ச்சியுற்றாள்.

சீக்கிரத்திலேயே டாக்டர் வந்துவிட்டார். சரோஜா தோழியின் சம்மதம் பெற்று ஏற்கெனவே போட்டோ பற்றிய விஷயத்தை அவருக்கு ஓரளவு சொல்லியிருந்தாள். ஆகையால் குசலப் பிரச்னம் முடிந்தவுடன், அவர் பார்வதி கொண்டு வந்திருந்த போட்டோவைக் கையில் வாங்கி அதை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். பார்வதி சங்கோசியாகையால், சரோஜா தான் அதுபற்றிய விவரங்களை அவருக்கு அப்போது சொல்லிக்கொண்டிருந்தாள்.

படத்தைப் பார்த்து முடிந்தவுடன் 'நீங்கள் என்னை என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?' என்றார் டாக்டர்.


## குடும்பக் கட்டுப்பாடு

தம்பதிகளின் இன்பவாழ்க்கைக்கு தேவையான கீழ்க்கண்ட ரப்பர் கருவிகளை உபயோகியுங்கள்.

பிரஞ்சு லெட்டர்,
டியூரபேக் டஜன் ரூ. 4-0-0
வாஷபில் ஷீத்
(அதிக உபயோகம்)ரூ. 1.0-0 Each
கொற்கடைல் ,, ரூ. 1·25 Each
பெண்கள் உபயோகிக்கும்
ஸ்பாஞ்சு ஒன்று ரூ. 1-0-0 Each
செக்பெஸரி ஒன்று ரூ. 2·50 Each

சாமானுடன் முழுவிபரங்கள் அடங்கிய கைப்புத்தகம் இலவசம். தபால் செலவு ரூ. ஒன்று.

**ஸன் ஹெல்த் ப்ராடக்ஸ்**
**No. 4, பெரிய கடை வீதி,**
**மாயூரம்.**

அவருடைய சிரித்த முகமும், கனிந்த வார்த்தைகளும் பார்வதியின் இயற்கையான கூச்சத்தை ஓரளவு போக்கியிருந்தது. ஆகையால், 'செய்ய வேண்டியதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறோம்' என்றாள்.

டாக்டர் இதற்கு உடனடியாக ஒரு பதிலும் சொல்லவில்லை. போட்டோவைப் பார்த்தபடியே ஏதோ சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். பிறகு, திடீரென்று, 'இது ஒரு விசித்திரமான விஷயம். இதை என் தொழிலைச் சேர்ந்தது என்றுகூடச் சொல்லிவிட முடியாது. இதுவிஷயமாக என்னிடம் முதலில் சொன்னபோது, நான் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்றேன். ஆனால் அவரோ என்னை விடவில்லை. இவ்விஷயத்தைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளத் தங்களுக்குள்ள தயக்கத்தைச் சொல்லி, நான் இதில் உதவ மறுத்தால், நீங்கள் கட்டாயம் வேறு ஒருவரிடமும் போகமாட்டீர்கள் என்றார். அதற்குப் பிறகுதான் நான் உங்களைப் பார்க்கச் சம்மதித்தேன்' என்றார், அமைதியாக.

பார்வதி அவர் சொல்லை ஆமோதிப்பதுபோல் தலையை அசைத்தாள்.

டாக்டர் தொடர்ந்து பேசினார்.

'நான் எதற்கு இதையெல்லாம் சொல்ல வந்தேன் என்றால், உங்கள் பிரச்னை என் தொழில் வரம்பிற்கு அப்பாலுள்ளது. ஆகையால் இதில் நான் ஏதாவது உதவுவது என்றால், அது டாக்டரென்ற முறையிலில்லை; நண்பன், — உங்களைக் காட்டிலும் அனுபவத்திலும், வயதிலும் முதிர்ந்தவன் என்ற காரணத்தினால்தான்,' என்று சொல்லி நிறுத்தினார்.

அவர் பேச்சில் ஒலித்த கண்ணியம் பார்வதிக்கு ஏற்கெனவே அவரிடம் தோன்றியிருந்த நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்தது.

'போட்டோ பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்றாள் ஆவலுடன்.

'நீங்கள் பயப்படுகிறபடியே அடுத்த விபத்து தங்கள் கணவருக்கு நேரிடலாம். உங்கள் தோழி சொன்னதிலிருந்து அதற்கேற்ற முன் நிகழ்ச்சிகளும், சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன். ஆனால், என் அபிப்பிராயத்தைச் சொல்லும்முன் இந்த கேஸ் பற்றிய எல்லா விவரங்களையும் உங்கள் வாய் மூலமாக அறிய விரும்புகிறேன். ஆகையால் உங்களுக்கு முக்கியமில்லாததுபோல் தோன்றும் சம்பவங்களைக் கூட விடாமல் சொல்லுங்கள். பார்க்கலாம்?' என்று சொன்னவர், நாற்காலியில் சாய்ந்துகொண்டு கண்களை மூடிக்கொண்டார்.

பார்வதி சந்தோஷ் தேவியின் பக்கம் திரும்பினாள். சரோஜா என்ன சொல்லுவதென்று புரியாமல் தத்தளித்தாள். அவர்களிருவரின் உணர்ச்சிகளை உணர்ந்தவர்போல் அந்த அம்மாளும் எழுந்தார். இவற்றையெல்லாம் அரைகுறையாக மூடியிருந்த கண்களால் பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் ரிஷிராமின் கை அந்தம்மாளை அமர்த்தி உட்காரச் செய்தது.


சிரித்துக்கொண்டே அவர், சொன்னார்: 'நான் ஏற்கெனவே சொன்னேன், இது ஒரு டாக்டரின் சாதாரணக் 'கேஸ்' இல்லையென்று, இதுபோன்ற அசாதாரணக் கேஸ்களுக்கு என் மனைவிதான் என் உதவி டாக்டர். ஆகையால் நீங்கள் தயக்கமில்லாமல் அவள் முன் சொல்லலாம்..'

இவ்விதம் அவரால் தூண்டப்பட்டுப் பார்வதி தன் கதையை முதன் முதலாக ஏகாம்பரத்திடமிருந்து கடிதம் வந்த தினத்திலிருந்து அன்றுவரை சொல்லி முடித்தாள். அவள் கதையின் முடிவில் எழுந்து உட்கார்ந்துகொண்டே டாக்டர், 'அப்போ இன்றுவரை நீங்கள் கடவுளின் பேரில் பாரத்தைப் போட்டதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை... அப்படித்தானே?' என்றார்.

பார்வதி தலையை அசைத்தாள்.

'நான் உங்களைக் குறைகூறுகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். இதில் மனிதனைவிடக் கடவுளால்தான் உங்களுக்கு அதிகம் உதவ முடியும், அதுவரை நீங்கள் செய்தது சரிதான். ஆனாலும் நான் ஒரு முறை உங்கள் கணவரைச் சந்திக்க விரும்புகிறேன்' என்றார்.





தன் இயற்கையான சங்கோசத்தை மறந்து பார்வதி துள்ளி எழுந்தாள். 'அது மட்டும் முடியவே முடியாது. என் கணவரை நீங்கள் காண்பதால் கெடுதி சம்பவிக்குமே ஒழிய நன்மை பயக்காது. ஆகையால் நான் அதற்கு மட்டும் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்' என்றாள்.

டாக்டரின் முகத்தில் அனுதாபத்துடன் கலந்த ஒரு புன்சிரிப்பு மலர்ந்தது. 'உங்கள் பயம் எனக்குப் புரிகிறது. ஆனால், வந்த இடத்தில் நான் உங்கள் கணவரிடம் நேரடியாக ஒன்றும் கேட்டுவிட மாட்டேன். என் மனைவி உங்கள் வீட்டிற்கு சரோஜாவுடன் வருவாள். நான் அவர்களுக்குத் துணை வருபவன்போல் உடன் வருவேன்' என்றார்.

'வந்து...?' என்றாள், பார்வதி.

'அவரைப் பார்ப்பேன். நேரில் பார்ப்பதால் எத்தனையோ விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, அவர் உடல்நிலை, தேக ஆரோக்கியம்போன்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாமல்லவா?'

பார்வதி சிரித்தே விட்டாள்.

'அவர் தேக ஆரோக்கியம் நன்றாக இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். ஆனாலும், அவருக்கு நேர இருப்பது திடீரென்று எதிர்பாராமல் விபத்தாக நேரிடலாமல்லவா?' என்றாள்.

அவள் குரலில் ஒலித்த ஏளனத்தை அவர் கவனித்ததாகவே தெரியவில்லை. 'ஒப்புக்கொள்கிறேன். எனக்குக் கொஞ்சம் ரேகை சாஸ்திரம் தெரியும். பேச்சுவாக்கில் அவர் கையைப் பார்த்துஅவர் ஆயுள் ரேகை எப்படியிருக்கிறது, சமீபத்தில் அவருக்கு ஏதேனும் அம்மாதிரி விபத்து நேரக்கூடுமா என்பதையெல்லாம் தெரிந்துகொள்வேன்,' என்றார் டாக்டர் அமைதியுடன்.

பார்வதிக்கு டாக்டரிடம் துளிர்த்திருந்த நம்பிக்கை பட்டுப்போய்க் கொண்டிருந்தது.

'நீங்கள் சொல்லுவது விசித்திரமாக இருக்கிறதே! என் கணவரின் ஆயுளை அவர் கை ரேகையிலிருந்து நீங்கள் தீர்மானித்து விடப் போகிறீரா, என்ன?' என்றாள் வெட்டும் எகத்தாளத்துடன்.

டாக்டரின் அமைதியில் ஒருவித சலனமும் தோன்றவில்லை.

'ஏன் கூடாது, அம்மா? அவர் ரேகை அவர் உடலுடன் பிறந்தது. நீங்கள் கவலைப்படும் போட்டோவோ சென்ற இருபத்தைந்து வருஷங்களுக்குள்ளேயே எடுக்கப்பட்டது. அந்த போட்டோவிற்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பை, நான் ஏன் அவர் கை ரேகைக்குக் கொடுக்கக்கூடாது?' என்றார்.

பார்வதிக்கு இதற்கு ஒரு பதிலும் சொல்லத் தோன்றவில்லை. 'அப்படியானால், போட்டோவின் சூசகத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லுங்கள்?...' என்றாள், தட்டுத்தடுமாறிக்கொண்டு.

'நான் கட்டாயம் அப்படிச் சொல்லவில்லை,' என்றார் டாக்டர் சாவதானமாக. 'வாழ்க்கையில் நமக்குத் தெரியாத, புரியாத எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுவதும் தவறு.

வெறும் பிரமை என்று உதறி ஒதுக்கு வதும் பிசகு. இந்த போட்டோ சம்பவம், அதுபோன்ற ஒரு நிகழ்ச்சிதான். நீங்கள் பயப்படுகிறபடி அடுத்தபடி உங்கள் கணவருக்கே விபத்து நேரிடலாம். ஒருவேளை வேறு ஏதாவது நேரிட்டு அவருக்கு நேரவிருக்கும் விபத்து தடையும் படலாம்' என்றார்.

'உதாரணமாக?' என்று சம்பாஷணையில், முதன் முதலாகக் குறுக்கிட்டாள் சரோஜா.

'உங்கள் தோழியின் கணவருக்கு முன்பு அந்த போட்டோவில் எஞ்சியுள்ள வேறு யாருக்கேனும் மரணம் சம்பவிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது, நீங்கள் பயப்படும் தற்போதைய இந்த நியதி முறிந்து விடலாமல்லவா?' என்றார் டாக்டர், சரோஜாவை நோக்கி.

'அதை எப்படி நாம் தெரிந்து கொள்ளுவது?' என்றாள் சரோஜா தொடர்ந்து.

'சிரமந்தான், நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இது தலைபோகிற விஷயம் பாருங்கள். ஆகையால் போட்டோவில் பாக்கியிருப்பவர்களின் விலாசத்தை எப்படியேனும் தெரிந்து கொண்டு அவர்கள் க்ஷேமலாபத்துடன் நாம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்' என்றார் டாக்டர்.

'அவர்கள் க்ஷேமத்துடனா, அல்லது நாசத்துடனா?' என்றாள் சரோஜா.

'அப்பப்பா! எத்தனை தகாத எண்ணம் என்று காதுகளை மூடிக்கொண்டாள் பார்வதி.

கடைசியில் அன்று பேச்சின் முடிவில் கூடியசீக்கிரம் தன் கணவரை டாக்டர் சந்திக்க ஏற்பாடு செய்வதாகச் சொல்லி பார்வதி விடைபெற்றுக் கொண்டாள்.

அவர்கள் சென்று வெகுநேரமாகியும் டாக்டர் தன் சாய்வு நாற்காலியை விட்டகலாமல், யோசனையில் மூழ்கியிருந்தார். அருகில் வந்து அமர்ந்த சந்தோஷ் தேவி 'எந்தக் கோட்டையைப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள்?' என்றாள். 'நான் பிடிக்கக் கோட்டையிருந்தால்தானே? ஒரு அழகிய கோட்டை என் கண்முன் சிதறிக்கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே, என்று வருந்திக்கொண்டிருக்கிறேன்,' என்றார் டாக்டர். அப்போது அவர் குரலில் ஒலித்த சோகம் சந்தோஷ் தேவியின் உள்ளத்தைத் தொட்டிருக்கவேண்டும். 'புதிர்போடாமல் பேசுங்களேன்' என்றாள் பரபரப்புடன்.

'இப்போது வந்து போனாளே—அந்த மதராசிப் பெண், அவளைப்பற்றிதான் சொல்லுகிறேன். அவளுக்கு நேரவிருக்கும் விபத்தை அவள் நம்பி வழிபடும் பகவான்தான் தவிர்க்க வேண்டும்' என்றார் டாக்டர். உணர்ச்சி மிகுதியால் அவர் குரல் தடுமாறிற்று. அதனால் பயந்த சந்தோஷ் தேவி, 'நீங்கள்தான் அவள் கணவரைப் பார்க்கப் போகிறீர்களே, அப்போது எல்லாம் நல்லபடி முடிய உங்களால் ஆன முயற்சியைச் செய்யுங்களேன்,' என்றாள்.

'நான் அவள் வீட்டிற்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்தால்தானே? ஏதோ வரும்படி எனக்குத் தகவல் சொல்லியனுப்புவதாகச் சொன்னாளே ஒழிய அந்தப் பெண் என்னை நம்புகிறாளா என்று அஞ்சுகிறேன். அவள் அப்படியே நம்பினாலும் சந்தர்ப்பங்கள் எங்கள் சந்திப்பை மீண்டும் சாத்தியமாக்குமா?' என்று பெருமூச்செறிந்தார், டாக்டர்.

பார்வதி என்ன தடுத்தும் கேளாமல் சரோஜா அவளை வீட்டுவரை கொண்டு விடத் தானும் டாங்காவில் ஏறிக்கொண்டாள். டாங்கா வேகமாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால், அதன் வேகத்தைக் காட்டிலும் அதிக வேகமாகத் தோழிகள் இருவரும் தங்கள் தங்கள் எண்ணங்களில் ஈடுபட்டிருந்தனர். போகும் வழியில் கடைத்தெருவில் ஒரு மளிகைக் கடையில் டாங்காவை நிறுத்தச் சொல்லிய சரோஜா, கடைக்குச் சென்று ஏதோ வாங்கி வந்தாள். டாங்கா மீண்டும் 'ரோஸ் அவென்யூவை' நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. தோழியை நோக்கிய பார்வதி, 'அது என்ன பொட்டணம்?' என்றாள்.

'ஓ, இதுவா? இது...இதுவரை மலையைக் கெல்லிக் கொண்டிருந்தோமே




அடித்து

தோய்க்கும்


தொல்லை

தொலைந்தது-

காரணம்

காவேரி பார்!






காவேரி பார்
இல்லாள் கைகண்ட
சலவை சோப்.

காவேரி பார்
ஆடைகளின்
அழுக்கை அகற்றி
அவைகளை மேலும்
வெண்மையாகவும்,
பிரகாசமாகவும்
செய்ய வல்லது!

உழைப்பை
நீடிக்கவும் செய்யும்
உன்னத சலவை சோப்
காவேரி பார்!

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்



தது, வாங்கிக்கொண் டேன்' என்றாள் சரோஜா.

'நீ அஜாக்கிரதை யாக எங்கேயாவது வைத்து யாரேனும் தவறாக அதைச் சாப் பிட்டு வைத்தால்?' என்றாள் பார்வதி, கவலையுடன்.

இந்தப் 'பாக்கெட் எலிக்காக,' என்று சொல்லிச் சிரித்தாள், சரோஜா.


'அப்படியானால்?...' என்று கேட் பவள்போல் பார்வதி அவளைப் பார்த் தாள்.

'என் வீட்டில் எலி உபத்திரவம் தாங்கவில்லை. அதற்காக எலி பாஷா ணம் வைத்துப் பார்த்தேன். அதுவும் வேண்டிய அளவு பலனை அளிக்க வில்லை. முன்னொரு தடவை சந்தோஷ் தேவியுடன் பேசிக்கொண்டிருந்த போது எலி பாஷாணத்துடன், வெள் ளைப் பாஷாணத்தையும் கலந்து வைத் தால் நூற்றுக்கு நூறு பலனைக் கொடுக் கும் என்றார்கள். இப்போது அந்தக் கடையைப் பார்த்தவுடன் நினைவு வந் தது, வாங்கிக்கொண்டேன்' என்றாள் சரோஜா.

'எனக்கே அந்த பயம் உண்டு. இதை சிறிய அளவில் தினமும் சாப்பிட்டு வந்தால், பதினைந்தே நாட்களில் மனி தர்களையே கொன்று விடுமாம். 'பெரிய அளவில் சாப்பிட்டாலோ ஒரே டோஸ் கூடப் போதுமாம். சாப்பிடுபவர்களு க்கு வாயிலெடுத்து, பேதியும் கண்டு காலராவைப்போல் மரணம் சம்பவிக்கு மாம்,' என்றாள் சரோஜா.

அவள் பேச்சு பார்வதியின் மனத் தில் பட்டதாகத் தெரியவில்லை. 'ரோஸ் அவென்யூ' வந்ததும், தோழி யுடன் வீட்டிற்குள் வந்த சரோஜா, தான் வந்த டாங்காவிலேயே வீடு திரும்பவேண்டுமென்று சொல்லி, சீக் கிரமே விடைபெற்றுக்கொண்டாள்.

(தொடரும்)






# உங்கள் கிரக பலன்

**பி.வி.ராவ்**

1959வரு ஆகஸ்ட்மீ 17வ (விகாரிவரு ஆவணிமீ 1வ மு. 31-ந்தேதி) முதல் செப்டம்பர்மீ 16-ந்தேதி வரை.

—✶—

[கீழ்க்கண்ட பலன்களை சந்திரராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றி லிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்]




அஸ்வினி, பரணி, கிருத்திகை (முதல் பாதம் வரை)

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் 5வது வீட்டைப் பொறுத்த விவகாரங் களைக் குறிப்பிடும் மாதிரியில் கிரகநிலை அமைந்திருக்கிறது. அதா வது மனோநிலை, அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல், நிம்மதியின்மை, பய உணர்வு, குழந்தைகளைப்பற்றிய விவ காரங்களில் கவலை, சொந்த ஊருக்குப் போவது அல்லது கிட்டிய பந்துக்களைச் சந்தித்தல் இவற்றிற்கான சந்தர்ப்பங் களேற்படுவது, முதலியனவெல்லாம் இவ் வீட்டைப் பொறுத்த கிரகநிலை குறிக் கிறது. செவ்வாய், சுக்கிரன் நிலையினால் சிருங்காரத் துறையில் நாட்டமேற் படக்கூடும். முதியோர்களாயின் வேதாந்த பரமானபாட்டையில் போக் குத் திரும்பும். எதிர்காலத்தில் நம் பிக்கையூட்டக் கூடியதாகவே இம் மாதம் காண்கிறது. ஆனால் 5வது வீட் டிலேயுள்ள கிரகங்கள் விவேகத்துடன் நடக்க வேண்டும் என்பதை அறிவுறு த்துகின்றன. குடும்பமாயினும், வெளி யிடங்களானாலும் இந்த ராசிக்காரர் களுடைய கருத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதை நிதானித்து, சீர்தூக்கிப் பார்த்துச் செயல்பட வேண்டும். மாண வரின் படிக்கும் வழக்கத்தில் தீவி ரம் அதிகரிக்கும். பெரியோர்களிடம் அபிப்பிராயபேதம் கொள்ள வேண் டாம். அலட்சியமாகவும் நடக்க கூடாது. பொது விஷயங்கள், உறவினர் கள், நண்பர்கள் இவர்களைப்பற்றிய காரியங்கள் இம்மாதம் முக்கிய இடம் பெற்று விளங்கும். குருவின் நிலைமை யால் பெரியவர்களிடம் அதிருப்திப் படும்படி நடக்கும் படியாகும்.

நிதி நிலை:—செல்வத்தைக் குறிக்கும் கிரகம் 5ல் இருப்பதால் ஷேஷ்யம் செய் யும் இனங்களில் ஈடுபடத் தூண்டும். சுக்கிரனுக்குத் திரிகோணமாகச் சனி யிருப்பதால் பண விஷயங்களில் ஸ்தி

## 1959 ஆக. 18வ கிரகநிலை

<table>
<tr><td>கேது</td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">ஆகஸ்டுமீ 17வ. குரு விருச்சிகத்தில் பிரவேசம். ஆகஸ்ட்மீ 26வ செவ்வாய் கன்னி யில் பிரவேசம்</td><td>புதன் உரா</td></tr>
<tr><td>சந்தி</td><td>சூரிய சுக் செவ்.</td></tr>
<tr><td>சனி</td><td>குரு</td><td>நெப்</td><td>ராகு</td></tr>
</table>

ரத்தன்மை உண்டு. குருவினால் லாபம் பெறுவதற்குத் தடைகள் ஏற்படலாம் கூட்டுக் கணக்கு வைத்துக்கொள்வதாலும், பிறரோடு நடத்தும் கொடுக்கல் வாங்கல்களினாலும் அதிகமாகப் பணம் வரலாம்.

குடும்பம் சூழ்நிலை:—4வது வீட்டுக்குள்ள குரு பார்வை, 5வது வீட்டிலுள்ள கிரகச் சேர்க்கை இவை காரணமாக குடும்ப வாழ்க்கை சுவை தருவதாயும், சுமுகமாயும் விளங்கும். வெளியிடப் பழக்கங்களுக்கு, இது நல்ல மாதம். வீடு மாற்றமோ அல்லது வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதோ இம்மாதத்தில் நிகழக்கூடும்.

ஆபீஸ்:—இம்மாதம் உத்தியோகத் துறையில் பரபரப்பிராது. எஜமானரின் தயவு கிட்டும். அந்தஸ்து அல்லது உயர்வுபெற முயற்சி செய்வதில் பயனில்லை. உத்தியோகத்தில் கிட்டும் வருமானம் குறையாது.

வியாபாரிகள்:—முன்னைக் காட்டிலும் ரேஷ்ய விஷயங்களில் ஈடுபடும்படியிருக்கும். இதில் ஆழ்ந்து செயல்படுவதால் பண நஷ்டம் ஏற்பட இடமுண்டு. அதியாக இதில் நடக்காமலிருப்பது நலம். கூட்டு வியாபாரம் லாபகரம்; சுபிட்சமும் தரும். உள்நாட்டு வியாபாரத்தைப்போல வெளிநாட்டு வியாபாரம் நன்கு நடக்காது.

ஆகஸ்ட் 20 23 24 30 செப். 2 3 4 7 12ந் தேதிகள் இவர்களுக்கெல்லாம் அதிருஷ்ட தினங்கள்.

ஆக. 26 27 28 செப். 1 9 10 13 சந்தேகமான நாட்கள்.




கிருத்திகை (2, 3, 4 பாதங்கள்), ரோஹிணி, மிருகசீரிஷம் (1, 2 பாதங்கள் வரை)

கிரகங்கள் பெரும்பாலும் நிலையான இடங்களில் இடம் பெற்றிருப்பதால் இந்த மாதம் விருஷப ராசிக்காரர்களுக்கேற்படக்கூடிய நடப்புக்களும் தாமதமான தோரணையிலேயேயிருக்கும். எனவே பிறரையே நம்பிக்கொண்டிருக்க நேரும்; அல்லது சாதகமாகக் காரியங்கள் நிகழுவதற்காகப் பொறுமையோடிருக்க நேரும். குடும்பக்கவலை, வீட்டுப் பிரச்னை, சொத்து விவகாரங்கள், வாகனத்தைப் பொறுத்த பேரம், தாயார், குழந்தைகளைப்போலுள்ள கிட்டிய பந்துக்களைப்பற்றிய விஷயங்கள் ஆகியவைகளைக் குறிப்பதாகவே கிரகங்கள் அமையப் பெற்றுள்ளன. குடும்ப வாழ்வில் பொருளாதாரத் துறையில் தடைகளிருப்பினும் அபிவிருத்தி ஏற்படும் என்பதற்கும் அறிகுறி காண்கிறது. வீடு, ஆபீஸ் முதலிய துறைகளில் இந்த ராசிக்காரர்கள் ஈடுபட்டிருக்கும் நடவடிக்கைகள் 4வது வீட்டின் வழியாகச் சூரியனுக்கேற்படும் கதியைக்கொண்டு அறிவுறுத்தப்படுகிறது. முக்கியமான முயற்சிகளில் வெற்றி கிட்டுவதற்கான வாய்ப்புக்கள் உண்டென்பது 7வது வீட்டிலேயுள்ள குரு உணர்த்துகிறது. குடும்ப பந்தங்களின் விஷயத்தில் உஷாரும் முயற்சியும் தேவை. இந்த ராசிக்காரர்களுடைய அபிலாஷை, சரியான வழியில் பலத்தைத் திருப்புதல் இவை இம்மாதத்தில் அறிவுறுத்தப்படுகின்றன. இவர்கள் ஈடுபட்டுள்ள நடவடிக்கைகளில் மறைமுகமான எதிரிகளினால் அனாவசியமான வேதனைகள் ஏற்படுமென்பதற்கு 8வது வீட்டிலுள்ள சனி காரணம். சனி, செவ்வாய் நிலைமையினால் கருத்துக்களில் பிளவும், பிடிவாதமும் இருக்கும். சில சமயங்களில் இதனால் சுயநன்மைக்கும் பிரதிகூலம் ஏற்படக்கூடும். இம்மாதம் பக்கத்திலிருப்பவர்களாலேயே ஏமாந்து மோசம் போகவும் கூடும்.

நிதி நிலைமை:—தனாதிபதியான புதன் 5வது வீட்டில் குருவின் பார்வை பெற்றிருப்பதால் அதிக வருமானம் கிட்டும் என்பதற்கு அத்தாட்சி. பண விஷயங்களில் உறவினர்கள், ஸ்தாபனங்கள், பாங்கிகள் அல்லது கம்பெனிகள் மூலம் உதவி கிட்டும். எதிர்பாராமல் திடீரென்று ஏதேனும் பணம் வரவும் இடமுண்டு. ஒரு நிலையில் இல்லாமல் ஏற்றத் தாழ்வை உண்டு பண்ணக்கூடிய இடத்தில் புதன் அமைந்திருப்பதால் அனாவசியமானமுடையும் திடீரென்று வசதியும் உண்டாகக்கூடும்.


குடும்பம், சூழ்நிலை:—4வது வீட்டின் மார்க்கமாக சூரியனுக்கேற்படும் கதியினால் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும். தேகத்தில் சூடு அதிகமாகும். சில இனங்களில் வீடு மாறுதல் ஏற்படலாம். தாயார், ஜீவதசையில் இருந்தால் இம்மாதம் அவர் முக்கிய கவனம் பெறுவார். சொத்துக்களைப் பெறுதல், வீடு வாங்குதல் அல்லது வாகனப் பிராப்தி இவைகளுக்கு இம்மாதம் வாட்டமானது.

ஆபீஸ்:—4வது வீட்டிலிருந்து மற்ற கிரகங்களுடன் 10வது வீட்டுக்குச் சனியினால் ஏற்படும் பார்வையால் இந்த ராசிக்காரர்கள் ஈடுபட்டுள்ள இனங்களில் பலதரப்பட்ட வகைகளில் சிரத்தை மூலம், மறைமுகமாக ஒரு ஆதரவாளரினால் அபிலாஷைகள் பூர்த்தியடையலாம்.

வியாபாரிகள்:—இது சுபிட்சமான மாதம் இவர்களுக்கு. வெற்றிகரமாகப் புதிய கிளைகள் திறக்கலாம் அல்லது தொழில் நடத்தும் இடத்தில் மாறுதலேற்படலாம். கூட்டு வியாபாரம் நன்கு நடக்கும். அயல்நாட்டு வர்த்தகம் அதிக லாபம் தருவதாயிருக்கும்.

ஆகஸ்ட் 19 20 21 23 24 25 செப். 1 2 3 4 5 7 11 தேதிகள் இவர்களுக்குத் தாம்.

ஆக. 18 22 26 27 செப். 8 9 10 12 தேதிகள் சுகமாயில்லை.




மிருகசீரிஷம் (3, 4 பாதங்கள்), திருவாதிரை, புனர்வசு (1, 2, 3 பாதங்கள் வரை)

இவர்களுக்கு இம்மாதம் சாதகமான நிலைமையில் கிரகங்கள் அமையவில்லை. பிரபல கிரகங்களின் அமைப்பு உற்சாகமூட்டுவதாயும் காணோம். தாமதம், நம்பிக்கொண்டிருக்கும்படியான நிலை, பொறுமையின்மை, சில சமயங்களில் அவநம்பிக்கை முதலியனவெல்லாம் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள். 3வது வீட்டின் வழியாகச் சூரியன் பெறும் போக்கு சுபசூசகம். இதனால் தீராமல் எஞ்சி நிற்கும் காரியங்கள் முடிவுறும். வெளியாருடனும், உறவினரோடும் சந்தோஷகரமான உறவு பிறக்கும். சகோதர, சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் முதலியோரெல்லாம் இந்த ராசிக்காரர்களுடன் ஒத்துப்போவதால் முக்கிய பங்குகொண்டிருப்பார்கள். நல்ல சந்தர்ப்பங்களைச் சுட்டிக் காட்டுவதற்கு அவர்கள் காரணஸ்தர்களாயும் விளங்குவர். பத்திரிகையாளர்கள், பிரசுரகர்த்தாக்கள், இவர்களுக்கும் கடிதப் போக்குவரத்து போன்றவற்றிற்கும் 3வது வீட்டிலுள்ள கிரகங்களின் நிலை சாதகம். 3வது வீட்டிலுள்ள செவ்வாயினால் தைரியம் பிறக்கும். முன் நின்று முயற்சி செய்யவும் தூண்டும். இதனால் நண்பர்கள், உறவினர்கள் தொடர்பினால் ஆதாயம் கிட்டுவதற்கும் இடம் உண்டு. 6வது வீட்டிலுள்ள குருவைச் செவ்வாய் பார்ப்பது விரோதத்தை உண்டுபண்ணும். ஆகவே உஷாராகவும், யுக்தியோடும் நடந்துகொள்ள வேண்டும். சுக்கிரனின் ஸ்தான விசேஷத்தால் குடும்ப பந்தங்கள் வலுவுறும். பலவீனமான சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கும் மறைமுகமான எதிரிகளால் அனாவசியமான வேதனைகள் ஏற்படும் என்பதற்கு 6வது வீட்டிலுள்ள குரு காரணம்.

நிதி நிலைமை:—லாபாதிபதி, தன் சொந்த வீட்டுக்கே திரிகோணமாக விருப்பதாலும், புதன் 2வது வீட்டிலிருப்பதாலும் நண்பர்கள், உறவினர்கள் தாயார் இருப்பின் முக்கியமாக அவர் மூலம் பணம் கிடைக்க வழி உண்டு. சுப நிகழ்ச்சிக்காகக் கட்டு மீறிச் செலவுகள் ஏற்படலாம். செவ்வாய்க்கேற்பட்டுள்ள இடவிசேஷத்தால் செலவினங்களுக்காகக் கைமாற்று வாங்கும்படியாகும்.

குடும்பம், சூழ்நிலை:—குடும்ப வாழ்வைக் குதூகலமாயும், சுமுகமாகவும் இயங்கும்படியான நிலையில் ராகுவும், சனியும் சாதகமாக அமையவில்லை. குடும்பத்தில் எதிர்பார்க்கும் வசதிகளும், சுலபமான மனநிலையும் கிட்டாது. அநேகருக்கு ஜாகை மாற்றுவது அவசியமாயிருக்கலாம். கார் சொந்தக்காரர்களாயின் அவர்கள் மகிழ்ச்சியுடனிருக்க இயலாது.

ஆபீஸ்:—10வது வீட்டைக் குரு பார்க்கிறார். இதனால் உத்தியோகத் துறையில் கொண்டுள்ள அபிலாஷை

களுக்குப் பாதுகாப்பேற்படும். தாமதமாகுமானாலும் உத்தியோகத் துறையில் ஆதரவு கிட்டும். சக ஊழியர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமல்ல. பணத்தில் புழங்குபவர்களானால், உஷாராகவிருப்பதவசியம்.

வியாபாரிகள்:—இம்மாதம் வியாபாரிகளுக்கு மந்தமான நிலைதான். ஹேஷ்யத்தில் வழக்கமாகவுள்ள நிலைமை இராது. கடிதப் போக்குவரத்தின்மூலம் இவர்கள் வியாபாரத் துறையில் தங்கள் கருத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கும். கூட்டு வியாபாரத்தில் முணுமுணுப்புகள் இருக்கும். திருப்தி இராது.

ஆகஸ்ட் 18 19 20 22 23 24 25 30 செப். 1 2 4 7 13 தேதிகள் சுவாரஸ்யமானவை.

ஆகஸ்ட் 26 27 28 செப். 8 9 10 11 தேதிகள் அதிருப்திகரம்.




புனர்வசு (4-ம் பாதம்), பூஷ்யம், ஆயில்யம் வரை

இந்த ராசிக்காரர்களுடைய சகல விஷயங்களிலும் அதிகமான அனுகூலத்தை வழங்கக்கூடிய மாதிரியில் கிரகங்களின் நிலைமை அமைந்திருக்கிறது. இத்தகைய அமைப்பால் எதிர்ப்பு, சண்டை, தோல்விகள், எதிர்பார்க்கும் துறையில் ஏமாற்றம் முதலியனவெல்லாம் இராது என்று கூறலாம். இந்த மாதத்தில் திட்டமிட்ட காரியங்கள் சுலபமாகி அவற்றைச் செயல்படுத்தவும் இயலும். புதனுக்கேற்பட்டுள்ள நிலைமையினால் நேர்மையான சிந்தனைக்கு விசேஷ இடமுண்டு— மன உத்வேகத்தோடும், ஆக்கத்தோடும் திட்டமிட்ட காரியங்களைச் செயல்படுத்த இறங்குவதும் சாத்தியம். சூரியனுடைய போக்கு, இந்த ராசிக்காரருடைய பண, பொருளாதாரத் துறைகளை முக்கியமாக்கும். வருவாயைப் பெருக்கிக்கொள்ளச் செய்யும் முயற்சிகள், நிதித் துறையில் ஸ்திரத்தன்மையை நாடித் திட்டமிட்டவற்றை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கும் சூரியனின் கதியே காரணம். கிரகங்களிடையேயுள்ள பரஸ்பர உறவின் விளைவாக அதிக அளவில் உறுதிமொழிகள் தரப்படுமேயன்றி காரியங்கள் கைகூடா. குரு, செவ்வாய் அமைப்பு விசேஷத்தால் ஏற்கனவே நிதி சம்பந்தமாகப் போட்ட திட்டங்கள் உருப்படாமல் போக நேரும். இந்த சந்தர்ப்பத்தில் மனஸ்தாபங்களைத் தவிர்க்கவும். பயணம் ஒன்றும் நேரலாம். சண்டைகளினாலும், இதர சில்லறைப் பூசல்களாலும் அநாவசியக் கோதிப்பேற்படக்கூடும். சிறிது காலம் வரை இவற்றால் மனநிலை புரண்டு போய் நிம்மதியில்லாதிருக்கும். ஆனால், குருவின் பார்வையால் வெகுவாக நிலைமை சமனமாகும். சிலருக்குப் பார்வை பழுதடைந்து உடனடியாகக் கவனிக்கும்படியிருக்கும். அல்லது சிலருக்கு ஆபரேஷன்கூட செய்து கொள்ளும்படியாகலாம்.

நிதி நிலைமை: நிதியைக் குறிக்கும் கிரகம் தன் சொந்த வீட்டிலேயே பிற கிரகங்களுடன் சேர்ந்திருப்பதால் பண சம்பந்தமான ஏற்பாடுகள் பாதிக்கப்படக்கூடும். இஷ்டப்படி பணம் கிடைக்காது. ஆனால், செலவினங்களைச் சமாளிக்க வாட்டமாகத் திடீரென்று எதிர்பாராமல் பணம் வரவும் இடமுண்டு. இந்த இனத்தில் தகராறு ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும்.

குடும்பம், சூழ்நிலைமை:— குடும்பத்தில் சுமுகமாயும், வசதிகரமாயும் வாழ்க்கை மணமுறும்படியாகக் கிரக நிலை இருக்கிறது. பிரயாணம் ஒன்று நேரலாம். வயிற்றில் எரிச்சல் ஏற்படுவதையொட்டி பொதுவாக ஆரோக்கியம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டி வரும். இரவு ஆகாரம், சோறு இவற்றைக் குறைத்துக்கொள்ளவும்.

ஆபீஸ்: 10-வது வீட்டுக்குரிய செவ்வாய் இரண்டாவது வீட்டில் நல்லிடம் பெற்றிருப்பதால் உத்தியோக உயர்வு, எஜமானர் தயவு, மகிழ்ச்சிகரமான உத்தியோக வாழ்க்கை முதலியன ஏற்படலாம் என்பதற்கு அறிகுறி. காரியாலயத்தைச் செவ்வனே நிர்வகிக்கலாம்.



வியாபாரிகள்: வியாபாரிகளுக்கு இம்மாதம் ரொம்ப லாபகரமானது. இவர்கள் செய்யும் ஹேஷ்யங்கள் செழிப்பாக லாபங்களைக் கொடுப்பதாகவிருக்கும். கூட்டு வியாபாரம் சுபிட்சமுறும். அயல்நாட்டு வியாபாரம் தொல்லைகளுக்குட்பட்டிருக்கும்.

ஆகஸ்ட் 18, 20 23 24 செப். 2 3 4 7 8 10 12 தேதிகள் இவர்களுக்குத் தரமானவை.

ஆகஸ்ட் 19 26 27 28 செப். 1 9 10 11 தேதிகள் ஏற்றவையல்ல.




மகம், பூரம், உத்திரம் (1-ம் பாதம் வரை)

அனுகூல சக்திகள் அதிகமாக ஒளிரக்கூடியவாறு இவர்களுக்கெல்லாம் கிரகங்களின் நிலைமை இருந்து வருகிறது. சொந்த நலங்கள், பர நலங்கள், அபிப்பிராயங்கள், சம்பாதனை, செலவு முதலிய துறைகளில் புதிய மார்க்கங்கள் ஏற்படுவதாகும். சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய பிரபல கிரகங்கள் ராஜயோக அமைப்புக்கு உருவாகி முக்கியம் பெறுகின்றன. இக்கிரகங்கள் 5-வது வீட்டிலுள்ள சனிக்குத் திரிகோணமாயிருப்பது சுவாரஸ்யமானதும், நிர்ப்பந்தமானதுமான அபிலாஷைகளை முன்னணிக்கு வருவதற்கு இடம் தருவதாகும். இதனால் நேரிடை சம்பந்தம் கொள்ளாத விஷயங்களிலும், தொழிலையொட்டிய முயற்சிகளிலும் விசேஷமான பலன் ஏற்படுவதாகும். இந்த ராசிக்காரர்களின் வீட்டின் மார்க்கமாகச் சூரியனுக்கு ஏற்படும் போக்கின் பயனாக எழுத்து, மகாநாடுகள், மனப்போக்கு, பிரயாணங்கள், அண்மையிலுள்ள அலுவல்கள் ஆகியவற்றிலெல்லாம் மறுமலர்ச்சி உண்டாகும். செவ்வாயும், சூரியனும் ராசியில் இருப்பதாலும் அக்கிரகங்கள் தீவிரமான தன்மை வாய்ந்தவை என்பதாலும் இம்மாதத்தில் நிறைவேற்றுவதற்காகப் போட்ட திட்டங்



கிடைக்குமிடம்:— எஸ். வி. ரமணி, நியூஸ் ஏஜண்ட், குன்னூர். ரகுராம் ஸ்டோர்ஸ் இங்ஸ்வே, சிகந்திராபீத் (Dn.) ராமன் & கோ, 35-A, மார்க்கட் தெரு, சிங்கப்பூர் — கோ: 4-A, ஜாபான் ஹாலின், கோலாலம்பூர்.

களைச் செயல்படுத்துவதில் உத்வேகம் அதிகரிக்கும். குதிரைப் பந்தய முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும் இவ்விரு கிரகங்களின் நிலை அதிருஷ்டகரமாகும். 4-வது வீட்டில் குரு இருப்பது விசேஷத் திருப்தியைக் கொடுத்து உருவான லாபம் பெறுவதற்கான திட்டங்களை வகுக்க உதவும்.

நிதி நிலைமை: 12-வது இடத்தில் நிதியைக் குறிக்கும் கிரகம் இருப்பதால் செல்வ சம்பந்தமான விவகாரங்களில் நிலையில்லாத போக்கிருந்து வரும். புதனுக்கு குருவின் திரிகோண பார்வையினால் பண வசதிகளை வலுப்படுத்திக்கொள்ள பயன்படும். வியாபார முயற்சியில் பெரும் முதலீடு செய்யக்கூடிய திட்டங்கள் உருவாக்கப்படலாம்.

குடும்பம், சூழ்நிலை: குருவின் நிலையால் குடும்பத்தில் வசதியாகவும், சௌஜன்யமாகவும் இருக்கலாம். முதலீடு செய்வது, உள்ள இடத்தை அபிவிருத்தி செய்வது, வேறிடம் மாற்றுவது, வாஹன வசதி முதலியவற்றிற்கு இந்த மாதம் சாதகம். குமாரர்களில் ஒருவர் முன்னேற்றமடைவதால் மகிழ்ச்சியுண்டு. வெளி வட்டாரத்தில் இந்த ராசிக்காரர்களின் சேவை பாராட்டைப் பெறும்.

ஆபீஸ்: உத்தியோகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு பத்தாமிடத்தைக் குரு பார்ப்பதை அத்தாட்சியாகச் சொல்லலாம். முன்னைக்காட்டிலும் அதிகப் பொறுப்புள்ள பதவியை வகிப்பதற்கும் இந்நிலை இடம் கொடுக்கிறது. ஆபீஸில் அருகிலுள்ளவர்களோடு சச்சரவு நேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேணும். இல்லையானால் மேலதிகாரிகளிடம் இந்த ராசிக்காரர்களுடைய நலன்கள் பாதிக்கப்படும்.

வியாபாரிகள்:— வியாபாரிகளுக்கு இது ரொம்ப முக்கியமான மாதம், பல வியாபார முயற்சிகள் செய்யப்படுவதுடன் லாபம் தரத்தக்க பல பேரங்களும் நடக்கும். சில இனங்களில் பணம் முடங்கிப் போகும். மாதப் போக்கில் அவை கைக்கு வந்து சேர்ந்துவிடவும் கூடும். கூட்டு வியாபாரம் திருப்திகரமாயிராது.

ஆகஸ்ட் 19 20 21 23 24 25 செப். 1 3 4 7 8 11 13 தேதிகள் இவர்களுக்கு உத்தமமான தினங்கள்.

ஆகஸ்ட் 22 26 27 29 செப். 6 9 10 தேதிகள் அனுகூலமானவையல்ல.




உத்திரம் (2, 3, 4 பாதங்கள்), ஹஸ்தம், சித்திரை (1, 2 பாதங்கள் வரை)

கன்யா ராசிக்குடைய கிரகமான புதன் குருவுக்குத் திரிகோணமாக 3-வது வீட்டில் இருப்பதால் வெளியிடங்கள், குடும்பம், உத்தியோகம், பண விஷயம் ஆகியவற்றில் அனுகூலம் உண்டென்று காண்கிறது. ஆனால், 12-ம் இடத்திலுள்ள கிரகங்கள் பொதுவாக இவர்களுடைய நலன்களுக்கு எதிராக இயங்குவதைப்போல் தோன்றும். ஜாதகத்திலுள்ள கிரக நிலைமைகள் நன்றாகவிருக்கும்பட்சத்தில் 12-வது வீட்டிலேயுள்ள கிரகங்களால் விசேஷ முக்கியம் பெற்று, வெற்றியும், சுபிட்சமும் நிலவ உதவும். அப்படி இல்லையாயின் இம்மாதத்தில் நஷ்டம், கவலை, தொல்லை, சுயமாகக் கொண்டுள்ள அபிப்பிராயங்கள், செயல்கள் இவற்றால் நஷ்டம் முதலியன நிகழும். ராகுவைச் சனி பார்ப்பதால் வேறு துறையில் வாழ்வுக்கு மார்க்கம் பிறக்கும். வெற்றிகரமாக இம்மாதம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான எண்ணங்களும் உதிக்கும். திடீரென்று நிர்மாணகரமான எண்ணங்கள் உதிக்கச் செய்வதற்கு ராகு சக்திவாய்ந்த கிரகம். 12-வது வீட்டின் வழியாகச் செவ்வாயுடன் சூரியனுக்கு ஏற்படும் கதியினால் முன்னின்று முயற்சி செய்வதும், உற்சாகமாயிருப்பதும் சாத்தியமாகும். இப்படிப்பட்ட கிரக நிலையைப் பரிபூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். புதிய திட்டத்தைத் தேர்ந்தெடுத்து, சாதகமான சந்தர்ப்பங்களைக் கைப்பற்றுவதில் மனம் தீவிரமாக ஈடுபடும். அனுதாபிகள், அருகிலுள்ளவர்கள், கடிதப் போக்குவரத்து, முதலியவற்றால் போதிய உதவி கிட்டும்வகையில் குருவின் நிலைமை இருக்கிறது. 7, 9, 5-வது வீடுகளுக்குக் குருவின் பார்வையிருப்பது நம்பிக்கையூட்டுவதாகும். வாழ்வின் முன்னேற்றத்திற்கு அனுகூலமானதுமாகும்.

நிதி நிலை: 12-வது வீட்டிலுள்ள கிரகங்களினால் செலவு அதிகரிக்கும் என்பதைக் குறிக்கின்றன. ஒன்று மாற்றி ஒன்றாக அடுத்தடுத்துக் கட்டுமீறியும் அவை ஏற்படுவதாகும். தவிர்த்துக்கொள்ளக்கூடிய இனங்களும் எதிர்பாராமல் முளைத்து ஏமாற்றத்தை உண்டுபண்ணும். பண விஷயத்தில் சுய முயற்சியே விசேஷம். அருகிலுள்ளவர்கள் பேச்சைக் கேட்க வேண்டாம்.

குடும்பம், சூழ்நிலைமை: வெளியிடங்களிலேயுள்ளதுபோலக் குடும்பத்தில் அவ்வளவு சந்தோஷமாகயிருக்க முடியாது. வெளியிடங்களில் உல்லாசமாக பொதுநலப் பணிகள் புரியலாம். வீட்டு வசதிகள் பெருகும்.

ஆபீஸ்: உத்தியோகத்தில் இம்மாதம் அதிகம் எதிர்பார்ப்பதற்கில்லை. கிரகங்கள் எல்லாம் சுணக்கமாயுள்ளன. நல்ல நிலைக்கு இவர்களைக் கொண்டு வரக்கூடிய தோரணையில் அவைகள் அமையக் காணோம். மேலதிகாரிகள் உதவிகரமாயிருக்கமாட்டார்கள். ரகசியமாக எதிரிடையாக வேலை செய்யும் விரோதிகளிருப்பார்களாதலின் உஷாராயிருக்க வேண்டும்.

வியாபாரிகள்: குரு புதன் திரிகோணத்தால் வியாபாரம் லாபகரமாயிருக்கும். எதிர்ப்பின்றி சுலபமாகக் கூட்டு வியாபாரம் நடக்காது. அயல் நாட்டு வியாபாரங்கள் குறிப்பாக திரவ பதார்த்தங்கள் அதிக லாபகரம்.

ஆகஸ்ட் 19 20 21 22 24 செப். 2 4 5 6 7 10 11 தேதிகள் மகிழ்ச்சிக்குரியவை.

ஆகஸ்ட் 25 26 27 28 30 செப். 1 3 8 9 12 13 தேதிகள் இதமாகக் காணோம்.




சித்திரை (3, 4 பாதங்கள்), சுவாதி, விசாகம் (1, 2, 3 பாதங்கள் வரை)

பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்கெல்லாம் சொந்த நலன்கள் ஈடேறும் வகையில் சுமுகமான பலன்களைக் கொடுக்கும்படியாக இம்மாத கிரக நிலை இருந்து வருகிறது. மகிழ்ச்சியும், ஆக்கமும் பிறக்கக்கூடிய அமைப்பும், விவேகமும், யுக்தியும் வாய்ந்த முடிவும் ஏற்படும் என்பதையே கிரக நிலை சுட்டுகிறது. போன மாதத்தைவிட இந்த மாதம் தரமானது. பெரும்பாலான கிரகங்கள் சாதகமாயிருப்பதால் இந்த ராசிக்காரர்களுடைய சகல விஷயங்களும் சுலபமாக நிறைவேறும். இந்த ராசிக்குடையவர் 11-ம் வீட்டில் இருப்பதாலும், 9-வது வீட்டுக்குடைய கிரகம் 10-ல் இருப்பதாலும் இந்த ராசிக்காரர்களுடைய கருத்துக்கள் கோஷ்டி விவகாரங்களில் வரவேற்கப்பட்டு அவை பாராட்டையும் பெறும். புதன், குரு திரிகோணம் காரணமாக சொந்த நலன்கள் முன்னேற்றமுறும். வெளியிடப் பழக்கங்களில் முன்னிடம் பெற்று பெயரும், புகழும் கிட்டும். இரண்டாமிடத்தைச் செவ்வாய் பார்க்கிறார். ஆகவே சொல்லில் நிதானம் தேவை. பேச்சின் காரணமாகச் சண்டை மூளாமல் விலக்கிக்கொள்ள வேண்டும். விவாகம் ஒன்று சுலபமான முறையில் பேசி முடிக்கப்படலாம். 11-வீட்டின் வழியாகச் சூரியன் செல்வதன் பயனாக சகல நடவடிக்கைகளுக்கும் அனுகூலம். சர்க்கார் ஆதரவும் கிட்டும். நண்பர்கள், நட்பு இரண்டிலும் பிடித்தம் அதிகரிக்கும். உஷாராக அவர்களிடம் நடந்துகொண்டால் அவர்களுடைய தொடர்பால் ஆதாயம் உண்டு.

நிதி நிலை: தனாதிபதி செவ்வாய் தம்முடைய வீட்டையே பார்ப்பதால் பண விஷயத்தில் மகிழ்ச்சிகரமான நிலைமை உண்டு என்பதற்கு சுக்ர, 11-வது வீட்டுக்குடையவரோடும், இந்த ராசிக்கதிபதியாகவுள்ள கிரகத்தோடும் செவ்வாய்க்கேற்படும் தொட

ர்பு விசேஷத்தால் பிரத்யேக தன வசதிகள் உண்டாகலாம். அல்லது தசா புக்திக்கேற்ப சிலருக்குத் திடீரெனத் தனப் பிராப்தியும் ஏற்படும். செலவு கட்டுமீறிப் போகும் என்பதற்கு அறிகுறிகள் உண்டு.

குடும்பம், சூழ்நிலை: குடும்ப வட்டாரத்தில் சந்தோஷமூட்டக்கூடியவாறு கிரகங்கள் அமைந்துள்ளன. முன்னைக்காட்டிலும் வாழ்க்கை வசதியாகவிருக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் அனுகூலமேற்படும். நம்பிக்கைக்குப் பாத்திரமாக இல்லாமலோ அல்லது உண்மையாக நடக்காமலோ போகக்கூடிய ஒரு நண்பர் விஷயத்தில் இம்மாதம் உஷாராயிருக்க வேண்டும்.

ஆபீஸ்: 10—வது வீட்டில் புதனிருப்பதால் உத்தியோகத்துறையில் கொண்டிருந்த அபிலாஷை பூர்த்தியடையும். செய்யும் வேலை பாராட்டைப் பெறும். பண விஷயத்தில் புழங்குபவராயின் கணக்கில் உஷார் வேண்டும். பிறரால் பண நஷ்டம் ஏற்படவும் இடமுண்டு.

வியாபாரிகள்: வியாபார சம்பந்தமான ஹேஷ்யங்களில் இம்மாதம் மகிழ்ச்சிகரமாக விளங்கும். கூட்டாளிகளுள் சண்டை, பூசல்களிருக்குமாயினும் கூட்டு வியாபாரம் நன்கு நடைபெறும். அயல்நாட்டு வியாபாரம் செழிப்புடன் நடக்கும். வழக்கத்தைக் காட்டிலும் செலவு மிகவும் அதிகமாயிருக்கும்.

ஆகஸ்ட் 18 20 21 23 24 25 30 செப். 2 3 4 7 12 13 தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம்.

ஆகஸ்ட் 19 26 27 28 செப். 1 8 9 10 தேதிகள் நாமல்ல.




விசாகம் (4-ம் பாதம்), அனுஷம், கேட்டை வரை

எல்லாக் காரியங்களிலும் சந்தோஷமும் அதிருஷ்டமும் கலந்திருக்கும் என்று குறிப்பிடும்படியான ஸ்தியில் விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதத்திய கிரகங்களின் அமைப்பிருக்கிறது. 10—வது வீட்டில் கிரகங்கள் கூடியிருப்பதன் காரணமாக இந்த ராசிக்காரர்கள் உத்தியோக சம்பந்தமான விஷயங்களில் அக்கறை இருந்து வரும். உயர்படியிலேயுள்ளவர்களைச் சந்திப்பதும், அவர்களுடைய செல்வாக்கினால் இந்த ராசிக்காரர்கள் ஈடுபட்டுள்ள துறையில் சொந்த நலன்கள் முன்னேற்றமடையுமாறு செய்யப்படுவதும் இக்கிரக நிலையின் பயனாகும். சொந்தத்தைக் காட்டிலும் வெளி விவகாரங்களில் சிரத்தை அதிகமாயிருக்கும். பிரயாணம் ஒன்று சம்பவிக்கலாம். 10—வது வீட்டிலேயுள்ள கிரகங்களினால் இந்த ராசிக்காரர்களுடைய முயற்சிகளிலெல்லாம் மேலிடத்திலேயுள்ளவர்களுடைய ஒத்துழைப்பால் பெரிய நிவாரணம் ஏற்படும். பெற்றோர் ஜீவியதசையில் இருப்பார்களானால் அவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்த நேரும். 10—வது வீட்டின் மார்க்கமாகச் சூரியனுக்கேற்படும் கதியினால் உத்தியோகம் தேடுவதற்கான சந்தர்ப்பங்கள் வாய்க்கும். தனி முயற்சி, ஜாகை அபிவிருத்தி, இவற்றைச் செய்ய முயன்றால் அவற்றிற்கும் அனுகுணமானதே இந்த நிலைமை. உத்தியோக நலனின் எதிர்கால பாதுகாப்பே இவர்களுடைய லட்சியமாயிருக்க வேண்டும். இதற்கு முதலிடம் தருவது அவசியம். எண்ணிய திட்டத்தால் பயன் பெற செவ்வாயின் நிலையும் சாதகமே. குருவுக்கேற்பட்டுள்ள நிலையால் எதிர்கால வாழ்க்கைக்குப் புத்துயிர் ஏற்படும். இம்மாதம் இவர்களுடைய ஆசாபாசங்கள் பல. மாதம் முன்னேற முன்னேற அவை கைகூடும்.

நிதி நிலைமை: இரண்டாமிடத்தில் சனி இருப்பதால் சிக்கனத்தில் மனம் நாட்டம் கொள்ளும். 11, 9—வது வீடுகளில் உள்ள கிரகங்களினால் பண விஷயங்களில் தேவையான வசதிகள் சுலபமாகக் கிடைக்கும். எழுத்துமூலமும், மேலிடத்து அதிகாரிகளிடமிருந்தும் வியாபாரம், பாங்கி இவற்றிலிருந்தும் பண லாபம் கிட்ட இம்மாதம் வாட்டமானது. இம்மாதத்தில் பணத்துறை விசேஷ அபிவிருத்தியுறும் என்பது திண்ணம்.



குடும்பம், சூழ்நிலை: குருவுக்கேற்படும் அபிவிருத்தியினாலும், கிரகங்களின் அமைப்பாலும் குடும்ப வட்டாரத்தில் மகிழ்ச்சிகரமான நிலைமை ஏற்படும். அனுகூலக் கிரகங்களான குரு, சுக்கிரன் கேந்திரத்தால் வாழ்க்கை வசதிகரமாயும், சுமுகமாயும் விளங்கும். முதலீடு செய்ய நல்ல சமயம்.

ஆபீஸ்: ராசிக்குடைய செவ்வாய், ஜீவன ஸ்தானாதிபதியான சூரியனோடு பெறும் ஸ்தான விசேஷத்தால் உன்னத நிலையை எய்தும்படி வேலை செய்யலாம். இதில் இவர்களை ஆதரிப்போரின் ஒத்துழைப்பும் உண்டு.

வியாபாரிகள்: இவர்கள் ஹேஷ்யங்களில் லாபம் கிடைத்து மகிழ்வார்கள். தேவையான மூல பலத்தோடு புதிய கூட்டாளிகள் முன் வருவர். அல்லது புதிய வியாபாரக் கிளைகளைத் திறக்கலாம். அயல்நாட்டு வியாபாரம் அமோகமாக நடக்கும்.

ஆகஸ்ட் 19 20 21 23 24 25 28 30 செப். 1 2 3 4 6 7 8 11 12 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்தவை.

ஆகஸ்ட் 22 26 27 29 செப். 9 10 13 தேதிகளை அப்படிச் சொல்வதற்கில்லை.




மூலம், பூராடம், உத்திராடம் (1-ம் பாதம் வரை)

இம்மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு நல்லதும் கெட்டதும் கலந்து கட்டியாகப் பலன்களைச் சொல்லும்படி கிரகங்களின் அமைப்பிருக்கிறது. சுணக்கப்படலம் நீங்கி வாழ்வில் நம்பிக்கையூட்டக்கூடிய கட்டம் பிறப்பதாகக் கூற வேண்டும். 9வது வீட்டின் வழியாகச் சூரியனுக்கேற்படும் போக்கினால் உயர்படியில் உள்ளவர்கள், முதியோர்கள், அல்லது பெற்றோர் இவர்களுடன் தொடர்பேற்படும். வைதிகக் காரியங்கள், சுய விவகாரங்களில் சட்டபூர்வமான மார்க்கங்கள், தூர இடத்துப் பிரயாணம், தொலைவிலுள்ளவர்களுடன் கடிதப் போக்குவரத்து எதிர்காலத்தைப் பொறுத்து முக்கியமாகத் திட்டமிடுவது முதலியனவெல்லாம் நிகழ இடமுண்டு. முன்னைக்காட்டிலும் பிறர் இந்த ராசிக்காரர்களிடம் அனுதாபம் கொள்ளாதிருப்பர். இம்மாதத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டு கவனிப்போமாயின் புகழ் ஓங்கி, உயர்தரத் தொடர்பும், வசதிகரமான வாழ்க்கையும் கிட்ட வாட்டம் எனலாம். நம்பிக்கை வைத்திருப்போரிடமிருந்து அனுகூலம் தரக்கூடிய யோசனைகள், சிபாரிசுகள் கிட்டும். பாங்கிகள், வக்கீல்கள், பத்திரிகையாளர்கள், இன்ஷூரன்ஸைச்சேர்ந்த நபர்கள் இவர்களுடைய நிலைமை இம்மாதம் பிரகாசமடையும். நல்ல சேதிகள், கடிதங்கள், அழைப்புக்கள் வரும். செப்டம்பர் 3ந்தேதி அமாவாசை எதிர்பாராத மாறுதல்களை உண்டாக்கிக் கொடுத்து முயற்சிகளுக்கு அனுகூலம் ஏற்படும். தூர இடங்களுக்குப் போக நேரும். ஆலயங்கள் அல்லது கல்யாணம் போன்ற சுபகாரியங்களுக்குச் செல்லும்படியாகலாம்.

நிதி நிலை:—சனி சுக்கிரனுக்குத் திரிகோணமாயிருப்பதால் பண விஷயங்களைப் பொறுத்த நலன்கள் ஏற்ற முறுவதற்கு விசேஷம். 12வது வீட்டில் குருவைச் செவ்வாய் பார்ப்பதால் சேமிப்புக்கு ஏற்றதல்ல. எதிர்பாராத, கட்டுமீறிய செலவினங்கள் ஏற்படும்.

குடும்பம், சூழ்நிலை:—குடும்பத்தில் வசதிகரமான, மனோகரமான வாழ்க்கையை அளிக்கக்கூடியவாறு கிரக நிலைமை இல்லை. ஆரோக்கியம் திருப்திகரமாயிராது. சில இனங்களில் வீட்டுப் பிரச்னை சிந்தையைக் கவர்ந்து நிற்கும்.

ஆபீஸ்:—புதன் 8லும், ராகு 10லும் சனி பார்வை பெறுவதால் உத்தியோக வாழ்வு நிம்மதியாயிராது. இலாகாவில் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளைப் பற்றிய தகராறுகள், பேச்சுக்கள் வேண்டாம்.

வியாபாரிகள்:—அயல்நாட்டு வியாபாரத்தையொட்டிய ஹேஷ்ய பேரங்களுக்குக் கிரகநிலை சாதகம். அதிக

மாக வியாபாரத் தொடர்புகளேற்படும். பாங்கி அல்லது ஸ்தாபனத்தின் ஆதரவு உண்டு. நஷ்டத்தைத் தவிர்க்க அதிக மாக ஹேஷ்யங்களில் இறங்காமலிருப் பது நலம்.

ஆக. 20 23 24 29 30 செப். 2 3 5 7 10 11 தேதிகள் இவர்களுக்கு வாட்ட மானவை.

ஆக. 19 21 25 26 27 28 செப். 1 9 12 தேதிகள் பிரயோசனமாகக் காணும்.




உத்திராடம் (2, 3, 4 பாதங்கள்) திருவோணம், அவிட்டம் (1, 2 பாதங்கள் வரை)

இம்மாதம் அனுகூலகரமாக அமைந் துள்ள ஒரே கிரகம் 11வது வீட்டி லுள்ள குரு ஒருவரே. இதனால் நண்பர் களால் ஆதாயமும், இதர துறைகள் மூலம் சகாயமும் கிட்டும். ராசிக்கு டைய கிரகம் 12ம் வீட்டில் சாதகமான இடத்தில் இல்லை. செலவு முன்பின் பாராமல் நடந்து, சுயநாசத்தையே தேடிக்கொள்ளச் செய்யும். 8வது வீட்டி லுள்ள கிரகங்களுக்கு இந்த ராசிக் குடைய கிரகம் திரிகோணமாயிருப்ப தால் எதிர்பாராத உதவி அல்லது இனம் தெரியாத அல்லது நேரிடையாக வில்லாத துறைகள்மூலம் வெற்றிகர மான முயற்சிகளில் இறங்க லாம் என்று கூறலாம். 8-வது வீட்டிலுள்ள கிரகங்கள் ஆரோக் கியத்துக்கு அனுசரணையல்ல. உறவினர் கள் அல்லது விரோதிகள் புறம் பேசு வர். நண்பர்கள் பலர் உண்டு. ஆனால், அவர்கள் நாணயமாகவும் உண்மையாக வும் நடக்கமாட்டார்கள். இம்மாதம் பார்வை கெடும்; அல்லது ஆபரேஷன் நடக்கும். சில இனங்களில் திருமணம் நிகழும். வியாஜ்ய வேதனை ஏற்பட லாம். வரி விதிப்பிலாகா கணக்குக் கேட்பதால் வீண் விசாரம் மூளும். பிர கார வேலை ஏதாவதிருப்பின் அதை இம் மாதம் முக்கியமாகக் குறிப்பிடலாம். சூரியன் போக்கு திடானமோ அமை தியோ நிலவ இடம் தராது. மேலிடத் திற்குப் போன விவகாரம் குறிதவறிப் போய்விட்டதாகத் தோன்றுமேயன்றி அப்படியொன்றும் உண்மையில் ஆகி விடாது. சூரியனுக்கேற்படும் கதி ஈவேஜ், ஆர்ஜிதப் பிரச்னை யைக் குறிக்கிறது. கூட்டாகக் கணக்கு வைத்துக்கொள்வது, பிறர் பொருளை வைத்திருத்தல், பிறருடன் ஒத்து ழைப்பு, மற்றவர்கள் பண நிர்வாகத் தில் அக்கறை இறுதியாக அந்தரங்க மான தகவல்களை சேகரித்து வைத்துக் கொள்வதுபோன்ற இனங்களையும் இங்கு குறிப்பிடலாம்.

நிதி நிலை:—தனாதிபதி சனி 12லும், லாபாதிபதி 8லும் இருக்கிறார்கள். இரு வரும் சரியான இடம் பெறவில்லை. எனவே பணவசதி திருப்திகரமாயிரா து. 11வது வீட்டிலுள்ள குரு காரண மாக எதிர்பாராமல், நினைக்காமல் திடீரெனப் பணம் கிட்டும். நண்பர், உறவினர்களுடன் கொடுக்கல் வாங்கல் வேண்டாம் விலக்கவும்.

குடும்பம், சூழ்நிலை:—குடும்ப வட்டா ரத்தில் மகிழ்ச்சி யூட்டக்கூடியதா யில்லை கிரகநிலை. தம் குழந்தை களும், குடும்பமுமே மனநிம்மதியைக் குலைக்கலாம். ஆரோக்கியமும் பாதிக் கப்படும் பிறர் தூஷிப்பர். திடீரென ஜாகை மாற்றம் ஏற்படலாம்.

ஆபீஸ்:—உத்தியோகத்தில் ஊக்க மூட்டக்கூடிய அறிகுறிகளிருப்பதாகக் கிரகநிலையிலிருந்து சொல்வதற்கில்லை. மனதில் பெரும் கவலை சுமையாக இரு ந்துவரும். சகபாடிகள் ஆதரவோடி ருக்க முடியாமல் போகலாம். வேலை யில் பொறுப்பு அதிகரிக்கும்.

வியாபாரிகள்:—இது இவர்களுக்கு அனுகூலமான மாதம். கூட்டு வியா பாரம் நன்கு நடைபெறும். கூட்டு வியா பாரத்தால் பயனும், லாபமும் உண்டு. அயல்நாட்டு வர்த்தகம் முன்னேறமுடி யாத தடைகள் ஏற்படும்.

ஆகஸ்ட் 20 21 22 23 24 25 செப். 3 4 6 7 8 10 13 தேதிகள் இவர்களுக்கு சிறந்தவை.

ஆகஸ்ட் 18 26 27 28 29 செப். 1 5 9 12 தேதிகள் சுவாரஸ்யமில்லை.






அவிட்டம் (3, 4 பாதங்கள்), சதயம், பூரட்டாதி (1, 2, 3 பாதங்கள் வரை)

கும்ப ராசிக்காரர்களைப் பொறுத்த வரை சிலருக்கு வாழ்க்கை பிரகாச முறும்படியாகவும் இன்னும் சிலருக்கு இருள் சூழ்ந்திருக்கும்படியாகவும் பலன்கள் கலந்து கட்டியாகவிருக்கும் என்று கருதும் வகையில் இந்த மாதம் கிரகநிலைமை அமையப் பெற்றுள்ளது. இந்நிலை அவர் அவர்களது ஜாதகத் தைப் பொறுத்ததாகும். குருதசை நடப்பிலுள்ளவர்களாயின் அவர்களு க்கு இம்மாதம் அனுகூலம், ஏனெனில் இம்மாதத்தில் குரு முக்கியக் கிரகமாக ஸ்தானம் பெறுகிறார். 1960 ஜனவரி வரையில் குரு உற்சாகமூட்டும் இடத் தில் அமைந்திருப்பார். உத்தியோகப் பாதுகாப்பையொட்டிய அபிலாஷை கள், எதிர்கால வாழ்க்கை லட்சியங்கள் இவையெல்லாம் கைகூடும். சுயேச்சை யாக உன்னத காரியமெதுவேனும் சாதிக்கப்படலாம். இதனால் மேலதி காரிகள் அபிமானத்துக்குப் பாத்திர மாகி முன்னணியில் பிரகாசிக்கும் வாய்ப்பேற்படும். 7வது வீட்டிலுள்ள செவ்வாயினால் சந்தர்ப்பங்கள் மாறி சிந்தனைக்கும் செயலுக்கும் வரும்படி யான புதிய நிலைமைகளும், வாழ்க் கைத் திட்டங்களும் உருப்பெறும். பிர யாணம், கடிதப் போக்குவரத்து இரண் டையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நண்பர்கள் வட்டாரத்தில் புதிய பரிச்சயங்கள் ஏற்படலாம். இவர் களில் சிலரால் மனவூக்கமும் கொண்ட அபிலாஷைகளுக்கு உதவியும் கிட்டும். எட்டாவது வீட்டு ராகுவைச் சனி பார்ப்பதால் துக்கத்தின் சாயை ஏற் படும். ஆனால் சுக்கிரன், குரு இவர்களு டைய கேந்திர நிலையால் அதிகப்படி யான பிரகாசம் உண்டாகி மகிழ்ச்சி பிறக்கும்.

நிதி நிலை:—வருவாயைக் குறிக்கும் குரு 2வது வீட்டுக்குத் திரிகோண மாக இருப்பதால் பண முன் னேற்றத்துக்கு மகிழ்ச்சிகரம். நண்பர் களும், உறவினர்களும் இந்த ராசிக் காரர்களுக்குப் பக்கபலமாகி இம்மாதம் முன்னைக்காட்டிலும் சுலபமாக விளங் கும். குருவைச் செவ்வாய் பார்ப்பதால் ஓரளவு நிதி நிலை வறட்சியுறும்.

குடும்பம், சூழ்நிலை:—அனுகூலம் தரக் கூடிய கிரகங்கள் பெற்றுள்ள ஸ்தான விசேஷத்தால் குடும்ப வாழ்க்கை சந் துஷ்டியாகவும், சௌஜன்யமாயும் இருக் கும் என்று குறிப்பிடலாம். செவ்வாய் 7ல் இருப்பதால் சில இனங்களில் இல் லற சுகம் பாதிக்கப்படும். சில இனங் களில் திருமணம் நிகழும். விவாகமான வர்கள் சிலருக்குத் திடீரெனப் பிரிவு ஏற்படவும் கூடும். தற்காலிகமானதும், கவர்ச்சிகரமானதுமான, உறுதியற்ற புதிய தொடர்புகளும் ஏற்படக்கூடும்.

ஆபீஸ்:— கிரகங்களுக்கேற்பட்டுள்ள நிலையினால் உத்தியோகத்தில் முக்கிய மாறுதல் ஏற்படும் என்பதற்கு அடை யாளம் எனலாம். பிரத்யேகமான சந் தர்ப்பங்கள் வாய்க்கும். வெற்றிபெறக் கூடிய புதிய மார்க்கங்களைப்பற்றி முன் னறிவிப்பும் தரக்கூடிய தினுசில் கிர கங்கள் உள்ளன.

வியாபாரிகள்:—இவர்கள் புதிய தொடர்புகளைத் தேடிக்கொள்வதிலும், வியாபாரத்துக்குப் புதிய மார்க்கங் களைக் கண்டுபிடிப்பதிலும் மும்முரமாக விருப்பர். முன்னையும்விட முக்கிய மாகக் கூட்டு வியாபாரத்தை வற்புறுத்த வேண்டும். அதீதமான ஹேஷ்யங்களி லிறங்குவதைத் தவிர்க்கவேண்டும்.

ஆகஸ்ட் 19 20 23 24 25 செப். 2 3 4 7 8 10 13 தேதிகள் இவர்களுக்கு உன்னதமானவை.

ஆகஸ்ட் 22 26 27 28 செப். 1 5 6 9 11 தேதிகள் உயர்வாகச் சொல்ல முடி யாது.




பூரட்டாதி (4-ம் பாதம்), உத்திரட்டாதி, ரேவதி வரை

சென்றதைவிட இந்த மாதம் முழு தும் நல்லன யாவைக்கும் ஆதரவாக யிருக்கும்படி கிரகங்கள் இருக்கின்

றன. பொது நலத்துக்கு உதவியாக செவ்வாய், சுக்கிரன் நிலையும் போக்குமுள்ளது. ராசி, புதன் இவற்றைக் குரு பார்ப்பது, 6—வது வீட்டு கிரகங்களுக்குச் சனியின் திரிகோணம் இவற்றால் விஷயங்கள் நிச்சயமற்று முதலெடுப்பில் தாமதமும் ஏமாற்றமும் ஏற்படும். 6—வது வீட்டின் வழியாகச் சூரியன் செல்லுவதால் பொதுவாக விவகாரங்கள் தீர்வு காண்பதற்குச் சாதகம். விரோதம் ஏற்படும். ஆரோக்கியமும் க்ஷீணிக்கும். குருவின் நிலையால் இவை சமனப்படும். உறவினர்களே விரோதிகள். ராசியைச் செவ்வாய் பார்ப்பது, 12—வது வீட்டைச் சனி பார்ப்பது இவை காரணமாக தமக்கே தீமையை உண்டாக்கக்கூடிய முறைகளைக் கையாண்டு போராட்ட உணர்வு பெற்று ஆக்கவோ அழிக்கவோ கூடிய முறைகளில் முயற்சி செய்யும் மனோபாவம் ஏற்படும். சிறிது காலம்வரை ஒரு வழக்குபற்றி கவனம் கவர்ந்திருக்கும். 9—வது வீட்டுக் குரு காரணமாக விவாகம் நடைபெறச் சாதகமான காலம். புதிய அறிவு பெறுவது, அபிவிருத்திகரமான குடும்ப வசதிகளைப் பெறுவது முதலியனவும் சம்பவிக்கும். ஆத்மீகத் துறையிலுள்ளவர்கள் தொடர்பேற்படுவதற்கும் குரு நிலை இடமேற்படுத்தும். வைதிகச் சடங்கு ஒன்று நடக்கலாம். தூர இடத்துக்குப் பிரயாணம் போகக்கூடிய சந்தர்ப்பமும் இம்மாதம் வாய்க்கலாம். குழந்தைகள் விவகாரமாகக் கவனம் ஈடுபட்டிருக்க நேரலாம்.

நிதி நிலை: செல்வ பலத்தைக் குறிக்கும் கிரகமான செவ்வாய் தன் வீட்டுக்கே திரிகோணமாகயிருக்கிறார், பண ஓட்டத்துக்கு சுகமாயில்லை. முக்கிய செலவினங்களுக்காக கடன் வாங்க நேரும். ஆரோக்கிய நிலை குறித்து கவனம் செலுத்தவும், செலவிடவும் நேரும். கெட்ட கிரகங்களினால் அதிகமாகச் செலவிடும்படியாகவும் ஆகும்.

குடும்பம், சூழ்நிலை: 6—ம் வீட்டிலுள்ள கிரகங்களினால் சந்தோஷகரமான, சௌஜன்யமான குடும்ப நிலை இராது. சிலருக்கு சூழ்நிலையிலோ அல்லது ஜாகையைப் பொறுத்தோ மாறுதலேற்படலாம். குழந்தைகளில் ஒருவரைப்பற்றி முக்கிய கவனம் செலுத்தும்படியிருக்கும்.

ஆபீஸ்: குரு, சனி முதலியவர்களின் 6—ம் இடத்து நிலையினால் உத்தியோகத்தில் முக்கிய மாறுதல்கள் ஏற்படும். அல்லது உத்தியோகத்தில் கொண்டுள்ள அபிலாஷைகளைப் பொறுத்து ஆதாயம் ஏற்படலாம். முன்னைக் காட்டிலும் வேலைப் பளு அதிகரிக்கும். சகபாடிகளின் சந்தோஷகரமான ஒத்துழைப்பிராது. வேறிட மாற்றத்துக்கு முயன்றால் வெற்றிகரமாகக் கைகூடலாம்.

வியாபாரிகள்: ஷேர்ஷ்ய வியாபாரங்களுக்கு இம்மாதம் முக்கியம். அயல்நாட்டு வியாபாரத்தில் பிரத்யேக கவர்ச்சியிருக்கும். அபிப்பிராய பேதங்களால் கூட்டு வியாபாரம் பாதகமுற்றிருக்கும். ஊழியர்கள் அதிருப்திக்கு இலக்காகவும் நேரும்.

ஆகஸ்ட் 20 23 24 25 28 30 செப். 3 4 5 6 8 11 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

ஆகஸ்ட் 18 22 26 27 29 செப். 1 7 9 12 சிரேஷ்டமானவையல்ல.

குறிப்பு :—ஜாதகத்தோடு ரூ. 5—8—0 அனுப்புபவர்களுக்கு 6 கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படும்.

---

ஸ்ரீ பி. வி. ராவ்,
நெ. 2/5, பெலண்டு ரோடு,
சென்னை—5.




# வீட்டில் பத்மினி





லலிதா பத்மினி, ராகினி! நடன உலகில் ஆரம்பித்து, படவுலகில் காலடி வைத்து புகழேணியின் உச்சியை அடைந்த பெயர்கள் இவை. லல்லியின் குழந்தை ராதா அனை வருகும் ஒரு அன்புச் செல்வம் பப்பி மீது அதற்கு அலாதி ஆசை. சகோதரிகள் சாப்பிடும் போதுகூட ஆகாரத்தை ரசிக்கவில்லை. ராதாவின் விளையாட்டைத்தான் ரசிக்கிறார்கள்.



பூஜை அறைக்குச் சென்று ஐந்து நிமிஷ நேரம் கடவுளைத் தியானிக்காமல் பத்மினி படப்பிடிப்புக்குச் செல்லுவதில்லை. எந்தக் காரியமிருந்தாலும் வெளியே செல்லுவதற்கு முன் பத்மினி அந்த அறை வாசலில் விழுந்து நமஸ்கரித்து விட்டுத்தான் செல்லுகிறார்.

நடன நட்சத்திரம் அல்லவா? அத்தனை பொம்மைகளிலும் கதக்களி பொம்மையில் அவருக்குத் தனி மவுசு. எல்லா பொம்மைகளையும் அவர் அழகாக எடுத்து பார்த்துப் பார்த்து வைத்தது, அவைகளை 'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்' என்று விசாரித்தது போலிருந்தது





கன்றுக்குட்டிகள்மீது பத்மினிக்கு உயிர். அவைகளைப் பார்த்துப் பார்த்து பேரானந்தம் அடைகிறார். அவைகள் வயிறு நிறம்ப பால் குடித்திருந்தாலும் பத்மினி கொடுக்கும் வைக்கோலைத் தின்றுதான் ஆக வேண்டும்.

தினசரி பேப்பர் படிப்பது அவரது பொழுதுபோக்கு. ஆபாச பத்திரிகைகளை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். நல்லது எதற்கும் அவரிடம் நல்ல மதிப்பு உண்டு. அதுவும் 'மித்திரன்' பத்திரிகை நிருபர் என்றவுடன் தொப்பென்று அனைத்தையும் போட்டுவிட்டு வந்துவிட்டார்.





தோட்டத்தில் உள்ளசெடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறார் தோட்டக்காரர் 'ஏன் இந்தச் செடி இப்படி இருக்கிறது. அந்தச் செடி அப்படி இருக்கிறது.. கவனிப்பு சரியில்லையா?' என்று அதட்டல் போட்டு அனைத்தையும் கவனித்துக் கொள்ளுகிறார்.

லல்லி பெற்ற பிள்ளைக்கு அல்லி பறித்துக் கொடுத்து ஆனந்தமடைகிறார். 'ராதா, ராதா' என்று எதற்கெடுத்தாலும் அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய் 'இதைப்பார் அதைப்பார்' என்று காட்டுகிறார்.






'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி, உன்னைத் தழுவிடிலோர் கண்ணம்மா உன்மெத்த மாகுதடி' இது பாரதி பாட்டு. இதை நான் கண்டேன் நேரில். அப்பப்பா... பத்மினியை அக்குழந்தை 'உறிஞ்சி'யே விட்டது. அவ்வளவு ஆசை ராதாவுக்கு பத்மினி மீது. அவரும் அதில்தான் பேரானந்தம் அடைகிறார்.



பிரபல நட்சத்திரமாலும் அடுப்பங்கரையிலும்சேலையை இழுத்துக் கட்டிக்கொண்டு விரு விரு வென்று ஒன்று விடாமல் செய்கிறார். அவருக்கு ஏத்தி இறக்கத்தான் தெரியுமென்று நினைக்காதீர்கள். அறுசுவையுடன் சமையலும் செய்வாராம்.



– நீள நெடுகி...ஓஹோ, வங்காளக் குடாக் கடலா? பள்ளிக்கூடத்தில் 'இந்தியாவின் இயற்கை அமைப்பு'ப் படத்தில் மூன்று புறத்துச் சமுத்திரங்களுக்கும் நீலம் இழைத்துப் பூசிய விரல்கள் இப்போதும் அந்த உணர்வில் அசைந்தன...

'கடைசியில் விமானப் பயணம் இப்படி – இன்று – இந்த அவசரத்தில் வந்து நம் வாழ்க்கையில் ஏற்பட்டதா?'

குறுநாவல்

# உள்ளம்-ஆனல் வெள்ளம்

வை.சுப்ரமண்யன்

## 1. உபசாரம்

அந்தச் சப்தம் உமாபதி இதற்கு முன் கேட்டு அநுபவித்திராத ஒரு புது மாதிரியான சப்தம். காதுகளை இத்தனைக்கும் பஞ்சு காப்பாற்றிக் கொண்டுதானிருக்கிறது. கறுப்புக் கண்ணாடி வழியே அந்தத் திறந்த வெளியைப் பார்வையால் துளைத்துக் கொண்டு பார்த்தால்...பதினைந்து மாடிகள் அமைத்து, ஆசியாவிலேயே மிகப் பெரிய கட்டிடம் என்று கொண்டாடிக் கட்டுகிறார்களே, அதுவா இது? இந்தப் புறம் என்ன இது, நீலப் பாய்

...உமாபதி பிரயாணத்தின் வரலாற்றை அதன் முதல் சலனத்திலிருந்து ஆராய்ந்து அநுபவிக்கச் சிந்தனையைச் சந்தனமாகக் குழப்பத் தொடங்கியபோது அந்த முகம் மின்னிய

மாதிரி இருந்தது. ஆம்; இதுவரை மின்னாத அந்த முகம் குறுக்கே நெடுக்கே போய்க் கொண்டிருந்தது. சற்றுமுன் அந்த முகத்துக்குரிய முழு உருவமும் அவனிடம் வந்து காதில் அடக்கிக்கொள்ளப் பஞ்சும், வாயில் அடக்கிக்கொள்ளச் 'சூயிங்கம்', சாக்லெட், பிஸ்கட் என்று இப்படிப் பல பண்டங்களும் உபசார ரீதியாகக் கொடுத்து மறைந்தது...ஓ! அவள்தான் உபசாரிணியாச்சே! விமான உபசாரிணியாச்சே! விமான உபசாரிணி! கேள்விப்பட்டிருக்கிறான்; போட்டியிட்டு விமான சர்வீஸ் நடத்தும் ஸ்தாபனங்கள் விடும் விளம்பரங்களில் பார்த்திருக்கிறான்—புகைப்பட ஆதாரங்களில். நேரில் பார்ப்பது இப்போதுதான்.

இப்போது அந்த முகம் ஏன் மின்னுகிறது? அதுவும் அருகில்? அதைக் கேட்டு விடை சொல்லிக் கொள்ள அவனுக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. ஏனெனில் வேறொரு கேள்வி அவன் காதுகளைக் குடைந்துகொண்டு சென்று, ஞாபகத்தில் வீணை — நாதம் ஒன்று ஏதோ சொல்லியது!

அந்தக் கேள்வி :

'காப்பி சாப்பிடுகிறீர்களா? அல்லது வேறு என்ன பானம்...?'

'வீணை ஒலிபோல்தான் இருக்கிறது' என்று உணர்வு மனத்திற்கு நிர்த்தாரணம் கூறியது. 'வீணையென்றும் நாதம் என்றும் இங்கே எதற்குக் கடைவிரிக்கவேண்டும்?' விமானத்தை முந்திக்கொண்டு ஓடுகின்ற மனத்தைத் தலையில் தட்டி மடியில் கிடத்தவேண்டியதுதான். இல்லாவிடில் ஆபத்தில் போய் முடியலாம்' என்று உமாபதி தெளிந்து முடிந்ததற்கு அடையாளமாக, 'காப்பி—காப்பி போதும்' என்றான்.

காப்பி வந்தது. ஆம்; அவள்தான் கொணர்ந்தாள். காப்பியா அது? அந்தரத்தில் ஆகாயத்தில் கால்களை உராய்ந்துகொண்டிருப்பது உண்மையேயானால், அதுவும் காப்பிதான்! ஆனால் உண்மையான காப்பி!

திடீரென்று தந்தியின் நினைவு வந்தது உமாபதிக்கு. எடுத்த எடுப்பில் விரல்களில் சிக்கும்படி பையில் செருகியிருந்த அதை எடுத்துப் பார்த்தான்:

'உடனே விமானமூலம் வரவும். தாஜ் மஹால் ஹோட்டலில் சந்திக்கவும். விவரம் நேரில்.'

'தந்தி கொடுத்திருப்பது நிச்சயமாக அவள்தானோ?' என்று ஒரு அசட்டுச் சந்தேகம் — மனிதப் பிறவிக்கே உரிய பலவீன மனோநிலையின் உணர்வு — ஏற்பட்டுப் பெயரை எழுத்து எழுத்தாகக் கூட்டிப் படித்தான்: ' — சரயூ'

'சரயூதான்!: சரயூ' எதற்குப் பம்பாய்க்குப் போனாள்? எப்போது போனாள்?...அன்று அவளைப் பிரிந்த பிறகு இன்னும் பார்க்கவில்லை...ஏதாவது ஆபத்தில் மாட்டிக்கொண்டிருப்பாளோ? சே! அதெல்லாம் இருக்காது. ஆபத்தை அநாயாசமாகத் தாக்கி எறியும் பெண் புலி அவள்! அவளுக்கென்ன வந்துவிடப் போகிறது கேடு? அவளுடைய சங்க நடவடிக்கை காரணமாகப் போயிருக்கலாம்...போயிருந்தால்? நம்மை ஏன் தந்தி அடித்துச் சந்திக்க முயல்கிறாள்? கொல்லன் பட்டறையில் ஈக்கு வேலையில்லாததைப் போல 'மாதர் சீர்திருத்தக் கழகத்தில்' ஆண் பிள்ளையான எனக்கு எந்த வேலையும் இருக்க முடியாதே! ஒரே மர்ம மூட்டம் அவள், இல்லாவிட்டால் அப்படி அவள் அன்றைக்குப் பூட்டி வைத்த கதவைப் போல தன் மனத்தை வைத்துக்கொண்டு அதில் முட்டிக் கொள்ள வைப்பாளா என்னை? கடைசியாக என்ன பேசப் பேசி...என்ன முடிவுடன் என்னை அனுப்பினாள்?...'

ரயில் பிரயாணத்தின் போதாவது 'மணி என்ன ஸார்?' என்று கேட்டுச் சிந்தனையையும் கழுத்தையும் ஒருங்கே அறுப்பான் யாராவது. இந்த விமானப் பயணத்தில் உமாபதியின் சிந்தனையைக் கெடுக்க யார் இருக்கிறார்கள்? கண்ணை மூடிக்கொண்டு எண்ணிக்கொண்டே போனால், கண்ணைத் திறந்துகொண்டு ஜாலம் காட்டி அவனை அவளுடைய சரயூ அலைக்கழித்துக் கொண்டேயிருக்கிறாள். கண்ணைத் திறந்தாலோ? வண்ணப் புறாவின் மென்மை மேனியையே ஆடையாக அணிந்து வந்தாற்போல் நிற்கும் உபசாரிணியின் திருமுகம் தெரிகிறது. அந்த நள்ளிரவில் அன்று இப்படியும் அப்படியும் தங்களை அசைத்துச் சலனம் செய்து கொண்டிருப்பவர்கள் உமாபதியும் உபசாரிணி...என்ன அவள் பெயர்?

'என்ன பெயர் உங்கள் பெயர்?' என்று கேட்டு, இனிமையாக ஏதோ பெயர் காதில் நுழைவதை அநுபவிக்க வெகு நேரமாகவே உமாபதி தயாராக இருந்தான். வாயைத் திறந்து கேட்டுவிட்டால் மறுகணம் என்ன ஆகுமோ? காதில் தேனாற்றின் அலையும் அடிக்கலாம்; கானாற்றின் சீற்றமும் பாயலாம். எப்படிப்பட்டவளோ இந்த அழகி? பேரழகி!

'ஆமாம்; காப்பி, கோகோ, சூயிங்—கம் என்பதற்கெல்லாம் தவிர, வேறு எதற்காவது சொந்தம் கொண்டாடிக் கொண்டு இங்கே வாயைத் திறக்க முடியுமா?...யார் யாருடனோ அவளும் பேசுகிறாள்; சிரிக்கிறாள்; அரட்டை அடிக்கிறாள். ஆனால், அவர்களில் யாராவது உன் பெயரென்ன என்று கேட்டிருப்பார்களா? அடுத்த விமானகூடத்தில் விமானம் இறங்கும்போது கேட்கலாம், ஏதாவது பேசத் தொடங்கும் சாக்கில்'.

நாக்பூரில் விமானம் இறங்கிற்று. இறங்கினால்தான் என்ன, அந்தரத்தில் பறந்ததற்கும் இப்போதைக்கும் ஏதும் வித்தியாசம் தெரிவதாக இல்லையே. மூன்று பேர் நாக்பூரில் இறங்கினார்கள். அந்த மூன்று ஆசனங்களும் சில நிமிஷங்களில் நிறைந்தன. விமானம் இறங்கியபோது 'தடதட'வென்று ஏதோ அந்த விமானகூடமே — பல கட்டிடங்கள் உட்பட — பேயொலி ஒலித்த மாதிரி இருந்தது. அதன் பிறகு அமைதியில் ஆழ்ந்தது. இருளுக்கு எதிராக வாரித் தெளித்திருந்த மின்னொளியில் எல்லாம் நிழல் போலத் தெரிந்தன.

பம்பாய் விமான நிலையத்தில் விமானம் இறங்கியது. அதிலிருந்து வெளியில் இறங்கி, கால் பாவத் தரையில் நடந்தபோதுதான் நிழல் தோற்றம் மறைந்து உண்மைத் தோற்றங்கள் புலப்படலாயின. தன்னை ஏற்றிச் சென்ற விமான ஸர்வீஸ் ஸ்தாபனத்தின் பஸ்ஸைச் சேர்ந்த சிப்பந்தியிடம் தன்னைத் தாஜ் மஹால் ஹோட்டலில் இறக்கிவிடும்படி கூறினான் உமாபதி.

## 2. 'விருந்து; வருக'

'அந்த சரயூவிடமிருந்து ஏதாவது தந்தியாவது கடிதமாவது வந்ததா, ஸார்?'

'எத்தனை தரம் ஐயா சொல்கிறது? எந்த சரயூவும் இங்கே வந்து ரூம் எடுக்கவோ தங்கவோ செய்யவில்லை; அவள் அப்பா, தாத்தா, மாமா யாரும் கூட வரவில்லை. தபாலும் வரவில்லை; தந்தியும் வரவில்லை. நீங்கள் கொஞ்சம் நகருகிறீர்களா? காலை வேளையிலே பிஸினஸைக் கவனிப்போம்.'

அந்த ஹோட்டலில் விசாரணைப் பகுதிக்கு அதிபதியாக இருந்த ஒரு மராட்டி இளைஞன் உமாபதியிடம் இப்படிப் பேசினான். அவனது பொறுப்பற்ற தன்மையையும், முறை, கடமை இவை கடந்த நிலையில் பேசுவதையும் கண்டு அவன் உள்ளம் இதுவே இன்னொரு சமயமாயிருந்தால் பொருமியிருக்கும்; பொங்கியிருக்கும். அவனை அப்படியே ஊதியிருப்பான், ஊதி! ஆனால், ஸரயூ தந்தி கொடுத்திருந்தபடி அந்த ஹோட்டலுக்கே வரவில்லை, வேறு தகவலும் எதுவும் கொடுக்கவில்லை என்பதை அறிந்ததும் திகைப்பும் குழப்பமுமான ஒரு அசாதாரண நிலையிலிருந்ததால் அவன் அந்தத் துள்ளல் பையனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

அவள் குறிப்பிட்டிருந்த ஹோட்டல் ஒருகால் வேறு ஏதாவதாக இருக்குமோ என்று தந்தியைப் பதினைந்தாவது தடவையாகப் பிரித்துப் பார்த்தான். அந்த ஹோட்டல்தான். அதில் ஒன்றும் மாறாட்டம் ஏற்பட்டுவிடவில்லை.

இப்போது உமாபதியின் மனத்தில் திகைப்பும் குழப்பமும் தங்கள் சக்திகளைக் குறைத்துக்கொள்ளத் தொடங்கின. வேறொரு உணர்வு ஆவேசமாக எழுந்தது. அதுதான் கோபம்! தன்னை அவமானம் செய்வதற்காக ஏதாவது பொய்த் தந்தி அடித்திருப்பாளோ அவள் என்ற சந்தேகம் எழுந்தது அவனுக்கு. பல்லைக் கடித்துக்கொண்டு,

அவனுடன் சில நாட்களுக்கு முன்பு நடத்திய ஒரு வாக்குவாதம் நினைவில் எழ, மாடிப்படிகளில் ஏறித் தான் எடுத்திருந்த அறைக்குப் போனான்.

மாடியிலிருந்து தெரிந்த பம்பாயின் ஒரு பகுதி அந்தக் காலை வேளையில் தனது சுறுசுறுப்பான இயல்பைப் புலப்படுத்திக்கொண்டிருந்தது. சென்னை நகரைவிட நெருக்கமான அளவில் உயர்ந்து தெரிந்த பல கட்டிடங்களும், நெரிசலை ஏற்படுத்திக்கொண்டு சென்ற வாகனங்களும் அந்த இயல்பை நன்றாக உணர்த்தின. மற்றவர்க்குப் பொழுது போக்காக இருந்தது இந்தக் காட்சி என்பது ஹோட்டல் ரூம்களின் எதிரில் எல்லாம் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு அங்கே தங்கியிருந்த பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததிலிருந்து தெரிந்தது.

ஆனால், உமாபதிக்கு ஏற்பட்டிருந்த மனோ நிலையில் அவன் தன் அறைக்குள்ளே அடைந்துவிடுவதற்காக 'விடு விடு'வென்று அறை நம்பர்களை ஆராய்ந்து பார்த்தவண்ணம் நடந்தான். 27-ம் நம்பர் கண்ணில் பட்டதும் வாயிற்படித் திரைச் சீலையை ஒதுக்கிவிட்டு அங்கே கிடந்த ஒரு ஸோபாவில் போய்த் 'தொப்'பென்று விழுந்தான். ஆடி ஓய்ந்த திரைச் சீலை மறுபடியும் நிதானமாய் விலகியது. திரும்பிப் பார்த்த உமாபதியின் பார்வையில் ஒரு பெண் முகம் சிக்கியது. அந்த முகத்தை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது.

திரைச் சீலைக்குப் பின்னிருந்த உருவம் முன்னால் — அறையின் உள்ளே — வந்தது. ஓ!...விமானப் பயணமும், இடைவிடாத உபசாரமும் நினைவு வந்துவிட்டன உமாபதிக்கு. இந்த உபசாரிணி இங்கே எங்கே வந்தாள்?

'நீங்கள்தானே மிஸ்டர் உமாபதி?'

'ஆமாம்; வாருங்கள், உட்காருங்கள், நீங்கள் யார்?'

'நான் ஒரு பெண்!'

இதேதடா வம்பு! ஸரயூவின் ஜாலத்துக்கு அடுத்தபடி இந்த 'மாயாவிநோதினி ஏதோ ஜாலம் புரிய வருகிறாள் போலிருக்கிறதே! நேற்றிரவெல்லாம் இவள் விமான உபசாரிணியாய் லட்சணமாய் நன்றாகத்தானே இருந்தாள்!

'என்ன யோசனை பண்ணுகிறீர்கள்?' — கீழே தள்ளிய அந்தப் பெண் குதிரை குழிபறிக்க ஒரு 'வார்த்தை வெட்டுப்' போட்டது.

'உங்கள் பதில் யோசனை செய்ய வைத்திருக்கிறது.'

'என் பெயர் பமீளா!'

ஆஹா! அழகான பெயர்; சரி; இவளை மன்னித்துவிடலாம். நேற்றிரவு பூராவும் இவளது 'இனிமையான பெயர் என்னவாக இருக்கும் என்று எண்ணி விமானத் தவம் இருந்த நிலை இப்போது அவனுக்கு நினைவு வந்தது. ஆனாலும் சாண்பிள்ளையான ஆண்பிள்ளையானதால், விட்டுக் கொடுக்காமல், கூறினான்:

'இதை முன்னமேயே கூறியிருக்கலாமா!'

'கூறியிருக்கலாம். ஆனால், நீங்கள் சிறிதுகூட இங்கிதம் தெரியாமல் 'நீங்கள் யார்?' என்று கேட்டதுதான் என்னை அப்படிப் பேச வைத்தது.'

'தெரியாதவர்களை 'யார்' என்று கேட்பதும், திடுதிப்பென்று அறையில் எட்டிப் பார்ப்பவர்களை விசாரிப்பதும் இங்கிதக் குறைவென்றால் நான் இந்த உலகில் எந்தக் கலாசாலையிலும் அதைப் படித்துக்கொள்ள முடியாது!'

பமீளா மெல்ல நடந்து வந்து பக்கத்திலிருந்த ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டாள். அவள் நடையழகைக் கவனித்தன உமாபதியின் கண்கள்; ஆம், கொஞ்சம் திருட்டுத்தனமாகத்தான். 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' என வருணிக்கப்பட்ட பல மடவன்னங்களைப் போன்று அதிசய நடை நடந்தாள் அவள். பக்கலில் வந்து உட்கார்ந்ததும் அவளிடமிருந்து ஒரு சுகிர்தமான மணம் வந்தது. அது என்ன மாய மணம்? கடைகளில் அவன்கூட வாங்கி உபயோகிக்கும் உயர்தரமான தைலம், ஸ்நோ, பவுடர், ஸெண்ட் இவைகளில் எதையாவது அவள் உபயோகித்திருக்கிறாளா? இருந்தால் தெரிந்துகொள்ள முடியுமே என்ன பொருள், என்ன விலை என்று? அவள் சூடிக் கொண்டிருந்த மல்லிகையின் மணமா அது? சே! மல்லிகை மணத்தைக் கண்டிராதவனா அவன்?... உமாபதி துணிந்து ஒரு படி மேலே ஏறி நினைத்தான். 'இவளுடைய இணையற்ற பெண்மையே இப்படி மணம் வீசுகிறதோ?...' எப்படியாயின் — எதுவாயின் என்ன? அவனைக் கிறங்க வைக்கிறது அந்தச் சூழ்நிலை!

'நீங்கள் ஸரயூவைச் சந்திப்பதற்காகத்தானே இங்கே வந்திருக்கிறீர்கள்?' பமீளா மிக நிதானமாகக் கேட்டாள்.

அடா! இவள் என்ன, இக்ஷிணி வித்தை கற்றவளா? மாயக்காரியா? பெரிய போடாக ஒரு போடு போட்டுவிட்டாளே?

'ஆமாம்; ஸரயூவின் தந்தி கண்டு சென்னையிலிருந்து நேற்றிரவு உங்கள் விமான மூலம் தான் இங்கே வந்தேன். அவள் இன்று தன்னை இங்கே சந்திக்க வேண்டும் என்று தந்தி கொடுத்தபடி வராமல் என்னை ஏமாற்றிவிட்டாள்.'


'ஏமாற்றவில்லை. என்னிடம் தான் சொல்லியனுப்பியிருக்கிறாளே!'

'என்ன சொல்லியிருக்கிறாள்? உங்களுக்கு அவளைத் தெரியுமா?'

'தெரியும்.'

'எப்படித் தெரியும்? நீங்கள் யார்?'

'பார்த்தீர்களா! மறுபடியும், 'ஹுமாயூன் என்பவன் யார்? அவனைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது' என்று உபாத்தியாயர் மாதிரி பரீட்சை தொடங்க ஆரம்பிக்கிறீர்களே?'



உமாபதிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'நீ ஒரு ஆண்பிள்ளை, உனக்கு ரோஷம் வேண்டாமா? அவளை இப்படியே அவள் வழியிலேயே விடாதே' என்றான் தனக்குத் தானே. ஆனால், அவள் கொஞ்சம் மசிந்து வந்தாற்போல் தெரிந்தது.

'ஹோட்டல் தாஜ் மஹாலில் உமாபதி என்ற ஒருவர் என்னைத் தேடுவார். நான் தந்தி கொடுத்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் பம்பாயிலிருந்து விமானத்தில் புறப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதென்று சொல்!' என்றாள் ஸரயூ. அவள் நேற்று மாலையே சென்னைக்கு வந்துவிட்டாள்.'

'இதைச் சென்னையிலேயே தெரியப்படுத்தக்கூடாதா அவள்?' என்று கடுகடுவென்ற குரலில் கேட்டான் உமாபதி.

'இது அவளிடம் கேட்க வேண்டிய கேள்வி!'

‘விமான நிலையத்திலேகூட என்னைச் சந்தித்து என் பிரயாணத்தை நிறுத்தியிருக்கலாமே!’

‘நாங்கள் வாங்கிவிட்ட டிக்கட் பணம் வாபஸ் ஆகாது என்று அவளுக்குத் தெரிந்திருக்கலாம். ஒரு முறை கிடைக்கிற விமானப் பயணத்தின் சந்தர்ப்பத்தை வீணாகக் கெடுப்பானேன் என்ற நல்ல எண்ணமும் இருக்கலாம் அவளுக்கு.’

‘பொல்லாத நல்ல எண்ணம்தான்!’

‘அப்படி ஒரு எண்ணம்கூட உண்டா மனிதர்களுக்கு? நான் புதிதாகக் கேள்விப்படுகிறேன், மிஸ்டர் உமாபதி!’

‘நான் இங்கே இருக்கிறேனென்று எப்படி மிஸ் பமீளா உங்களுக்குத் தெரியும்?’

‘ஸரயூ இங்கே இல்லை என்று நீங்கள் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?’

‘இங்கே வந்து இந்த ஹோட்டலில் ஒரு பாட்டம் விசாரித்தேன்!’

‘உங்களைப் பற்றி விசாரிக்க எனக்கு மட்டும் முடியாமல் போய்விடும் என்று நினைக்கிறீர்களா?’

‘ஓ! ஐ ஆம் ஸாரி!’ என்று அசடு வழியச் சிரித்தான் உமாபதி.

‘போகட்டும், மிஸ்டர் உமாபதி. வந்தது தான் வந்தீர்கள்; என் வீட்டிற்கு ஒரு தடவை வந்துவிட்டுப் போங்கள். இன்று மத்தியான்னச் சாப்பாட்டை அங்கு எங்களுடன் வைத்துக்கொள்ளலாம்; வாருங்கள் என்னுடன்!’ என்றாள் பமீளா. சற்றுமுன் கேலியாயும் தாக்கியெறிந்தும் பேசிய அவளது இந்தப் பேச்சில் மட்டும் தெளிவும் உண்மை உணர்வும் புலப்பட்டன.

‘எதற்கு?...’ என்று இழுத்தான் உமாபதி.

‘நீங்கள் சட்டசபையில் ஒரு மெம்பராகப் போவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்களின் முதல் அம்சம் உங்களிடம் பரிபூரணமாக இருக்கிறது, மிஸ்டர் உமாபதி. ‘பளிச் பளிச்’சென்று நன்றாகக் கேள்வி கேட்கிறீர்கள் நீங்கள்! எதற்கு என்றால்...? ஒரு விருந்தினராக இன்றைக்கு உங்களை அழைக்கிறேன். ஏதாவது காரணம் இருந்தால் தான் வருவீர்களா?’ என்று கேட்டாள் பமீளா.

அவளை நிமிர்ந்து பார்த்தான் உமாபதி. அவள் இனிமேல்தானா விருந்தளிக்கப் போகிறாள்? இதோ அவள் கண்கள் கொண்ட மட்டும் தோற்றத்தால், அழகினால், அற்புத விருந்து அளிக்கிறாளே! இதைவிட அந்த அரிசிச் சோற்று விருந்து உயர்வாக இருந்துவிடப் போவதில்லை; நிச்சயம்.

ஆனாலும், உமாபதி வருகிறேன் என்று ஒப்புக்கொண்டான். அதற்கு நன்றியாக ஒரு புன்னகையை நெளிய விட்டாள் பமீளா, பவளச் செவ்வாயின் அதரங்களில்.

## 3. ஜாமீன் ரூ. 10 000

பமீளாவின் சொந்த வீடோ, அல்லது அவள் குடியிருக்கும் போர்ஷன் என்று எதுவுமோ பம்பாயில் இல்லை என்றும் அவள் தனது எட்டிய உறவில் அத்தையாக அழைக்கத் தக்க ஒரு கிழவியின் ‘ஃப்ளாட்’டில் இருப்பதாகவும் உமாபதி பேச்சுவாக்கில் தெரிந்து கொண்டான். பேச்சுவாக்கில் அவன் தெரிந்துகொள்ள நினைத்த சில விஷயங்களில் முக்கியம் என்று நெஞ்சில் முட்டிக்கொண்டு வந்த ஒரு கேள்வியைக் கேட்காமல் அதை உள்ளே பிடித்து அமுக்கிக் கொண்டிருந்தான் அவன்.

அந்தக் கேள்வி:

‘ஸரயூவை உனக்கு எப்படித் தெரியும், மிஸ் பமீளா?’

இதைக் கேட்டுவிட்டால் என்ன ஆகும் என்று உமாபதிக்குத் தெரியும். ஏதோ அவன்மீது நல்ல அபிப்பிராயம் கொண்டு அவனுக்கு விருந்தளிக்கிறவளை ‘மனம் வைத்து’ அவளுடன் இப்போது டாக்ஸியில் போய்க் கொண்டிருக்கிறாள் பமீளா; அதைக் கெடுத்துக்கொண்டு, காரியத்தைக் குட்டிச்சுவராக்க விரும்பவில்லை அவன். ஆனால், ஸரயூவும் பமீளாவும் ஏற்கெனவே ஒருவருக்கொருவர் தெரிந்த பாத்திரங்களாக இருப்பதால், தன் வாழ்க்கையில் அரங்கேற இருக்கும் நாடகத்தைப் பற்றி மிகவும் கவலைப்பட்டான் அவன்.

நல்ல வேளையாக அந்தக் கவலையிலேயே அவனை ஆழ்த்தி மேலும்



சோதிக்காமல் டாக்ஸி ஒரு சந்தினுள் திரும்பியபோது ‘அதோ—இடது புறம் வெள்ளையடித்த வீடு’—என்று அடையாளம் காட்டும் குரலை எழுப்பினாள் பமீளா.

டாக்ஸி நின்றது. அதன் உள்ளிருந்தபடியே அந்த வீட்டின் முதல் மாடியில் நின்றிருந்த சில முக்கிய சமூகப் பிரதிநிதிகளைத் தரிசனம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது உமாபதிக்கு. அதேசமயம் டாக்ஸி சார்ஜைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்த பமீளாவும் அந்த உருவங்களைப் பார்வையால் எண்ணினாள். மூன்று பேர்! ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டபிள்கள். மறுகணம் அவள் முகம் கறுத்துவிட்டது.

‘வாருங்கள் மிஸ்டர் உமாபதி’ என்று அவனுக்கு ஃப்ளாட்டுக்கு ஏறும் வழியைக் காண்பித்துக்கொண்டே மாடிப் படிகளை இரண்டு மூன்றாய்த் தாண்டி ஏறினாள் பமீளா. தாய் ஆட்டின் பின்னால் ஓடும் குட்டிபோல் — அந்த நிமிஷ நிலையில் — சென்றான் உமாபதி.

‘பமீளா, நல்ல சமயத்தில் வந்தாய்! ஒருவேளை ‘ஃப்ளேயி’ங்கில் இருப்பாயோ என்று பார்த்தேன். இவர்கள் ஏதோ என்னிடம் விளையாட வந்த மாதிரி நடந்துகொள்கிறார்கள். இவர்களிடம் பேசிக்கொண்டிரு! நான் என்னுடைய முக்கியமான நண்பன் ஒருவனுக்கு போன் பண்ணிவிட்டு வருகிறேன்’ என்று கூறிக்கொண்டு இதுகாறும் விறைப்பாய் நின்றுகொண்டிருந்த ஒரு வாலிபன் உடலை மாடிப் படிகள் பக்கம் சாய்த்தான்.

சப் இன்ஸ்பெக்டர் மாடிப் படிப் பகுதியையும் இருவரில் ஒரு கான்ஸ்டபிளையும் இணைத்துத் தொழில் தோரணைப் பார்வை ஒன்று பார்த்தார். மறுகணம் வழி அடைபட்டது. இன்ஸ்பெக்டர் முகம் தாழ்த்தி, கண்களை மேலே தூக்கி அந்த வாலிபனைப் பார்த்து, ‘விளையாட வரவில்லை, குழந்தை. நீ விளையாடியதற்குச் சன்மானம் கொடுக்க அழைத்துப் போக வந்திருக்கிறோம், குழந்தை. வா, போகலாம்’ என்றார்.

பரிதாபமாகப் பமீளாவைப் பார்த்த வாலிபனை உமாபதி எடை போட்டான். ஆளை அடித்தால் இரண்டு ஆள் பண்ணலாம். வெண்ணெயால் அபிஷேகம் பண்ணிய மாதிரி மொழுமொழுவென்று...இவனெல்லாம் எந்தக் கடையில் அரிசி வாங்குகிறான்? யார் இந்த சுப்ரதீபம்?

‘அண்ணா, அதிகாரிகளிடம் முறை தவறிப் பேசக்கூடாது என்பது கூட உனக்குத் தெரியவில்லையே! அவர்கள் அநுதாபத்தை எப்படிப் பெறுவது?...’ என்று கூறிவிட்டு உமாபதியின் பக்கம் திரும்பி, ‘உட்காருங்கள், மிஸ்டர் உமாபதி. வந்ததும் வராததும் உங்களுக்கு இப்படி ஒரு அவலக் காட்சி காத்திருக்கிறது. இவன் என் அண்ணா. இவன் மேல் ஏதோ புகாருடன் இவர்கள் வந்திருக்கிறார்கள். இன்ஸ்பெக்டரிடம் பேசி என்ன விஷயம் என்று கொஞ்சம் எனக்காகக் கேட்க முடியுமா?’ என்றாள்.

‘எனக்காகவா! இதில் என்ன இருக்கிறது சிறப்பு?’ கேள்வியை அலசினதும் இதயம் தேன் குளத்தில் அமிழ்ந்து முழுக்காடு இடப்போய்விட்டது உமாபதிக்கு.

அதிகாரியிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரித்தான். ‘அண்ணா’ என்றாளே பமீளா அது — குழந்தை என்றாரே இன்ஸ்பெக்டர் — ‘அந்தக் கோட்டான் சாமானியமாக ஏதாவது செய்திருக்கிறதா, என்ன? பம்பாயில் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப் போவதாகப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து, விண்ணப்பம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் ஆயிரம் விண்ணப்பங்களுக்குக் கட்டணம் பெற்று ஏப்பம் விட்டு; காஷியர் செக்யூரிடி என்று இரண்டாயிரம் ரூபாயை ஒரு அப்பாவியிடமிருந்து பெற்று ஜீரணித்துவிட்டு, ‘இந்த மாமா என்னோடு விளையாட வந்திருக்கிறார்’ என்கிற மாதிரி பேசுகிறதே!’—இப்படி வியந்து உமாபதியிடம் கூறினார் இன்ஸ்பெக்டர்.

யோசித்தான் உமாபதி.

‘முடிவாக என்ன செய்யப் போகிறீர்கள் இன்ஸ்பெக்டர் ஸார்?’

'அரெஸ்ட் வாரண்ட்' வைத்திருக்கிறேன் என்கிறேன். என்ன செய்வோம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்களேன்.'

'நான் ஜாமீன் தருகிறேன்!'

'அது நீங்கள் அங்கே வந்து பேச வேண்டிய விஷயம்.'

ஐந்து நிமிஷங்களில் ஒரு போலீஸ் வான் மாதுங்கா தெலாங் ரோடில் ஓடிக்கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஒரு டாக்ஸியும் போய்க் கொண்டிருந்தது.

பமீளாவின் அண்ணன் கங்காதரனைப் பத்தாயிரம் ரூபாய்க்கு ஜாமீன் கட்டி வீட்டுக்கு அழைத்து வந்தார்கள் உமாபதியும், பமீளாவும். வீட்டுக்கு வந்த அரைமணி நேரத்துக்கெல்லாம் ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு எங்கோ சென்றுவிட்டான், கங்காதரன். 'நன்றி' என்றொரு தமிழ் வார்த்தை இருக்கிறது என்று அந்த ஜடத்திற்குத் தெரியவில்லை போலும்! அவன் உமாபதியை அந்த உணர்வோடு கூடிய ஒரு பார்வையால்கூடப் பார்க்காமல் ஓடிவிட்டான எங்கேயோ!

'எங்கே போய்விட்டான் உன் தமையன் மறுபடியும்?' என்று திகிலோடு கேட்டான் உமாபதி. இன்னும் எத்தனை ஆயிரத்துக்குத் தலைவலிக்குமோ என்ற கவலை அவனுக்கு. இப்போது கட்டிய தொகைக்குச் செக் தந்ததற்கே அவனை முறைக்காத முறைப்பெல்லாம் முறைத்து, கேட்காததெல்லாம் கேட்டு, இறுதியில் உமாபதி கணக்கு வைத்துக்கொண்டிருக்கிற பாங்க் ஏஜண்டிடம் ட்ரங்க் மூலம் பேசித் தெளிந்த பின்னரே அவனை அறிந்தனர் போலீஸார்.

'எங்கேயும் போகமாட்டான். ஹோட்டல், பிரண்ட்ஸ், க்ளப் இந்த மூன்று உலகங்களில் எங்காவது ஒரு உலகத்துக்குப் போயிருப்பான். நீங்கள் கவலைப் படாமல் இருங்கள்' என்றாள் பமீளா.

நன்றாய்ச் சொன்னாள்! கவலைப்படாமல் இருப்பதாவது!

## 4. புன்னகையும் மலர் முகமும்

விருந்து மயக்கத்தில் விழுந்து கிடந்தான் உமாபதி. 'முன்னேற்பாட்டுடன் தான் இந்த விருந்துக்கு ஏற்பாடு செய்திருப்பாள் பமீளா! விருந்துக்கு விருந்தினரையும் முன்னதாகவே எதிர்பார்த்திருக்கிறாளே, அந்த சாகஸத்தை என்ன சொல்ல? இவள் மட்டுமா அந்த சாகஸ காவியம் பாடியிருக்கிறாள்? ஸரயூவும் சேர்ந்து கொண்டல்லவா இதில் வேலை செய்திருக்கிறாள்! தந்தி கொடுக்கவாவது! வராமல் இருப்பதாவது! வராத செய்தியைப் பம்பாய்க்கு ஒரு மனிதன் வந்து தொலைந்தப்புறம் 'ராவணா!' என்று சொல்ல வைப்பதாவது!...'

சேமியாப் பாயஸத்தில் கொஞ்சம் தித்திப்பு அதிகம்; போதை தட்டியது. ஆனால், அலுங்காமல் நலுங்காமல் தலையணைமேல் தலையைப் போட்டுவிட்டுத் தூக்கம் முந்தினால் தூக்கம், சிந்தனை தலைதூக்கினால் சிந்தனை என்ற போக்கில் உருண்டுகொண்டிருந்தான் உமாபதி. இப்போது சிந்தனைக் கட்டம் முடிந்து தூக்கம் படம் எடுத்தது.

அந்தப் படத்தில் ஒரு போடு போட்டாள் பமீளா.

'உங்களுக்குச் சாவகாசமாக நன்றி சொல்ல வந்திருக்கிறேன்.'

'எதற்கு?'

'எதற்கு? யாருக்கு? ஏன்? எங்கே?—கேள்வி மன்னரே, கேளுங்கள். என் அண்ணாவைக் கம்பிகளுக்கு இப்பால் இழுத்துத் தள்ள ரூபாய் பத்தாயிரம் யோசனை பண்ணாமல் கட்டியதற்கு!'

'கம்பியின் அந்தண்டைப் புறத்தைப் பார்க்காமல் உங்கள் அண்ணா வரமாட்டார் போலிருக்கிறதே! விருந்துச் சாப்பாட்டுக்குக்கூட வரவில்லையே!'

'அவன் இந்நேரம் இதைவிட இன்னும் எத்தனை பங்கு உசத்தியான விருந்து சாப்பிடுகிறானோ, எந்தக் கிளப்பில்...'

'அப்படியானால் உங்கள் அண்ணா கொஞ்சம் ஒரு மாதிரிதானா?'

'மூளை விஷயத்திலா?'

'அது விஷயத்தில் எனக்குச் சந்தேகமில்லை. அது மாதிரி பெயர் அவன் கேள்விப்பட்டிருக்கவே மாட்டான்! அவனுடைய லீலா விநோதங்களைப் பற்றிக் கேட்டேன்.'

'அவனை நீங்கள் மன்னிக்க வேண்டும்!'





'சரியாய்ப் போச்சு! இன்னொரு பெரிய கல்லைத் தூக்கி என் தலையிலே நிறுத்துகிறீர்களா?'

'இன்னொரு என்றால் அப்போது ஏற்கெனவே நான் என்ன சொல்லிவிட்டேன் இந்த மாதிரி?'

'நீங்கள் வாயால் எதுவும் சொல்லவில்லை. கண்ணால் சொல்கிறீர்கள்; காரியத்தில் செய்கிறீர்கள்!'

'என்ன இது? எந்த ஸினிமாவின் வசனம்?'

'கண்ணுக்கு விருந்தூட்டி, வயிற்றுக்கும் மறுவிருந்தூட்டினீர்களே அது ஸினிமாவில் நிகழ்ந்ததா?...'

'நன்றாகப் பேசுகிறீர்கள்—ஸரயூவிடம் ஏமாந்து போய்விட்டாலும்!'

'டணா'ரென்று கண்டாமணி முன்னெச்சரிக்கையின்றி ஒலித்தால் சில உள்ளங்கள் விதிர்த்துப் போகுமே அதுமாதிரி உள்ளம் துடித்து எழுந்தான் உமாபதி. ஸரயூ அவன் காதலி. அவனை ஏமாற்றும் முயற்சிகளில் ஏதோ பிடிவாதமாக அவள் இறங்கியிருக்கிறாள். அதன் காரணம் புரிவதற்குமுன் இவள் தீர்த்துக் கட்டினாற் போல் பேசுகிறாளே...

ஆனால், பமீளா தொடர்ந்து பேசியது ஆறுதலைக் கொடுத்தது. உள்ளத் துடிப்பின் வேகத்தைக் குறைத்து, அளவுக்குக் கொணர்ந்தது:

'தந்தி விஷயம் நான் சொல்கிறேன்' என்றாள்.

'கிடக்கட்டும்; விட்டுத் தள்ளுங்கள்!' என்றான் உமாபதி.

'விட்டுத்தள்ளு என்றாலே போதும்!'

பதவுரை தெரியாமல் வியந்து விழிக்கும் மாணவன்போல் அவளை விழித்துப் பார்த்தான் உமாபதி.

'எனக்குப் பன்மை விகுதிகள் வேண்டாம். மரியாதையும் வைக்க வேண்டாம். நீ, உன், உனது—இது போதும்'

ஸரயூவின் ஸ்தானத்தில் நின்று போட்டியிட்ட பமீலாவை ஒதுக்கிவிட விரும்பவில்லை உமாபதி. ஸரயூ ஆரம்பித்திருக்கிற 'புரியாத் திண்டாட்டத் திட்டத்தின்' சக்தி ஓங்க ஓங்க, அவன் வெளியிடத்தில் தன் மனோ லயத்தைத் திருப்புவதில் சுலபமாக வழுவி விட்டான்.

'மூன்று எழுத்துக்களானாலும் பெரிய லட்சியம் அது, பமீலா!'

'அதை அடைந்தே தீருவோம்!'

அவன் புன்னகையுடன் அவளது மலர்முகத்தை நோக்கினான்.

## 5. காதல் வளர்ந்த கதை

உமாபதியை ஒரு விமானம் பம்பாயிலிருந்து சென்னைக்குத் தூக்கிக்கொண்டு பறந்தது. புதிதாகக் குடியாட்சி பெற்ற பிரஜையைப்போல் அவன் ஒரு பெரிய மனோராஜ்யத்தில் உலவிக்கொண்டிருந்தான். பமீலா இப்போது உபசாரிணியாக—ஒரு வெள்ளைப் புறா போல் விமானத்தினுள் இங்கும் மங்கும் உலவிக்கொண்டிருந்தாள். உமாபதியின் அருகில் அவள் நடந்தபோதெல்லாம் அவனைப் பார்த்து அவள் உதிர்த்த புன்னகைகள் பொறுக்குவாரின்றிப் பரந்து இறைந்து கிடக்கும் புறம்போக்குச் செடி மலர்கள் போல் எதிரொலியின்றி உதிர்ந்தன.

ஸரயூவை நினைத்துக்கொண்டிருந்தான் அவன். அவன் வாழ்க்கையில் ஸரயூ எதிர்ப்பட்டு, இதயத்தின் புகைப்படத்தின் நெகடிவ் பதிகிற மாதிரி பதிந்துவிட்ட சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் மாணவனாகச் சேர்வதற்காக ஒரு பிரமுகரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் பெற்றுக்கொண்டு இன்னொரு பிரமுகரிடம் போனான் உமாபதி. அந்த இரண்டாவது பிரமுகர்தான் ஸரயூவின் தகப்பனார். அவரிடமிருந்து ஒரு கடிதம் கைமாறி, கலாசாலைத் தலைவரிடம் சேர்ந்தபோது உமாபதிக்கு வேப்பெண்ணெயை ஒரு குடம் வாயில் விட்டாற்போல் தகவல் கிடைத்தது. காலியாகப் பாக்கியிருந்த ஒரே ஒரு ஸீட்டும் அன்று காலையில்தான் பூர்த்தியாயிற்று! இனி அடுத்த ஆண்டுதான்...

அடுத்த ஆண்டுவரை காத்திருக்கவா செய்தான் உமாபதி? கல்லூரிப் படிப்புக்கு அந்த நிமிஷமே ஒரு முழுக்கு என்று முடிவு பண்ணினான். இந்தக் கையில் கலாசாலைப் பட்டமும் அந்தக் கையில் உத்தியோகமும் என்று அலைய வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் நல்ல பசையுள்ள குடும்பத்தில் பிறந்திருந்த ராசி அவனை அப்போதே அதிருஷ்டத் திசையில் திருப்பிவிட்டது. செல்வத்தைக் கொழிக்கும் ஒன்றை அதிருஷ்டம் மட்டுமின்றி, செம்பொற் சித்திரம் என்று விளங்கிய ஸரயூவையும் இன்னொரு அதிருஷ்டம் போட்டி போட்டுக்கொண்டு வந்து அறிமுகப் படுத்தியது.

சென்னைப் பிரமுகரின் சிபாரிசுக் கடிதத்துடன் சென்றபோது ஸரயூவின் தரிசனம்தான் முதலில் கிடைத்தது உமாபதிக்கு. தகப்பனார் வீட்டில் இல்லையென்றும் அரைமணி கழித்துவந்தால் பார்க்கலாமென்றும் கூறினாள் அவள். தகப்பனாரைப் பார்த்ததும் அவர் மறுநாள் வரும்படி கூறினார். மறுநாள் ஸரயூவின் மூன்றாம் முறைத் தரிசனம் கிடைத்தது அவனுக்கு. அவள் தரிசனம்கூட ஒரு காரணம்: கலாசாலைக் கற்பனை சரிந்ததில் அவன் நிலை குலைந்துவிடாததற்கு. மாறாக ஒரு புதுத் தெம்பு பிறந்தது—வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கைக்கு ஆதாரமான அந்தரங்க நம்பிக்கை அது.

அந்த மூன்று தடவைகளிலும் ஸரயூ வீட்டில் குறுக்கும் நெடுக்குமாய்ப் போய்க் கொண்டிருந்ததைக் கவனித்தான் உமாபதி. மான் கூட்டத்திலேயே அழகு நிரம்பிய மயில்விழி மான் ஒன்று அந்த வீட்டின் கூடத்தில் சுதந்திரமாகத் திரிந்து நடமாடிய மாதிரி இருந்தது.

அந்த மானைத் திடீரென்று வேறொரு இடத்தில் எதிர்பாராதவிதமாகக் கண்டான் அவன். கண்டதும் மலைத்துத் தெருவிலேயே நின்றுவிட்டான். அவன் நின்ற அந்தத் தெருவின் பெயர் நாலாம் தெரு; அது இருந்த இடம் தியாகராய நகர்—சென்னை. அவன் இருந்த தெருவின் மூன்றாவது தெரு அது...



'இங்கே எங்கே வந்தாள் இவள்?'

அதையே அவள்—ஸரயூ—கேட்டாள், வேறு வார்த்தைகளில்:

'பார்த்த ஞாபகம்—ஆனால், எங்கேயோ என்ற நினைப்பில் மலைத்து நின்று விட்டீர்கள்—இல்லையா?'

துணிச்சல்காரப் பெண்! இப்படிக் கூச்சமின்றிப் பேசுகிறாளே.

'ஆமாம், சிதம்பரத்தில்...' என்று இழுத்து, நினைவைப் பழைய காட்சிகளில் செலுத்தினான் உமாபதி.

'அங்கே எங்களுடைய தகப்பனாரின் வீடு இருக்கிறது. இது எங்கள் வீடு...'

'இது என்ன புதுமை! தகப்பனார், தாயார், பெண் மூவருக்கும் தனித்தனி வீடு இருக்குமா, என்ன?'

'உங்களுக்குப் புரியாது. உள்ளே வாருங்கள், சொல்கிறேன்.'

'துணிச்சல் விடுவிடுவென்று முன்னேறுகிறதே!' என்றெண்ணினான் உமாபதி. அந்தத் துணிச்சலில் அவனும் தானே துணிச்சல் பெற்று உள்ளே போனான்.

'என் தகப்பனார் ஏராளமான நிலங்களைச் சிதம்பரத்தைச் சுற்றிப் படைத்திருக்கிறார். விக்கிரமாதித்த மகாராஜாவின் 'காடாறு மாதம், நாடாறு மாதம் வாழ்க்கை' மாதிரி சிதம்பரத்தில் பாதி நாள், இங்கே பாதி நாள் என்று கடத்துவார். நில விவகாரங்களுக்காகவே சிதம்பரத்தில் ஒரு வீடு வாங்கினார். அங்கே நாங்களும் போய்ச் சில நாள் தங்குவோம். அப்படித் தங்கியிருந்த போதுதான் நீங்கள் ஒருமுறை வந்தீர்கள்.'

'ஒரு முறை இல்லை; மூன்று முறை வந்தேன்.'

'ஓ! மன்னிக்கவேண்டும்; அப்படி மூன்று முறைகள் வந்தும், பாவம், உங்களுக்குக் காலேஜில் இடம் கிடைக்கவில்லையே......இத்தனை வருஷப் படிப்பு...'

'பரவாயில்லை; இடம் கிடைக்காததற்கு முதலில் உங்களுக்கும், உங்கள் தகப்பனாருக்கும் நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில், படித்துப் பட்டம் பெற்று, அந்தப் பட்டத்தில் நூலைக் கட்டி ஆகாயத்தில் விட்டுக்கொண்டிராமல் இப்போது நான் ஒரு நல்ல பிஸினஸ் நடத்துகிறேன். ஒரு பெட்ரோல் பங்க் குத்தகை எடுத்து நடத்துகிறேன். படித்துக்கொண்டிருந்தேனானால் இதுவரை மூன்று வருஷங்களாக முப்பதாயிரம் ரூபாய் சம்பாதித்திருக்க முடியாது!'

'பட்டம் இல்லாவிட்டால், பணம்தான் என்கிறீர்களா?'

'இல்லை; அப்படிச் சொல்ல வரவில்லை......'

'நீங்கள் பேசிய தோரணை அப்படிக் கோடி காட்டியது; மன்னிக்க வேண்டும்; இந்தக் கேள்விக்கும் சேர்த்து: அவசியம் என்று கருதுகிறவர்களுக்குப் பட்டம் வேண்டித்தான் இருக்கிறது. பணம் ஒன்றுமட்டும் இல்லையே உங்கள் இலட்சியம்?'

'இல்லை; ஆனால், பணமும் வேண்டித்தான் இருக்கிறது.'

இந்த முடிவை ஒப்புக்கொண்டுவிட்டாள் ஸரயூ. உள்ளே அழைக்கப்பட்டவருக்கு உபசாரம் என்று ஒன்றுமில்லாமல் வாதத்தை வளர்த்துக்கொண்டு போன அசட்டுத்தனத்தை உணர்ந்து விழுந்து விழுந்து உபசரிக்கத் தொடங்கினாள் ஸரயூ.

அன்று தொடங்கிய உபசாரம் உமாபதிக்குத் தொடர்ந்து நடைபெற்றது. அவனுக்கு இடம் மறுத்துவிட்ட அந்த அண்ணாமலைக் கல்லூரி ஸரயூவைக் கல்வியில் முழுக்காட்டி, அறிவுப் புடம் இட்டு, பண்பு ஒளி கூட்டி வெளியே அனுப்பி வைத்திருந்தது. அழகிலும் அவள் லகுவாய் ஒப்பு, உவமை இவை சொல்லக்கூடிய முறையில் அல்லாமல் பேரழகியாகத் திகழ்ந்தாள்.

உமாபதியைக் கண்டுவிட்டால் அவள் முகம் மலர்போல் விரியும்; அங்கங்கள் மின்விசைபட்ட கருவிகள்போல் இயங்கும். பேச்சினிடையே வாய் கனிச்சாறென இன்பக் கதைகள் பேசும்.

பெண்மை தன் இதயப் பெட்டகம் திறந்து, ஆண்மையை ஏற்றுக்கொள்கிற இயல்பான முறையில், மனம் நிறைந்துதான் ஸரயூ உமாபதியைத் தனக்கு என்று ஏற்றுக்கொண்டாள்.

ஆனால், கடைசியில் அவள் பெண்மையின் மென்மையைப் பொய்ப்பித்து விட்டு எப்படி வக்கரித்துக்கொண்டாள்! உமாபதிக்கு எத்தகைய சவால் விட்டுவிட்டு அவள் அங்கே கொக்கரித்துக்கொண்டிருக்கிறாள்!

உமாபதிக்கு மூச்சு முட்டுவது போலிருந்தது. ஏன்? விமானம் மணிக்கு நானூறு மைல் வேகத்தில் போகிறதா? இல்லை. நினைவின் அந்தக் கட்டம் இதயத்தை இறுக்கிப் பிடித்தது. மூச்சு முட்டியது மட்டுமில்லை; நினைவின் ஆயாசத்தில் நினைப்பதையே சற்று நிறுத்தினான் உமாபதி.

பமீலா அவனிடம் ஒரு கண்ணாடிக் கோப்பையை நீட்டினாள். ஜூஸ் கலந்த பால் தன் மணத்தை வீசியது. அதைக் குடித்ததும் உடம்பிலும், உள்ளத்திலும் ஏற்பட்ட குளுமையில் அன்றைய உமாபதி இன்றைய உமாபதியாக மாறி, இப்போதைய நிலையை உணர்ந்து கொண்டான். விமானம் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்க இலக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பது அவனுக்கு மறு விநாடி புரிந்தது.

## 6. காதல் மீறினால் சீறலா ?

முக்கால் ரூபாய் செலவில் பறந்து வந்த தந்தியில் சரசு தனக்கு அவமானப்பட்டதைக் கட்டியனுப்பியிருந்தாளா, அல்லது உண்மையாகவே அவள் பம்பாயிலிருந்து எதிர்பாராத விதமாகத் தனக்குத் தகவல் கொடுத்திருந்தாளா என்று உமாபதியினால் எளிதில் தீர்மானிக்க முடியவில்லை. அவளை நேரில் சந்தித்தால் எல்லாம் விளங்கிவிடும் என்ற எண்ணம் உந்தியது. மளமளவென்று டிரஸ் செய்து கொண்டு கிளம்பிய அவனுக்கு வாசல் படியைத் தாண்டும்போது வேறு நினைவு ஏற்பட்டது. வெளி வைத்த ஒரு காலை உள்ளுக்கு எடுத்துக் கொண்டு, உள்ளே போய் உட்கார்ந்தான் உமாபதி.

'மானம், ரோஷம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவளைப்போய் அவளது வீட்டில் சந்திப்பதா?' அவன் மனத்தின் ஒரு பாதி இந்தக் கேள்வியைக் கேட்டது.

'கூடாது!'—இது மனச்சாட்சியின் பதில்.

'அப்படியானால் விமானம் ஏறி, பம்பாய்க்குச் சென்று அவளைச் சந்திக்க முயல்வது மட்டும் மானம் ரோஷத்துக்குச் சம்பந்தப்படாத காரியம் போலும்!'—மனத்தின் மற்றொரு பாதியின் குத்திக் காட்டல் இது.

'என்ன இருந்தாலும் உள்ளத்தில் உறைபவள் அவள். தூர தேசத்தில் இருந்துகொண்டு தந்தி அடித்தால் போக வேண்டியதுதான் முறை. ஒரு பெண்ணுக்கு முன்பின் யோசிக்காமல் உதவ முற்படுவதுதான் பண்பு. அந்த முறையில் தந்திக்கு மதிப்புக் கொடுத்தது சரியே.'

'அப்படியானால், அவளைச் சந்திக்க இப்போது ஓடுவது பைத்தியக்காரத்தனம். போக வேண்டாம்!'


உடுப்புகளை மளமளவென்று, அணிந்த சுருக்குப்போல், களைந்தான் உமாபதி.

'அவளைப் பார்க்கவும் வேண்டாம்; பார்த்து எதையும் கேட்கவும் வேண்டாம்......' என்று அவன் வாய் முணுமுணுத்தது. அறைக்குள்ளேயே வேகமாக நடை போட்டபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான் உமாபதி.

அந்த யோசனையும் நடையும் சாயங்காலம் அவன் பார்க்குக்குச் சென்றிருந்தபோதுகூட தொடர்ந்தன. வழக்கமாக அவனும் சரசுவும் சந்திக்கிற ஒரு ஒதுக்குப்புறமான 'பார்க்' அது. நாலைந்து ஸிமெண்ட் பெஞ்சுகள் கொண்ட அந்தப் புல்வெளி மிருகக் காட்சிச்சாலைக்குப் பக்கத்தில் ஆள் நடமாட்டம் அதிகமில்லாத இடத்தில் இருந்தது.

குளுகுளுவென்று காற்று வீசியது. இளம் புற்களின் பசுமையான வாசனையும், கண்ணுக்குத் தெரியாமலோ அல்லது தெரிந்து கொண்டிருக்கிற மரம் செடிகளிலிருந்துதானோ பெயர் தெரியாத சில புஷ்பங்களின் வாசனையும் கலந்து வீசியது.

வழக்கமாக சரசு வருகிற திசையையும், அந்த ஒற்றையடிப் பாதையையும் அடிக்கடி திரும்பிப் பார்த்தபடியிருந்தான் உமாபதி. ஆனால், அவளை எதிர்பார்க்காமல், தான்மட்டும் பார்க் வரை போய்த் திரும்புவதாகத்தான் எண்ணி வந்திருந்தான். அவள் வரவில்லை. உமாபதியைப்போல, அந்த ஒற்றையடிப் பாதையும் அவள் வருவாளோ, வந்தால் அவளை வழி நடத்திப் பார்க்கினுள் கொண்டு விட வேண்டும் என்று, பொறுப்பிற்காகக் காத்திருப்பதுபோல் கிடந்தது.



அவள் வரவில்லை.

ஆனால், முன்பெல்லாம் தவறாமல் வந்து கொண்டிருந்தாள். இருவரும் நெஞ்சாரப் பேசி, காலாற நடந்து தங்களிடை நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர்.

அந்தப் பார்க்கில் அவர்கள் ஒருநாள் பொழுதை வளர்த்துக் கொண்டிருந்தபொழுது—

ஒரு செடியின் மீதிருந்து வண்ணாத்திப் பூச்சியொன்று பறந்து வந்து அவர்கள் அமர்ந்திருந்த பெஞ்சின் ஒரு நுனியில் உட்கார்ந்தது. அதன் வண்ண இறகுகள் படபடக்காமல் தாழ்ந்து நிமிர்ந்தன. அதன் மேனியெல்லாம் மயக்கும் மஞ்சள் கலந்த சிவப்பு வர்ணம். இறகுகளில் சிவப்பு வட்டங்கள் பளபளத்தன. அதைத் தொடாத நிலையிலேயே அதன் மேனியின்

மென்மை நம் விரல்களில் கூசும்.

சாயூ அதைத் தொட விரும்பினாள் போலும்.

'இந்தப் பட்டாம் பூச்சியைப் பிடிக்கலாம் என்று பார்க்கிறேன்' என்றாள் அவள்.

'உன்னால் முடியாது.'

'ஏன்?'

'பிடிக்க வருகிற கையின் சலனம் சற்றுத் தூரத்திலேயே அதன்மேல் வருவிறுத்துவிடும். அந்த அதிர்ச்சியில் அது ஓடிவிடும்.'

அவன் அறிவுரையையும் மீறி அவள் இரண்டு விரல்களை வளைத்துக்கொண்டு மெல்ல அதன் பக்கம் கையை நீட்டினாள்—அதைப் பிடிக்க. கீழே தரையில் ரப்பரால் தேய்க்கும் சப்தத்துடன் அது பறந்து சென்றுவிட்டது. அவள் ஏமாற்றத்துடன் உமாபதியின் பக்கம் திரும்பினாள். அவள் முகத்தில் வெட்கத்தின் அறிகுறி. பறந்து போன அந்தப் பட்டாம்பூச்சியின் பல வண்ணங்களில் சிவப்பு வண்ணம் மட்டும் அவள் கன்னங்களில் ஒட்டிக்கொண்டு விட்டாற்போல அவன் உணர்ந்தான்.

சாயூவைக்கூட அவன் பட்டாம்பூச்சியைப்போலத்தான் மனத்தில் எண்ணினான். அந்த எண்ணமும் ஒப்புவமையும் இன்று—அந்தப் பூச்சி இருவருடைய கவனத்தையும் கவர்ந்த பிறகு—இப்போதுதான் ஏற்பட்டது. ஆனால், அவளுக்கு ஏற்பட்ட ஆசையைப்போல் ஒரு பேராசை பல நாட்களாக அவனைத் தூண்டிக்கொண்டிருந்தது. என்ன ஆசை அது!...சாயூ பட்டாம்பூச்சியைத் தன் விரல்களால் தொட வேண்டும் என்று ஆசைப்பட்டதைப்போல அவன் சாயூவை......

அன்றைக்குத்தான் பிறந்தது ஆபத்து!

'சாயூ! ஒரு வருஷமாக இப்படிப் பழகுகிறோமே ஒரு நாளாவது......'

'சண்டை போடுவோமே என்கிறீர்களா?'

'சண்டை எதற்கு? சமாதான நிலையில் இருக்கிற உணர்வுக்குச் சாதகமாய்......'

'நல்ல ஸௌந்தர்யப் பவுடர் பூசுவார்களே சில பேர், அதைப்போல நேரடியாகப் பேச வேண்டியதைப் பூசி மெழுகி, குட்டை குழப்ப ஆசைப்படுகிறீர்கள்!'

'அது இல்லை, என் உண்மையான ஆசை.'

'பின்னே என்ன?'

'சற்று முன்னால் அந்த வண்ணாத்திப் பூச்சிக்கு உன்மூலமாக ஏற்படவிருந்த பாக்கியம் எனக்குக் கிடைக்குமா என்று...'

பொட்டென அவள் முகம் தழைந்து குழைந்தது.

'அதைப் பிடித்து அதன்மேல் இருக்குமே மஞ்சள் துகள்கள், அதை விரல்களில் அப்பிக்கொண்டு, அதை விட்டுவிடலாமென்று எண்ணினேன். வேறு எதற்கும் இல்லை. நீங்கள் அப்படியா......' என்று கேட்டாள் சாயூ.

'சேசே......! நான் அப்படியெல்லாம் உன்னைவிட்டு விடமாட்டேன். விட்டால்தான் என்ன, நீயும் வண்ணாத்திப் பூச்சியா—பறந்து போய்விட?'

சாயூ ஒரு நிமிஷம் யோசித்தாள். அவள் முகம் தீவிரமான நிலையைக் காட்டியது.

'புரிகிறது!' என்றாள் அவள், சற்று எடுப்பான குரலில்.

'என்ன புரிகிறது?'

'உங்கள் எண்ணம் புரிகிறது. வண்ணாத்திப்பூச்சியை நான் தீண்ட நினைத்த விதம் வேறு. நீங்கள் என்னைத் தீண்ட நினைக்கும் விதம் வேறு என்பது புரிகிறது!'

'சாயூ! இதைப் பெரிதுபடுத்திப் பேச ஆரம்பித்துவிட்டாயே. நான் விளையாட்டுக்கு — ஆசைப்பட்டதைச் சொன்னேன். இரண்டு பேரும் நினைத்த விதங்களில் என்ன பெரிய வேற்றுமையையும், புரட்சியையும் நீ கண்டுவிட்டாய்? மென்மையையும் அதினால் வரும் இன்பத்தையும் நாம் அநுபவிப்போம். வேறே என்ன இதில் இருக்கிறது?'

'ஏன் இது போதாதா? நான் பட்டாம்பூச்சியைத் தீண்டிவிட்டுவிட நினைப்பதைப் போல நீங்கள்......'

உமாபதிக்கு அவளுடைய திடீர் மாறுதல் அதிர்ச்சியைக் கொடுத்தது.

'சாயூ! விளையாட்டாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று நம்புகிறேன். அதன் எல்லையைக் கொஞ்சம் கவனித்துக்கொள்!'

'விளையாட்டுத்தான்! பெண்கள் வாழ்க்கையில் ஆண்கள் விளையாடிவிட்டுப் போவதைத்தான் இந்த சமூகம் கண்டிருக்கிறது......'

'சாயூ, நாம் பழகும் லட்சியம் உனக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன்.'

'தெரியாவிட்டால் இப்படிப் பழக மாட்டேன் நான்—அது தெரியுமா உங்களுக்கு?'

'பிறகு ஏன் இப்படி ஏதேதோ பேசுகிறாய்?'

'நீங்கள் ஏதேதோ ஆசைப்பட்டு அதன் விளக்கத்தைச் சொல்ல வந்ததனால் எனக்கும் ஏதேதோ சிந்திக்க அவசியம் ஏற்பட்டு......'

'சாயூ! காதல் என்ற பெயரில் எத்தனையோ பேர் கேலிக்கூத்து அடிக்கிறார்கள். அப்படியெல்லாம் நாம்—'

'எத்தனை பேரைப் பார்த்துவிட்டுச் சொல்கிறீர்கள் நீங்கள்?'

'சாட்சி பூதமாக ஆட்களைக் கொணர்ந்து நிறுத்து என்கிறாயா? அது எப்படி முடியும்? அப்படியெல்லாம் கதைகளில், நாவல்களில், ஸினிமாக்களில் சித்திரிக்கிறார்கள்—'

'சித்திரிக்கிறார்களல்லவா? அப்படிப்பட்டவர்களில் எத்தனையோ பேர் பெண்களின் வாழ்க்கையில் விளையாடி ஆசைகள் கொண்டுவிட்டு, அப்புறம் ஓடுகிற இடம் தெரியாமல் ஓடுகிறார்கள்......'

'ஏன் சாயூ இப்படி அவசரப்பட்டுப் பேசுகிறாய்? நானும் உன் கட்சியைத் தானே பேச வந்தேன்!......அந்த மாதிரியெல்லாமா நாம் பழகுகிறோம்? ஒருவரையொருவர் தீண்டக்கூடத் தீண்டாமல் புனிதமாக நாம் பழகுகிறோம்.'

'அந்தப் புனிதத்துக்குத்தானே ஆபத்து வர இருந்தது! முதலில் தொடும் படலம்...அப்புறம்...மிஸ்டர் உமாபதி...!'

தூக்கி வாரிப்போட்டது அவனுக்கு. இத்தனை நாளையப் பழக்கத்தில் அவள் அவன் பெயரை உச்சரித்ததே கிடையாது. அப்படிப் பெயர் சொல்லாமல் பழகும் தன்மையே நெருக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது......சிதம்பரத்துக்கு அவன் சிபார்சுக் கடிதத்துடன் சென்றிருந்தபோது எதிர்பாராவிதமாக அவளைத் தங்கக் கலசத்தைக் காண்பதுபோல் கண்டான். அப்போது அவள் இப்போது வளர்ந்துவிட்ட அளவுக்கு நாகரிகத்தைக் கண்டவளாக இல்லை. ஸ்விட்சைத் தட்டியவுடன் எரியும் 'ஃப்ளோரஸெண்ட் விளக்'கைப்போல் ஒளியாய்ச் சிரிக்கிறாளே, அப்படியில்லை முன்பு—அன்று முதன்முதலில் கண்டபோது. அன்று முத்துச் சுடர் ஒளிர நிற்கும் குத்துவிளக்காக இருந்தாள். அவளா இந்த...

'சாயூ!'

'மன்னிக்கவேண்டும். ஒரே இமோஷனலாக ஆகிவிட்டேன். அதற்குக் காரணம் நீங்கள்தான்...'


'நான் இல்லை, சாயூ! நீயேதான் — நீயேதான் உன்னைத் தீண்டிவிட்டுக்கொண்டு காளி மாதிரி பேசுகிறாய். பெண்ணுக்கு லட்சணமாக—'

வேண்டாம் என்று பார்த்தாலும், ஆத்திரம் மீறிச் சொல்லிவிட்டான் உமாபதி. அவளிடம் அந்த ரீதியில் பேச்சு ஆரம்பித்தது. அவனுக்கு இப்போது நினைத்தபோதுதான் வெட்கமாகக்கூட இருந்தது.

'மிஸ்டர் உமாபதி! நீங்கள் சற்று முன் குறிப்பாக உணர்த்திக் காட்டிய ஆசையின் அடிப்படையைக் குறித்து நான் விவாதிக்கவில்லை. ஆனால், அதன் அடிப்படையில் எழுந்த என் சிந்தனையைப் பின்பற்றிச் சொல்கிறேன்; நாம் பழகும் விதத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். கல்யாணம் என்ற பேச்சைப் பெரியவர்கள் எடுக்கிற வரையில்—'

'என்னைக் காசி யாத்திரை போய்விட்டு வரச் சொல்கிறாயாக்கும்!' என்று கடுகடுப்பாகப் பேசினான் உமாபதி.

'பார்த்தீர்களா! பெண்களைப்பற்றி ஆண்களின் பலவீனமான [illegible]லையைப் பற்றித்தான் என் மனம் இன்று திடீரென்று ஆராய்ச்சியிலும், விவாதத்திலும் இறங்கிவிட்டது. அதற்கு உங்கள் ஆசையின் ஒரு கோடியே காரணம். அதன் மூலம் பேராசைகளையும்



பெரு விளைவுகளையும் என் மனம் அளந்து பார்த்து இந்தக்கணம் முதல் வேறு பாதையில் என்னைச் செல்லத் தூண்டுகிறது. நாம் பழைய சரயூவும்—உமாபதியும்தான், ஆனால், உங்களுக்கு ஒரு சோதனை ஆரம்பிக்கப் போகிறேன் இன்று முதல்......'

'சிபாரிசுக் கடிதம் கொண்டு வந்து உன்னையும் உன் தகப்பனாரையும் பார்த்துக் கலாசாலையில் சேர முயன்ற என் வாழ்க்கையில் அந்த வகைச் சோதனைகளுக்கும் தேர்வுகளுக்குமே இடமில்லாமல் போய்விட்டதே, இது என்ன புதுவகைச் சுண்டைக்காய்ச் சோதனைகள்! அதுவும் நீ சோதனை செய்து......'

'கோபித்துக் கொள்ளாதீர்கள் மிஸ்டர் உமாபதி. திடீரென்று இன்று வேறுபட்ட என் மனத்தைத் திருப்திப்படுத்திக் கொண்டுதான் நமது லட்சியத்தில் நான் தொடர்வேன். ஒரு பெண் தன்னை ஒரு ஆணுக்கு அர்ப்பணித்துக்கொள்வதென்பது அவ்வளவு எளிதல்ல...'

'உன் சோதனையை இதோ இந்த லேட் கம்பங்களிடை செய்து பார்த்துக்கொண்டிரு. நான் வருகிறேன்' என்று எழுந்தான் உமாபதி.

அதற்குப்பின் அவன் சரயூவைப் பார்க்கவில்லை. இடையில் பதினைந்து நாட்கள் ஓடிவிட்டன.


அவள் இன்றும் வரவில்லை!

## 7. அண்ணாவுக்கு அபயம்!

உமாபதி வெளியில் சுற்றும்போது எப்போதும் தனது 'அம்பாஸடர்' காரில்தான் செல்வான். அவனது தூய உள்ளம், உடை, பண்பு இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அந்தக் காரின் நிறமும் வெண்மை நிறமாக இருந்தது.

அன்று தனது பெட்ரோல் பங்கில் சிப்பந்தியிடம் வெகு நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்துவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினான் உமாபதி. அவன்தான் எப்போதும் காரை





ஓட்டுவான். எதிர்ப்புறத்திலிருந்து டாக்ஸி ஒன்று வந்து உமாபதியின் அம்பாஸடர் போக முடியாதபடி குறுக்கே நின்றது.

'பெட்ரோல் பிடிக்க வரும் மோட்டார்களுக்கு உள்ள வழி ஒரு புறமிருக்க இந்த டாக்ஸிக்காரன் எதற்கு இப்படிக் குறுக்கே பாய்கிறான்' என்று நினைத்தான் உமாபதி. அவனுக்குப் பதில் சொல்ல அந்த டாக்ஸியிலிருந்து பமீளா இறங்கினாள்.

'உங்கள் காரை மடக்குவதற்காகத்தான் டாக்ஸியைக் குறுக்கேவிடச் சொன்னேன்!' என்றாள் அவள்.

தனது வாழ்க்கையிலேயே குறுக்கே வந்து தன்னை அலைக்கழிக்கும் பமீளாவைக் கண்டதும் உமாபதியின் உள்ளத்தில் ஒருவிதக் கலகலப்பான உணர்வு தலைகாட்டியது.

காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான் அவன். டாக்ஸியினுள் பமீளாவின் அண்ணன் கங்காதரன் உட்கார்ந்திருந்ததைக் கண்டான் உமாபதி. அவனுக்கு உடம்பில் 'சொரேல்' என்ற பின் ஏற்பட்ட உணர்வுக்குத்தான் இப்போது முதலிடம் கிடைத்தது. கலகலப்பெல்லாம் கலகலத்துவிட்டது.

'வாருங்கள்' என்று இரு கரங்களையும் கூப்பி அவனை வரவேற்றான் உமாபதி. 'ஹிஹி' என்றபடி டாக்ஸியைவிட்டிறங்காமலே காலையும் கையையும் அசைத்தான் கங்காதரன். டாக்ஸிக்குரிய சார்ஜைக் கொடுத்து அதை அனுப்ப வேண்டிய காரணத்தினால் பமீளாவின் முயற்சியினால் அவன் மறு நிமிஷம் இறங்கும்படியாயிற்று.

'அவசரமாக வெளியே கிளம்புகிறீர்கள் போலிருக்கிறது!' என்றாள் பமீளா.

'அவசரம் ஒன்றுமில்லை. நான் எதற்குமே அவசரப்படுவதில்லை. ஆனால், ஆகவேண்டிய காரியங்களை நிதானமாகக் கவனிப்பதால் அவை ஒழுங்காக முடிந்துவிடுகிற வழக்கம்.'

'அப்படியானால் நீங்கள் நிதானமாகக் கவனிக்க வேண்டிய ஒரு காரியம் இருக்கிறது!'

உமாபதி வாயைத் திறக்காமல் இருந்தான்.

'என்ன, காரியம் என்றதும் வாயை இறுக மூடிக்கொண்டு விட்டீர்கள்?'

'நான் ஒன்றும் பேசப் போவதில்லை; பேசப் புகுந்தால் என்ன ஏது என்பேன். என்னை அப்புறம் நீ ஹோமா ரூல் பாடம் படிக்கும் பையனை அடித்துப் போட்டுவிடுகிறாய். நீயே பேசு; கேட்டுக்கொண்டிருக்கிறேன்...'

'சரி; இவனை ஞாபகம் இருக்கிறதல்லவா?' என்று கேட்டாள் பமீளா.

'ஞாபகமில்லாமல் என்ன! இவனுக்காகக், கட்டியிருக்கும் ஜாமீன் தொகையை எந்தக் குருடன் கையிலாவது கொடுத்திருந்தாலும், நூறு ரூபாய்வரை வட்டி வந்திருக்குமே' என்று எண்ணினான். ஆனால், அவளிடம் சொல்லவில்லை. பதிலுக்குத் தெரியும் என்ற பாவனையில் தலையாட்டினான்.

'இவனை நீங்கள்தான் மன்னிக்க வேண்டும் என்று முன்பு ஒரு முறை சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா?'

ஞாபகம் இருப்பதாகப் பலமாகத் தலையாட்டினான் உமாபதி.

'இவனைச் சென்னையிலேயே இனிமேல் நிரந்தரமாகத் தங்கிவிடச் செய்ய வேண்டுமென்பது என் யோசனை. இனி நானும் பம்பாயில் என் அத்தையின் ஃப்ளாட்டிற்குச் செல்ல முடியாது. அந்த ஃப்ளாட்டை வேறு யாரோ ஒரு மார்வாடி பகடி கொடுத்து வாங்கிக் கொண்டு அத்தையைக் காலி பண்ணச் சொல்கிறானாம். அவள் பெங்களூர் போய் விடுவதாக இருக்கிறாள்... அண்ணாவின் சமாசாரம் போலீஸுடன் உறவு கொண்டாடிக்கொண்டிருப்பதால் அவனை அங்கே நடமாட விடுவது தப்பு என்று தோன்றுகிறது. அதனால் நீங்கள் அவன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் பெட்ரோல் பங்கிலேயே அவனைச் சேர்த்துக்கொண்டு...' என்று பமீளா பேசிக்கொண்டிருக்கும்போதே உமாபதி சற்றுப் பயத்துடன் தலையைத் தூக்கிப் பார்த்தான். கங்காதரனும் அவனை நிமிர்ந்து பார்த்துப் பேசினான்:

'நான்கூட முன்னே பம்பாயிலே ஒரு பெட்ரோல் பங்கிலே கொளுத்தியிருக்கிறேன்!'

'என்ன!' அயர்ந்துபோய், தன் சபதத்தையும் மறந்து கேட்டான் உமாபதி.

'ஆமாம்; வியாபாரம் கொளுந்து கொளுத்து என்று கொளுத்தும். நல்ல 'ஷக'ரிலே இருந்தது பங்க். நான் ஸேல்ஸ்மேனாக ஒரு வருஷம் இருந்தேன்—'

'அங்கே அந்த முதலாளியோடு தகராறு!' என்று அவன் பிரதாபத்தை முடித்தாள் பமீளா.

இப்படிப்பட்ட சிகாமணியையா துணிந்து தனக்குச் சிபாரிசு செய்கிறாள் பமீளா என்று கவலையோடு நினைத்தான் உமாபதி. அவன் கவலைக்கு ஒரு சிறு மாத்திரையளவு மருந்து கிடைத்தது.

'தனக்குப் புத்தியும் பொறுப்பும் ரொம்ப ரொம்ப வந்து விட்டதாகவும் இனி இந்த மாதிரி தப்பு தண்டா விவகாரங்களுக்குப் போகப் போவதில்லையென்றும் அண்ணா சொல்கிறான்.'

'நல்லவேளை!' என்று ஒரே ஒரு வார்த்தை சொன்னான் உமாபதி.

நல்லவேளை பார்த்து வேலைக்கு வந்து விட்டான் கங்காதரன். வெள்ளையும் சள்ளையுமாக நன்றாக உடுத்திக்கொண்டு, பார்ப்பதற்கும் ஆள் கனிசமாக ஜோராக இருப்பான். அவனுக்கு என்ன வேலை கொடுப்பதென்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தான் உமாபதி. கங்காதரனும் இன்ன வேலைதான் என்று குறிப்பிட்டுக் கவனிக்க வேண்டுமென்ற சட்ட திட்டத்தை எதிர்பாராதவன் போல இஷ்டத்துக்கு அந்தப் பெட்ரோல் பங்கை வளைய வந்துகொண்டிருந்தான்.

கவலை என்பதே பட்டு அறியாத உமாபதியின் மனத்தில் அதன் நிழல் தலைகாட்டியது. கங்காதரனின் திருவிளையாடல்களுக்குப் பணம் காசு முதலியவற்றின் அடிப்படையில் இடம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்திருந்தான் அவன். ஆனால், அவன் இவைகளையும் மீறிய எதிலாவது தலையிட்டுக்கொண்டு தன் தலையையும்...



என்று எண்ணினான். கவலையின் முழுச் சாயலும் அவன் மனத்தில் படிந்துவிட்டது.

## 8. கங்காதரன் புதிர்

இப்போதெல்லாம் அடிக்கடி தன் பெட்ரோல் பங்கிற்கு விஜயம் செய்த வண்ணமிருந்தான் உமாபதி. இதற்குக் காரணம் கங்காதரன்தான். அவனைக் கண்காணிப்பதிலும் அவனது திருவிளையாடல்களுக்கு எங்கேயாவது அறிகுறி ஏற்படுகிறதா என்பதைக் கவனிப்பதிலும் அக்கறை செலுத்துகிற விசேஷப் பணியால் இந்த விஜயம் ஏற்பட்டு வந்தது.

பமீளாவுக்காகக் கங்காதரனை வேலையில் அமர்த்திக்கொண்டிருக்கிற விஷயம் உமாபதியின் நினைவில் அடிக்கடி மின்னியது. அவளுக்கும் தன் அண்ணனுக்கு வேலை கிடைத்த காரணம் தெரியும். இந்தச் சம்பவம்தான் உமாபதி-பமீளா இருவர் மனத்திலும் ஒரே விஷயத்தைப் பற்றி ஏறக்குறைய இரண்டு பேருமே சிந்திக்க வழி வகுத்து வைத்தது.

அடுத்தபடி பமீளாவைக் காண்பது எப்போது என்று சில நாட்களாகவே எண்ணிக்கொண்டிருந்த உமாபதிக்கு அவள் தன் அண்ணனுடன் வந்து அன்று தரிசனம் கொடுத்தாள். அந்தச் சந்திப்பின் இறுதியில் அடுத்த சந்திப்புக்கும் இடம், நேரம் என்று ஏற்படுத்திவைத்துவிட்டுப் போயிருந்தாள் பமீளா. அவள் சாதுரியமும், தோற்றமும் உமாபதியைச் சிந்திக்க வைத்தன.

'அவள்... அவள்...' என்று மனம் அலுவல்களுக்கு இடையே சுருதியில் இறங்கியிருக்கும். அந்தச் சுருதியில் மாற்றம் ஏற்பட்டால், 'பமீளா... பமீளா' என்ற நாதம்தான் கேட்கும்.

அவளுக்காக என்று ஏற்பட்ட இந்தக் கங்காதரன் தொடர்பில் அதி ஜாக்கிரதையாக இருக்கும் எண்ணத்துடன்தான் அடிக்கடி பெட்ரோல் பங்கிற்கு விஜயம் செய்துகொண்டிருந்தான் அவன். முன்பெல்லாம் அவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு தடவைக்குமேல் அங்கே வர வேண்டிய வேலை இருக்காது. அளவு காட்டி யந்திரத்தில் பெட்ரோல் அலை கூட்டிச் சலசலத்து, இத்தனை காலன் என்ற கணக்குக் காண்பித்துப் பணத்தைப் பெட்டியில் சேர்த்துக்கொண்டிருந்தது.

பார்ப்பதற்குப் பணம் சுலபமாகப் பெட்டியில் வந்து குவிகிறதுபோல் தோன்றினாலும் அதற்கு உமாபதி தன் 'அம்பாஸடர்' காரைப் போட்டுக்கொண்டு வெளியில் வேலை செய்துகொண்டிருந்தால்தான் முடியும். இம்போர்ட் லைஸென்ஸ், பெட்ரோல் சப்ளை ஸ்தாபனத்தின் பல்வேறு குணதிசயங்கள் கொண்டு பல்வேறிடங்களில் பங்களாக்கள் கட்டிக்கொண்டு வாழ்கிற அதிகாரிகள், தனது பங்கில் பெரிய அளவில் பெட்ரோல் பிடிக்கும் மகானுபாவர்கள்... இப்படி எல்லாரையும் நினைவில் வைத்துக்கொண்டு அலைய அவனுக்குச் சரியாயிருக்கும். கடியாரத்தில் கடந்து மறையும் ஒவ்வொரு மணியும் அடுத்த மணிக்கான அலுவலை அவனுக்கு ஞாபகப்படுத்திச் செல்லாமல் இராது.

இவைகளுக்கு நடுவில் உமாபதி முன்பெல்லாம் தினசரி இரண்டு மணிநேரம் மிச்சம் பிடித்துக்கொண்டு ஸரயூவைச் சந்திக்கப் போவான். அவளிடம் பேசிச் சிரித்து மகிழ்கிற இரண்டு மணி நேரத்தின் தெம்பில்தான் மீதியுள்ள இருபத்திரண்டு மணி நேரத்தைச் சிரமமின்றிச் செலவிட முடியும். ஸரயூ வக்கரித்துக்கொண்டு அங்கே வருகிறதை நிறுத்திய பிறகு அந்த இரண்டு மணி நேரத்தையும் கழிப்பதற்குள் அவனுக்குக் கடலைக் காலால் கடந்து தாண்டுவது போலாகிவிடும்.

கங்காதரன் 'உத்தியோகப் பொறுப்பு' ஏற்ற பிறகு மீண்டும் உமாபதிக்கு நேரத்தைச் சிக்கனமாக்கும் அவசியமே வந்துவிட்டது என்று சொல்ல வேண்டும்.

அவனைக் கண்காணிக்க வரும் நேரத்தில் மற்றச் சிப்பந்திகளிடமும் அதிக நேரம் பேசி அவனைப் பற்றிக் கேட்காமல் கேட்க வேண்டியவைகளைக் கேட்டுக்கொண்டு, சொல்லாமல் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டுவா வேண்டியிருக்கும்.

'அந்தக் கண்ணாடியைச் சுண்ணாம்புத் தண்ணி போட்டுக் கழுவு என்று எத்தனை தடவை ஐயா உங்கிட்டே சொல்றது?' என்ற குரல் கேட்டு உமாபதி அதிசய உணர்வுடன் திரும்பிப் பார்த்தான். கங்காதரன் பங்க் சிப்பந்தி ஒருவரை அதட்டிக் கொண்டிருப்பதை அவன் கண்கள் கண்டன.

'அடேயப்பா! நம்ம 'பங்க்'குக்கு இனிமேல் யோகந்தான்' என்று எண்ணிக் கொண்டான் உமாபதி.

கங்காதரன் வேலை மும்முரத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் முயற்சியில் தன் பர்ஸ், டயரி, ரிஸ்ட் வாட்ச் எல்லாவற்றையும் எடுத்து மேஜை மேல் வைத்துவிட்டு வெளியே சென்றான். 'அந்தச் சிப்பந்தி ஒருகால் தகராறு பண்ணினால் இந்த உற்சாகியே கண்ணாடியைக் கழுவுவது என்று முடிவு பண்ணிவிட்டாற் போலிருக்கிறதே!' என்று எண்ணிக்கொண்டே உமாபதி மெள்ள அவனது ஆஸ்திகளை ஆராய்ந்தான்.

கங்காதரனின் பர்ஸ் முதலைத் தோலால் செய்து கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தது. டயரியை எடுத்துப் பார்த்தான் உமாபதி. அதை மெல்லப் புரட்டும் ஒரு சிறு—குழந்தைத்தனமான ஆவல்—எழுந்தது. வேறு ஒருவனின் பர்ஸ், டயரி இவற்றைக் குடைய யோசிக்காத சில சாதாரண மனிதர்களின் மிகச் சாதாரண குணத்தைப் படைத்திருக்கவில்லை அவன். ஆனாலும், கங்காதரனையும் தனது ஸ்தாபனத்தையும் பிணைத்த ஒரு அக்கறை நோக்கோடு அதை அவன் புரட்ட நினைத்தான்.

'கங்காதரன், விசேஷப் பிரதிநிதி' என்று எழுதி, அந்தப் பெட்ரோல் பங்க்கின் விலாசத்தையும் குறித்திருந்தது.

சில ஏடுகள் காற்றினாலும், சில ஏடுகள் விரல்களினாலும் புரண்டன.

'ஸரயூவைச் சந்திக்க மூன்று ஞாயிறுகளாக முடிந்தும் முடியவில்லை. வருகிற ஞாயிறு கண்டிப்பாகச் சந்திக்க வேண்டும்.'

'எந்தச் ஸரயூ?'—உமாபதியின் மனத்தில் இந்தக் கேள்வி சுழன்ற அதே சமயம் அவன் கண்கள் கங்காதரனைத் தேடிச் சுழன்றன.

'மிஸ்டர் கங்காதரன்!'

அவன் வந்தான். அவனுடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினான் உமாபதி.

சில நிமிஷங்களில் கங்காதரன் உமாபதியின் காரில் அவனுடன் சென்று கொண்டிருந்தான். பேச்சும் வழியும் வளர்ந்துகொண்டே போயின.

ஃ ஃ ஃ

உமாபதிக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருந்தது. ஆச்சரியமும் வேறு ஏதோ உறவுகொண்டு சுற்றிச் சுற்றி வந்த உணர்வும் அவன் மனத்தை அடைத்தன.

'ஸரயூ! உன்னை எனக்கு என்று சாசனம் எழுதியாகிவிட்டதென்று நினைத்த எனக்கு இந்தப் பேரிடியா? இப்படி ஒரு பேரிடியாக என் தலையில் உன் கையால் அடிக்க வேண்டாம் என்ற முன் யோசனையுடன்தான் அன்று பார்க்கில் அப்படி ஒரு விவாத அரங்கு ஏற்படுத்தி பிரிவுக்கு வழி கோலினாயா?...' ஆச்சரியத்தைச் சுற்றிவந்த உணர்வு பெருகி, தன் சொரூபத்தைக் காட்டியது. அதன் கோர வடிவம்தான் ஏமாற்றம்! அது மாறினால் துக்கம்...

இந்த உணர்வுகளெல்லாம் கங்காதரனிடம் நீள நெடுகப் பேசியதில் வெடித்த செய்திகளைத் தொடர்ந்து வெடித்தவை... ஸரயூவும் பமீலாவும் சிநேகிதிகள். கங்காதரனும் அங்கே—ஸரயூவின் வீட்டுக்குப் போவதுண்டு. பழக ஏற்பட்ட வாய்ப்பில் ஸரயூவிடம் கங்காதரனுக்குக் காதல்...

'உங்களுக்கு அவளிடம் காதல் என்பது சரி, மிஸ்டர் கங்காதரன். அவளுக்கு? ஒருதலைப்பட்சமான காதல் கூடாதே... இதில் என்னாலான உதவியைச் செய்கிறேன்' என்று கேட்டான் உமாபதி.

'காதல் விஷயத்தில் பிறர் உதவி என்பது எதிர்பார்க்கக் கூடாத—எதிர்பார்த்தாலும் நடக்காத—வியர்த்தமான அலுவல் என்பது புராண ரீதியாக,



சமூகச் சித்திரங்கள் வாயிலாக, புனைகதைகள் மூலமாகக் கேள்விப் பட்டதில்லையா, மிஸ்டர் உமாபதி? நான் உங்கள் உதவியை நாடினாலும், நீங்கள் செய்ய முற்பட்டாலும் நிலைமை தலைகீழாக மாறினாலும் மாறிவிடும்... சொன்னதற்கு நன்றி!' என்றான் கங்காதரன்.

ஸரயூவைப் பற்றி அப்படி முடிவு கட்ட முடியவில்லை உமாபதியினால்...

ஃ ஃ ஃ

கங்காதரனை மீண்டும் பெட்ரோல் பங்கில் விட்டுவிட்டுப் புறப்பட்டான் உமாபதி. அவன் காரின் முன் விளக்குகள் நீண்ட தூரத்துக்கு இரு வரிசைகளாக ஒளிக் குழாய்கள் அமைத்திருந்தன. அந்த ஒளி ரேகைகள் முடிந்த இடத்தில் ஸரயூவும் பமீலாவும் பின்னடை போட்டபடி அவனை 'வாவா' வென்று விளையாட்டுக் காட்டி அழைப்பது போல் உணர்ந்தான் உமாபதி.

## 9. புதிய விளைவுகள்



ஸரயூவைப்பற்றி உமாபதி நினைக்க முற்படும்போது பமீலாவின் நினைவு வந்து குறுக்கிட்டுக்கொண்டிருந்தது; ஸரயூவைப்பற்றி நினைக்காமலும் இருக்க முடியவில்லை. கங்காதரனின் திருவிளையாடல் அநேகமாக ஆரம்பமாகி விட்டதென்று தோன்றியது அவனுக்கு. அவனை இரண்டு விதங்களில் கண்காணிக்க வேண்டிய அவசியம்கூட ஏற்பட்டுவிட்டதாக உணர்ந்தான் உமாபதி. பங்க் பிஸினஸ் விஷயத்தில் அவனுடைய பங்கிற்கு ஏதாவது

தீம்புகொண்டு வந்துவிட்டுவிட்டு ஆயிரம் பதினுயிரம் என்றோ அல்லது முழு முதலுக்குமோ மோசம் விளைவித்து விடப் போகிறுனே என்ற ஒரு கவலையை மட்டும் சில நாட்களாகப் பட்டுக்கொண்டிருந்தான் உமாபதி. இப்போது இரண்டாவது கவலை, அவன் 'ஸரயூ—காதல்' என்றெல்லாம் கிறுக்கிக் கொண்டும் உளறிக்கொண்டும் திரிவதைப் பற்றியது.

வீம்புக்காக ஸரயூவைச் சந்திக்காமல் இருந்துகொண்டிருந்தால் இந்தக் கங்காதரன் உளறல் பற்றிய பிரச்னைக்குச் சரியான முடிவைத் தெரிந்துகொள்ள முடியாது என்று நினைத்த உமாபதி, அவள் வீட்டுக்குப் புறப்படுவது என்று அன்று காலை முடிவு பண்ணினுன். உடனேயே பமீளாவின் நினைவு வந்தது. பமீளாவிடம் மனம்விட்டுப் பேசினுல் எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்றும் தோன்றியது. அவளே அவனைத் தன் வீட்டிற்கு அழைத்திருந்தாள். அந்த அழைப்பை நிறைவேற்றுவதானுல் இன்னும் இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டும். இந்த இரண்டு நாட்கள் வரை பசிக்குத் தும்புடன் முளையைச் சுற்றிவரும் மாட்டைப்போல் சுற்றிவரும் மனத்திற்கு என்ன சமாதானத்தைச் சொல்வது என்று விழித்தான் அவன்.

இன்னொரு விஷயமும் உமாபதியின் குழம்பிய மனத்தில் குடைந்துகொண்டு இடம் தேடியது. ஸரயூவிடம் பேச நேரும் சந்தர்ப்பம் வாய்த்தால் பமீளாவைப்பற்றிய தொடர்பில் கொண்டு போய்விடலாம். 'அவள் கிண்டிக் கிளறிக் கேட்டால்...?'

ஆனுல் அவனுக்கு இல்லாவிடினும் தனக்கே இந்தக் கேள்விக்கும் பிரச்னைக்கும் பதில் வேண்டுமே! பமீளாவுடன் பழகுவது, அவளைக் கண்டுவிட்டால் உயரத்திலிருந்து தாவிக் குதிக்கும் சிறு பிள்ளைபோல் மனம் தாவிக் குதிப்பது...இதெல்லாம் எந்த எல்லையை நோக்கி—அவனுக்குப் பதில் விளங்கவில்லை.

அதே மாதிரி பிரச்னையை வேறுபுறமிருந்து பார்த்தால் பமீளாவிடம் பேச நேர்ந்தால்—அதுவும் விவரமாகப் பேச நேர்ந்திருக்கிற இச்சமயத்தில்—ஸரயூவிடம் தன் முந்தைய தொடர்பையும் இப்போதைய முடிவையும் பற்றிப் பமீளா கேட்க மாட்டாளா? அட, பமீளா கேட்காதவரை பிரச்னைக்கு முடிவும் ஆபத்தும் இல்லையா?—இதற்கும் அவனுக்குப் பதில் விளங்கவில்லை.

...யோசித்தபடியே காரைச் செலுத்திக் கொண்டு ஒரு தியேட்டரை நோக்கிச் சென்றுன் உமாபதி. தீவிரமான சிந்தனை ஏற்பட்டு, முடிவு காணுத அல்லது காண முடியாத சந்தர்ப்பங்களில் மனத்துக்குப் 'பிரேக்' போடுவது அவனுடைய பிஸினஸ் சம்பந்தமான அலுவல்தான். காரில் யோசித்துக்கொண்டே வரும்போது அலுவலாக வந்த இடம் வந்தவுடன் அவன் போடும் பிரேக் காரை நிறுத்துவதுடன் சேர்த்து மனத்தையும் நிறுத்திவிடும்.

இப்போதும் பிரேக் போட்டுவிட்டு மானேஜரைக் காண்பதற்காக உள்ளே சென்றுன் உமாபதி. 'குபுகுபு'வென்று குழாயில் பொங்கிவந்த பெட்ரோலைத் தன் கார்களில் நிரப்பிக்கொண்டு, கொடுக்கவேண்டிய பில் பணத்தைப் பற்றிக் கவலைப் படாத ஒரு புள்ளி அவர். அதை விசாரித்துப் போக வந்திருந்தான் உமாபதி.

மானேஜரைக் குசலம் விசாரிக்க வாயைத் திறக்குமுன்பே அவன் கண்களுக்கு ஒரு வேலை காத்திருந்தது அங்கே.

'இன்றிரவு இரண்டாவது ஆட்டத்துக்கு—இரண்டு பால்கனி ஸீட்டுகள்' என்று ரிஸர்வேஷன் கவுண்டரில் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான் கங்காதரன்.

உமாபதிக்குத் தூக்கிவாரிப் போட்டது என்று சம்பிரதாயமாக இங்கே எழுதுவதைவிட வேறு எதை எழுதுவது? தூக்கியாவது, போடவாவது! அவன் பார்வையில் பட்ட ஒவ்வொருவரையும் தூக்கிவாரிப் போட்டதாகப் பிரமை பிடித்திருந்த அவனுக்குத் தான் இன்னும் ஒரு முழம் மேலே எழும்புவதாகத் தோன்றியது. கங்காதரன் திரும்பிச் செல்வதை அவன் கண்களில் படாமல் மறைந்திருந்து பார்த்துவிட்டு, அதே ஆட்டத்துக்கு அதே பால்கனி ஸீட்டுக்குத் தானும் ஒரு ஸீட்டை ரிஸர்வ் செய்துகொண்டு மானேஜரைக் கூட வந்த விஷயமாகப் பார்க்காமல் திரும்பிப் போய்ச் சேர்ந்தான் உமாபதி.

தியேட்டர் உள்ளும் வெளியுலகிலும் இருள் கவிந்திருந்தது. உலகைப் பரவி மூடிவிட்டபின் மிகுந்த இருள் மூட்டமெல்லாம் உமாபதியின் உள்ளத்தில் இடம் தேடிவிட்டன என்று சொல்லலாம். ஆபரேட்டர் ரூமிலிருந்து மட்டும் கிளம்பிச் சென்று திரையைக் கிழித்துக் கொண்டு வெளியேற முற்பட்டாற்போல் இயங்கிய ஒளிக் கதிர்களுக்கு ஈடாக உமாபதியின் இருள் உள்ளத்திலின்றும் பிறந்த ஒளி ரேகைகள் அவன் கண்கள் வழியாகச் சென்று கங்காதரனையும் அந்தப் பெண் உருவத்தையும் தொட்டுக்கொண்டிருந்தன.

அந்தப் பெண்ணை யாரென்று அவனுல் புரிந்துகொள்ள முடியவில்லை.

'ஒருவேளை ஸரயூவா?'

'இருக்காது!'

'ஏன் இருக்க முடியாது?'

இடைவேளையின்போது விளக்குகள் எரிந்தன. கங்காதரனும் அந்தப் பெண்ணும் இருந்த ஸீட்டுகள் காலி!

மீண்டும் இருள்; மீண்டும் இருளுக்கும் ஒளி ரேகைகளுக்கும் போட்டி.

ஆட்டம் முடிய இரண்டு நிமிஷங்கள் இருக்கும்போது கங்காதரனும் அந்தப் பெண்ணும் எழுந்து செல்வதைப் பார்த்தான் உமாபதி. வெளியே வந்து பார்ப்பதற்குள் அவர்கள் மறைந்து விட்டார்கள். தியேட்டரிலேயே சில நிமிஷங்கள் சுற்றியபின் அலுத்துப்போய்க் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது... தொலைவில் இரண்டு உருவங்கள் செல்வது தெரிந்தது. அவர்கள்தான்.

'அதில் ஒன்று ஸரயூவா?'

'அப்படி நேரக் கூடாது!..'

மனோவேகம் உந்தி யந்திரவேகத்தை அதிகப்படுத்தச் செய்தது. ஒரு திருப்பத்தை எதிர்பாராமல் உமாபதி காரை வேகமாகச் செலுத்தவும் அங்கே ஒரு பயங்கரம் நிகழ்ந்தது. திடீரென்று ஏதோ மாற்று யோசனையுடன் திரும்பிய கங்காதரனின்மேல் கார் மோதிவிட்டது! ஆனுல், அந்தப் பரபரப்பிலும் உமாபதிக்கு ஒரு விஷயம் விளங்கியது. கூடச் சென்றுகொண்டிருந்த பெண் ஸரயூ இல்லை.

## 10. சிக்கலும் சீறலும்

பமீளாவை மனக்கோயிலில் ஓராயிரம் தடவை சந்தித்த பிறகு இன்று நாலாவது தடவையாக நேரில் சந்தித்தான் உமாபதி. இந்தச் சந்திப்பு இப்படி ஒரு சங்கடமான நிலைமையைப்பற்றி விசாரிக்கவும் யோசிக்கவுமாக ஏற்படும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

உள்ளே வந்ததும் மௌனமாக ஓரிடத்தில் உட்கார்ந்தான் அவன். பமீளாவும் வந்து எதிர் நாற்காலி ஒன்றில் அமர்ந்துகொண்டாள்.

'நான் இப்போதுதான் நர்ஸிங் ஹோமிலிருந்து வருகிறேன். அண்ணுவுக்கு அந்தமட்டில் உயிருக்கு ஆபத்து இல்லை! இரண்டு மூன்று இடங்களில் பலத்த காயம். முழங்காலில் அடிபட்டிருப்பதால் அங்கே உணர்ச்சி மரத்துவிட்டிருக்கிறதென்றும் பூரணமாகக் குணமாவதற்கு மூன்று மாதங்கள் பிடிக்குமென்றும் டாக்டர் சொன்னர்' என்றுள் பமீளா.

'நானும் எல்லா விவரங்களையும் கேட்டுக்கொண்டு சிகிச்சைக்கும் மருந்துகளுக்கும் ஏற்பாடு செய்துவிட்டு நேராக அங்கிருந்துதான் வருகிறேன்' என்றுன் உமாபதி. 'டணர்' என்று வெண்கலப் பாத்திரம் சப்திப்பதுபோல முன்பெல்லாம் பேசிய உமாபதியின் குரலில் இப்போது ஒரு கட்டைத் தன்மை தோன்றியது. சாமான் ஏதாவது நிறைந்திருக்கிற அதே வெண்கலப் பாத்திரத்தின் இனிய நாதமற்ற ஒலிபோலத்தான் இது; ஆனுல், அவன் மனத்தில் சஞ்சலம் நிறைந்திருப்பதை அது தெரிவித்தது.

சில விநாடிகள் நிலவிய மௌனத்துக்குப் பிறகு உமாபதி மறுபடியும் பேசத் தொடங்கினுன்:

'என்னை உன் சகோதரன் சார்பிலும் உன்னுடைய பங்குக்குமாகச் சேர்த்து மன்னிக்கவேண்டும், பமீலா.'

அவள் உடனே ஏதும் பேசவில்லை. உயர நிமிர்ந்து ஒரு சுற்று எங்கெங்கோ குறிக்கோளற்றுப் பார்வையைச் சுழல விட்டுவிட்டுப் பிறகு குனிந்தபடியே அவனைப்பாராமல் பேசினாள்:

'அண்ணாவின் சார்பில் நான் என்ன மன்னிப்பது? விபத்து என்பது எங்கேயும் சகஜமாக ஏற்படுவது. நீங்கள் என்ன, வேண்டுமென்றா அண்ணாவின் மேல் காரை ஏற்றினீர்கள்? அவன் உயிருக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படாது என்பதனாலும், அவனைச் சமயோசிதமாக உங்கள் பொறுப்பில் உடனடியாகக் கொண்டு நர்ஸிங் ஹோமில் சேர்த்ததற்காகவும் உங்களை நாங்கள் கையெடுத்துக் கும்பிடக் கடமைப்பட்டவர்கள். ஆனால், என் பங்கிற்காக உங்களை மன்னிக்க வேண்டுமென்றால் அது முடியாது! என்னை வஞ்சிக்க முற்பட்ட உங்களை மன்னிக்க எனக்கு உரிமை இல்லை. அதற்குப் பதில் என்மேல் தானே அனுதாபப்பட்டுக் கொள்கிறேன்...'

அவள் இமையோரங்களில் இருந்த பளபளப்பைக் காணவில்லை. இமைகள் படபடத்து நின்றன. இமையோரங்கள் ஆற்றின் ஊற்றுப் பாங்கான இடங்களில் தென்படும் கசிவைக் காண ஆரம்பித்துவிட்டன.

உமாபதிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஆனால், எப்போதும் அவன் மனத்தில் குடியிட்டுக் கொண்டிருந்த ஸரயூவின் நினைவு இரண்டு விநாடிகளில் வந்துவிட்டது. அந்த ஸ்தூல உருவம் சாட்சிக்கு அழைக்கப்பட்டு நிற்கிறாற்போல் அவனுக்கும் பமீலாவுக்கும் இடையில் நின்றது.

ஸரயூவைப் பற்றிய பேச்சை எடுப்பதற்குத்தான் பேச்சினால் புள்ளி வைக்கிறாள் அவள் என்று நினைத்தான் அவன்.

'ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?' என்றாள் பமீலா. அவள் முகம் கம்பீரமாக நிமிர்ந்தது இப்போது. அவள் கண்கள் அகல விரிந்து அவன் முகத்தில் பதிந்தபடி குத்திட்டு நின்றன. இந்தத் தோற்றத்துக்கு ஒரு அதிர்ச்சி கண்டுவிட்டது உமாபதியின் மனம். தொடர்ந்து பேசியாகவேண்டுமே? விளக்கை ஏற்ற உட்கார்ந்தால் போதுமா? திரியில் தீயிட்டபின் அதைத் தூண்டி, சரிபார்த்து ஒரு நிலையில் நிறுத்தினால் தானே வேண்டிய வெளிச்சம் பரவ வழி ஏற்படும்?

'கங்காதரன் அடிபட்டுக் கிடக்கிற விஷயத்திலிருந்தும் இன்னும் என் மனம் மீளவில்லை. அவன் அடிபட்டதற்குக் காரணகர்த்தா நான். ஆதலால் அவ்வளவு சுலபமாக வேறு பேச்சுக்குத் தாவ முற்பட முடியவில்லை... நீ பேசுவது பெரிய விஷயமாகவும் உன் அண்ணாவின் விஷயத்திற்கு வெகு தூரமானது என்பதும் தெரிகிறது...' என்றான் உமாபதி.

'இல்லை; அவனோடு இதையும் நினைக்கிற மாதிரியில்தான் நெருக்கமாக இருக்கிறது இந்த விஷயம்... ஏன், சுற்றி வளைத்து அதை மறைத்துவிடப் பார்க்கிறீர்கள் மிஸ்டர் உமாபதி? உங்களைப் பற்றிய போக்கைப் பற்றிச் சூசகமாகவாவது என்னிடம் மனம் விட்டுப் பேசிவிடுங்கள்—ஒரு வார்த்தை. அது போதும். யாரை யார் எதற்காகக் கட்டுப் படுத்த முடியும்? அவரவர்கள் சொந்த—வாழ்க்கைப் பிரச்னை இது. அவர்கள் ஆரம்பிக்கிறபடி அந்த விஷயத்தில் நூல் பிடித்தாற்போல் ஒரே மாதிரி மாறுதல் இல்லாமலும் செல்லலாம்; வேறு மனோபாவம் ஏற்பட்டுத் திடீரென்று வளைவுகளை ஏற்படுத்திக் கொண்டு வேறு திசையிலும் செல்லலாம். நான் ஏதோ நடுவில் வந்து சில காலம் பரிசயமானவள். என்னிடம் நீங்கள் கட்டுப்பட்டு நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிற அல்ப புத்தி படைத்தவள் இல்லை நான்!'

ஸரயூவின் சிநேகிதி என்ற முறையில் அவளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு அதன் எதிரொலியாக நம்மிடம் பேச வருகிறாளோ என்று நினைத்தான் உமாபதி. கங்காதரன் 'ஸரயூ' என்று ஏதேதோ தன் டயரியில் கிறுக்கி வைத்திருந்ததைப் பற்றி இவளிடம் கேட்க வேண்டும், கேட்பதா வேண்டாமா என்றெல்லாம் தான் குழம்பியிருப்பது போக இவள் ஏதேதோ வெடிகளைத் தூக்கி எறிகிறாளே என்று இன்னமும் வாய் திறக்க வழியின்றி மௌனமாயிருந்தான் உமாபதி.

விதை நெற்று வெடிப்பதுபோல் அவளிடமிருந்து வார்த்தைகள் வெடித்தன:

'என் அண்ணா என்னிடம் எதையும் சொல்லமாட்டான் என்றுதானே நீங்கள் நினைத்தீர்கள்? அவன் நர்ஸிங் ஹோமில் எல்லாவற்றையும் என்னிடம் சொல்லிவிட்டான். யார் அந்தப் பெண்?'

சரேலென்று ஒரு திரை கிழித்தாற்போலிருந்தது உமாபதிக்கு. ஸரயூவின் உருவம் அந்தத் திரையிலிருந்தும் மறைந்தது.

'எந்தப் பெண்?' என்று கேள்வியைச் சற்று அழுத்தலான குரலிலேயே கேட்டான் உமாபதி.

'கேள்வி கேட்ட என்னையே நீங்கள் திருப்பிக்கேட்டால் நான் என்ன பண்ணுகிறது? நான் மறுபடியும் சொல்கிறேனே: நான் இப்படியெல்லாம் கேட்பது இங்கிதக் குறைவாகவும் இருக்கலாம்; என் எல்லையைத் தாண்டியதாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு ஒப்பந்தம் போல் ஏற்பட்ட நம் உறவு நிலைமையின் அடிப்படையை உங்களுக்கு ஞாபகப் படுத்திவிட்டு இந்தக் கேள்விக்குப் பதிலை எதிர்பார்க்கிறேன் உங்களிடம். அன்று பம்பாயில் உங்களுக்கு நான் அளித்த ஒரு சிறு விருந்தின்போது, 'மூன்று எழுத்துக்களானாலும் பெரிய காரியம் அது, பமீலா' என்றீர்களே—நினைவிருக்கிறதா? அந்த மூன்று எழுத்துக்கள் கூட்டும் வார்த்தை காதல் என்றுதான் நான் இதுவரை நம்பியிருக்கிறேன். அது சரிதானே மிஸ்டர் உமாபதி? அப்படியானால் நான் இதையெல்லாம் தங்களைத் துருவித் துருவிக் கேட்பதும் எனக்கு நீங்கள் பதில் சொல்லவேண்டுமென்று எதிர் பார்ப்பதும் நியாயம்தானே? அப்படி விண்டு விரிவாகச் சொல்ல இஷ்டப்படாவிட்டால் நான் முன்பு கேட்டுக்கொண்டபடி உங்கள் புதிய திருப்பத்தைப்பற்றி மனம்விட்டு ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள்; அதுபோதும்!' என்றாள் பமீலா. அவள் படபடப்பில் கையையும் முகத்தையும் ஆட்டி ஆட்டிப் பேசியதில் அவள் ஆடை நலுங்கிச் சரிந்தது. அதைச் சரி செய்துகொண்டே உமாபதியின்மேல் வைத்த பார்வையை வைத்தபடி தீவிர முகபாவத்துடனிருந்தாள்.

'மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்கிறேன். நீ பதில் சொன்னால்தான் எனக்கு மேற்கொண்டு விளக்கம் தர முடியும், பமீலா. பதட்டப்படாமல் பேசு. நீ குறிப்பிடுவது எந்தப் பெண்?'

'கங்காதரன்மேல் உங்கள் கார் மோதியபோது காரில் இருந்தாளே அந்தப் பெண்தான்!'

'என் காரில் இருந்தாளா?'—மனத்தில் இயற்கையாக எழுந்த இக்கேள்வி தானாக உமாபதியின் வாய் வழி வழி கண்டு வெளியேறியது.



'மகாடி ... ற என்ன மயன் அழைக்கிறாகள் ?

"கொடி மரத்தின் சக்கரத்தில் கயிறு சிக்கிக்கொண்டால் ... படியை சரி செய்து கொடியைப் பறக்கவிட உம்மால் தானே முடியும்?"

தான்; அண்ணாவை நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது காரிலிருந்து காணாமல் போய்விட்டவள்! நர்ஸிங்ஹோம் காவல்காரன் அவள் இறங்கிச் சென்றதைக் கவனித்திருக்கிறான். ஆனால், அவள் இயல்பாகத் தன் இடத்துக்குச் சென்றுவிட்டாளாக்கும் என்று எண்ணியிருக்கிறான். அவளை நீங்கள்தான் கடத்திக்கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நர்ஸிங் ஹோம், உங்கள் பெட்ரோல் பங்க் எல்லா இடங்களிலும் காலை முதல் பேச்சாயிருக்கிறதாமே...'

இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவோ, சொல்லவோ தோன்றவில்லை உமாபதிக்கு. சில விநாடிகள் யோசித்ததில் அவனுக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. கங்காதரன் கட்டிவிட்ட கதை என்பது புரிந்தது. பம்பாயில் அவனுக்காகப் பத்தாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டிவிட்டு வீட்டுக்கு வந்தபோது ஒரு வார்த்தை நன்றிகூடச் சொல்லாமல் மீண்டும் எங்கோ டாக்ஸியில் பறந்துவிட்ட அவனது முழு யோக்யதையும் இப்போதுதான் புரிந்தது உமாபதிக்கு. அவன் கதை கட்டிவிட்டதைப் பற்றிக் கவலைப்படவில்லை அவன். ஆனால், ஏன் அப்படிச் செய்தான் என்பதைப் பற்றித்தான் யோசித்தான் அவன்... அதுவும் புரியாமல் போகவில்லை... இந்தச் சிக்கலினின்றும் விடுபடக் கதையைத் தலைகீழாகத் திருப்பி விட்டான் கங்காதரன் என்பது புரிந்தது.

பமீலா என்ன இருந்தாலும் பெண்தானே, தன்மேலுள்ள பிடிப்பினால் இந்த அவலக் கதையைக் கேட்டு மனம் தடுமாறிப் பேசுகிறாள் என்பது தெரிந்தது அவனுக்கு. ஆனால், அவள் வாயை அடைக்க ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம். வேறொரு கட்டுப்பாடு அவனைப் பதில் சொல்லவொட்டாமல் தடுத்தது. கங்காதரன் காரில் அடிபட்டதும் அவனையும் அந்தப் பெண்ணையும் காரில் ஏற்றிக்கொண்டு நர்ஸிங் ஹோமுக்கு விரைந்தபோது முன்



னிருந்த அந்தப் பெண் அவனிடம் ஒரு கோரிக்கை விடுத்திருந்தாள். தன்னைப் பற்றி வெளியில் பிரஸ்தாபிக்க வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தாள் அந்தப் பெண். உமாபதி சரியென்று வாக்குறுதி கொடுத்திருந்தான். ஆனால், முதல் காரியமாகக் கங்காதரனை நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டுப் பிறகு வந்து அவளது நிலைமையைப்பற்றி விவரமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்திருந்தான். வெளியே வந்து பார்த்தபோது காரில் இருந்த அந்தக் காரிகையைக் காணவில்லை. தான் வாக்குறுதி கொடுத்திருந்தும் ஏன் அப்படி அவள் மறைந்துவிட்டாள் என்றே புரியவில்லை அவனுக்கு. அந்தக் கட்டுப்பாடுதான் இப்போது அவளைப்பற்றி ஒன்றும் பேசவிடாமல் நெஞ்சை யடைத்தது. தவிர அவனிடமுள்ள ஒரு நல்ல பண்பின் காரணமாகக் கங்காதரனின் சொரூபத்தைப்பற்றிப் பமீலாவிடமும் சரி, மற்ற யாரிடமும் அவன் எதுவும் கூறவில்லை.

அந்த நிலையில் பமீலாவிடம் எதுவும் பேசாமல் விடுவிடென்று எழுந்து வெளியில் சென்றான் உமாபதி.

## 11. சாதுமிரண்டால்...!

அன்று காலையில் புதிதாகக் கேள்விப்பட்ட செய்தியைக் கண்டு திகைத்தாள் பமீலா. இதை அவளால் நம்பவும் முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை. அழகு அண்ணாவின் சந்தத்தைப் பற்றிச் சிறிது எண்ணினால் அந்தக் காரியத்தை அவன் செய்திருக்கமாட்டான் என்று முடிவு கட்ட முடியாது.

போலீஸ் வரை கங்காதரன் கட்டிவிட்ட கதை எட்டி அவர்கள் உமாபதியை வந்து விசாரித்தனர் என்ற செய்தி அன்று காலையில் தெரிந்தது பமீலாவுக்கு. அதைத் தொடர்ந்து வேறு பல தகவல்கள்.

உமாபதியைப் போலீஸ்காரர்கள் ஸ்டேஷனுக்கு வரும்படி செய்து வாக்குமூலம் கேட்டனர். அவன், கங்காதரன் கடத்திக்கொண்டு போன ஒரு பெண்ணைப்பற்றித் தான் வேறு சந்தேகம் கொண்டு அவர்களைத் தொடர்ந்து சென்றதில் கார் எதிர்பாராதவிதமாகக் கங்காதரன்மேல் ஏறிவிட்டதென்றும், அந்தப் பெண்ணையும் அவனையும் நர்ஸிங் ஹோமுக்கு அழைத்துச் செல்கையில் அவள் விடுத்த கோரிக்கையையும், அவள் திடீரென்று மறைந்ததையும் விவரமாகக் கூறி விட்டான் உமாபதி.

பழி கங்காதரன்மேல் திரும்பக்கூடும் என்ற நிலைக்காகப் பமீலா வருந்தவில்லை. இந்தச் சிக்கலில் ஒரு பெண்ணும் சம்பந்தப்பட்டிருப்பதால் உமாபதியின் மேலும் அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, அதற்காக வருந்தினாள். உண்மையில் உமாபதி இப்படி ஒரு சிக்கலில் சிக்கிக்கொண்டு, தன் செய்கைக்காக வருந்துகிற நிலையில் இருந்தால் அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியது தனது கடமை என்று நினைத்து உமாபதியைப் பார்க்கச் சென்றாள் அவள்.

எப்போதும்போல் புன்னகை பூத்த முகத்துடன் அவளை வரவேற்றான் உமாபதி.

'காலையில்கூட நர்ஸிங் ஹோமுக்குப் போய் வந்தேன், பமீலா. கங்காதரன் சாதாரணமாயிருக்கிறான்.'

'பரவாயில்லை; கூடப் பிறந்த சகோதரியைவிடக் கடமை உணர்வு உங்களிடம் அதிகமாக இருக்கிறது. உங்களைப் பார்த்துவிட்டு அப்படியே நர்ஸிங் ஹோமுக்குப் போகலாமென்றுதான் வந்தேன்... போலீஸ்வரை எட்டியிருக்கிறதாமே விஷயம்!' என்று பரிவுடன் விசாரித்தாள் அவள். நேற்றையச் சீறலின் பொறி ஒன்றும் இன்றையப் பேச்சில்—இதுவரை இல்லை.

'கங்காதரன் சம்பந்தப்பட்ட விஷயமென்றால் போலீஸ் தலை நீட்டாமல் இருக்க முடியுமா? அவன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இல்லாமலிருந்தால் போலீஸ் அவனை அழைத்திருக்கும்; இப்போது அவனே போலீஸை அழைத்திருக்கிறான்.'

'இல்லையே; உங்களையல்லவா போலீஸ் அழைத்து வாக்குமூலம் வாங்கிற்றாம்.'

'என் பெயர் அடிபட்டதால் அந்த நிலைமை ஏற்பட்டது. நான் போய் உண்மையை உள்ளதுபடி சொல்லி வந்திருக்கிறேன். ஏற்கெனவே பம்பாயில் ஜாமீன் கட்டியிருக்கிற கேஸ் விசாரணைக்கு வந்திருக்கிறது. அடுத்தபடி இது முளைத்திருக்கிறது. என் தலையை விடுவித்துக்கொண்டால் தானே இரண்டு கேஸ்களையும் சமாளித்து உன் அண்ணனை அண்ணனாகத் திருப்பித் தரமுடியும் உன்னிடம்?'

ஒரு விநாடி யோசித்தாள் பமீலா.

'நிஜமாகவே நீங்கள் இதில் சம்பந்தப்படவில்லையா மிஸ்டர் உமாபதி?'

'சம்பந்தப்படாமல் என்ன?'

'எந்த வகையில்?'

'உன் அண்ணன் கதை கட்டிவிட்டிருக்கிற வகையில்! நேற்று உன்னிடம் எதையுமே சொல்ல எனக்குப் பிடிக்கவில்லை; எழுந்து வந்துவிட்டேன். நீதான் நேற்று இறக்கி வைக்க வேண்டிய நெய் கொதிக்கிறாற்போல் கொதித்தாயே!'

'மற்றபடி வேறு தொடர்பு—அந்தப் பெண்ணுடன்?'

'என்னைப் பொய்யனாகச் சில நிமிஷம் நினைத்துப் பார்க்க ஆசையாயிருக்கிறதா உனக்குப் பமீலா?'

'இல்லை; உங்களுக்கு அந்த வகையில் ஏதேனும் சம்பந்தமும் சங்கடமும் இருந்தால் சொல்லுங்கள்; நான் ஏதாவது வழி கண்டுபிடித்து உதவ முன் வருகிறேன்.'

'உன் உதவி எந்த வகையிலும் எனக்குத் தேவை இல்லை. அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியந்தான். அவள் இந்த நெருக்கடியான நிலைமையினால் உயிருக்கு ஏதாவது... அப்படி நினைத்துத்தான் அவளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நானே துடிக்கிறேன். நீ உனக்குச் சுயநலமாகத் தோன்றுகிற காரணத்துக்காக

'அது இது' என்று பேசிக்கொண்டு வர வேண்டாம், பமீலா. தயவுசெய்து போய்விடு!'

மூட்டம் அகன்று தணல் கனிந்த பாகம் கண்ணுக்குத் தெரிகிறாற்போல் பமீலாவின் கண்களில் கொதிப்பின் ஒரு சிவப்பு ஏறித் தெரிந்தது.

'மிஸ்டர் உமாபதி, உங்கள் நிலைமை எனக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது. நான், சுயநலத்தினால் திரிகிறேன் என்று சுலபமாகச் சொல்லிவிட்டீர்கள்! ஆனால், கேஸில் சம்பந்தப்படாததாகச் சொல்லும் நீங்கள்—வாக்குமூலமும் கொடுத்த பிறகு இன்னும் ஏன் தீக்குள் விழச் சுற்றுகிற விட்டில் மாதிரி அந்தப் பெண்ணைக் கண்டுபிடிப்பதில் இறங்குகிறீர்கள்? உங்கள் சுயநலத்தை ஒப்புக்கொண்டு எனக்கு விடை கொடுங்களேன். நான் போய்விடுகிறேன்...அவளை எதற்காக நீங்கள் தேடுவதாம்? அவள் உங்களுக்கு வேண்டும்; அவள் உங்கள் மனத்தைக் கவர்ந்துவிட்டாள்! அவள் ஓடிப்போய் விட்டாளே என்ற ஆதங்கம் உங்களுக்கு. குணத்திலும் நடத்தையிலும் சற்றுப் பலவீனமான என் அண்ணன் அகப்பட்டான் உங்களுக்கு—பழியைத் தூக்கிப்போட!'

உமாபதிக்குக் கட்டுக்கடங்காத கோபம் வந்து அதன் எதிரொலியில் அவன் முகம் மாறுவதைக் கண்டு திகைத்தாள் பமீலா.

'பமீலா! பெண்ணின் உள்ளுணர்வுகளை நான் முயற்சி செய்யாமலே பாடம் படிப்பதுபோல் கற்றுக்கொண்டுவிட்டேன். நீங்கள் எல்லாம் ஆண்கள் மனத்தை முதலில் மெழுகாக மாற்றும் லாகவம் படைத்துப் பிறகு அந்த மெழுகை உருக்கி வேடிக்கை பார்க்கும் நெருப்பாக மாறிவிடுகிறவர்கள். ஒரு ஆண் உள்ளத்தின் சேர்க்கைக்கும் இணக்கத்துக்கும் நீங்கள் இன்பத்தை ஒரு நாடகமாக்கிக் காட்டுகிறீர்கள்; அந்த உள்ளத்தை அடைய, அவசியமேற்பட்டால் பேயாட்டமும் ஆடத் தயங்குவதில்லை...! இந்த வெறும் உள்ளத்து உறவுக்காக நீ எந்தவகை நாடகத்துக்கும் இங்கே அரங்கு கட்ட வேண்டாம். நீ வெளியே போய்விடு!' என்று சீறினான் உமாபதி.

'வெளியில் போகத்தான் போகிறேன். இல்லாவிடில் இங்கேயேவா இருந்துவிட வந்தேன்? போவதற்குமுன் உங்கள் உள்ளத்திலிருந்து நான் போக நேர்ந்திருப்பதை உங்களுக்கு அறிவித்துவிட்டு உங்களிடம் விடையும் பெற்றுச் செல்ல வேண்டும்...'

'என் உள்ளத்திலிருந்து இந்த விநாடி முதல் நீ வெளியேறுவதை நான் உணர்கிறேன். தயவுசெய்து போ!'

'ஆண்களின் சுயநல மனப்பான்மை பற்றித் தெரிய வேண்டியதிருக்கிறது. அதைத் தெரிந்துகொண்டு போய்விடுகிறேன். உங்கள் சுயநலத்திற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்கிறீர்கள்?'

'என்னிடம் என்ன சுயநலத்தைக் கண்டுவிட்டாய் நீ?'

'ஒரு பெண் உள்ளம் வண்ணத்துப்பூச்சியைப் பிடிக்க ஆசைப்படுவதுபோல் நீங்கள் ஒரு பெண்ணைத் தீண்ட ஆசைப்படுவது சுயநலமில்லையா? வேறொரு பெண்ணிடம் முந்தைய சம்பவத்தையும் தொடர்பையும் மறைத்துவிட்டு 'மூன்று எழுத்துப் பாட'த்தை அவளுக்குக் கற்றுக்கொடுக்க முயன்றது சுயநலமில்லையா?'

திடீரென்று உமாபதியின்முன், ஒரு மாபெரும் சக்கரம் சுழன்று வந்து மூஞ்சியில் மோத முற்பட்டாற்போல் தோன்றியது. அவன்முன் செம்மை கலந்த மஞ்சள் நிறப் பட்டாம்பூச்சியொன்று சுழன்றாற்போலுமிருந்தது. சங்கும் சக்கரமும் சுழற்றிக்கொண்டு பலவகைப் பொருள்கள் நிறைந்த புன்னகைகளை அருளிக்கொண்டிருக்கும் திருமாலின் நிலையில் ஸரயூ அந்தக் கணத்தில் அவன்முன் தோன்றினாள். அவள் சோதனை தேர்வை யளிக்க முடியாத மாய நிலையைச் சிருஷ்டித்திருக்கிறது என்று உணர்ந்தான் உமாபதி.

'ஏன் மௌனம்?' வெற்றியின் விளிம்பில் நின்று கேட்கிறாற்போல் கேட்டாள் பமீலா.

'அதுவும் உன் சுயநலத்தின் எதிரொலிதான். என் சுயநலப்பான்மை



சின்ன மீன் என்றால் அதை விழுங்கிவிட்டது திமிங்கிலம் போன்ற உன் பேராசை மனப்பான்மை! எனக்கு யார் பேரிலும் காதலும் இல்லை; ஊதலும் இல்லை. ஆளை விடுங்கள். நீ போ வெளியே!' என்றான் உமாபதி.

கடுகடுவென்று வெளியேறினாள் பமீலா.

## 12. அவள் வந்தாள்

பமீலாவின்மேல் கோபம் கோபமாய் வந்ததெல்லாம் அவள் நினைவு படுத்திச்



சென்ற ஒரே ஒரு விஷயத்தை நினைத்துக்கொண்டதும் மாயமாய் மறைந்தது உமாபதியின் மனத்தில். கோபத்தில் நாரினின்றும் பூவை உதிரி உதிரியாக உதிர்த்துப் பிய்த்துப் போட்டாலும் உதிரிப் பூக்கள் மணம் ஒன்றைத்தானே நினைவுபடுத்துகின்றன!

ஸரயூவையும் தன்னையும் பிணைக்கும் நினைவைப் பமீலா ஏற்படுத்திச் சென்றது முதல் உமாபதிக்கு நினைவு பூராவும் ஸரயூவின் மேலும், அந்த இன்ப நாட்களைப்பற்றியுமே சென்றது. பமீலா குறிப்பிட்டதுபோல் தானும் ஒரு சுயநலவாதிதானாவென்று நினைத்துப் பார்த்தான் அவன். உள்ளம் கிடந்து இதற்கும் அதற்குமாய்த் தடுமாறுவது கண்கூடாக இருப்பதனால் அதைச் சுயநலத்தன்மை என்று கருதிவிட அவனால் முடியவில்லை. அவர்கள் இரண்டு பேரும் தன்னை வைத்துக்கொண்டு இரு எதிர்க்கரைகளில் அமர்ந்தவர்கள் நிலையில் தூண்டில் விளையாடுகிறார்கள் என்று முடிவு கட்டினான்.

இன்ப நினைவுகளை நினைத்த அவன் மனம் கொஞ்சம் இடம் கொடுத்ததும் நிலைமையைப் புரிந்துகொண்டு அந்தப் பார்க்குக்கு ஓடியது. அதைத் தொடர்ந்து உமாபதி தன் சரீரத்தையும் அங்கே சுமந்து சென்றான்.

அங்கே ஸரயூ உட்கார்ந்திருந்தாள்! 'இது நிஜமா, பிரமையா' என்று புனைகதைச் சொல்லாட்டங்களில் நேரத்தைப் போக்கிக்கொண்டு அவன் 'டப்'பென்று நின்றுவிடவில்லை. அவள் அருகில் சென்று அமர்ந்தான்.

'உடம்பு ஒரேயடியாக இளைத்துக் கிடக்கிறதே! பெட்ரோல் பிஸினஸ் உடம்பில் உஷ்ணம் ஏற்றித் தீய்த்து விடுமோ என்ன?' என்றாள் ஸரயூ, குறும்பாக.

'தீய்க்கும் சக்தி பெட்ரோலுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இயக்கும் சக்தி அதற்கு இருக்கிறது. ஆனால், உன்னைப்போன்ற பெண்களுக்கு இயக்கும் சக்தி, ஆக்கும், அழிக்கும், வளர்க்கும், நசுக்கும் ஆகிய இத்தனை சக்திகளுடன் அந்தத் தீய்க்கும் சக்தியும் இருக்கிறது என்பது என் அபிப்பிராயம்!' என்றான் உமாபதி.

அவளிடம் உஷ்ணமாகப் பேசி வார்த்தையை வளர்த்தக்கூடாது என்ற எண்ணத்துடன் வந்திருக்கிறான் அவன். விருந்து சாப்பிட ஓடும் குழந்தைகளைப்போல அல்லவா அவன் மனம் இன்பத்தை நினைத்துக்கொண்டு ஓடியிருக்கிறது!

'கடைசியில் என் சோதனையில் நீங்கள் ஒற்றை ஸ்தானத்தில்கூட மார்க் வாங்கமாட்டீர்கள் போலிருக்கிறதே!' என்றாள் ஸரயூ.

'நான் பரீட்சை ஹாலுக்குள்ளேயே வரவில்லை. நீ ஸைபர்தான் போடு, நூறு மார்க்தான் கொடேன்—யாருக்குக் கவலை?'

'எந்தவிதமான சோதனை, அதில் நீங்கள் கலந்துகொண்டீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியும். முதலில் ஸரயூ ஆயிற்று; இரண்டாவதாகப் பமீளாவை வசீகரித்தீர்கள்; மூன்றாவதாக அந்தப் பெண்—அவள் தரிசனம் மறுபடியும் கிடைத்ததா?'

'ஸரயூ! என்னை எல்லாரும் சேர்ந்து பந்தாட வேண்டாம். அந்தப் பேச்சையே எடுக்க வேண்டாம். தயவுசெய்து வேறு பேச்சு இருந்தால் பேசு...'

'வேறு பேச்சுப் பேசவா நாம் இங்கே வருகிற வழக்கம்? உங்களுக்கு இன்றைக்கு ஒழிவிருந்து, பெரிய மனசு வைத்து இங்கே வந்திருப்பதால் நான் கிள்ளை மொழிகளை மடியில் கட்டிக்கொண்டு காத்திருக்க வேண்டுமாக்கும்!...'

'நீ அடிக்கடி இங்கே வருகிறாயா, என்ன?' என்று உற்சாகத்தோடு கேட்டான் உமாபதி.

'அநேகமாகத் தினசரி வருகிறேன்.'

'எனக்குத் தெரியாமல் போய்விட்டது, ஸரயூ!'—அவன் மனத்தில் சில மூட்டங்கள் விலகி, என்றோ ஏற்றி வைத்த ஒரு அகல் எரிகிறாற்போல் தெரிந்தது.

'உங்களுக்கு என்மீது ஏது நினைப்பு? நீங்கள் காலண்டர் தாள் கிழித்துப் போடுகிறாற்போல் நாரீமணிகளை எண்ணிக்கொண்டு—'

'சரயூ! இதெல்லாம் நன்றாக இல்லை. இப்படியெல்லாம் பேசாதே—'

'நான் சொல்வது தவறில்லையே. பமீளாவையும் அந்தப் பெண்ணையும்—'

'அந்தப் பெண் அந்தப் பெண் என்று என் உயிரை எடுக்காதீர்கள். அவள் யாரோ அப்பாவி, கங்காதரனின் வலையில் விழுந்து படுகுழியிலும் விழ இருந்தாள். மானத்துக்கு அஞ்சி ஓடி ஒளிந்திருக்கிறாள். அவளை என் நெஞ்சிலே திணிக்காதீர்கள்...'

'பமீளா விஷயம்?'

'அது உன்னால் வந்த வினை. அந்த வினையை நான் அறுத்துக்கொண்டு வந்துவிட்டேன்—உனக்காக!'

'என்னால் நம்ப முடியாது—என் சோதனையில்—' என்று ஸரயூ முடிக்குமுன் உமாபதி சீறி எழுந்தான்.

'சோதனையாவது மண்ணாங்கட்டியாவது! ஒரு ஆண் அகப்பட்டானானால் அவனைப் பகடை உருட்டிக்கொண்டு திரிகிற நீங்கள் எல்லாம் என்ன ஜன்மங்கள்? நீ சோதனையைத் தொடர்ந்து செய்!' என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தை விட்டு வெளியேறினான் உமாபதி. ஸரயூவின் அழகிய முகத்தில் இப்போதுதான் ஒரு வாட்டம் கண்டது. அவள் ஏதோ கூற எழுந்தாள். அதற்குள் உமாபதியின் உருவம் மறைந்துவிட்டது.

பார்க்கிலிருந்து வேகமாக வந்த உமாபதி தன் வீட்டு வாசலில் சற்றுத் தள்ளினாற்போல் நின்றிருந்த போலீஸ் வானைக் கண்டு அதிர்ந்தான். அது அங்கே வந்திருப்பதைத் தொடர்ந்து ஏற்படப் போகும் விளைவு அவனுக்குப் புரிந்தது. ஒருகணம் தயங்கி நின்றுவிட்டுப் பிறகு துணிவுகொண்ட உள்ளத்துடன் உள்ளே வந்தான்.

உள்ளே போலீஸ் அதிகாரி ஒருவரும் நாலைந்து கான்ஸ்டபிள்களும் நின்று



கொண்டிருந்தனர். அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தான் உமாபதி.

'மிஸ்டர் உமாபதி, உங்களுக்கு அரெஸ்ட் வாரண்ட் கொண்டு வந்திருக்கிறோம்...' என்று இழுத்தார் அந்த அதிகாரி. உமாபதியின் உயர்ந்த பண்பாட்டையும், நேர்மையான தன்மையையும் அறிந்துகொண்டு அதே சமயம் சட்டத்தின் சக்தியைத் தன் சுவாசமாகக் கொண்டிருந்த அந்த அதிகாரி அவனிடம் அன்று முதல் இன்று வரை மரியாதையுடன் நடந்துகொண்டிருந்திருக்கிறார்.

'வாசலில் உங்கள் வானைப் பார்த்ததுமே நான் தெரிந்துகொண்டுவிட்டேன். நான் தயார்; புறப்படலாம்!' என்றான் உமாபதி.

எல்லாரும் வாசலுக்கு வந்தார்கள். வீட்டு வாசலுக்கு நேராகக்கொண்டுவர வானை ஸ்டார்ட் செய்தார் ஒரு போலீஸ்காரர். அதை முந்திக்கொண்டு உமாபதியின் வீட்டு வாசலில் வந்து நின்றது ஒரு கார். அதிலிருந்து சரயூ இறங்கினாள், அவள் பின்னாலேயே இறங்கினாள் அந்தப் பெண்—இத்தனை அமர்க்களமும் நடக்கக் காரணமாயிருந்த அந்த விசித்திரப் பெண்.

'நமஸ்காரம் இன்ஸ்பெக்டர் ஸார்!' என்றாள் சரயூ.

'நமஸ்காரம் அம்மா.'

'என்ன விசேஷம் இங்கே?'

ஒரு விநாடி தயங்கினார் இன்ஸ்பெக்டர். விசேஷத்துக்கும் சரயூவுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி அவருக்குத் தெரியாததால்தான் அந்தத் தயக்கம்.

'நீங்கள் இவரிடம் எதையும் சொல்லலாம். மிகத் தெரிந்தவர்கள்' என்றான் உமாபதி.

'அதோ அந்தப் பெண்ணைக் கடத்திக்கொண்டு போன குற்றத்துக்காக இவர் மேல் அரெஸ்ட் வாரண்ட் கொண்டு வந்திருக்கிறோம்.'

'அந்தப் பெண்ணிடம் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவரை விடுதலை பண்ணுங்கள்!' என்றாள் சரயூ.

அந்தப் பெண்ணிடம் வாக்குமூலம் வாங்கப்பட்டது. இதுவரை அநாதாசிரமம் ஒன்றில் வாழ்ந்து வந்த அவள் அதனின்றும் வெளியேறி, குடியும் குடித்தனமுமாக வாழும் லட்சியத்துடன் துணை தேடியபோது கங்காதரனின் பரிசயம் ஏற்பட்டதென்றும், அவன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்து அன்று ஸினிமாவுக்கு அழைத்துச் சென்றதாகவும், பரிசயம் ஏற்பட்ட அன்றே அவளை அவர் நடத்தை காரணமாக இன்னொருவர் காரில் தொடரும் நிலை ஏற்பட்டதைக் கண்டு தன் மானத்தைக் காப்பாற்ற எண்ணி ஓடி ஒளிந்துவிட்டதாகவும் கூறினாள் அவள். உமாபதிக்குத் தன் நன்றியையும் அந்த வாக்குமூலத்தில் தெரிவித்துக்கொண்டாள்.

உமாபதியிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு போலீஸார் கங்காதரனின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவன் இருந்த இடத்துக்கு விரைந்தனர்.

## 13. தீர்ப்பு!

'ஆனாலும் ரொம்பத் துணிச்சல்காரி நீ சரயூ! சோதனை என்று ஆரம்பித்து, பாவம், உமாபதியைப் படாதபாடு படுத்திவிட்டாய்!'

'என் சோதனையில் அப்படியும் பொருட்டோ நம்பிக்கையோ கொண்டவராகத் தெரியவில்லையே அவரைப் பார்த்தால்!'

'போதும், உன் சோதனையும் நீயும்! ஆசாமி ஜெயிலுக்குப் போகிற வரையிலா?... அந்தப் பெண்ணை எப்படி நீ அப்படி மாங்கொட்டை போட்டு முளைக்க வைக்கிற மாதிரி சமயத்தில் கொண்டு வந்தாய்?'

'அன்றைக்கு உமாபதி பார்க்கிற்கு வந்திருந்தார். அவரிடம் அவள் கிடைத்துவிட்ட செய்தியை ஆச்சரியப்படும்படி இறுதியில் சொல்ல வேண்டுமென்றுதான் நினைத்திருந்தேன். பேச்சுப் போக்கில் ஆத்திரம்கொண்டு எழுந்து வந்துவிட்டார் திடீரென்று... அந்தப் பெண்ணைப்பற்றி எல்லாரிடமும் தகவல் கொடுத்திருந்தேன். முக்கியமாக அன்று அவள் இறங்கிப் போன

தைப் பார்த்துக்கொண்டிருந்த நர்ஸின் ஹோம் காவல்காரனிடம் சொல்லி வைத்திருந்தேன். அவன் முயற்சியால் தான் அவள் கிடைத்தாள்!'

'எப்படியோ, ஸாரூ.. அவர் விடுதலையானது பெரிய பாரத்தை நெஞ்சிலிருந்து இறக்கி வைத்த மாதிரி இருக்கிறது! அவரிடம் நான் ரொம்பவும் துச்சமாகப் பேசிவிட்டேன். மன்னிப்புக் கேட்க உடனே போகவேண்டும்' என்று எழுந்தாள் பமீலா.

'அட சரிதான்டி கிடக்கட்டும், உட்கார். உனக்காகச் சேர்த்து நானே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்' என்று பமீலாவின் தோள்களைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தாள் ஸாரூ.

'நீ மன்னிப்பு கேட்டுக்கொண்டால் நான் கேட்டுக்கொள்வதுபோல் ஆகுமா? அவர்...அவர்...' என்று தயங்கினாள் பமீலா.

'என்னடி அவர் சுவரெல்லாம் இன்னமும்! அதற்கெல்லாம் இனிமேல் புல்ஸ்டாப்! நான் பார்த்துக்கொள்கிறேன் அவரை. இன்னும் கொஞ்சம் துள்ளல் பாக்கி இருக்கும் அவரிடம்...இதுவரை நீ எனக்காகப் பாடுபட்டு, நடித்து, என் உத்தரவுகள்படியெல்லாம் ஆடி...அதுவும் காதல் கொண்டதுபோல் நடிப்பது—'

பமீலாவின் மாதுளைக் கன்னங்களில் அதன் முத்துக்கள் இரண்டு வெடித்து மேலே வந்தாற்போல் இரு துளிக் கண்ணீர்!

'ஸாரூ! அவரைச் சோதனை செய்வதாக நீ ஆடியதெல்லாம் மகத்தான பைத்தியக்காரத்தனம். நான் உனக்கு இணங்க நடந்துகொள்வதாக நடிக்க ஒப்புக்கொண்டது பெரிய தவறு. நான் நடிக்கவில்லை, ஸாரூ. நடிக்கவில்லை, உண்மையாகவே என் பாத்திரமாக நான் இருந்துவிட்டேன். இது பெரிய அதிர்ச்சியைத் தரும் உனக்கு. இனி அவரை என் மனத்தினின்று பிரிக்க முடியாது. அவரை யாசிக்க உன்னிடம் வந்திருக்கிறேன்! உனக்கு நான் துரோகம் இழைக்கிறேன் மனமறிந்து. ஆனால் அவர் இல்லையேல் நான் இல்லை. அவரை எனக்குக் கொடு!'

சிலையென நின்றாள் ஸாரூ. அவளது உயிரால் இயக்கப்பட்ட ஒவ்வொரு அணுவும் ஒரு சில விநாடிகள் தாறுமாறாக இயங்கி அவளை அவள் நிலையினின்றும் மாற்றி, உணர்வே இல்லாமல் செய்து, மாக்க அடித்து, திரும்பவும் அவளாக மாற்றி வைத்தன. அதிர்ச்சி அவளை ஆட்கொள்ளும் அற்புதச் செய்கையையும் செய்துவிட்டது.

'பமீலா!' என்று குழறினாற்போல் அழைத்தாள் ஸாரூ.

'அவரிடம் சோதனை செய்கிறேன் என்று வாய் திறந்த அன்றே அவரை நான் இழந்துவிட்டேன் என்று என் உள் இப்போது ஏதோ ஒன்று கூறியது...இனி அவர் உன்னுடையவர்!' என்றாள்.

குபுகுபுவென்று பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு முகத்தை மலர்ச்சியுடன் வைத்துக்கொண்டு பேச முற்பட்டாள் ஸாரூ. அந்த மலர்ச்சியை ஏறிட்டுப் பார்க்கும் மனோ உணர்வு அற்றவளாகக் குனிந்தபடி நடந்து வெளியேறினாள் பமீலா.

எதிரே வந்த உருவத்தைக் கண்டு தலைநிமிர்ந்தாள் பமீலா. உமாபதி ஆர்வமே வடிவாக வந்துகொண்டிருந்தான்.

'வாருங்கள்' என்று வரவேற்றாள் பமீலா. தன்னைப்பற்றிய தீர்ப்புக்காக அந்தச் சந்நிதிக்கு வந்துகொண்டிருந்தான் அவன். தீர்ப்பு என்னவென்று தெரிந்துவிட்டது அவனுக்கு. அடங்காத ஆசையுடன் அவன் கைகளிடையே பாய்ந்து சாய்ந்தாள் பமீலா.

முற்றும்.






'கல்வி'

'மகா ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, வீர தீர, விமல மோகன சிங் மண்டூக மகாராஜா... பராக்!' என்று ஒரு கம்பீரமான குரல் கேட்டது. அரச சபையில் வீற்றிருந்த அனைவரும் எழுந்து தலை வணங்கி நின்றனர். வட கோடியிலிருந்த பச்சைப் பட்டுத் திரை விலகியது. முதல் மந்திரி முன்னே வர, அவரை அடுத்து மண்டூக மகாராஜாவும், அவர் பின்னே, மகாராணி மண்டூகவர்த்தினியும் வந்தாள்! மகாராணி தன் மார்பில் அணிந்த நவரத்தின மணிமாலைகளைப் பார்த்தபடி கம்பீரமாக நடை போட்டாள்.

என்னதான் மகாராணியானாலும் கழுத்திலுள்ள



வடு ராய மாலை களைப் பார்த்துக்கொண்டா நடப்பது? முன்னே பார்த்து அல்லவா நடக்க வேண்டும். முன்னே என்ன இருக்கிறது என்று பார்க்காமல் நடக்கவே, தூண் ஒன்றின்மேல் மண்டுக மகாராணி முட்டிக்கொண்டாள். கேட்பானேன். சபையில் உள்ள அனைவரும் கதிகலங்கினர். மகாராணி முட்டிக்கொண்டால் சபையோர் கதிகலங்குவானேன்என்று கேட்கிறீர்களா?

மண்டுக மகாராணி முன் கோபக்காரி. காரணம் ஒன்றுமில்லாமலேயே கோபம் பொங்கி எழும். முட்டிக்கொண்டு வலி தாங்காத மகாராணியின் கோபம் வீண்போகுமா? குடிமக்களில் சிலருக்கு சிறை வாசமோ, சிரசு நாசமோ ஏற்படும் என்றுதான் யாவரும் கதிகலங்கினர். இந்த அடங்காப் பிடாரி அரசியைக் கண்டு அரசரே நடுங்குவார் என்றால் குடிமக்கள் குலை நடுக்கம் கொள்வதில் என்ன அதிசயம்?

நல்லகாலம். காயம் அதிகமாகப் படவில்லை. இராணியின் நெற்றியில் பொரித்த அப்பளம் போல் ஒரு கொப்புளம் தோன்றியது.

மகாராணி தூணில் முட்டிக்கொண்டு 'டணார்' என்று ஓசை கேட்டதும், அரசர் அலறிப் புடைத்துக்கொண்டு 'என்ன? என்ன?' என்று இராணியிடம் ஓடி வினவினார்.

மகாராணி அல்லவா? 'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை' என்று அப்பளக் கொப்புளத்தைப் பொருட்படுத்தாமல் கம்பீரமாகக் கூறிவிட்டுத் தலை நிமிர்ந்து நடக்கத் தொடங்கி விட்டாள்.

'ஐயோ கடவுளே இன்று நல்லபடியாக சபை முடிய வேண்டும்' என்று அரசர் மனதிற்குள் எண்ணி ஏங்கினார். அதைவிட அஞ்சி சஞ்சலமடைந்தவர் முதல் மந்திரி என்று சொல்லவும் வேண்டுமா?

மண்டுக மகாராஜா, மகாராணி இருவரும் சிம்மாசனத்தில் அமர்ந்ததும் பிரதம மந்திரியும் சபையோரும் அவரவர் ஆசனத்தில் அமர்ந்தனர். முதல் மந்திரி எழுந்து அரசரையும், அரசியையும் வணங்கி சபையை நோக்கி, 'இன்று தெய்வச் செயலாய்...' என்று பேசத் தொடங்கியவுடன் கோமாளி குண்டுமணி குபுக்கென்று அவசர அவசரமாக உள்ளே நுழைந்து சபையின் நடுவே துள்ளிக் குதித்து 'இன்று தெய்வச் செயலாய்...' என்று பேசத் தொடங்கினான்.

'வாயை மூடு' என்று இடிமுழக்கம்போல் ஓர் கர்ஜனை இராணியிடமிருந்து கிளம்பியது. அவள் அடக்கி வைத்திருந்த கோபாவேசம் கோமாளி குண்டுமணியின் மேல் பாய்ந்தது. 'அவன் தலையை உடனே சீவுங்கள்' என்று கர்ஜித்தாள். ஒரு சேவகன் உருவிய வாளோடு ஓடி வந்தான்.

அதற்குள் கோமாளியின் தலை சட்டைக்குள் புகுந்து கொண்டது. தலையில்லாத கழுத்துடன் கூடிய சட்டை அணிந்த மனிதன் நிற்பதுபோல் காட்சி அளித்தான். அது எவ்விதம் அவனால் முடிந்தது என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். அந்த வித்தை அவனுக்கு மட்டும் தெரியும்.

கோமாளியின் தலையைவெட்ட வந்த சேவகன் தலை இருக்க வேண்டிய இடத்தில் வாளை வீசினான். தலை இருந்தால்தானே





வெட்டுவதற்கு? கத்தி காற்றைச் சீவியது.

ஏதோ சேவகன் தவறு செய்துவிட்டதுபோல் 'அவனைச் சிறையிலிடுங்கள்' என்று கர்ஜித்தாள் மகாராணி. அந்தச் சேவகன் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்டான்.

சிறிது நேரம் கழித்து மெல்ல கோமாளி தன்தலையை வெளியே நீட்டினான். இதைக் கண்ட இராணி மற்றோர் முறை 'வெட்டுங்கள், வெட்டுங்கள், தலையை வெட்டித் தள்ளுங்கள்' என்று தான் இராணி என்பதைக்கூட மறந்து இருந்த இடத்தில் குதித்தெழுந்து கத்தினாள்.

மற்றோர் சேவகன் கோமாளி இருந்த இடத்தை நோக்கி உருவிய வாளுடன் ஓடினான். இந்த முறையும் சேவகன் வீசிய வாள் கோமாளியின் கழுத்தைச் சீவு

வதற்குள் அவன் தலை 'லொடக்' என்று சட்டைக்குள் மறைந்து விட்டது. கோமாளியின் சட்டையின் கழுத்துப் பாகம் மட்டும் தென்பட்டது.

கோமாளியின் இந்தச் செய்கையைக் கண்ட இராணிக்கே அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது. கொல்லென்று சிரித்து விட்டாள். இராணியே சிரித்த பின் அரசர் சும்மா இருக்கலாமா? அடுத்தபடியாக அரசர் சிரித்தார். அவரைத் தொடர்ந்து பிரதம மந்திரி, அவருக்குப் பின் வரிசைக்கிரமத்தில் மற்ற மந்திரிகள், பின் சபையோர்கள் சிரிக்கத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கோமாளி குண்டுமணி, தலையை வெளியே நீட்டாமலே 'மகாராஜா இன்று தெய்வச் செயலாய்...' என்று பேசத் தொடங்கினான்.

மகாராணி, 'என்ன தெய்வச் செயலாய் தலை தப்பியது என்கிறாயா?' என்று கேட்டாள். உடனே அரசனும் 'என்னடா குண்டுமணி தெய்வச் செயலாய் தலை தப்பியது என்கிறாயா?' என்று அதே கேள்வியைக்கேட்டு வைத்தார்.

கோமாளி குண்டுமணி தன் தலையை வெளியில் நீட்டாமலே 'இல்லை மகாராஜா, தெய்வச் செயலாய் ஒரு மந்திரவாதி நம் ராஜ்யத்திற்கு வந்து இருக்கிறார். அவர் தயவால் என் தலை தப்பியது' என்று கூறினான்.

முன் பின் யோசனை இல்லாமல் மகாராணியின் உத்தரவைக் கேட்காமல் மகாராஜா 'ஏதோ அந்த மந்திரவாதியைக் கூப்பிடு' என்று கூறிவிட்டார். அரசர் கூப்பிடு என்று சொல்லி முடிப்பதற்குள் கோமாளிகுண்டுமணி குபுக்கென்று குதித்து மண்டபத்தை விட்டு ஓடினான். அப்பொழுதாவது கோமாளியின் தலை வெளியில் வந்தது என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. கோமாளி குண்டுமணியின் தலை நீங்க, அவன் உடல், கை, கால்கள் மட்டும் நடந்து சென்றன! தலையில்லாத உடல் மட்டும் வேகமாக நடந்து சென்றால் எவ்வளவு விநோதக் காட்சியாக இருந்திருக்கும்? இராணி, அரசர், பிரதம மந்திரி, மற்ற மந்திரிகள், பிரமுகர்கள், பொதுஜனம் உட்பட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

இதற்குள் கோமாளி குண்டுமணியும், மந்திரவாதியும் சபைக்குள் நுழைந்தனர். மந்திரவாதி அரசரை வணங்கி நின்றார். 'அடே குண்டுமணி உன்னை இந்தத் தடவை மன்னித்து விட்டேன்' என்று இராணி கூறியதும் கோமாளியின் தலை 'லொடக்'கென்று வெளியே வந்தது. மற்றோர் முறை யாவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

'ஐயா மந்திரவாதியே உமக்கு என்ன வித்தைகள் செய்யத் தெரியும்' என்று அரசர் கேட்டார்.

இதற்குள் தன்னைக் கேட்காமல் அரசர் மந்திரவாதியை வரும்படி உத்தரவு கொடுத்தது இராணிக்கு நினைவு வரவே, 'வருகிறவர் போகிறவர்களுக்கெல்லாம் வாரிவாரி இறைக்க கஜானா நிரம்பியா இருக்கிறது? வரி வசூல் செய்ய வழி அறியாத வெத்துச்சோத்து மூட்டைகளுக்குத் தண்டச் சம்பளம் கொடுப்பது போதும்' என்று கூறியபடி தன் பிரதம மந்திரி, மற்ற அமைச்சர்களையும் ஒரு முறை சுற்றிப் பார்த்தாள்.



அரசர் 'இல்லை, இல்லை' என்று கையைப் பிசைந்துகொண்டே கனைத்தார்.

'இல்லை, இல்லை-என்ன இல்லை?' என்று உறுமினாள் இராணி.

'இல்லை வந்திருப்பவர் மந்திரவாதி... இ..இ..இ' என்று அரசர் மென்று விழுங்கினார்.

'இல்லையாவது? இ..இ..இயாவது மந்திரவாதியானால் எனக்கென்ன? தந்திரவாதியானால் எனக்கென்ன?' என்று கண்டிப்பாக அடித்துப் பேசினாள்.

'அவர் மந்திரவாதி அவரை அவமதித்தால் நம்மை அவதிக்கு உள்ளாக்குவார். அவமதித்துப் பேசாதே' என்று அரசர் இராணியின் காதோடு கூறினார்.

'உம்! அவரை அவமதித்தால் என்னவாம். என்னை மதித்துக் கேட்டுத்தான் அவரைஅழைத்தீர்களா? அவரை அவமதித்தால் என்ன நேர்ந்து விடுகிறது என்பதைப் பார்த்து விடுகிறேன்' என்று கத்திக்கொண்டேஇராணி மந்திரவாதியின் பக்கமாகத்திரும்பி 'ஓய் மந்திரவாதியே போம் வெளியே' என்றாள்.

அவ்வளவுதான். மந்திரவாதியின் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. அவர் இருந்த இடத்திலிருந்து ஒரு இடி முழக்கம் கேட்டது. மந்திரவாதி மாயமாய் மறைந்தார். அவர் இருந்த இடத்திலிருந்து புகை கிளம்பி கொலு மண்டபம் முழுவதும் பரவியது.

புகை! எங்கும் புகை! அரண்மனை முழுவதும் பயங்கரப் புகை!

(தொடரும்)

# மூளைக்கு வேலை

★


## மாயக் கணக்கு

உன் சிநேகிதனை ஒரு காகிதத்தில் ரூ. 11க்குள் ஒரு தொகையை எழுதச் சொல்லு. அத்தொகையை ரூ. அணா. பைசா பகுதிகளையும் பூர்த்தி செய்யச் சொல்லு. உன் நண்பன் காகிதத்தில் குறிப்பிட்ட தொகை ரூ. 9–15–8 பை என்று வைத்துக் கொள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நண்பன் முதலில் எழுதிய தொகை | 9 | 15 | 8 |
| இத்தொகையைத் திருப்பி எழுதச் சொல்லு | 8 | 15 | 9 |
| இவ்விரு தொகையில் சிறிய தொகையைப் பெரிய தொகையிலிருந்து கழிக்கச் சொல்லு | 0 | 15 | 11 |
| இத்தொகையைத் திருப்பி எழுதச்சொல்லு | 11 | 15 | 0 |
| இரண்டையும் கூட்டச் சொல்லு | 12 | 14 | 11 |

உன் நணபன் முதலில் எத்தொகையைக் கூறினாலும் மேலே குறித்த வழியாகக் கணக்கைப் போட்டு வந்தால் எல்லாத் தொகைக்கும் விடை ரூ.12–14–11 வரும். எத்தொகையை உன் நண்பன் எழுதினாலும் விடை ரூ. 12–14–11 என்று கூசாமல்கூறி விடலாம்.


சுதந்திர யானை
கதை: கல்வி. படம்: சிவா.
எழுந்திரு எழுந்திரு கூட்டம் கிளம்பி விட்டது....
கூட்டத்தார் சென்று விட்டார்கள்... சீக்கிரம் எழுந்திரு...
அப்பப்ப!... என்ன கூட்டம்?... தூங்கக்கூட வழி இல்லாமல் தொந்தரவு செய்கிறாயே!...
அத்தை:- கூட்டத்துடன் சேரா விட்டால் சிங்கம் புலி அடித்துக் கொன்று விடும்...



"குட்டி:- புலி சிங்கத்தை நான் என்ன செய்கிறேன் பார்!...,,
"அத்தை:- என்ன செய்வாய்! அவை உன்னை அடித்துக் கொன்று விடும்...,,
"குட்டி:- அதை நான் பார்த்து விடுகிறேன்...,,
மற்றொரு நாள் தாயும் அத்தையும் தூங்கும் போது குட்டி யானை புலி வேட்டைக்குப் புறப்படு கிறது..

# பாலர் கலைக்களஞ்சியம்

## பூச்சிப் புலி

மிருகங்களில் மிகக் கொடியது புலி. அது மற்ற மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்னும். புலியைக்காட்டிலும் கொடுமையான ஜீவன் பூச்சி இனத்தில் உண்டு. அதுவே இடைச்சிப் பூச்சி. இதன் இரு கைகளையும் மோர் கடைவதுபோல் முன்னும் பின்னுமாக இழுத்துக்கொண்டே இருக்கும். இரு கைகளையும் கூப்பிக் கடவுளைத் தியானித்தபடி காணுவதால் இதைத் 'தொழும் ஞானி' என்று ஆங்கிலத்தில் அழைப்பர்! இது தொழுவதுமில்லை, கைகளால் மோர் கடைவதுமில்லை! இதன் கொடூரக் கைகளால் எந்தப் பூச்சியைப் பிடித்துப் புசிக்கலாம் என்று பார்த்து வரும். இதன் இரு கைகளின் உட்புறத்தில் முட்கள் அடர்ந்து முட்புதர்போல் தோற்றமளிக்கும். இவ்விரு கைகளால் பிடிபட்ட பூச்சிகள் இதில் உள்ள முட்களில் சிக்காமல் தப்புவது துர்லபம். பூச்சி இனத்திற்குக் கழுத்து பாகம் கிடையாது. எப்பூச்சியும் தலையை நம்மைப்போல் திருப்பவோ அசைக்கவோ முடியாது. ஆனால், இடைச்சிப் பூச்சிக்கோ கழுத்து உண்டு! தன் தலையைப் பின்புறமாகவும் திருப்பிப் பார்க்கும் சக்தி இதற்கு உண்டு!

புலி எல்லா மிருகங்களையும் அடித்துத் தின்னும். பசித்தாலும் பசிக்காவிட்டாலும் எதிரில் கண்ட மிருகத்தைக் கொல்வது புலியின் இயல்பு. ஆனால், அக்கொடும் புலிகளும் தன் இனத்தை மட்டும் கொன்று தின்னாது! ஆனால் இடைச்சிப் பூச்சியோ தன் இனத்தையே கொன்று தின்னும். கட்டிய கணவனையே விவாகமானதும் தின்னும் கொடுமை புத்தி படைத்தவை இந்த இனத்தின் பெண் இனம்!





# எல்லாம் நன்மைக்கே!

கோமதி ஸ்வாமிநாதன்



### காட்சி 1

[ஏழ்மை நிலையை எடுத்துக் காட்டும் ஏகாம்பரத்தின் வீட்டின் முன் ஹால். தாயை இழந்த ஏகாம்பரத்தின் ஒரே புதல்வியான யுவதி சந்திரா பூத்தொடுத்துக்கொண்டு கீழே உட்கார்ந்திருக்கிறாள். அவள் முகத்தில் கவலையின் ரேகைகள் படிந்திருக்கின்றன. ஜவுளிக் கடை வேலையாள் ஜம்புலிங்கம் உள்ளே வருகிறான்.)

ஜம்புலிங்கம்:—ஏனம்மா!... அப்பா இருக்காரு?

**பாத்திரங்கள்:**

★

| | |
|---|---|
| ஏகாம்பரம் | —சந்திராவின் [தந்தை |
| கல்யாணம் | —கதாநாயகன் |
| பாண்டுரங்கம் | —படாதிபதி |
| மனோகரன் | —பாண்டுரங்கத் [தின் மகன் |
| ராமசாமி | —நண்பன் என்ற உருவில் வரும் நயவஞ்சகன். |
| ஜம்புலிங்கம் | —ஜவுளிக்கடை [ஆள் |
| பங்காரு | —எக்ஸ்ட்ரா [நடிகன் |
| சந்திரா | —கதாநாயகி |

சந்திரா:— வாங்கி... அப்பா வெளியே போயிருக்கிறார். எப்போ வருவாரோ தெரியாது.

ஜம்புலிங்கம்:— நல்ல பொண்ணு! நல்ல பதில்! ஏனம்மா! இந்த பதில் நீயும் பத்து தடவையா, ஒரு எழுத்து பிசகாமல் சொல்லியிருக்கிறாய்! ஏகாம்பரம் உன்னை உருப்போட்டு ஒப்பிக்க வச்சுப்பார் போலிருக்கு.

(சந்தேகத்துடன் உன்னை பார்க்கிறான்.)

சந்திரா:—உண்மையைச் சொல்றதுக்கு பதிலே பாடம் பண்ணுவானேன். உங்களுக்கு அவர் வீட்டுக்குள்ளேயே இருப்பார் என்ற சந்தேகம் இருந்தால் தேடிப் பார்த்துட்டுப் போங்க. எனக்கு ஆக்ஷேபனை இல்லை. அவர் வந்த உடனே நீங்கள் வந்து போனதைச் சொல்கிறேன்.

ஜம்புலிங்கம்:—என் மேலே வருத்தப் பட்டு என்னம்மா பிரயோசனம்? என் எஜமான் என்னை விரட்டறான். எட்டு மாசமாக நிற்கிற பத்தொன்பது ரூபாய் சில்லரை பாக்கியை வாங்கி வர சாமர்த்தியமில்லாதவன்னு திட்டறான். எனக்குத்தான் திறமை இல்லை. ஏகாம்பரத்துக்கூட திறமையில்லாமல் போச்சே!

சந்திரா:—அவர் திறமையைப் பற்றி பேச வேண்டிய அவசியம்?

ஜம்புலிங்கம்:—அவசியமில்லாமல் பேசுவேனா? மனுஷன் மேலும் மேலும் நிறையக் கடன் வாங்கிக்கிட்டு இருந்தால் எங்க எஜமான் பெரிய பணக்காரப் புள்ளின்னு நினைச்சு சும்மா இருப்பான். உங்க அப்பா ஒரு அப்பாவி மனுஷன். பத்தொன்பது ரூபாயோடு நிறுத்திக்கிட்டு ஆறு மாசமாக அந்தப் பக்கம் தலைகாமிக்காமல் இருக்காரு! எங்க எஜமான் விடுவானா?

சந்திரா:—ஆமாம்...நீங்க சொல்றது வாஸ்தவம்தான்! உலகத்திலே ஒன்று பணக்காரனாக இருக்கணும். அல்லது ஏழையாக இருக்கணும். நடுத்தரமாக இருப்பவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

ஜம்புலிங்கம்:—சரிதானம்மா! உங்க அப்பாகிட்டே நான் வந்து போனதாகச் சொல்லு. உங்க அப்பாவாலே எனக்கு வேலை போனாலும் போயிடும்.

(போகிறான். சந்திராவின் கண்களில் நீர் துளிர்க்கிறது. சில விநாடிகளில் கல்யாணம் வருகிறான்.)

சந்திரா:—(திடுக்கிட்டு)...ஓ! நீங்க மளிகைக் கடையிலிருந்து வருகிறீர்களா? அப்பா வீட்டில் இல்லை. வந்தவுடன் சொல்கிறேன்.

கல்யாணம்:—நான் மளிகைக் கடையிலிருந்து வரவில்லையே!...நான்...

சந்திரா:—பிறகுக் கடை ஆசாமியா?

கல்யாணம்:—மன்னிக்க வேண்டும். என்னை ஏதோ பாக்கி வசூல் பண்ண வந்த ஆசாமியாக நினைத்துவிட்டீர்கள் போலிருக்கிறது. உங்கள் முகத் தோற்றத்திலிருந்து ஊகிக்கிறேன். நான் இந்த ஊருக்குப் புதிது.

சந்திரா:—(சமாளித்துக் கொண்டு) அவசரப்பட்டுவிட்டேன். என் அப்பாவைப் பார்க்க வேண்டுமானால் இரவு எட்டு மணிக்கு வாருங்கள். அப்போது தான் வருவார்.

கல்யாணம்:—இங்கு மாடியில் ஒரு அறை காலியாக இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். சிறிது காலத்திற்கு எனக்கு வாடகைக்குக் கிடைக்குமா என்று கேட்டுப் போகத்தான் வந்தேன்.

சந்திரா:—(யோசித்து) அறை காலியாகத்தான் இருக்கிறது. ஆனால் என் அப்பா தன்னைப் போன்ற வயது முதிர்ந்தவருக்கு இடம் கொடுத்தால் நலம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். உங்களைப் போன்ற...

கல்யாணம்:—(திகைப்பை அடக்கிக் கொண்டு)...நானும் பிள்ளைக்குட்டிக் காரன்தான்! என் மனைவி இரண்டாவது பிரசவத்திற்கு ஊருக்குப் போயிருக்கிறாள். திரும்ப ஆறு மாதம் ஆகும். அதுவரை...

சந்திரா:—அப்படியா?...அப்பா ஒப்புக்கொள்ளலாம். அறைக்கு மின்சார வசதியில்லை. வெட்டிவிட்டார்கள்.

கல்யாணம்:—பரவாயில்லை! எனக்கு ஹரிக்கன் லைட் பழக்கம் உண்டு. நான் பூராவும் காரியாலயத்தில் கழித்துவிட்டு இரவில் படுக்கைக்குத்தான் வருவேன்.

சந்திரா:—மாதம் பதினைந்து ரூபாய் வீதம் இரண்டு மாத அட்வான்ஸ் அப்பா கேட்பார்.

கல்யாணம்:—கொடுத்து விடுகிறேன். வேறு ஆக்ஷேபனை சொல்லமாட்டாரே.

சந்திரா:—அவர் கொஞ்சம் முன் கோபி. வாழ்ந்து வீழ்ந்தவர்....நீங்கள் அவரை...



கல்யாணம்:—அனுசரித்து நடந்து, அவர் திருப்தியை சம்பாதித்துக் கொள்கிறேன்.

சந்திரா:—இரவில் அவரை வந்து பாருங்கள். முதல் தடவையாக நீங்கள் இங்கே வருவது போல் நடந்துகொண்டால் நல்லது.

கல்யாணம்:—உங்கள் மனது புரிகிறது. எந்த நிலையிலும் நான் தூய உள்ளத்துடன் நடந்துகொள்வேன் என்ற நம்பிக்கை என் மனதில் இருக்கிறது.

(போகிறான்.)

## காட்சி 2.

(தெரு முனை. ஏகாம்பரம் சோர்ந்து வந்து கொண்டிருக்கிறார். அவருக்குப் பரிச்சயமான நண்பர் ராமசாமி எதிர்புறமிருந்து வருகிறார்.)

ராமசாமி:—என்னையா ஏகாம்பரம்! கவனிக்காமல் போகிறீர்?

ஏகாம்பரம்:—ராமசாமியா! நான் பார்க்கவில்லை. ஏதோ யோசனை.

ராமசாமி:—எந்தக் கோட்டையைப் பிடிக்கவோ?...போகட்டும். அது யாரையா ஒரு விடலைப் பையன் உங்க வீட்டுக்கு வந்திருக்கிறானே? யார்? உமக்கு உறவா?

ஏகாம்பரம்:—உறவுமில்லை ஒண்ணுமில்லை! மாடி அறை காலியாக இருந்தது. வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறான். வேலை பார்க்கிற பையன்.

ராமசாமி:—உமக்கு புத்தி இருக்கான்னு கேட்கிறேன்! சின்னஞ் சிறு பெண் ஒன்றை கல்யாணம் செய்து கொடுக்காமல் வீட்டில் தனியாக வைத்துக் கொண்டிருக்கிறீர். மாடியில் ஒரு தடியனைக் கொண்டு குடி வைத்திருக்கிறீர். வயசு காலத்திலே நிம்மதியாக இருக்க உமக்குக் கொடுத்து வைக்கவில்லை. நெருப்புப் பெட்டியையும் நிறைந்து வழியும் பெட்ரோல் டின்னையும் பக்கத்தில் வைத்திருக்கிறீர். விளைவைப் பற்றி யோசித்தீரா?

ஏகாம்பரம்:—என்ன ராமசாமி! ஏதோ பயங்கரப் பேச்செல்லாம் பேசுகிறீர். அந்தப் பையன் யோக்யமானவனாக இருக்கிறான். விவாகமானவன். இரண்டு குழந்தைகளுக்கு தகப்பன். ஏதோ தாற்காலீகமாகத் தங்கி இருக்கிறான். சந்திராதான் என்ன அறிவில்லாதவளா?

ராமசாமி:—விவாகமானவுடன் மனுஷன் சத்புருஷனாகிவிடுகிறானா? விவாகமான பிறகுதான் மனிதனின் அபிலாஷைகள் கட்டுக்கடங்காமல் போகின்றன. மேலும் அவன் குழந்தை குட்டிகளை யெல்லாம் நீர் நேரில் பார்த்தீரா?...சும்மா சரடு விட்டிருப்பான்!

ஏகாம்பரம்:இந்த ஏகாம்பரம் அப்படி ஒன்றும் மடையன் இல்லை! வெட்டொன்று துண்டு ரெண்டாகக் கேட்டுப் பயலை வெளியே தள்ளிவிடுவேன் (மெதுவாக)...அட்வான்ஸ் வாங்கின பணத்திற்கு என்ன செய்வது?

ராமசாமி:—என்னவோ எனக்குப் பட்டதைச் சொன்னேன்! நீர் அதன்படி நடக்க வேண்டுமென்ற அவசியமில்லை பாரும்!

(போகிறார்.)

ஏகாம்பரம்:—மனதிலே பெரிய புயலை அல்லவா உண்டாக்கிவிட்டான் இந்தப் பாவி! அவன் சொல்றதிலேயும் உண்மை இருப்பது போல்தான் தோன்றுகிறது.

(ஜம்புலிங்கம் எதிர்த்தாற்போல் வருகிறான்.)

ஜம்புலிங்கம்:—நமஸ்காரமுங்க!

ஏகாம்பரம்:—(திருக்கிட்டு) பாக்கிப் பணத்தை சீக்கிரம் கொடுத்துடறேன் ஜம்புலிங்கம்.

ஜம்புலிங்கம்:—என்னங்க. அதுதான் முந்தாநாளே கொண்டு கொடுத்துட்டீங்களே!

ஏகாம்பரம்:—ஆமா! ஆமா!...மறந்து போயிட்டேன். அந்தக் கல்யாணத்தின் கிட்டே வாங்கின வாடகை அட்வான்ஸிலேதானே கொடுத்தேன்!

ஜம்புலிங்கம்:—நான் வறேனுங்க. துணி மணி வேணும்னா நம்ப கடைக்கே வாங்க!

ஏகாம்பரம்:—நான் ஒரு நித்திய கடன்காரனாக இருப்பதில் உனக்கு ஒரு திருப்தி. அப்படித்தானே?

(போகிறார்கள்.)

## காட்சி 3.

(பிரபல படத் தயாரிப்பாளர் பாண்டுரங்கத்தின் வீட்டு மாடி அறை. பாண்டுரங்கத்தின் மகன் மனோகரன் கையில் ஒரு சிறிய கண்ணாடியை வைத்துப் பார்த்துக் கொண்டு பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறான்.)

மனோகரன்:—கனம் தலைவரவர்களே! கசமுசவென்று பேசிக் கொண்டிருக்கும் கனவான்களே. சளசளவென்று பொழிந்து தள்ளிக்கொண்டிருக்கும் சாரீமணிகளே! (கண்ணாடியைக் கீழே வைத்துவிட்டு தானே கைதட்டிக்கொண்டு) பேஷ்! பேஷ்! பிரமாதமான ஆரம்பம். ஆரம்பத்தின்போதே அப்ளாஸ் விழுவது நிச்சயமாகப் போயிற்று!...ஐயையோ! ... இதென்ன பாழும் சந்தேகம்? ஒல்லியான தடித் தலைவராக உட்கார்ந்திருந்தால் கனம் தலைவர் என்ற வார்த்தை பொருந்தாதே!...பூ! (முதுகில் தட்டிக்கொண்டு) அடே மடைய மனோகரா!...இதுக்கா கவலைப்படுகிறாய்?...கனம் குறைந்த தலைவர் அவர்களே என்று சொல்லிவிட்டுப் போயேன்!...பலே! பலே!...பகுத் அச்சா! கொயிட் கரெக்ட். எங்கே? மறுபடியும் ஒரு ஆரம்ப ஒத்திகை பார்ப்போம்! (கண்ணாடியைக் கையிலெடுத்துக்கொண்டு) கனம் குறைந்த தலைவர் அவர்களே! கசமுசவென்று பேசிக்கொண்டிருக்கும் கனவான்களே, சள சளவென்று பொழிந்து தள்ளும் சாரீமணிகளே! குவா குவா வென்று அலறும் குழவிகளே! உங்கள் எல்லோருக்கும் என் நன்றியும், அன்பும் கலந்த வணக்கம்! இந்தக் கூட்டத்தில் என்னைப் பேசச் சொல்வார்கள் என்று நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

(திடீரென்று பாண்டுரங்கம் உள்ளே வருகிறார்.)

பாண்டுரங்கம்:—ஆமாடா ஆமாம்! எனக்குப் பிறந்த ஒரே அருமை மகன் இப்படி பைத்தியமாகப் போவான் என்று நானும்கூடத்தான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.



மனோகரன்:—நான் பெற்ற தந்தையே! வருக! வருக!...ஐயையோ! இல்லை! என்னைப் பெற்று இவ்வளவு வளர்த்த என் தந்தைச் செல்வா வருக வருக! (சற்று யோசித்து)...ஆமாம்! பைத்தியக்காரர்கள் சங்கத்திற்குப் போனால் எப்படிப் பேசுவது? மதியிழந்த மாதலைவா? சித்தமிழந்த சூரிய நண்பர்கள் வணக்கம்!...எப்படி அப்பா?

பாண்டுரங்கம்:—வயிற்றைப் பற்றிக் கொண்டு எரிகிறது.

மனோகரன்:—அப்படியா? உடனே நெருப்பணைக்கும் படைக்கு போன் பண்ணுங்க அப்பா.

பாண்டுரங்கம்:—பைத்தியத்திலே பைத்தியம் இப்படிப் பிரசங்கப் பைத்தியமாகவா வந்து சேரவேண்டும்? போன ஜன்மத்திலே எந்தப் பிரசங்கி மீது கல்லைவிட்டு எறிந்தேனோ, அந்தப் பாவம் இப்போது உன் உருவத்தில் வந்து என்னை ஆட்டுகிறது.

மனோகரன்:—அன்பு மிக்க தந்தையே! அபூருபமான ஒரு யோசனை என் இதய வானத்திலே மின்னுகிறது. சொல்லட்டுமா?

பாண்டுரங்கம்:—சொல்லுடா மகனே!

மனோகரன்:—உங்க புரொடக்ஷன் ஒன்றிலே எனக்கு ஹீரோ காண்ட்ராக்ட்! காலணா காசு தரவேண்டாம்! பத்தே கால் ஷூட்டிலே படத்தை முடித்துத் தருகிறேன். கதை வசனம், டைரக்ஷன், நடிப்பு இந்த நடிக மன்னன் மனோகரன்! பத்து இடத்திலே, அனல் பறக்கும், பொறி பறக்கும், குலுகுலுக்கும், சிலுசிலுக்கும், சலசலக்கும், படபடக்கும் பிரசங்க மாரி! அவ்வளவுதான். ஜனாதிபதி பரிசு உங்களுக்கு! நான் காரண்டி பண்றேன். பிளாக்கிலேகூட காலணா தரவேண்டாம்! என்ன சொல்லுகிறீர் அருமை அப்பா!

பாண்டுரங்கம்:—படம் எடுக்கிறதுக்கு முன்னாலே இந்த வீட்டிலே ஒரு பைத்தியம் இருக்கும். படம் எடுத்த பிறகு இதே வீட்டில் இரண்டு பைத்தியங்கள் இருக்கும். இரண்டாவது யார் தான்! நீ பிரசங்கம் நடத்தலாம்! நான் பிலிம் சுருளை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு தியேட்டரையும் டிஸ்டிரிபியூட்டராக நினைத்துக்கொண்டு பேரம் பேசலாம்! (குரலை மாற்றி) போடா மண்டு!...உன் புத்தி திருந்த வேறு ஏதாவது வழி சொல்லு.

(ராமசாமி வருகிறார்.)

ராமசாமி:—நமஸ்காரம் புரொடியூசர் சார்!...நான் ஒரு வழி சொல்றேன்! அது நல்வழியாகவே இருக்கும்.

மனோகரன்:—நல்வழி நாவலர் வந்துவிட்டார். கவலையே இல்லை. முள் இல்லா, கல் இல்லா மோகனத் தார் ரோடாகவே இருக்குமோ அவ்வழி?

பாண்டுரங்கம்:—நீர் எங்கே ஐயா இங்கே வந்தீர்? ஆபீஸ் அறையிலே உட்கார்ந்திருக்கக்கூடாதா? மனோகரா! நீ உள்ளே போ!

மனோகரன்:—உள்ளே என்னப்பா! வெளியே போகிறேன். பதினொரு வருஷம் காட்டிற்கே போகிறேன்! காப்பியை மாத்திரம் கொஞ்சம் பெரிய பிளாஸ்கிலே அனுப்பிவையுங்க!

(போகிறான்)

ராமசாமி:—புரொடியூசர் சார்! உங்க வருத்தத்திலும், கவலையிலும் எனக்கு பங்கு இல்லையா? உங்க காப்பி டிபனில் மாத்திரம் பங்கு எடுத்துக்கொண்டு, கஷ்ட நேரத்தில் ஒதுங்கிப் போக எனக்கு வழி தெரியாது!

பாண்டுரங்கம்:—(நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து) உட்காரும்! வெளியிலேதான் ஒரே கவலை மயம் என்றால், வீட்டிற்குள்ளேயும் இந்த மனோகரனாலே எனக்குப் பெரிய கவலை.

ராமசாமி:—எனக்குத் தெரியாதா? உங்க வெளிக் கவலையும் எனக்குத் தெரியும். ஹீரோயின் ஸ்வர்ணதேவி தகராறு பண்ணுகிறாள். 'பிளாக் எமௌண்ட்' பூராவையும் கீழேவைத்தாலும் கால்ஷீட் கொடுக்க ஒரு வருஷம் ஆகும் என்கிறாள். டிஸ்டிரிபியூட்டர்கள் நெருக்குகிறார்கள்.

பாண்டுரங்கம்:—எனக்குத் தெரியாத விஷயங்கள்கூட உமக்குத் தெரிகிறதே ஐயா!

ராமசாமி:—இந்த ராமசாமி என்ன சாதாரண ஆசாமியா?......உள்ளேயோ உங்க பிள்ளையாண்டானின் பைத்தியம் தூரணும். இரண்டிற்கும் ஒரே இடத்தில் சுலபமாகக் கிடைக்கக்கூடிய மருந்து இருக்கிறது. வேண்டுமா?



"நேத்து ரேடியோவிலே நீங்க பாடினீங்களா?"

"ஆமாம்! உனக்கு எப்படித் தெரிஞ்சுது!"

" 'பழகின குரல்' தெரியாதுங்களா!"

"? ? ?"

பாண்டுரங்கம்:—நிஜமாகவா?..... சொல்லையா சீக்கிரம்.

ராமசாமி:—நீங்க கேட்கிற வேகத்திலே இந்த ராமசாமியை மறந்துவிட மாட்டீர்களே.

(பாண்டுரங்கத்தின் செவிகளில் ரகசியமாக ராமசாமி ஏதோ சொல்கிறார்.)

பாண்டுரங்கம்:—ஆசாமி ஒத்துப் பானா!.....

ராமசாமி:—நீங்க ஒண்ணு. ரொம்ப சிரமப்படறான். நான் இப்போ உங்களுக்குமாத்திரமா நன்மை செய்கிறேன். என் யோசனை ஈடேறினால், அந்த மணிதனை நான் கைதூக்கிவிட்டவனாவேன்.

பாண்டுரங்கம்:—இங்கே கூப்பிட்டனுப்பினால் ஆசாமி வருவானா?

ராமசாமி:—வேண்டாம். முதலில் நீங்களே திடீரென்று போங்கள். அப்போதுதானே மருந்துச் சாக்கை நீங்

கள் மேக்அப் இல்லாமலே பார்க்கலாம்!

பாண்டுரங்கம்:—அதுவும் நல்ல யோசனைதான்! இன்றைக்கே பார்த்து விடுகிறேன்., உமக்கு இப்போது சன்மானம்......

ராமசாமி:—நான் இன்ஸ்டால்மெண்ட் பேர்வழி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஹோல்சேலாக வாங்கிக்கொள்கிறேன். ஆனால், அந்த ஆசாமியிடம் அவர் மறுத்தால்கூட கொஞ்சம் தாராளமாக நடந்து கொள்ளுங்கள்...இல்லை!... என்னிடம் அவருக்காக ஒரு ஐநூறு கொடுங்கள். நான் பக்குவப்படுத்தி வைக்கிறேன். ஆனால், என்னைப்பற்றி அவரிடம் பேசவேண்டாம். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

பாண்டுரங்கம்:—ரைட்! ரைட்!...... கீழே வாரும்! முதலில் அந்த சுவரொட்டிக்கு முகத்தில் அடித்தாற்போல் விளம்பரம் கொடுக்கவேண்டும்!......

ராமசாமி:—சினிமா விளம்பரத்திற்கு முன்னாலே கல்யாண விளம்பரம் வந்தாகவேண்டும் புரொடியூசர் சார்! மாறினால் அப்புறம் பட்சியைப் பிடிக்க முடியாமலே போய்விடும்!

பாண்டுரங்கம்:—புரியுது. அப்படியே செய்வோம்.

(கீழே போகிறார்கள்.)

## காட்சி 4.

(ஒதுப்புறமான பாதை. மனோகரன் மாத்திரம் கால்சட்டைப் பாக்கெட்டிற்குள் கையை விட்டுக் கொண்டு நிற்கிறான். கல்யாணம் அந்தப் பக்கம் வருகிறான்.

மனோகரன்:—இந்தாய்யா! இங்கே வா!

கல்யாணம்:—(நின்று) என்ன அதிகாரம் தாள் பறக்கிறது. நீதான் இங்கே வந்து சொல்றதைச் சொல்லேன்!

மனோகரன்:—நிஜமாகவே நீ ஆயிரத்திலே ஒருவன்!......நானே வருகிறேன் மிஸ்டர்.

(கல்யாணத்திடம் நெருங்கி வருகிறான்.)

கல்யாணம்:—என்ன சொல்லப் போறீங்க?

மனோகரன்: இந்தப் பக்கம் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்காதே?

கல்யாணம்:—நான் இங்கே டிராபிக் டியூட்டி பார்க்கும் கான்ஸ்டேபிள் இல்லை. எனக்குத் தெரியாது.

மனோகரன்:—நீங்க சொல்லவே வேண்டாம். இங்கே ஈ, காக்காய் வராது. கவலையில்லை!......உங்க கிட்டே கத்தி, துப்பாக்கி முதலிய பயங்கர ஆயுதங்கள் ஏதாவது இருக்கின்றனவா?

கல்யாணம்:—(தயங்கி) இல்லை.

மனோகரன்:—உங்களுக்கு குஸ்தி போட்டுப் பழக்கமுண்டோ!

கல்யாணம்:—இதையெல்லாம் எதற்காகக் கேட்கிறாய்?

மனோகரன்:—காரியமாகத்தான்!

கல்யாணம்:—அடுத்தாற்போல் மணிபர்சிலே எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய் என்று கேட்பாயோ?

மனோகரன்:—அடபோ ஐயா! என் மணிபர்சை வேணும்னா உனக்கு நான் தருகிறேன்!...இப்போ!...நீ ஓடக்கூடாது! நான் ஒரு பிரசங்கம் பண்ணப் போகிறேன். கேட்டுவிட்டுத்தான் போக வேண்டும். (கல்யாணத்தின் கையைப் பிடித்துக்கொண்டு) 'அன்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, அறிவு சான்ற பெரியோர்களே! நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெருங்காயத் தயாரிப்பு என்ற மாபெரும் விஷயத்தைப்பற்றிப் பேச எனக்குச் சிறிதளவும் அருகதை இல்லாத போனாலும்...'

(கல்யாணம் கைகளை விடுவித்துக் கொண்டு ஓட முயற்சிக்கையில் கல்யாணத்தின் சட்டைப் பையிலிருந்து இரண்டொரு கடிதங்களை மனோகரன் பிடுங்கிக்கொள்கிறான்.)

கல்யாணம்:—மிஸ்டர் அதிகப்பிரசங்கி! (மெதுவாக) சரியான புது திணுசுப் பைத்தியம்போலிருக்கிறது. (இரைந்து) அந்தக் கடிதங்களைக் கொடுங்கள்! உங்கள் பெருங்காயப் பிரசங்கம் காலியாகும்வரைக் கேட்கிறேன்!......தினம் உம்முடைய பிரசங்கம் கேட்க வருகிறேன்.

மனோகரன்:—நான் நம்பமாட்டேன் மிஸ்டர்! நீ இப்படி ஓட்டத்திலே கெட்டிக்காரன் என்று தெரிந்திருந்தால் ஆரம்பிக்கவேமாட்டேன்!...இந்தக் கடிதாசியைக் கொடுக்கவும் மாட்டேன்!... இதிலேயிருந்து இன்றைய கணக்கிற்கு



ஒரு புது தமிழ் வார்த்தை கற்றுக் கொண்டாகவேண்டும்!...என் பிரசங்க பிரின்சிபிளில் அதுவும் ஒன்று. இது வரை என் சொற்பொழிவைப் பொறுமையுடன் கேட்டதற்கு என் மனமார்ந்த நன்றி. எனக்குப் பேச மாபெரும் வாய்ப்பை அளித்த இந்த ரோட்டிற்கு என் மனம் நிறைந்த நன்றி. எனக்கு மாலை போட்டவருக்கு நன்றி. உற்சாகப்படுத்தியும் உட்காரச் சொல்லியும் கைதட்டிய அன்பர்களுக்கு நன்றி, நன்றி.

(கையைத் தட்டிக்கொண்டு ஓடுகிறான். கல்யாணம் தலையில் அடித்துக்கொண்டு நடக்கிறான்.)

## காட்சி 5.

(ஏகாம்பரத்தின் வீட்டு முன் பகுதி. ஏகாம்பரம் கடுகடுத்த முகத்துடன் உட்கார்ந்திருக்கிறார். சந்திரா சற்று தள்ளி நிற்கிறாள்.)

ஏகாம்பரம்:—இந்த நாற்பது ரூபாய் பென்ஷனிலேயே நான் நாயாகத் திரிந்து சாக வேண்டுமென்பதுதான் உன் முடிவா?

சந்திரா:—நாலாயிரத்திலும் நாற்பதினாயிரத்திலும் நட்சத்திர பதவி மூலம் கிட்டும் நிம்மதியைவிட, இந்த நாற்பது ரூபாயில் கிடைக்கும் நிம்மதி எத்தனையோ மடங்கு உயர்வானது, புனிதமானது என்பதுதான் என் எண்ணம் அப்பா!

ஏகாம்பரம்:—பிச்சைக்காரனுக்கு பிச்சை எடுப்பதில்தான் ஆனந்தம்! கடன்காரர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டு வாழ்நாள் முழுதும் இப்படியே கழிப்பதில்தான் உன் லட்சியம் இருக்கிறது என்றால், என்னால் என்ன செய்ய முடியும்? உன் தலையில் எழுதினது அப்படித்தான்..

சந்திரா:—அப்பா!...அந்தப் பாண்டுரங்கத்தின் பேச்சும், பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. திடீரென்று என்னைக் கதாநாயகியாக தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொல்வது அவர் மனதில் வேறு எதையோ மறைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை ஊகிக்கச் சொல்கிறது.

ஏகாம்பரம்:—நல்ல மனிதராக இல்லாவிட்டால் நாம் யோசனை செய்து பதில் சொல்லு முன்பே ஐந்நூறு ரூபாயைக் கொடுப்பாரா?

சந்திரா:—அவர் வியாபாரக்காரர். லாபம் நிச்சயமில்லாத நிலையில் ஒரு நாளும் முதலை வீசியிருக்கமாட்டார்.

ஏகாம்பரம்:—நீ இப்படித் தான்தோன்றித்தனமாக பதில் சொல்லிக் கொண்டே தரித்திரமாக உட்கார்ந்திரு! நான் கிணறோ, குளமோ தேடுகிறேன்.

(கண்ணீர் ததும்ப சந்திரா உள்ளே போகிறாள். வெளியிலிருந்து வந்த கல்யாணம் ஏகாம்பரத்திற்கு மரியாதை தெரிவித்துவிட்டு மாடியை நோக்கி நடக்கிறான்.)

ஏகாம்பரம்:—மிஸ்டர் கல்யாணம்! இங்கே வாங்க!

கல்யாணம்:—(திரும்பி) என்ன சார் விசேஷம்?

ஏகாம்பரம்:—விசேஷமாகத்தான் கூப்பிடுகிறேன்!...நீங்க மாடி அறையை நாளைக்கே காலி பண்ணணும்.

கல்யாணம்:—(திடுக்கிட்டு)...என்ன சார் இப்படி திடீரென்று கோபித்துக் கொள்கிறீர்கள்!...உங்களுக்குக் கோபம் ஏற்படும்படி நான் ஒன்றும்...

ஏகாம்பரம்:—...செய்வதற்கு முன்னால் நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்...இந்தாய்யா!...நீ நிஜமாகவே கல்யாணமானவனா? அல்லது டூப் அடித்துவிட்டு இடம் பிடித்திருக்கிறாயா?

கல்யாணம்:—(திகைப்புடன்) உங்களுக்கு என்ன திடீர் சந்தேகம்?...என் சம்சாரம் எழுதற கடிதங்களை எல்லாம் நான் உடனடியாகக் கிழித்து விடுவது வழக்கம். நாளை முதல் அதை உங்களிடம் காட்டிவிட்டுக் கிழிக்கிறேன். என் மைபயன் ரங்கு என்னைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் பிடிவாதம் பிடிப்பதாகக்கூட எழுதியிருந்தாள். அப்புறம் அவளுக்கு உடம்பு வேறு சரியாக......

ஏகாம்பரம்:—சரி சரி!...என் கவலையே எனக்குப்பெரிதாக இருக்கிறது. இரவல் கவலைப்பட அவகாசமில்லை. எதற்கும் நீங்க சீக்கிரமாக வேறு இடம் பார்த்



துக்கொள்வது நல்லது!......(உள்ளே பார்த்து)...சந்திரா! சந்திரா!...நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்.

(ஏகாம்பரம் போகிறார். சந்திரா வருகிறாள்.)

கல்யாணம்:—உங்கள் தகப்பனருக்குக் கோபவேளை போலிருக்கிறது. நான் நேரம் தெரியாமல் உள்ளே வந்துவிட்டேன்.

சந்திரா:— (தயங்கி) உங்களிடம் சொல்லலாம் என்று சொல்கிறேன். அவருக்குக் கோபம் கூட இல்லை. வெறி!

கல்யாணம்:—(திடுக்கிட்டு)... என்ன?

சந்திரா:— ஆமாம்!... என் மேல் ஒரே காட்டம். அந்தத் தொடர்ச்சி உங்கள்மீது பாய்ந்திருக்கிறது.

கல்யாணம்:— உங்கள் மீது அவருக்குக் கோபமா? கொஞ்சம்கூட நியாயம் இருப்பதாகத் தெரியவில்லையே!

சந்திரா:—காரணம் இருக்கிறது.

கல்யாணம்:—மன்னிக்கவேண்டும். மனதிற்குப் பிடிக்காத பையன் எவனையாவது மருமகனாக ஏற்றுக்கொள்ள நிச்சயித்திருக்கிறாரோ?



சந்திரா:—(சிரித்துக்கொண்டு) அந்த நினைப்பு அவர் மனதில் புக அவருடைய பொருளாதார வசதி இடம் கொடுக்குமென்று நான் நம்பவில்லை. இது முற்றிலும் புது விஷயம். யாரோ, பங்கஜா புரொடக்ஷன்ஸ் பாண்டுரங்கமாம். என்னைத் தன் படத்திற்குக் கதாநாயகியாகப் போட்டுக்கொள்ள நிச்சயித்துவிட்டாராம். இங்கு வந்திருந்தார். அப்பாவிற்கு நான் நட்சத்திரமாகிப் பணம் குவிக்க வேண்டுமென்ற ஆசை...எனக்கு...

கல்யாணம்:— (ஆவலுடன்)......உங்களுக்கு

சந்திரா:—எனக்கு, ஏழையாக இருந்தாலும், ஏற்ற கணவன் கரம் பிடித்து அடக்கமான, ஆடம்பரமில்லாத குடும்பப் பெண்ணாக வாழ ஆசை.

கல்யாணம்:—இந்த யுகத்தில் நீங்கள் ஒரு அபூர்வ பிறவி. உங்கள் ஆசையை நான் பாராட்டுகிறேன்.

சந்திரா:—என் அப்பா காது கேட்கச் சொல்லிவிடாதீர்கள்? அப்புறம் அந்த நிமிஷமே உங்களை வெளியேற்றிவிடுவார்.

கல்யாணம்:—என்னை வெளியேற்றிவிடுவார் என்பதற்காக நான் அஞ்சவில்லை. உங்கள் ஆசையை வெளியேற்றிவிடுவாரோ என்றுதான் அஞ்சுகிறேன்.

சந்திரா:—நீங்களும் ஒரு லட்சியப் பிறவியாகத்தான் தோன்றுகிறீர்கள். (பெருமூச்சுடன்) உங்களுக்கு வாழ்க்கைப்பட்டவள் கொடுத்துவைத்த பெண்தான்.

கல்யாணம்:—(பேச்சை மாற்றி) நீங்களோ படித்த பெண்! ஏதாவது காரியாலயத்தில் உத்தியோகம் பார்க்கலாமே!

சந்திரா:—எழ்மையும், வனப்பும் கலந்த ஒரு யுவதி வேலை பார்க்கும் காரியாலயத்திலுள்ள மற்ற ஆண் சிப்பந்திகளெல்லாம் தங்கள் வயதையும் மறந்து, ஏதோ சுயம்வர மண்டபத்திற்கு வரும் அரசகுமாரர்கள்போல் தங்களை நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். ஒரு காரியாலயத்தில் கிடைத்த ஒரு மாத அனுபவத்திற்குப் பிறகு நான் உத்தியோகம் தேடிப் போவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன்.

கல்யாணம்:—விசித்திரப் பெண் நீங்கள்!

(மாடிக்குப் போகிறான்.)

## காட்சி 6.

ஒரு பூங்கா. ஒரு பெஞ்சில் மனோகரன் கையில் பத்திரிகையுடன் உட்கார்ந்திருக்கிறான். அவன் தானாகப் பேசி இரைந்து படிப்பதைக் கண்ட சிலர் வேடிக்கை பார்க்கிறார்கள்.

மனோகரன்:—(பத்திரிகையைப் பார்த்துக்கொண்டே) அயனாபுரம் இளைஞர் சங்கத்தில் அனந்தசயனத்தின் அற்புதப் பிரசங்கம். கோபாலபுரம் அசோக் சோலையில் கோவிந்தாச்சாரியின் ஆவேசப் பேச்சு, எழும்பூர் இளைஞர் மன்றத்தில் இரும்பிதயனின் இனிய சொல் மாரி!... ஐயோ! அதிருஷ்டம் கெட்ட மக்களே! இந்தப் பிரசங்கத் திலகம் மனோகரனின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பை ஏன் இழக்கிறீர்கள்?... ஹா! வழி கண்டுபிடித்தேன்.

(திடீரென்று மயங்கி பெஞ்சில் வீழ்கிறான். மயக்கம் தெளிவிக்கக் கூட்டம் கூடுகிறது. திடீரென்று மறுபடியும் மனோகரன் எழுந்து நிற்கிறான்.)

மனோகரன்:—அன்பர்களே! தாய்மார்களே! வணக்கம். என் பிரசங்கத்தைக் கேட்க ஆள் சேர்க்கவே நான் மயங்கி விழுந்தேன்! ஓடாதீர்! ஓடாதீர் அன்பர்களே, ஓடாதீர். இன்றைய சமுதாயத்திலே வளரும் கலை......

கூட்டத்தில் ஒருவன்:—சரியான பைத்தியம்!...படாதிபதி பாண்டுரங்கத்தோட பையன்!

மற்றொருவர்:—புரொடியூசர் பாண்டுரங்கத்தின் பையனா?...என்ன மடப் புரொடியூசர்? இவனை வைத்து நாலு பைத்தியப் படம் எடுக்கலாமே!

மனோகரன்:—எங்கப்பாவிற்கு ஏன் அவ்வளவு நல்ல புத்தி தோன்றப் போகிறது?

(ஏகாம்பரம் அந்தப் பக்கமாக வருகிறார்.)

ஏகாம்பரம்:—(மனோகரனை கவனித்து)...அடேடே! பாண்டுரங்கத்தின் பையன்!...சரி சரி!... (மனோகரனை நெருங்கி)...மிஸ்டர்! வாங்க நம்ப வீட்டிற்கு! நான் கேட்கிறேன் உங்கள் உபன்யாசத்தை!

மனோகரன்:—ஐயோவ்!...நீர் தான் மாந்தருள் மாணிக்கம்!...இதோ வருகிறேன். மைக்கிற்கு ஏற்பாடு செய்துவிட்டீர்களா?

ஏகாம்பரம்:—ஓ!...மைக், பூமாலை, கைதட்டல், எல்லாவற்றிற்குமே ஏற்பாடாகிவிட்டது!...வாங்க!

(இருவரும் கிளம்புகிறார்கள்.)

## காட்சி 7.

(பாண்டுரங்கத்தின் பங்களா. பாண்டுரங்கம் கோபாவேசத்துடன் குறுக்கு நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கிறார். ராமசாமி உள்ளே வருகிறார்.)

பாண்டுரங்கம்:—என்னையா ராமசாமி! நீர் சுத்த உதவாக்கரை ஆசாமியாகத்தான் இருப்பீர்போலிருக்கிறது.



ராமசாமி:—என்ன புரொடியூசர் சார்! அலட்சியமாகச் சொல்லிவிட்டீர்கள். உங்களுக்காக நான் உயிரைவிட்டுக் கொண்டிருக்கிறேன்.

பாண்டுரங்கம்:—கொஞ்சம் கொஞ்சமாக விடாதேயும் ஐயா!...மொத்தமாக விட்டுடும்! தொல்லையில்லை.

ராமசாமி:—உங்க படத்திலே வரப் போகும் ஹாஸ்ய டயலாக்கை என்னிடம் முன்னோடியாகப் பேசிக் காண்பிக்கிறீர்கள்போலிருக்கிறது! நன்றாகத்தானிருக்கிறது!

பாண்டுரங்கம்:—ஹாஸ்யம்! மண்ணாங்கட்டி!...அந்தக் கிறுக்குப் பயல் மனோகரனை நடுத் தெருவிலிருந்து அந்த ஏகாம்பரம் இங்கே கொண்டு வந்து விட்டுட்டுப் போறான். இனிமேல் கதை எப்படி ஐயா உருப்படும்!

ராமசாமி:—நீங்க ஒண்ணு! எந்தெந்த பாஷைப் படங்களிலிருந்தோ சம்பவங்களைப் பிச்சுப் பிச்சு எத்தனையோ கதைகளை உருப்பட வைக்கிறீங்க! இதுதானா பிரமாதம்!...ஏகாம்பரம் மனோகரனைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போனானா என்று விசாரித்தீர்களா?

பாண்டுரங்கம்:—விருந்து வைக்கவா? அது ஒன்றைத்தான் அவன் செய்ய மறந்துவிட்டான். நேராகப் பூங்காவிலிருந்து இங்கே தள்ளிக்கொண்டு வந்துவிட்டான்.

ராமசாமி:—தலை பிழைத்தது. அதிர்ஷ்டவசமாக சந்திரா முன் அந்த மனோகரனைக் கொண்டு போய் நிறுத்தவில்லையே!...அது போதும்.

பாண்டுரங்கம்:—அவள் பேச்சை ஏன் ஐயா எடுக்கிறீர். அவள்தான் என்னவோ உத்தம புத்திரியாக, சினிமாவில் நடிக்க மறுக்கிறாளாமே! காலம் மாறிப் போச்சு ஐயா காலம் மாறிப்போச்சு! நாம் போய் அவர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது!

ராமசாமி:—நமக்கு வேறு ஒரு முக்ய நோக்கம் இருக்கிறதல்லவா? சந்திராவிலை மனோகரனுக்கு வேண்டாமா? ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

பாண்டுரங்கம்:—ஆமாம்! இரண்டு கல்லில் மூணு தேங்காய்! மூணு கல்லில் நாலு புடலங்காய்!......கணக்குப் போடு!...அவனுக்குக் கொடுத்த ஐந்நூறு ரூபாய்க்கு நான் அப்பவே எள்ளும் தண்ணியும் விட்டாயிற்று!...போமய்யா போம்!...

(கோபமாக உள்ளே போகிறார்.)

ராமசாமி:—ஓஹோஹோ!......இந்த ராமசாமி தோல்வி என்பதைக் கண்டறியாதவன். இதற்கு விசை எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியாதா?

(போகிறார்.)

## காட்சி 8.

நடைபாதை. கல்யாணமும் சந்திராவும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

சந்திரா:—உங்களைச் சந்திக்கவே எனக்கு மனம் கூசுகிறது. அப்பா இப்படி அநாகரிகமாக நடந்து கொள்வார் என்று நான் நம்பவில்லை. யாரோ எழுதிய மொட்டைக் கடுதாசியை நம்பி உங்களை வெளியேற்றியதை நினைத்தால் என் மனம் பதறுகிறது.

கல்யாணம்:—இந்த உலகத்திலே வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாறுகிறவர்கள் அதிகம். அதற்கு உன் தந்தை விதிவிலக்கில்லை. போதாக்குறைக்கு பணக் கஷ்டமும் சேர்ந்து அவர் புத்தியைப் பேதலிக்கச் செய்திருக்கிறது. அவரிடம் நான் அனுதாபப் படுகிறேனே தவிர கோபப்படவில்லை.

சந்திரா:—இருந்தாலும் உங்களுக்கும், எனக்கும் உள்ள நல்லுறவிற்கு மாசு கற்பிக்கும் அந்த மொட்டைக் கடுதாசிக்கு அவர் முக்யத்துவம் கொடுத்தது தவறு. உங்கள் மனைவி காதில் விழுந்தால், அந்த சகோதரியின் மனம் எத்தனை நோகும்...?

கல்யாணம்:—அவள் காதிலே விழவே விழாது! நிச்சயம்.

சந்திரா:—என்ன அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?

கல்யாணம்:—சந்திரா!...உன்னிடம் உண்மையைச் சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டாயே?

சந்திரா:—உண்மையா?...புரியவில்லையே!

கல்யாணம்:—மன்னித்துக்கொள் சந்திரா!...நான் விவாகமாகாதவன் பிரம்

மச்சசரி!...உங்கள் வீட்டு மாடியில் இடம் கிடைக்காதோ என்ற பயத்தில் பொய்யைச் சொல்லிவைத்தேன்.

சந்திரா:—ஓ!......

கல்யாணம்:—ஒவ்வொரு தடவையும் உன் அப்பா என்னை மிரட்டினபோது கற்பனைக் குழந்தைகளை வர்ணித்தேன்...

சந்திரா:—(பெருமூச்சுடன்) நீங்கள் சிறந்த நடிகர்.

கல்யாணம்:—சந்தர்ப்பம் என்னை அப்படிச் செய்யத் தூண்டியது. எங்கே உன் தந்தையின் தூண்டுதலுக்கு ஆளாகி உன் லட்சியத்தைக் கைவிட்டு விடுவாயோ என்ற பயத்தில் நான் அங்கேயே தங்கியிருக்க விரும்பினேன். கடைசியில் என் விழிப்பிற்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் அந்த மொட்டைக் கடுதாசி வந்து சேர்ந்தது.

சந்திரா:—நான் விழித்துக் கொண்டுதானிருக்கிறேன். பாண்டுரங்கம்தான் தான் கொடுத்த ஐந்நூறு ரூபாய்க்கு என் அப்பா மீது கேஸ் போட்டிருக்கிறான். அப்பா ஒரு முழக் கயிற்றைக் காண்பித்துக் காண்பித்து மிரட்டுகிறார் என்னை. திருப்பிக் கொடுத்து தலைநிமிர்ந்து நடக்க அவரிடம் பணமில்லை.

கல்யாணம்:—நீங்கள் தயங்காமல் ஏற்றுக்கொண்டால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். அந்த ஐந்நூறு ரூபாயை நானே உங்கள் தந்தையின் சார்பில் பாண்டுரங்கத்திற்குக் கொடுத்துவிடுகிறேன். ஒரு நண்பருக்கு செய்த உதவியாக இருக்கட்டும்.

சந்திரா:—நீங்கள் அதிசயமான மனிதர். உங்களுக்கு இன்னல் புரிந்தவர்கள் மீதே இரக்கம் காட்டுகிறீர்கள்.

கல்யாணம்:—மனிதனுக்கு தேவையான பண்புகளில் அது ஒன்று! எனக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. நான் பாண்டுரங்கத்தை இன்றே பார்க்கிறேன்.

சந்திரா:—நாளைக்கு நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள். என் அப்பாவைப் புது மனிதராகவே பார்ப்பீர்கள்.

கல்யாணம்:—நானும் அதையே விரும்புகிறேன்.

(இருவரும் வெவ்வேறு திசையில் போகிறார்கள்.)

## காட்சி 9.

ஏகாம்பரத்தின் வீடு. ஏகாம்பரம் கடுகடுவென்று உட்கார்ந்திருக்கிறார்.

ஏகாம்பர:—(தானாக) பெற்ற அப்பன் சொல்வதைக் கேட்க மறுக்கும் அவள் ஒரு மகளா?...பிசாசு! பேய்!... நான் தொலைந்தால்தான் என் வார்த்தைகளின் அருமை தெரியும்... கோர்ட் வாசல்படி ஏறுமுன் ஒரு முழக் கயிற்று வட்டத்திற்குள் என் தலை நுழைந்துவிடும். அப்புறம் அவள் சினிமா நட்சத்திரமானால் என்ன! சீரழிந்தால் என்ன?

(கல்யாணம் உள்ளே வருகிறான்.)

கல்யாணம்:—நமஸ்காரம் சார்!

ஏகாம்பரம்:—(ஆத்திரத்துடன்)...... அயோக்யப் பயலே! உனக்கு எத்தனை துணிச்சல்? என் வீட்டு வாசற்படி ஏற உனக்கு எத்தனை தைரியம்? காலிப் பயலே! கெட்அவுட்!...நீதானடா என் மகளின் மனதைக் கெடுத்திருக்கிறாய்!... அவள் சினிமா நட்சத்திரமானால் உன் பிடியில் சிக்கமாட்டாளோவென்று சூழ்ச்சி செய்திருக்கிறாய்? நயவஞ்சகா!...இன்னமுமா நிற்கிறாய்?

கல்யாணம்:—சார்! உங்கள் குற்றச்சாட்டுகளில் கொஞ்சம்கூட உண்மையில்லை. என்னைத் தவறுதலாக...


ஏகாம்பரம்:—அரிச்சந்திரன் பேரன் நீ!...திருட்டுப் பயலே! நான் கொலைகாரனாகிவிடுவேன். பாவம்! ஒன்றுமறியாத அந்த சின்னப் பெண்ணின் மனதைக் குழப்பி மயங்க வைத்திருக்கிறாய்! அந்த மொட்டைக் கடுதாசி எழுதினவன் நல்ல மகானுபாவன்! என் கண்களைத் திறந்துவிட்டான்.

(எழுந்திருக்கிறார்.)

கல்யாணம்:—சார்!...நான் உங்களுடன் சண்டை போடவோ சச்சரவு செய்யவோ வரவில்லை. இதோ!...இந்தக் கடிதத்தைப் பாருங்கள்! நான் போகிறேன்?

(சந்திரா உள்ளிருந்து வருகிறாள்.)

ஏகாம்பரம்:—(கடிதத்தைப் பார்த்து)



...என்ன? இது நிஜமா?...அல்லது சூதா!...நம்ப முடியவில்லையே!...சந்திரா!...இதைப் பார்!

சந்திரா:—(வாங்கிப் பார்த்துவிட்டு) ...நிஜம்தான். அந்த பாண்டுரங்கத்தின் கம்பெனி லெட்டர் பாட்தான். அவர் எழுத்துத்தான்.

ஏகாம்பரம்:—மிஸ்டர் கல்யாணம்!... இது...

கல்யாணம்:—இது நிஜம். பாண்டுரங்கம் உங்களுக்கு இனி தொல்லை கொடுக்கமாட்டார்! அவர் விரித்த வலை கிழிந்து போயிற்று. நான் ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து உங்கள் கடனைத் தீர்த்துவிட்டேன்.

ஏகாம்பரம்:—மிஸ்டர் கல்யாணம்! ஆபத்தில் கைகொடுத்து உதவிய உங்களை ஆத்திரத்தில் கண்டபடி பேசிவிட்டேன்! என்னை மன்னித்துவிடப்பா!

கல்யாணம்:—மன்னிப்புக் கேட்க வந்தவன் நான்!...பாண்டுரங்கத்தின் கடனைத் தீர்த்தது உண்மை! ஆனால் நான் ஏற்கனவே ஒரு பொய்யைச் சொல்லியிருக்கிறேன் உங்களிடம்.

ஏகாம்பரம்:—(திகைப்புடன்)... என்ன? பொய்யா?

கல்யாணம்:—ஆமாம்!...உங்கள் வீட்டின் மாடி அறைக்கு வந்தபோது நான் சந்தர்ப்பத்தை உத்தேசித்து விவாகமானவன் என்று சொன்னேனே...

ஏகாம்பரம்:—பையன் ரங்குகூட திருச்சியில் மிகவும் படித்துகிறான் என்று சொல்வீர்களே.

கல்யாணம்:—எனக்கு விவாகமுமாகவில்லை. ரங்கு என் பிள்ளையுமில்லை!

சந்திரா:—(நாணம் பொங்க) ஆம் அப்பா!...எல்லாம் கற்பனை! நீங்கள் இடம் கொடுக்க மாட்டீர்களோ என்ற பயத்தில் சொல்லியிருக்கிறார்.

ஏகாம்பரம்:—என்னால் நம்ப முடியவில்லையே!...ஒருவேளை இப்போது சொல்வதுதான் பொய்யோ?

(ராமசாமி திடீரென்று உள்ளே வருகிறார்.)

ராமசாமி:—கல்யாணம் இங்கேதான் இருக்கிறானா?...இந்தாய்யா!... உம்ம சம்சாரம் குழந்தைகள் எல்லாம் உம்மைத் தேடிக்கொண்டு ஊர் முழுதும் அலைகிறார்கள். காலையில் ரயிலில் திடீரென்று வந்தார்களாம்!...நீர் சொல்வீரே ரங்கு ரங்கு என்று! அவன் முரட்டுப் பயலாக இருப்பான் போலிருக்கிறது! வாசலிலே நிறுத்தி வைத்திருக்கிறேன்.

(வாசலுக்குப் போய் திரும்புகிறார். உடனே வாசலிலிருந்து அப்போவ்! அப்போவ்! வாங்க அப்போவ்! என்ற குரல்கள் கிளம்புகின்றன.)

கல்யாணம்:—என்ன? என் குழந்தைகள்? என் மனைவி?...அப்புறம்.

ராமசாமி:—உம் மாமனார்! திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்திருக்கிறார். போமையா!...எவ்வளவு நேரம் வாசலில் நிற்பார்கள்?...

ஏகாம்பரம்:—அட திருட்டுப் பையா! ...எதை மனதில் நினைத்துக்கொண்டு என் கடனைத் தீர்த்தாய்? என் வீட்டைச் சுற்றுகிறாய்? அயோக்ய ராஸ்கல்!...உன் புதுப் பொய் அம்பலமாச்சேடா?

சந்திரா:—நான் ஒருவள் இருப்பதனால் தானப்பா!...சேசே!...இந்த உலகத்திலே யாரை நம்புகிறது?...ஐந்நூறு ரூபாய் கொடுத்து உதவ முன்வந்தது என்னை நினைத்துக்கொண்டா? (கல்யாணத்தைப் பார்த்து)...மிஸ்டர்! நீங்கள் அந்தப் பாண்டுரங்கத்தைப் பன்மடங்கு நல்லவராக்கிவிட்டீர்! கயவர்களும் கண்யமாக உலாவுவார்கள் என்பதை நிரூபித்துவிட்டீர்கள்.

(தடபுடலாக ஆடை அணிந்த நபர் ஒருவர் உள்ளே வருகிறார்.)

புது நபர்:—(கல்யாணத்தைப் பார்த்து) மாப்பிள்ளை! இங்கேயா இருக்கிறீர்கள்? ஊர் முழுதும் சுத்தியாயிற்று! ஜாகை எங்கே?...இவர்களெல்லாம் யாரு?

கல்யாணம்:—முதலில் நீர் யாரென்று தெரியவில்லை.

ராமசாமி:—ஆமாம்! இப்போ அவர் அசந்தர்ப்பமாக வந்துவிட்டதால் உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை. சார்! இங்கே அந்த கல்யாண பரமாத்மா ருக்மிணியை மறந்து பாமா மோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்.



கல்யாணம்:—மிஸ்டர் ராமசாமி!... உம்முடைய பற்கள் மண் வாசனை முகர வேண்டுமா?...என்ன பேத்தல்? என்ன உளறல்.

ராமசாமி:—ஆமாம் ஐயா! உண்மை எக்கச்சக்கமான கட்டத்தில் வெளியானால் உளறலாகத்தான் இருக்கும்! நீர் முன்பின் தெரியாத ஏகாம்பரத்தின் கடனைத் தீர்த்தபோதே நான் சந்தேகப்பட்டேன். சொக்கன் மீசை சும்மா துடிக்காதையா!...

(திடீரென்று கையில் ஒரு கடிதத்துடன் மனோகரன் உள்ளே ஓடி வருகிறான்.)

மனோகரன்:—இந்த மனோகரன் மீசை காற்றடித்தாலே துடிக்கும்!...இங்கே என்ன கூட்டம்!...ஒரு சிறந்த பிரசங்கம் நடத்தலாம் போலிருக்கிறதே!... செய்வோம். மைக் வரட்டும். முதலில் வந்த விஷயத்தை சொல்லிவிடுகிறேன் (கல்யாணத்திடம்) ஐயா ரசிகரே! அன்று பிடுங்கிக்கொண்டுபோன கடுதாசி!...ரொம்ப தாங்ஸ்! ஜாதகம் என்கிற ஒரு வார்த்தை கற்றுக்கொண்டேன்! ஆனால்...

கல்யாணம்:—(ஆவலுடன்)... மிஸ்டர் ஏகாம்பரம்!...இதோ பாரும்! என் தகப்பனாரிடமிருந்து போன வாரம் வந்த கடிதம்! என்ன எழுதியிருக்கிறார் பாரும்!...ஒரு வாரத்திற்குள் மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகும் வித்தையை யாரால் செய்ய முடியும் சொல்லுங்கள்!...மிஸ்டர்! பிரசங்கி! நல்ல சமயத்தில் வந்தீர்கள்?

மனோகரன்:—(மாமனாராக நிற்பவரைப் பார்த்து)...யோவ் பங்காரு!... நீ ஒரு எக்ஸ்ட்ரா நடிகர் இல்லே!...நீ எங்கே வந்தே இங்கே! (ராமசாமியைப் பார்த்து) ஓய் நல்வழி நாவலரே!...நீ நேற்று இவன் காதிலே என்னையா குசுமுசுன்னு ரகசியம் பேசிக்கொண்டிருந்தீரே என்ன சமாசாரம்?... இவனை எதுக்கு பகல்வேஷக்காரன் மாதிரி வேஷம் போட்டு நிறுத்தியிருக்கிறாய்? அடுத்த படத்திலே இவனுக்கு பெரிய அப்பா வேஷம் கொடுக்கப் போகிறாரோ எங்க அப்பா!

ஏகாம்பரம்:—(கடிதத்தைப்படிக்கிறார்) 'சிரஞ்சீவி கல்யாணத்திற்கு அனேக ஆசீர்வாதம். நீ எப்போதுதான் கல்யாணம் செய்து கொண்டு எங்கள் கவலையைப் போக்கப் போகிறாய்?... ஜாதகங்கள் வந்துகுவிகின்றன. உனக்கு மனதிற்குப் பிடித்த பெண்ணை ஏழையாக இருந்தாலும், திருமணம் செய்து கொள்ள நாங்கள் ஆட்சேபிக்கமாட்டோம்!' உன் அன்புள்ள தந்தை மேலப்பள்ளம் மிட்டாதார் ரங்கநாதம்.

(கடிதத்தை மடக்கி)...மிஸ்டர் கல்யாணம்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

மனோகரன்:—எனக்கு எல்லாம் புரிகிறது!

சந்திரா: அப்பா!...இந்த நல்ல மனிதரின் கண்யத்தைக் குறைக்க ராமசாமியின் சதியாக இருக்கலாம் அப்பா! அவரை விடாதீர்கள்.

மனோகரன்:—நான் விடுவேனா?...நல்வழி நாவலரே, நாடக பிதாவே!

(ராமசாமியைப் பிடிக்கப் போகிறான், ராமசாமி மனோகரனைப் பிடித்துத் தள்ளவே மனோகரன் தடாரென்று கீழே விழுகிறான். அவனுக்கு மண்டையில் அடிபடுகிறது. ஏகாம்பரம் தூக்குகிறார்.)

கல்யாணம்:—(ராமசாமியைப் பிடித்துக்கொண்டு)...மிஸ்டர்! உம்முடைய விழிப்பு சரியாக இல்லை!...உண்மையைச் சொல்லும்!

(மாமனார் வேடதாரி நழுவுகிறார்.)

ராமசாமி:—போடா சுண்டைக்காய்! என்ன மிரட்டறே!

கல்யாணம்:—சுண்டைக்காயா மிளகாயாவென்று தெரிந்துகொள்ளும்!

(ராமசாமியின் கன்னத்தில் பட் பட் என்று அறைகிறான்.)

ராமசாமி:—விட்டுடு! விட்டுடு! நான் உண்மையைச் சொல்றேன்!...எனக்கு இந்த ஏகாம்பரம் தன் பெண் சந்திராவை இரண்டாவது சம்சாரமாகக் கொடுக்க மறுத்தார். அந்த ஆத்திரத்தில் இந்தப் பைத்தியக்கார மனோகரனுக்கு அவளை மண முடித்து பழி தீர்க்கத் திட்டமிட்டேன்! பலிக்கவில்லை.

கல்யாணம்:—மொட்டைக் கடிதம்!

ராமசாமி:—நான்தான் எழுதினேன். அதன் பிறகு நீ பாண்டுரங்கத்தின் கடிதை அடைத்து ஏகாம்பரத்திடம் உறவு கொண்டாடியபோது, நீ சந்திராவை கல்யாணம் செய்து கொண்டுவிடு வாயோ என்று அஞ்சி பங்காருவைக் கொண்டு மாமனர் நாடகம் நடத்தினேன்!... நீ பிரம்மச்சாரி என்று எனக்கு முன்பே தெரியும். மனோகரன் வைத்திருந்த கடிதத்தைப் பார்த்தேன்! பாவி! சரியான சமயத்தில் உனக்கு சாதகமாகக் கொண்டு வந்துவிட்டான்!

கல்யாணம்: (இன்னும் இரண்டு அறை அறைந்து) சோதாப் பயலே! வஞ்சகமே உருவாகி வந்த அயோக்யா!...மனோகரனுக்குக் காயம் பட்டதற்கு பாண்டுரங்கத்திடம் பதில் சொல்லிக்கொள் (ஏகாம்பரத்திடம்) மாமா!...மனோகரனைத் தாங்கிறைப் போல் பிடித்துக்கொள்ளும். நான் இவனைப் பிடித்துக்கொள்கிறேன். பாண்டுரங்கத்தின் வீட்டிற்குப் போகலாம்!...

ஏகாம்பரம்:—மாப்பிள்ளை! உங்க மனசு இப்போதுதான் புரிஞ்சது. எங்க சந்திரா அதிருஷ்டக்காரி.

சந்திரா:—(உள்ளே போய்க் கொண்டே) போங்கப்பா!...

(போகிறார்கள்.)

## காட்சி 10

(ஒருபூங்கா. சந்திராவும் கல்யாணமும் நிற்கிறார்கள்.)

சந்திரா:—என்ன உங்கள் முகம் ஒரு மாதிரியாக இருக்கிறது? ஊரிலிருக்கும் உங்கள் குழந்தை ரங்கு ரொம்பப் படுத்துகிறுனென்று கடிதம் வந்திருக்கிறதோ?

கல்யாணம்:—குறும்பைப் பாரு!... இரண்டு, மூன்று வருடம் கழித்து நீ அப்படி எழுது எனக்கு.

சந்திரா:—ஆசையைப் பார்க்கலே!

கல்யாணம்:—சந்திரா!...நீகூட என் மேலே சந்தேகம்தானே பட்டாய்?

சந்திரா:—நீங்கள் பொய்யை அழித்து நிஜத்தைச் சொல்லும் தருணத்தில் கச்சிதமாக பொய்யையே நிஜமென்று நம்பும்படி அந்த சதிகாரப் பாவி ராமசாமி நாடகம் நடத்தினுனே?

கல்யாணம்:—மனோகரன் மாத்திரம் முன்பு பிடுங்கிக்கொண்டு போன கடிதத்துடன் வந்து குதிக்கவில்லையோ, எனக்கு பைத்தியமே பிடித்திருக்கும்.

(மனோகரன் வருகிறான். இருவரும் தழுவப் பார்க்கிறார்கள்.)

மனோகரன்:—பயப்படாதீர்கள்! நான் பிரசங்கம் செய்ய வரவில்லை. என் பைத்தியம் போய்விட்டது. மண்டையில் பட்ட அடியே மருந்தாகிவிட்டது! ராமசாமி செய்த தீமையிலும் ஒரு நன்மை விளைந்தது.

கல்யாணம்:—அப்படியா?...சந்தோஷம்? மனோகரா! உங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்!

மனோகரன்:—நானும்தான் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்! நான் உங்களைத் தேடி வராவிடில் ராமசாமி என்னைப் பிடித்துத் தள்ளியிருப்பானு? நான்தான் இப்போது பிரசங்கம் செய்யாமல் இருப்பேனு?... ஆமாம்! ஒரு நல்ல செய்தியைச் சொல்ல மறந்துவிட்டேனே!...என் தந்தை பாண்டுரங்கம் என்னையே ஹீரோவாகப் போட்டு ஒரு படம் எடுக்க சம்மதித்துவிட்டார். நாளைக்கு பூஜை! நீங்கள் இருவரும் விருந்திற்கும், பூஜைக்கும் வரவேண்டும்.

கல்யாணம்:—மிக்க நன்றி.

மனோகரன்:—ரசிகப் பொது மக்களே! உங்கள் அனைவருக்கும் நன்றி. உங்கள் பொறுமைக்கு நன்றி. உங்கள் ரசனைக்கு நன்றி! (உதட்டைக் கடித்துக் கொண்டு) பழைய நினைவு சட் என்று போகுமா? (சிரிக்கிறார்கள்)


(திரை)



எமது மனமார்ந்த
சுதந்திர தின வாழ்த்துக்கள்

பண்டிகை காலத்துக்கு
ஏற்ற பரிசுகள்

பண்டிகை காலத்துக்கு பிலிப்ஸ் ரேடியோ எதுவும் உத்தமமான பரிசாக விளங்குகிறது. எங்களிடமுள்ள ஏராளமான வகைகளிலிருந்து உங்களுக்கு வேண்டியதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். பல பண்டிகை காலங்களுக்கு பிலிப்ஸைக் கொடுத்து மகிழ்ச்சி அடையுங்கள்.



ஒலியில் ஒரு புது உலகம்

பிலிப்ஸ் நோவோஸோனிக் ரேடியோ

PHILIPS —அனுமதிக்கப் பெற்ற ரேடியோ டீலர்—

R. S. M. & கம்பெனி
(ரேடியோ & விளக்குகள்)
236/237, தேவராஜ முதலித் தெரு, சென்னை-3.
(போன்: 55044)

PSPD-9

கிளை:

R. S. M. & கம்பெனி

4-A. 127, புரசவாக்கம் ஹைரோடு, சென்னை-7.


Printed and published By N. Rajagopalan at The 'Swadesamitran' press, 'Victory House' Mount Road Madras. Editor: C. R. Srinivasan, B. A.


The Swadesamitran Weekly
Registered as a Newspaper in CEYLON





இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ சிலோன் — 41.72 மீட்டரில் "ரெமி நகைச்சுவை நாடகம்"
வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை.





12-8-59 குறிஞ்சிப்பாடி கூட்டுறவு விவசாய சங்கத்தின்மூலம் ஏற்பாடு செய்யப் பட்ட போரிங் மெஷினை திரு எஸ். கே. சம்பந்தம் எம். எல். ஸி. தலைமையில் சென்னை விவசாய இலாகா ஜாயிண்ட் டைரக்டர் திறந்துவைத்தார்.



பிரபல சினிமா நக்ஷத்திரம் வைஜயந்திமாலா, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா முதலிய நாடுகளில் நடனமாடிவிட்டு சென்ற 8-ந்தேதி சென்னை திரும்பியபோது விமான நிலையத்தில் பலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.



# பொருளடக்கம்

Vol: XXX] [No 30
விகாரி௵ ஆவணி 7. ஆகஸ்ட் 23

| | |
|---|---|
| கோர்ட்டுக்குப் போகவேண்டாம் | 3 |
| மக்கள் மன்றம் | 5 |
| அரசியல் துக்கடா | 7 |
| இன்பம் எங்கே? —சரோஜா ராமமூர்த்தி | 13 |
| புது வாழ்வு —துருவன் | 24 |
| வல்லத்துக் கோயில் —விக்கிரமன் | 30 |
| நட்சத்திரப் பேட்டி | 32 |
| தங்கத் தாம்பாளம் —கோவி. மணிசேகரன் | 34 |
| நிழலும் நிஜமும் —சியாமா | 44 |
| வேடனின் ரகசியம் —பி. கோதண்டராமன் | 52 |
| அவர் செய்த உதவி —பிச்சு | 57 |
| குட்டுவன்–மாந்தை —மா. ரா. இளங்கோவன் | 69 |
| எழு பிறப்பும் உள்ளுவர் —ரா. பாலகிருஷ்ணன் | 73 |
| நாராயணீயம் —ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் | 86 |
| கனகாவின் கலியாணம்—குங்குமம் | 89 |
| நடன செங்காரியின் துறவு —எம். எஸ். எஸ். | 95 |
| பாலர் மலர் —கல்வி–கோபாலகிருஷ்ணன் | 101 |

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



# கோர்ட்டுக்குப் போகவேண்டாம்!

தொழில் தகராறுகளைக் கூடியவரை தங்களுக்குள்ளேயே சமரசமாகத் தீர்த்துக்கொள்ளுவது நலமென்ற உணர்வு தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் இரு தரப்பினரிடையும் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிகரமானது. தொழில் தகராறுகள் தீர்வு பற்றிய கமிட்டிக் கூட்டத்தில், மேற்குறித்த இரு தரப்புப் பிரதிநிதிகளும் கோர்ட்டுக்குப் போகாமல் தொழில் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளும் முறைகளில் ஒத்துழைக்குமாறு தங்கள் ஸ்தாபனங்களுக்குச் சிபார்சு செய்ய ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அற்ப காரணங்களுக்கெல்லாம்கூடத் தகராறுகளாக முற்றி கோர்ட்டுக்குப் போவதும், அங்கு அவை வருஷக்கணக்கில் இழுத்துக்கொண்டிருப்பதும் சர்வசாதாரணமாய் இருந்து வருகிறது. இதனால் இரு தரப்பினரும் வரையற்ற கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாவதுடன், அவர்களிடை நல்லுறவு குலைந்து மாச்சரியம் முற்றுகிறது. இதன் பலாபலன்கள் சம்பந்தப்பட்ட தொழில்களைப் பல்வேறு வகைகளில் பாதித்தே தீரும். இந்தப் போராட்ட வழியைக் கைவிட்டு சமரச முறையைக் கையாள்வதில் இரு தரப்பினரும் தற்போது அக்கறை காட்டுவது நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு நல்ல அறிகுறி.

உண்மையில் ஒரு தொழிலின் உள்வயணங்களைப்பற்றி அதிலுள்ள தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் வெளியாரை அல்லது ஒரு கோர்ட்டைவிட அதிகம் தெரியும். எனவே, அதில் எழும் ஒரு தகராறில் வெளியார் விடுக்கும் தீர்ப்பைவிட, தொழிலில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் நேரடியாகப் பேசி செய்துகொள்ளக்கூடிய உடன்பாடு எதுவும் இன்னும் நேர்மையாகவும், நிலையாகவும் இருக்கக்கூடும். நேரடியாகப் பேசி தீர்த்துக்கொள்ள முடியாத தகராறுகளும் சில சமயங்களில் ஏற்படலாம். அந்நிலையிலும் அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டிய

அவசியமில்லை. அவர்கள் ஒரு மத்தியஸ்தரின் உதவியைக் கொண்டு ஒரு உடன்பாட்டுக்கு வரலாம்; அதுவும் சாத்தியமில்லாத நிலையில் இரு தரப்பினரும் ஒரு நடுநிலையாளரைத் தேர்ந்தெடுத்து அவர் செய்யும் முடிவுக்குக் கட்டுப்படுவது என்பது போன்ற ஒரு ஏற்பாட்டை உருவாக்குவது அசாத்தியமல்ல. இவ்வாறு ஆங்காங்கு மத்தியஸ்தர்களாக இயங்கக்கூடியவர்களின் பெயர்களடங்கிய ஜாப்தாவை தொழிலாளர், தொழிலதிபர்கள் இரு தரப்புகளையும் கலந்து கொண்டு சர்க்கார் தயாரிக்க வேண்டுமென்ற யோசனைக்கு ஆதரவு பெருகி வருகிறது. இந்நிலையில் எத்தகைய தகராறையும் காரணமாகக் கொண்டு வேலை நிறுத்தம், கதவடைப்பு இரு முறைகளையும் கையாள்வதில்லையென ஒரு உடன்பாட்டுக்கு வருவது உசிதமல்லவாவென்று தொழிலாளர், தொழிலதிபர்கள் யோசிக்க வேண்டுகிறோம்.

தற்போது தேசப் பொருளாதாரம் உள்ள நிலையில், விலைவாசிகள் மேன்மேலும் ஏறிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் மேற்குறித்த இரு முறைகளில் நெருக்கடி மேலும் முற்றவே உதவும். வேலை நிறுத்தம் செய்வதென்பது தொழிலாளர் மிக்கப் பிரயாசையின்பேரில் பெற்றதொரு உரிமை; அதை எளிதில் கைவிட்டுவிடுவதா என்று கேட்கலாம். அதன்மூலம் அவர்களுக்கு மேன்மேலும் நன்மை ஏற்பட வழியுண்டானால், அதைக் கைவிடும் யோசனையை தொழிலாளர் ஆத்திரத்துடன் நிராகரிக்க வேண்டியதுதான். ஆனால், இதைப்பற்றிச் சிந்திக்கையில் அவர்கள் தங்கள் அனுபவத்தை நினைவுறுத்திக்கொள்ள வேண்டும். இதுவரை எவ்வளவு வேலை நிறுத்தங்கள் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கின்றன; மொத்தத்தில் பாட்டாளிகளுக்கு லாபமா, நஷ்டமா என்பதைப் பதட்டமின்றி தொழிலாளர் ஆராய்வாராயின், அவர்கள் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வரக்கூடும். அவர்களைத் தங்கள் சொந்த நலத்திற்குப் பயன்படுத்துவதில் அக்கறை கொண்ட அரசியல் வாதிகளின் மதிப்பீட்டைக் கொண்டு அவர்கள் ஏமாந்துவிடக்கூடாது. எப்படியும் இரண்டு அல்லது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி ஓரளவேனும் நாட்டில் சுபிட்சம் நிலைக்கும் வரையிலேனும், வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற கருவிகளை உறையில் போட்டு வைத்திருப்பது தங்கள் சொந்த நலத்தோடு, சமுதாய க்ஷேமத்துக்கும் உகந்ததல்லவா என்று தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் சிந்திக்க வேண்டுகிறோம்.

2-8-59 வார இதழ் கண்டேன். அட்டைப்பட 'அழகி'ன் எடுப்பான அமைப்பு என் உள்ளத்தில் இன்பத் தேனை வாரி வழங்கியது. இதழினுள்... 'ரகமி'யின் 'நிலைக்கட'லில் நல் இதயத்துடன் பிரயாணம் செய்து 'இன்பம் எங்கே' என்ற கரையை அடைந்தேன். அங்கு லதாவின் யோசனையை எதிர்பார்க்கும் பாஸ்கரன், யசோதா காதலர்களைப் போல என் உள்ளமும் அடுத்த கட்டம் என்ன என்று எதிர்பார்க்கும் அளவுக்கு கதையை ஓட்டிச் செல்கிறார் சரோஜா ராமமூர்த்தி. இத்தனைச் சிறப்பு இயல்புகளைக்கொண்டு நல்ல இதழாக மலர்ந்த இவ்வார இதழைப் போன்று என்றும் மலர வேண்டுமென எண்ணுகிறேன்! வளர்க மித்திரன்!

ஜீ. தியாகராஜன்,
இளையான்குடி

2-8-59-ந் தேதி இதழ் கண்டேன். படித்தேன், பரவசம் அடைந்தேன். 'குலப் பெருமை' 'அன்புத் தீர்ப்பு' இவைகள் என் நெஞ்சைத் தொட்டு விட்டன. அவைகளை எழுதிய ஆசிரியர்களுக்கு என் இதயங் கலந்த நன்றி.

அ. முகமது ரபி,
புதுக்கோட்டை

2-8-59-ந் தேதி இதழ் கண்டேன். அதில் வெளிவந்த கதைகள் திருப்திகரமாக அமைந்துள்ளன. நட்சத்திரப் பேட்டி சிறந்த முறையில் அமைந்துள்ளது. சினிமா விமர்சனம் நன்றாக இருக்கின்றது. துணுக்குகள் எல்லாம் பழைய முறையிலேயே அமைந்துள்ளது. மித்திரன் எப்பொழுதுவரும் என்று எதிர்பார்க்கவைக்கும் 'நிஜமும் நிழலும்' தொடர் கதை படிக்க ஆவலாயிருக்கிறது.

பி. சீனிவாசன்,
சென்னை-18.

2-8-59 மித்திரனில் வெளிவந்த 'அன்புத் தீர்ப்பு' என்ற கதையைப் படிக்கும்போது என் மனதைக் கவர்ந்தது. புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன் என்ற பழமொழிக்கு சான்றாகிவிடுகிறது. இதை எழுதிய கதை ஆசிரியர் வித்வான் கு. நா. கிருஷ்ணமூர்த்தி அவர்கட்கு என் வாழ்த்து. வெளியிட்ட தங்களுக்கும் நன்றி. சுதேசமித்திரனில் வரும் கதைகள் எந்த கதையும் கருத்துள்ளதாய் உள்ளது.

ஆர். தனக்கோடி,
கோட்டப்பாளையம்.

சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வரும் தொடர் கதைகள், சிறுகதைகள், சினிமா விமர்சனம், நடிகர், நடிகைகள் பேட்டி, திரையில் காணமுடியாத நடிகைகளின் புகைப் படங்கள் ஆகியவை மிக நன்றாக இருக்கின்றன.

அரசியல் விஷயங்கள் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கின்றன.

சாண்டில்யனின் சினிமா விமர்சனம் கனகச்சிதமாக உள்ளது. சிறந்த குடும்பப் பத்திரிகை சு. மி. வாரப் பதிப்பு.

ஆ. நடராஜன்,
தாரமங்கலம்.

தங்கள் வாரப் பதிப்பை நீண்டகாலமாக விடாது எங்கள் குடும்பத்தினரனைவரும் படித்தின்புற்று வருகிறோம். இலக்கிய உலகில், சிறந்த மணம் பரப்பும் தங்கள் இதழ்கள் தனிப்புகழ் பெறுபவை. உயர்ந்த கதைகள், உன்னதக் கருத்துகள், உள்ளம் உவக்கும் விஷயங்கள் யாவும் நிறைந்து, குடும்பத்தினர் யாவரும் கூட்டாகக் கூசாது படிக்க ஏதுவான ஏடு தங்கள் மித்திரன் ஒன்றே.

வை. சண்முக சக்திவேல்,
சிவகாசி.



# இலங்கை விகிதம்

இவ்வாரம் கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷன் காரியாலயத்தின் முன்பு மலையாளிகள் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். அவர்களைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் பதின்மூன்று பேர்கள் காயமடைந்தனர். ஒருவர் மண்டை உடைந்து அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இரண்டு தினங்களுக்கு முன்னல் இலங்கை மலையாளி மகாஜன சபையினர் கொழும்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி கேரளத்தில் இந்திய மத்திய அரசாங்கம் தலையிட்டதை வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்கள். அந்தத் தீர்மானத்தின் நகலை டில்லி சர்க்காருக்கு அனுப்பி வைப்பதற்காக இந்திய ஹைகமிஷனரிடம் சமர்ப்பிப்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி சென்ற திங்கட்கிழமை சுமார் 200 மலையாளிகள் இந்திய ஹை கமிஷன் முன்னிலையில் பெருங்கூட்டமாகக் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்திய அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தும், கேரள கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை வாழ்த்தியும் எழுதப்பட்ட கலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் கூட்டமாக இந்திய ஹை கமிஷனுக்குள் நுழைவதை இந்திய ஹைகமிஷனர் அனுமதிக்கவில்லையாம். அவர்களது மகஜரை ஏற்கவும் ஹைகமிஷனர் மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. உண்மை என்னவெனில் கூட்டத்திலிருந்து ஏழெட்டுப் பேர்களடங்கிய ஒரு தூதுகோஷ்டியினர் உள்ளே வந்து ஹைகமிஷனரைச் சந்திக்கலாமென்று கூறப்பட்டதாயும், இது சம்பந்தமாகப் பேச்சுகள் நடந்துகொண்டிருக்கையில் வெளியே காத்திருந்த போலீசார் கூட்டத்தினரைக் கலைந்து போகுமாறு உத்தரவிட்டதாயும், கூட்டத்தினர் கலைய மறுக்கவே அவர்களைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்ததாயும் தெரிய வருகிறது.

போலீசாரை அங்கு தருவித்தது யார் என்ற பிரச்னையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கிளப்பியிருக்கிறார். இந்திய ஹைகமிஷன் போலீஸாரை தாங்கள் அழைக்கவில்லையென்றும் போலீசார் தாங்களாகவே வந்ததாயும் கூறப்படுவதால் இது ஒரு முக்கியமான சட்டப் பிரச்னையைத் தோற்றுவித்திருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள ஸ்தானிகாலயக் கட்டிடம் இருக்குமிடம் அந்நாட்டுக்குச் சொந்தமானதாகையால் அங்கு அழைப்பின்றி அத்துமீறிப் போலீஸார் நுழைவது துராக்கிரதமென்றும் போலீசாரின் இந்த அடாத செயலைப்பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ பீட்டர் கெனமென் பிரதம மந்திரி பண்டாரநாயகாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்திய ஹை கமிஷன் அதிகாரிகளை விசாரித்ததில் தாங்கள் போலீசாரை அழைக்கவில்லையென்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களின் தூதுகோஷ்டிக்கு இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ கன்டேவியா பேட்டியளித்து அவர்கள் அளித்த மகஜரை வாங்கிக்கொண்டிருக்கிறார். அதை டில்லிக்கு அனுப்பி வைப்பதாயும் உத்தரவாதமளித்திருக்கிறார்.

## தமிழ் மசோதா ஒரு கேலிக்கூத்து

இவ்வாரம் பார்லிமெண்டில் பட்ஜட் விவாதத்தின்போது கோப்பாய்ப் பிரதிநிதியும் தமிழ்அரசுக் கட்சியின் முன்னாள் தலைவருமான ஸ்ரீ வி. வன்னியசிங்கம் பேசியபொழுது தமிழ் மொழிக்கு நியாயமான அளவு அந்தஸ்து அளிக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டு அரசாங்கம் இயற்றிய சட்டம் ஒரு பெரிய கேலிக்கூத்தாக இருக்கிறதென்றும், படிப்படியாக சர்வமும் சிங்களமயமாக்கப்படுவதுடன் தேசிய மொழி இலாகாவிலிருக்கும் தமிழ் அதிகாரிகளுக்குத் தமிழ் மொழியில் ஒரு கடிதம் அனுப்புவதற்குக்கூட உரிமையில்லையென்றும் குற்றம்சாட்டினர். தேசிய மொழி இலாகா சிங்களத்தில் கலைச்சொல் அகராதியைத் தயா

சிந்து இதுவரை நான்கு புத்தகங்களை வெளியிட்டுவிட்டது. தமிழிலோ ஒரேயொரு புத்தகம்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தையும் அரசாங்கம் மாதக்கணக்கில் வெளியிடாமல் வைத்திருந்ததை ஸ்ரீ வன்னியசிங்கம் பார்லிமெண்டில் இடித்துக் காட்டிக் கேட்ட பிறகுதான் அதை வெளியிட்டது. இதுதான் தமிழ் மொழிக்கு நியாயமான அளவு அந்தஸ்து அளிக்கும் முறையா? என்று ஸ்ரீ வன்னியசிங்கம் பிரதம மந்திரியைக் கேட்டார். உண்மையில் நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையைப் போலிருந்து வருகிறது. தமிழ் மொழிக்கு நியாயமான அளவு அந்தஸ்து அளிக்கப் போவதாகச் சொல்லி அரசாங்கம் சட்டமியற்றுவதற்கு முன்பாவது தமிழ் சில அரசாங்க இலாக்காக்களில் ஓரளவு உபயோகிக்கப்பட்டு வந்தது. தமிழுக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கத் தீர்மானித்த பிறகோ தமிழுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விடைகொடுத்து அனுப்பி வருகிறார்கள்.

## வெளிநாடுகளில் தமிழர் கல்வி

தமிழ் மாணவ மாணவிகள் இந்தியாவில் நடனம், சங்கீதம் முதலிய அருங்கலைகளில் பயிற்சிபெறச் செல்லுவதாயின் அவர்களது கல்விச் செலவுக்கு முன்பெல்லாம் செலாவணிக் கட்டுப்பாடு இலாகா தங்குதடையில்லாமல் பர்மிட் வழங்கி வந்தது. இப்பொழுது கொஞ்ச காலமாக இந்த மாணவர்களுக்கு பணம் அனுப்பப் பர்மிட் கொடுக்கப்படுவதில்லையென்று பலத்த புகார்கள் கிளம்பியிருக்கின்றன. இதைப்பற்றி இவ்வாரம் ஒரு அங்கத்தினர் பார்லிமெண்டில் கேட்டபொழுது இலங்கையில் கிடைக்காத மாதிரியான கல்வியை வெளிநாடுகளில் கற்பதாயிருந்தால் தான் பணமனுப்ப பர்மிட் கொடுக்க முடியுமென்றும் மற்ற மாணவர்களுக்குப் பணமனுப்ப அனுமதிப்பதில்லையென்றும், இதுதான் அரசாங்கக் கொள்கையென்றும் நிதி மந்திரி விளக்கிக் கூறினார். படிப்புச் செலவுக்காக இலங்கை மாணவர்கள் வெளிநாடு செல்லுவதையும் அவர்கள் பணமெடுத்துச் செல்லுவதையும் கட்டுப்படுத்த அரசாங்கம் சமீப காலத்துக்கிடையில் தீவிரமான நடவடிக்கையெடுத்து வருகிறது.

## கவர்னர் ஜெனரல் ரேஸ் கிடையாது

இலங்கையில் குதிரைப் பந்தயங்கள் நடைபெறும் பொழுது கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடப்பது பல்லாண்டுகளாக இருந்து வரும் வழக்கம். அந்நிய ஆட்சியாளர்களின் காலத்திலிருந்து வந்தது இந்த வழக்கம். இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகும் இவ்வளவு காலமும் இது நீடித்து வந்தது. பண்டாரநாயகா அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குடியையும், குதிரைப் பந்தயத்தையும் ஒழித்துக் கட்டப் போவதாக மகாஜனங்களுக்கு உறுதி கூறியிருந்தது. குடி விஷயத்தில் அரசாங்க வைபவங்களில் மதுவை விநியோகிக்கக்கூடாது என்று உத்தரவிட்டார்கள். ஆனால், மதுபானத்தைத் தடுக்க எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு மாறாக அரசாங்கமே சாராயத்தை வடித்து பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யும் வழக்கம் எப்பொழுதும்போல நீடித்திருந்து வருகிறது. சாராயம் வடிப்பதும் விற்பதும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிருப்பது போதாதென்று கள் விற்பனையில் நேரடியாக இறங்கவும் உள்நாட்டு அமைச்சு ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது. இந்த லட்சணத்தில் குதிரைப் பந்தயத்தைத் தடை செய்வது அரசாங்கத்தின் இலட்சியமாயிருக்கும்பொழுது கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடப்பது குதிரைப் பந்தயத்தை அரசாங்கம் நேரடியாக ஆதரிப்பதைப் போலிருக்கிறதென்றும் ஆகையால் இனி கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடக்கக்கூடாதென்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஸ்தாபனம் கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க கவர்னர் ஜெனரல் ஸர் ஆலிவர் குணதிலகா குதிரைப் பந்தயத்துக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டார். இதன் பயனாக இனி இலங்கையில் கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடைபெறமாட்டாதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.






## 28

## அன்பே எனும் ஒரு சொல்!

கோழையை வீரனாக்குவதும், வீரனைக் கோழையாக்குவதும் சந்தர்ப்பங்கள்தாம். கன்னத்தில் ஐந்து விரல்கள் சித்திரத்தில் தீட்டியதுபோல் பதிந்து இருந்தன. நிலைக்கண்ணாடியின் முன்பு நின்று கன்னத்தைத் தடவிக்கொண்டாள் யசோதா. திலகவதி அடிக்கடி சொல்லி இருக்கிறாள். 'உன் அப்பா மகா கோபி அம்மா. இருந்தாலும் நான் ஒரு அடிகூட அவரிடம் வாங்கியதில்லை. அவரை மறுத்துப் பேசியதில்லை. அவர் காட்டும் வழியே போய் விடுவேன்.' 'அம்மா ஒரு கோழை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் யசோதா. 'அவள் இல்லையே என்று நான் வருந்தவில்லை. இருந்தாலும் இந்த மனிதருக்கு அடங்கி ஒடுங்கித்தான் இருப்பாள்'. யசோதா இப்படி நினைத்துப் பொருமினாள். திலகத்துக்கு வாழ்க்கை அமைந்த விதத்தில் அதை ஏற்றுக்கொண்டாள். ஆனால், யசோதாவுக்கு இனிமேல்தானே வாழ்க்கையே ஆரம்பமாகிறது? திலகத்தைப் போல் இவள் வாய்மூடி மௌனமாக இருந்துவிடமுடியுமா?

யசோதாவுக்கு நெற்றி நரம்புகள் புடைத்துக்கொண்டு தலையை விண்விண் என்று வலித்தது. ரங்கம்மாள் வாயிற்படி அருகில் வந்து நின்று எட்டிப் பார்த்து விட்டுப் போனாள். பாலையா பூனையைப்போல் பதுங்கிக்கொண்டே காரியாலயத்துக்குப் போய்விட்டான். பரமசிவம் தன் கன்னத்தில் அடி விழுந்தாற்போல் உள்ளம் பொருமினான். அருணாசலம் தொண்டையைக் கனைத்துக் கொண்டே மெதுவான குரலில், 'இந்த வீட்டுக்குச் சனியன் பிடி

த்தா ஒரு வருஷமாச்சு. அத்தையம்மா வந்தப்புறம் யசோதாம்மா நல்லா சிரிச்சு நான் பாக்கலை' என்று வருத்தத்துடன் மொழிந்தான்.

ராஜாத்தி, 'உக்கும்' என்று தோளில் முகத்தை இடித்துக் கொண்டு நொடித்தாள்.

'முறைப் பையன் அது இதுன்னியே! இப்பத் தெரிஞ்சுதா ஒனக்கு?' 'தெரிஞ்சுது' என்று ஆமோதித்தான் அருணசலம் தன் காதல் மனையாளிடம்.

'உனக்கு எம்மேலே எவ்வளவு ஆசையோ அவ்வளவு அந்தம்மாவுக்கு மானேஜர் ஐயா மேலே.' இதை மாத்திக்கமாட்டாங்க. மாத்தவும் கூடாது. மாத்தறவங்க ரொம்பப் பொல்லாதவங்க.'

'முதல்லே நீங்க ஒங்க மனசை மாத்திக்கிட்டீங்களே. அதுதான் பெரிசு. சின்னம்மா மனசு தெரிஞ்சப்புறம் நாம சும்மா இருக்கக்கூடாது...' ராஜாத்தி தலைப்பை வரிந்து கட்டிக் கொண்டு அருணசலத்தின் எதிரில் வீராங்கனைபோல் நின்றாள். சமீபத்தில் வெளிவந்த தமிழ்ப் படத்தில் தமிழ்ப் பெண்களின் வீராவேசத்தைப் பார்த்துவிட்டு வந்திருந்தாள். அவளுக்குத் துணிவு பொங்கிக்கொண்டு வந்தது.

'இப்படியெல்லாம் பேசிட்டா ஆகாது கண்ணு. பேசறது வேறே. செய்கையிலே காட்டறது வேறே. நீ தாம்தாம்னு கிளம்பறதைப் பாத்தா இந்த வீட்டிலே இருக்கிற அத்தனைபேரும் முதல்லே உன் சீட்டைக் கிழிச்சு வெளியே என்னையும் சேத்துத் தொரத்திடுவாங்க. காதும் காதும் வைச்சாப் பலே ஏதாச்சும் செய்யணும்...'

அருணசலம் இவ்விதம் சொல்லிவிட்டு ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டான். அவன் தோளிலும், மார்பிலும் தூக்கிச் சுமந்து வளர்த்த பெண்ணுக்கு எதிரில் மலைபோல் ஒரு பிரச்னை நிற்பதைக்கண்டு கலங்கினான். யசோதாவுக்குப் பணம் இருக்கிறது. வாழ்க்கை வசதிகள் அனைத்தும் உள்ளவள். ஆனால், அன்பு ஒன்றுக்காக ஏங்கித் தவிக்கிறாள்.

மனைவியை அடக்கி ஆண்ட ராஜாராமன் உள்ளத்தை அன்பு, பாசம் எதுவுமே அண்ட முடியவில்லை. மனைவி அன்று அடங்கி வாழ்ந்தாள். இன்று மகள் அடங்கி நடக்கவேண்டும். அவர் மனத்தைச் சார்ந்து அவர்கள் இயங்க வேண்டும். அவர்கள் மனத்தைச் சார்ந்து அவர் இயங்கமாட்டார். மனைவி அடங்கி ஒடுங்கிப் போனாள். அப்படியே தேய்ந்து மாய்ந்தும் போய்விட்டாள். மகளுக்குக் குறிப்பிட்ட காலத்துக்குமேல் பெற்றவர் அன்னியராகிவிடுகின்றனர் என்றும் மாபெரும் உண்மையை அவர் அறியவில்லை.

அன்பும், பாசமும் மோதிக் கொண்டாற்போல், தந்தையும், மகளும் மோதிக்கொண்டார்கள். விளைவைப் பற்றிதான் அருணசலம் கவலைப்பட்டான்.

யசோதா மறுபடியும் கண் விழித்துப் பார்த்தபோது இரவு வந்துவிட்டது. ஜன்னலுக்கு வெளியே வானம் வெறிச்சென்று கிடந்தது. நீள் விசும்பில் மினுக்கும் தாரகைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மலர்ந்த மல்லிகையைப்போல் காணப்பட்டன. கண் இமைகள் இரண்டும் கனத்தன. நெற்றிப் பொட்டு வலித்தது. கண்களிலிருந்து ஆவி கிளம்பியது.

ராஜாத்தி உள்ளே வந்து அவள் நெற்றியில் கை[illegible]த்துப் பார்த்தபோது அனலாகக் கொதித்தது.

'என்ன அம்மா இது? ஜுரமல்ல வந்திருக்கு? அத்தையம்மா கிட்டே சொல்லட்டுமா?' என்று கவலையுடன் கேட்டாள். யசோதா ராஜாத்தியின் கழுத்தை அப்படியே வளைத்துக் கட்டிக்கொண்டாள்.

'ராஜாத்தி! இதோ என் கன்னத்தைப் பார்' என்று சிரித்துக் கொண்டே கன்னத்தைக் காட்டினாள்.

ராஜாத்தியின் தளிர் விரல்கள் அந்தக் கன்னத்தை ஆசையுடன் வருடின. 'எப்படி யசோதா அழாமல் இருக்கிறாள்' என்று நினைத்து ராஜாத்தி அழுதாள்.

'ஏன் அழுகிறாய் ராஜாத்தி? தந்தையின் பாசத்துக்குள் அகப்பட்டு வளர்ந்திருந்தால் அவர் என்னைப் புரிந்துகொண்டிருப்பார். அந்தச் சூழ்நிலையில் நான் வளரவில்லை. அவரும், நானும் ஒதுங்கியே இருந்தோம்...'

'போங்கம்மா! உங்க பேச்செல்லாம் எனக்குப் புரியலை. பெத்த மக கிட்டே இப்படி முரட்டுத்தனமா இருப்பாங்களா?' யசோதாவுக்கு அயர்வாக இருந்தது. கள்ளமற்ற அந்தப் பெண்ணுக்கு மனோபேதங்களைப்பற்றி எப்படி விவரிப்பது?

யசோதா இரவு சாப்பாடும் வேண்டாம் என்ற போதுதான் ரங்கம்மாள் உள்ளே வந்து பார்த்தாள்.

'ஜுரமா வந்திடிச்சி? எனக்கு அப்பவே தெரியும்' என்று சலித்துக்கொண்டு யசோதாவைத் தொட்டுப் பார்த்தாள் அவள். பாலையா வாயிற்படி அருகில் வந்து நின்று பார்த்தான். ராஜாராமன் வைத்தியரை வரவழைத்தார்.

அடுத்த நாள் விசேஷம் யசோதா படுக்கையாக இருப்பதால் தள்ளிப் போடப்பட்டது.

பாக்கு வெற்றிலை மாற்றவில்லை. யசோதா ஜுரமாகப் படுத்திருக்கிறாள் என்கிற செய்தியை அருணசலம் பாஸ்கரனிடம் சென்று தெரிவித்த பிறகுதான் அவன் விழித்துக்கொண்டான். அதுவரையில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதுபோல் மயங்கிக் கிடந்தான் பாஸ்கரன்.

உண்மையான காதலுக்கு மதிப்புக் கொடுக்கிறவர்கள் தங்கள் சுயகௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட சகிக்கமாட்டார்கள். அன்று, ராஜாராமன் தம் மகளுக்குக் கல்யாணம் என்று தெரிவித்தபோது பாஸ்கரனின் உள்ளம் கடலாகக் கொந்தளித்தது. உலகத்து வேதனை பூராவும் அந்த நெஞ்சுக்குள் வந்து புகுந்து கொண்டன. துயரத்துடன் வீட்டை அடைந்தான்.

'இருபது வருஷங்களாக வளர்த்துப் பெரியவளாக்கிய தந்தையை விட்டு நீ வெளியே வந்துவிடு' என்று அவன்தான் அழைக்க முடியுமா? அவள்தான் வருவாளா? ஒரு குடும்பத்தை விட்டு ஒரு பெண் வெளியேற வேண்டுமானால் அதில் ஊடுருவி இருக்கும் இன்னல்கள் அநேகம்.

பாஸ்கரன் தீவிரமாக யோசித்தான். இதுவரை ஒரு கடிதம்கூட அவன் யசோதாவுக்கு எழுதியதில்லை. அன்று எழுதினான்.

'அன்பே!

நீ எனக்கு எட்டாதவள் என்று தெரிந்திருந்தும் உன்னிடம் என் மனம் வந்து எப்படியோ அடைக்கலம் தேடிக்கொண்டு விட்டது. உன் அத்தை மகனை ரயிலடியில் பார்த்த அன்றே மனத்தில் வேதனை கொப்புளித்து எழுந்

தது. 'உரிமைக்காரன் முறைக்காரன் வந்துவிட்டான். மனத்தை அடக்கவேண்டும்' என்று நினைத்தேன். முடியவில்லை. காரணம், இளமையின் கனவுகள் எழுப்பும் இன்ப நினைவுகள்தாம். சடுதியில் இளமையை முதுமையாக்கிக் கொள்ள நம் முன்னோர்கள் தெரிந்துகொண்டிருந்தார்கள். முற்றிலும் குடும்பச் சூழ்நிலையில் கணவனுக்கு பணிந்து போன தாய்க்கு மகளாகப் பிறந்துவிட்டாய். அந்தப் பண்பாட்டிலே வளர்ந்தும் விட்டாய்.

ஒரே வரியில் எழுதிவிடுகிறேன். நான் விரைவில் வெளியூர் சென்று விடுகிறேன். உன்னைக் கனவிலே கண்ட காரிகையாக மதித்து மனப்பெட்டகத்தில் வைத்துப் போற்றுகிறேன். நீ உன் வாழ்வை பாழடித்துக் கொள்ளாதே.

உன் அன்பன்,
பாஸ்கரன்.


கடிதம் பாரதியின் கவிதைப் புத்தகத்தில் ஒளிந்து கொண்டு ராஜாத்தி மூலமாக யசோதாவை அடைந்தது. யசோதா கன்னத்தில் அடி வாங்கிய அன்று மாலை கடிதத்தைப் பார்த்து விட்டுச் சீறினாள். 'கொஞ்சம்கூட அன்பில்லாதவர் அன்பே என்று வேறு அழைத்துக் கொள்கிறார். நீதிக் கதைகள் பேசுகிறார்' என்று நினைத்துக் குமுறி அழுதாள்.



அருணாசலம் பாஸ்கரனிடம் தகவலைச் சொல்லிவிட்டுப் போனவுடன் கோதையம்மாள், 'என்ன தம்பி! முதலாளி வீட்டு ஆள் வந்துவிட்டுப் போறான்?' என்று விசாரித்தாள்.

'என்னவோ வந்தான். போகிறான்' என்று சுவாரஸ்யமில்லாமல் பதிலளித்தான் பாஸ்கரன்.

கோதையம்மாளுக்கு அவனுடைய உள்ளம் புரிந்திருந்தது. பத்துப் பதினைந்து தினங்களாக அவனிடம் வேதனையும், பெருமூச்சும் நிலைத்திருப்பதைப் பார்த்தே புரிந்துகொண்டாள்.



'என் தம்பி மறைக்கிறே! ஓம் மனசு எனக்குத் தெரியாதா? நமக்கும், அதுக்கும் எட்டுமான்னுதான் நான் யோசிச்சுக்கிட்டு இருந்தேன். ஒருவேளை ஓம் முதலாளி உங்கிட்டே பிரியமா இருக்காரேன்னும் நெனச்சேன். பணம் இருக்கிறவங்க அதைத் தேடிக்கிட்டுப் போய் ஒட்டிக்கு

வாங்க. நம்மை மதிக்கமாட்டாங்கன்னு இப்பத்தான் தெரிஞ்சுகிட்டோம். விட்டுத் தள்ளு தம்பி.'

யசோதாவின் அன்பை விட்டுத் தள்ள முடியுமா? சுலபத்தில் முடிந்து விடுகிற காரியமா அது?

'பெரியம்மா! யசோதாவுக்கு ஜுரமாம். அதனால் பாக்கு வெற்றிலை மாத்தறதுகூட நின்னு போச்சாம். படுக்கையிலே இருக்குதாம்.' ஆண்பிள்ளை தவியாகத் தவித்தான். அவன் அருமைக் காதலி அவனுக்காக அனல் படுக்கையில் கடுந்தவம் புரிகிறாள். இவன் அன்புக் கரங்களின் ஸ்பரிசத்துக்காக ஏங்குகிறாள்.

'லதா வரட்டும் தம்பி. போய்ப் பார்த்துவிட்டு வரச் சொல்கிறேன். ஒண்ணும் இருக்காது, பாவம், தாயில்லாத பெண். அதும் மனசைப் புரிஞ்சுக்காத ஒரு அப்பனுக்கு மகளாகப் பொறந்து தவிக்குது...'

கோதையம்மாள் கண் கலங்கினாள்.

பள்ளிக்கூடத்திலிருந்து லதா வந்ததும் செய்தியைக் கேட்டுத் துடித்துப் போனாள். அவசரமாக யசோதாவின் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள். அங்கே அவள் சென்று யசோதாவின் படுக்கை அருகில் உட்கார்ந்ததும்தான் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை புரிந்து கொண்டாள்.

தாமரை குவிந்தாற்போல் இரு விழி மலர்களும் குவிய படுத்திருந்தாள் யசோதா. அடிக்கடி அவள் முகத்தில் மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டே இருந்தன. வெட்கம், கோபம், துயரம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளின் சாயல்கள் அந்தத் தாமரை முகத்தில் நிழலாட்டம் ஆடின.

'அன்பே' என்று அழைக்கிறான் பாஸ்கரன். அந்த ஒரு சொல்லில் உலகத்து இன்பம் பூராவும் பாய்ந்தோடி வருகிறது. தாப உணர்ச்சியினால் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. தண்ணென்று நிதானமாக ஓடுவதுபோல் இருக்கிறது. யாரோ மெல்லிய துணியினால் முகத்தை ஒத்திவிடுகிறார்கள். யாரோ என்ன? பாஸ்கரனின் அன்புக்கரங்கள்தாம் அவை. முந்தைய பிறவிகளில் அந்தக் கரங்களின் அன்புப் பிடியில் அவள் சிக்கியிருக்கிறாள். அவை அவளுக்குப் புதியவை அல்ல. மிகமிகப் பழையன. சுரீர் என்று உடலிலே ஒரு புதிய வேதனை. பாஸ்கரனைக் காணோம். பாலையா ஊசியால் அவளைக் குத்துகிறான். 'அத்தான்! என்னைத் துன்புறுத்தாதீர்கள். பிறந்த நாளிலிருந்து உங்களை என் உடன்பிறந்தவனாக நினைத்து வந்திருக்கிறேன்...' கண்கள் அருவிகளாகின்றன.

ராஜாராமன், பிரம்பைக் கையில் வைத்துக்கொண்டு சொடுக்கிவிடுகிறார். 'உம்...இவன் கழுத்தில் மாலையைப் போடு...' 'அப்பா!' என்று சீறுகிறாள் யசோதா. அம்மாவைப்போல நான் உங்களுக்கு அடிமை இல்லை. என்னை விட்டு விலகிப் போங்கள்.'

பயங்கரமாக அலறிக்கொண்டு படுக்கையிலிருந்து கீழே விழப் போனவளை லதா அன்புடன் அணைத்துப் படுக்க வைத்தாள்.

(தொடரும்)



## தலைநகர்க் கப்பால்

## அட்டைப்பட விளக்கம்

★

"கன்னத்தில் ஐந்து விரல்கள் சித்திரத்தில் தீட்டியது போல் பதிந்து இருந்தன நிலைக் கண்ணாடியின் மீது நின்று கன்னத்தைத் தடவிக்கொண்டாள் யசோதா."

இந்த வரிகளில் கண்ட சோகக் கட்டம் இவ்வார "இன்பம் எங்கே?"யில் வருகிறது. அதைத்தான் அட்டைப்படமாகத் தீட்டியிருக்கிறார் ஓவியர் ராகவன்.

★

### ஆந்திரர் பள்ளிக்கூடம்

தில்லியில் ஆந்திரர் பள்ளிக் கூடமும் சீராக வளர்ந்து வருகிறது. இந்தப் பள்ளிக்கூடத்து விஸ்தரிப்புத் தொகுதி ஒன்றை இந்திய அரசாங்கத்துக் கல்வி இலாகா மந்திரி டாக்டர் ஸ்ரீ மாலி சென்ற புதன்கிழமையன்று திறந்து வைத்துப் பேசினார். சுமார் 850 பாலர்கள் படிக்கும் கலாசாலையாக இது வெகு குறுகிய காலத்தில் வளர்ந்துள்ளது. இதில் தெலுங்கு பேசாதவர்கள் ஐந்நூறு பேர் என்று அறிவித்தார்கள். தில்லிவாழ்த் தென்னாட்டினர் பெருமிதங் கொள்ளக்கூடிய ஒரு சில ஸ்தாபனங்களில் இந்தப் பள்ளிக்கூடம் ஒன்றாகும்.

'தில்லியில் படிப்பிலும் விளையாட்டுகளிலும் இதர நடவடிக்கைகளிலும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களைக் காட்டிலும் தனியார் நிர்வாகத்தில் உள்ள பள்ளிக்கூடங்களே எவ்வளவோ சிறப்பானவை' என்று இந்தியக் கல்வி மந்திரி தனியார்ப் பள்ளிகளைப் பாராட்டினார். தனியார் பள்ளிக்கூடங்களுக்கு, மொத்த செலவில் 90 சதவிகிதம் அரசாங்கமே கொடுத்து வருகையில் அவற்றை ஏன் தானே மேற்கொண்டு நடத்தக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள்; ஆனால், இது சரியல்ல என்றார் மந்திரி. அரசாங்கம் 99 சதவிகிதம் கொடுத்தாலும் சரி, நிர்வாகம் தனியார் வசமே இருப்பது தான் நல்லதென தாம் கருதுவதாக டாக்டர் ஸ்ரீ மாலி கூறினார். ஆந்திரப் பள்ளியின் இந்நிகழ்ச்சியில் தனியார் பள்ளிக்கூடத்தினருக்கு மந்திரி நிறைய பாராட்டுக்களை அள்ளி வீசினார்.

'ஒவ்வொரு பிராந்தியமும் மொழியும் அதனதன் பங்குப் பணியைச் செய்து வளமிக்க இந்திய பண்பாட்டை உருவாக்க வேண்டும்; அதுவும் பல்வேறு கலாசாரங்களும் ஒருங்கே சந்திக்கவல்லதான தில்லிமாநகரில்தான் அந்த ஒருமையான இந்தியக் கலாசாரம் மிளிரவேண்டும்' என்று லோக் சபாவின் சபாநாயகரும் ஆந்திரப் பள்ளி நிர்வாகக் கமிட்டி உறுப்பினருமான ஸ்ரீ எம். அனந்தசயனமய்யங்கார் கூறினார்.

### டில்லி சர்வகலாசாலை- பன்மொழி போதனை

இந்தியாவின் முக்கிய மொழிகள் பதினான்கையும் கற்றுக்கொடுக்கவல்ல முதலாவது சர்வகலாசாலையாகும். தனிச் சிறப்பு தில்லி சர்வகலாசாலைக்கு வெகு சீக்கிரமே கிடைக்கப் போகிறது. சமீபத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மொழியிலும் ஒரு தனி விரிவுரையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தேசீய மொழிகளில் ஹிந்தி, சம்ஸ்கிருதம், உருது, பஞ்சாபி ஆகியவை ஏற்கனவே கற்றுக் கொடுக்கப்படுகிறது. வங்காளி, குஜராத்தி, மராத்தி ஆகியவற்றின் போதனைக்கு ராஜ்யங்களின் உதவியைக் கொண்டு ஏற்பாடு செய்ய முயன்று வருகிறார்கள். இந்திய மொழிகளில் எம். ஏ. பட்டத்திற்கு வகை செய்யும் பாடத் திட்டமொன்று சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி எம். ஏ.யில்

ஹிந்தி படிக்கும் மாணவர் தனது விருப்ப மொழியாக தென்னாட்டு மொழியையோ வங்காளியையோ படிக்க இந்த திட்டம் வகை செய்கிறது.

மொழிகளில் மட்டுமின்றி, பாரதீய இசை போதனையிலும் தலைநகர் சர்வகலாசாலை ஈடுபட்டிருப்பது நினைவிருக்கலாம். கர்நாடக இசைக்கென ஸ்ரீ வி. வி. சடகோபனை நியமனஞ் செய்த சர்வகலாசாலை ஹிந்துஸ்தானி இசைக்கு, விஸ்வ பாரதியைச் சேர்ந்த டாக்டர் ரவீந்திரலால்ராயை நியமனஞ் செய்திருக்கிறது. ஹிந்துஸ்தானி இசையில் ஹானர்ஸ் படிப்பிற்கான திட்டமொன்றை வரையப் போகிறார்கள். இது சம்பந்தமாக சர்வகலாசாலைக்கு ஆலோசனை கூறி உதவுவதற்கென, சங்கீத கலா நிதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யரைத் தலைவராகக் கொண்ட 14 அறிஞர்களின் கமிட்டி ஒன்றை நியமித்துள்ளனர்.

### ஆங்கிலமும், ஹிந்தியும்


பிரதம மந்திரி ஸ்ரீ நேரு இந்த வாரம் மொழிப் பிரச்னை சம்பந்தமாக கொள்கையை விவரிக்கும்' உரை ஒன்றை பார்லிமெண்டில் நிகழ்த்தினார். ஆங்கிலத்தையும் இந்திய மொழிகளில் ஒன்றாகச் சேர்க்கக் கோரிய தனியார் தீர்மானம் சம்பந்தமாகப் பேசுகையில் ஸ்ரீ நேரு மொழி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். 'ஹிந்தி பேசாத மக்கள் விரும்புமளவும் ஆங்கிலம், ஹிந்தியோடு துணை அரசாங்க மொழியாக இருக்கவே செய்யும்' என்று ஸ்ரீ நேரு சந்தேகத்திற்கு இடமின்றி அறிவித்தார். 'நவீன உலகின் வெவ்வேறு துறை அபிவிருத்தியையும் படம் பிடித்துக் காட்டுவதற்கானதொரு சீரிய சாதனம் —ஆங்கிலம் என்பதால் அதை விரும்புகிறேன். ஆங்கிலம் ஒரு ஜன்னல்; அதை மூடிவிட்டால் விஞ்ஞான நுட்பவியல் முன்னேற்றம் எதையுமே நாம் தெரிந்து கொள்ள இயலாது போய்விடும்' என்றும் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு தெரிவித்தார்.

அவர் ஹிந்தியைப் பற்றியும் அழகுற எடுத்துச் சொன்னார். நடைமுறை காரணங்கள் நிமித்தமே ஹிந்தி அரசாங்க மொழியாயிற்று என்பதை விளக்கினார். ஆனால், அதை பிறர்மீது திணிப்பது என்பது கூடாது என்றார். 'தென்னாட்டில் பெருந்தொகையான மக்கள் ஹிந்தி பயின்று வருகிறார்கள். ஆனால், அதை திணிப்பதாகப் பேச்சு எடுக்கும் போதெல்லாம் அம்மக்கள் வெகுண்டெழுகிறார்கள்' என்று நேருஜி சொன்னார்.

நுட்ப பதங்கள் மொழி பெயர்ப்பு பற்றி பிரதம மந்திரி வெளியிட்ட கருத்துக்கள் சிறப்பாக கவனிக்கத் தக்கவை. 'ஹிந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் நுட்பப் பதங்களுக்கு இப்போது புதிது புதிதாக வெளியாகிவரும் மொழி பெயர்ப்புகள் என்னைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தி விடுகின்றன. மொழி பெயர்ப்பு ரொம்பவும் செயற்கையானதாயிருக்கிறது. இன்னதெனப் புரிந்து கொள்ள உதவுவதாக இல்லை; இந்தப் பதங்களை ஆக்கியவருக்கு இது விளங்குகிறதோ இல்லையோ? அதி உத்சாகிகள் நடவடிக்கையின் விளைவு இது. மொழி என்பது நேர்த்தியான மலர்; அது மென்மையானது. அதை இழுத்துப் பிடித்து முறுக்கி வளரும்படிச் செய்வதற்கில்லை. அது இயல்பாக வளர்ச்சியுற வகை செய்வதுதான் முறை' என்று ஸ்ரீ நேரு கூறினார்.

இந்நாட்டில் சர்வதேச எண்ணிக்கை முறையே இனியும் உபயோகத்திலிருந்து வரவேண்டும் என்று அவர் சொன்னார். நவீன காலத்தின் சின்னம் இந்த முறை என்றும், விஞ்ஞான கணிதத் துறையில் இது அடிப்படையாகும் என்றும் நேருஜி எடுத்துரைத்தார்.







## பகவான் புத்தர்

கலை சொட்டும் கற்பனை முத்திரைகளுடனும், காதுக்கினிய நிருத்திய சங்கீதத்துடனும் வர்ண ஜால ஓவியமாக விளங்குகிறது உலகப் புகழ் உதயஷங்கரின் 'பகவான் புத்தர்' நிழலாட்டக் காட்சி.

சென்னை சமூக கலாசார சங்கத்தின் ஆதரவில் உதயஷங்கர் குழுவினர் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதான கலா மண்டபத்தில் சென்ற ஞாயிறன்று நடத்த முன்வந்த இரண்டாவது நிழலாட்டமாகும் இது.

இரண்டாண்டு அசுர முயற்சி, பயிற்சிக்குப் பிறகு அவர்களது முதல், 'ராம் லீலா' நிழலாட்டக் காட்சி அரங்கேறியது. ஆனால் 'பகவான் புத்த'ரை உருவாக்க பத்தே மாதங்கள்தான் பிடித்தது என்கிறார் உதயஷங்கர். காட்சியைக் கண்டு களித்தவர்கள் அக்கூற்றை எளிதில் நம்பமாட்டார்கள். அவ்வளவு அற்புத சிருஷ்டி.

நிழலாட்டக் கலை தொன்மையானது. இந்தியாவில் மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் பலவித ரூபங்களில் பல நூற்றாண்டுகளாக மக்களை மகிழ்வித்து வருகிறது அக்கலை. ஆனால் இதுவரை உலகம் கண்டிராத பிரும்மாண்டமான வெண் திரையில் அபார நுணுக்கங்களுடனும், உத்திகளுடனும் அக்கலையை வளர்க்க முன்வந்திருக்கும் உதயஷங்கரின் ஆர்வத்தை எவ்வளவு போற்றினாலும் தகும்.

'பகவான் புத்தர்' நிழலாட்டத்தில் பின்னணிக் காட்சிகள் மிகவும் பிரமாதம். உதயஷங்கரின் மனைவி ஸ்ரீமதி அமலாவின் கைவண்ணமே அதற்கெல்லாம் மூல காரணம். காட்சி மாறுதல்களுக்கு ஏற்ப பின்னணி சூழ்நிலையும் வேகமாக உருமாறும் அழகை என்னென்று வருணிப்பது?

அரசி மாயாதேவி வெள்ளை யானை ஒன்றை கனவு கண்டு, புத்தரை பெற்றெடுப்பதிலிருந்து இப்புனித சரித்திரம் ஓவியமாக ஓட ஆரம்பிக்கிறது.

யசோதராவை சித்தார்த்தர் மணம் புரிதல், புது அரண்மனை நிர்மாணம், சித்தார்த்தர் அரச போகத்தைத் துறந்து சந்தடியின்றி குதிரையிலேறி வெளியேறுவது, போதி மரத்தடியே அவர் நிஷ்டையைக் கலைக்க பூதம், பிசாசு, மோகினிகள் எடுக்கும் வீண் முயற்சிகள் முதலியவை இந் நிழலாட்டத்தில் வரும் சில குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

உதயஷங்கரும், அமலாஷங்கரும் இதில் நடிப்பது மற்றுமோர் தனி விசேஷமாகும். ஆட்டம் இரண்டு மணி நேரத்துக்கும் குறைவே. காட்சிகள் கொஞ்சமும் சுணக்கமின்றி ஓட்டமாக ஓடுகின்றன. பொழுதுபோனதே தெரியாமல் ஒரு புத்துணர்ச்சியுடன் அன்று காட்சி முடிந்ததும் எல்லோரும் வெளியேறியதாகவே எனக்குத் தோன்றியது.

—ஸஞ்சாரி.

# பச்சிலை வைத்தியம்

## பண்டித அ. மருத்துவமணி

## 3. குப்பைமேனி

தமிழ்நாட்டில் எளிதில் கிடைக்கக் கூடிய பச்சிலை வகைகளில் இதுவும் ஒன்று.

இதற்குப் பூனை வணங்கி என்றும், பிரிதொரு பெயர் உண்டு. இப்பெயர் வந்ததற்குக் காரணம்;

பூனை, குப்பைமேனிச் செடியிருக்கும் பக்கம் சென்று, தலைகீழாக விழுந்து, வணங்கி அச்செடியைத் தாண்டிச் செல்லாமல் ஒதுங்கிச் செல்லுமாம்.

அன்றியும், பூனை நோய்வாய்ப்பட்டால் குப்பைமேனிச் செடியிருக்கும் பக்கம் சென்று அச்செடி இலையில், தன் தலையை வைத்துத் தேய்த்துக்கொள்ளுமாம். தேய்த்துக்கொள்ளுவதோடல்லாமல், இலையை தன் நாவினால் நக்கிக் கொடுக்குமாம்.

பூனை இவ்வாறு செய்வதனால், அதற்கேற்பட்டிருக்கும், மந்தம், அஜீர்ணம், உடல்வலி, கண்நோய் இவைகள் நீங்கி விடுகின்றனவாம்.

### வயிற்றுக்கிருமி நீங்க

1. குப்பை மேனி இலை ஒரு பிடி, வேப்பீர்க்கு ¼ பலம், பூவரசன்பட்டை ¼ பலம், கல், மண் நீங்கலாக ஓமம் ¼ பலம் இந்நான்கினையும் தெளிய அரைத்து, அரிநெல்லிக்காயளவு எடுத்து, ஒரு சங்கு முத்துக்கொட்டை எண்ணெயில் கலக்கிக்கொடுக்க வயிற்றுக் கிருமிகள் அற்று விழும்.

2. குப்பைமேனி இலை இரண்டு பிடி, சரக்கொன்றைக் கொழுந்து இரண்டு பிடி, இவ்விரண்டினையும், ஒரு தோராயமாக எடுத்து, சட்டிக்குள் வைத்து அவித்து, பிறகெடுத்துப் பிழிந்து, ஒரு சங்குச்சாற்றில், ஒரு டியூஸ்பூன் சீனி கலந்து குழந்தைகளுக்குக் கொடுக்க கிருமிகள் விழும்.

மேற்சொல்லிய அளவு 3 வயதிலிருந்து ஐந்து வயது வரை. ஐந்திலிருந்து பத்து வயதுவரை இரண்டு பங்கு. பெரியவர்களுக்கு நான்கல்லது, ஐந்து பங்கு வீதம் உபயோகிக்கலாம். (பத்தியம் இல்லை)

### வாயு வீக்கத்துக்கு

மேனி இலைச்சாறு 2 அவுன்ஸ், சுண்ணாம்பு ஒரு அவுன்ஸ் சேர்த்து குழைத்து, வேதனையுடன் கூடிய வாயு வீக்கத்துக்குத் தடவ, வீக்கம் வாங்கும், உபாதையும் நீங்கும்.

### பித்த சாந்திக்கு

குப்பைமேனி இலையை, இரண்டு பிடியளவெடுத்து கால்படி தண்ணீரில் போட்டு ஒரு ஆழாக்காக கண்டக் காய்ச்சி வடிகட்டி, அதில் ஒரு ஸ்பூன் உப்பைக் கரைத்து ½ ஆழாக்கு வீதம் பெரியவர்களருந்த, கபத்தாடனும், மஞ்சள்நீர் போலும், இரு தடவை வாந்தியாகும். (பத்தியம் இல்லை)

சிறியவர்களுக்கு ¼ ஆழாக்கு வீதமும், மூன்று வயதிலிருந்து ஐந்து வயது குழந்தைகளுக்கு ஒரு சங்கு வீதமும் கொடுக்கப்போதுமானது. இரண்டொரு தடவை மலமும் போகும்.

### கப சம்பந்தமானவற்றிற்கு

அரை அவுன்ஸ் மேனிச் சாறும், ¼ அவுன்ஸ் வேப்பெண்ணெயையும் ஒன்றாய்க் கலந்து, பஞ்சில் தோய்த்து உள் நாக்கல்லது, தொண்டையில் தடவ, வயிற்றில் தங்கி இருக்கும் கபக்கட்டு வாந்தியாகி வெளிப்படும்.

### பூச்சி விஷக்கடிக்கு

மேனிச் செடியை, சட்டென்று பிடுங்கி இலையைப் பறித்து, கசக்கிப் பிழிந்து மேலே தடவி, சாம்பிராணி புகை, நெருப்புச் சூடு காட்டவும். காதுக்குள் இரண்டிரண்டு துளிகள் விடவும். உள்ளுக்கு 2 அவுன்ஸ் சாற்றைப் பிழிந்து கொடுக்கவும். இவ்வாறு செய்தால் விஷக்கடி உபாதை நீங்கும். நீடித்து இரண்டு நாளைக்கும் கொடுக்கலாம்.



### இருமல் நீங்கும்

மேற்படி இலைச்சாறு 6 அவுன்ஸும், கற்கண்டு 2 பலமும் சேர்த்து பாகு ஆகும் பொருட்டு, பதமுறக் காய்ச்சி இறக்குந்தருவாயில் ¼ பலம் திப்பிலியைப் பொடித்துப் போட்டு நன்றாய்க் கலந்து, தினமிரு வேளையும் ஒன்றல்லது இரண்டு டீஸ்பூன் குழந்தைகளுக்குக் கொடுத்து வர, பொடி இருமல் நீங்கும்.

பெரியவர்களுக்கு ½ அல்லது ¾ அவுன்ஸ் வீதம் கொடுக்கவும்.

### ஆரம்ப பைத்திய ரோகத்துக்கு

மேனி இலைச்சாறு ¼படி, எள்ளெண்ணெய் ¼ படி, ஆவின் பால் ¼படி இம்மூன்றினையும் ஒன்றாய்க் கலந்து, தைல பதமாய் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, இரண்டு நாளைக்கு ஒருதரம், ஒரு அவுன்ஸ் தைலத்தை தலையில் தேய்த்து குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து வர, ஆரம்ப பைத்தியம் நீங்கும்.

### நாட்பட்ட இரணங்களுக்கு

ஒரு விராகனெடை பாத ரசமும், ஒரு பிடி குப்பை மேனியும் சேர்த்து மைபோல அரைத்து ஒரு மெல்லிய வெள்ளைத் துணியில் தடவி, வத்தி போல் சுருட்டி, வெய்யிலில் உலர்த்தி, வத்தி நுனியைக் கொளுத்தி ஆறாத இரணங்கள்மீது காட்ட, புகை ஊறல் படியும். பிறகு அதிலிருந்து துர்நீர் கசிந்து, நாலைந்து நாட்களில் இரணம் ஆறி வருவதைக் காணலாம். புகை காட்டிய சிறிது நேரத்துக்குப் பிறகு வெள்ளைத் துணியால் சுத்தமாய் ஒத்தி எடுத்துவிட்டு புண்மீது சிறிது தேங்காய் எண்ணெயை தடவி விடவும்.

### எலிக்கடி விஷம் நீங்கும்

குப்பைமேனி வேரையரைத்து, கொட்டைப் பாக்களவு எடுத்து, ஒரு ஆழாக்கு ஆவின் பாலில் கலந்து, மூன்று நாளிருந்த எலிக்கடி விஷம் நீங்கும். மூன்று நாளைக்கு உப்பில்லாப் பத்தியம் இருக்கவும்.

### தலைவலிக்கு

குப்பைமேனிச் சாற்றுடன், சுக்கை இழைத்து நெற்றிக்குப் பத்துப்போட்டு சிறிது சாம்பிராணி புகை நெருப்புச் சூடு காட்ட உடனடியாக தலைவலி நீங்கும்.

### படுக்கைப் புண்ணுக்கு

குப்பைமேனி இலையையும், மஞ்சளையும் சமன் கூட்டியரைத்து, பூசிவர படுக்கைப் புண் ஆறும். இதனை புண் ஆறும்வரை நீடித்துச் செய்ய வேண்டும்.

### மார்பு வலிக்கு

மேற்படி இலையை யுலர்த்தி இடித்து, மெல்லிய துணியினால் வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு சமனளவு சீனிகலந்து, ஒரு ஆழாக்கு காய்ச்சிய ஆவின் பாலில் ஒரு சிட்டிகை அளவெடுத்துக் கலந்து நாளொன்றுக்கு ஒரு வேளை வீதம், காலை மட்டும் பதினைந்து நாள் முறையேயிருந்த மார்பு வலி நீங்கும். தேகம் குளிர்ச்சித் தரும். அதனால் சரீர வனப்பும், சரீர எழுச்சியுமுண்டாகும்.




"என்னப்பா, ட்ரைவர்? கார் காபி குடிக்குதா?"

"உங்க ஒட்டல் காபி பெட்ரோல் வாசனை அடிக்கும்னு எங்க முதலாளி சொல்வாருங்க!--அதனாலே தான்...!"




அந்தத் திருமண அழைப் பிதழைக் கரங்களில் வைத்துக் கொண்டு நெடு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் சுந்தரி.

ஹூம்! நாம்தான் நன்றாக இருக்கக் கொடுத்து வைக்க வில்லை என்றாலும் அவளாவது சுகமாக இருக்கட்டும்! நாகரிகக் கணவன் நமக்குத்தான் கிடைக்காவிடினும் அவளாவது உயர்ந்த நிலையில் இருக்கட்டும்! இளமையில் கட்டிய இன்பக் கோட்டைகள் என் வாழ்வில்தான்



நிறைவேறவில்லை என்றாலும் அவள் வாழ்விலாவது பெருகி வளரட்டும்!

கையிலிருந்த அழைப்பிதழை மேசையுள் வைத்தாள். அவளைப் பார்த்துச் சிரித்தது அது!

சுந்தரியும், சகுந்தலாவும் ஒரே பள்ளியில் பாடம் பயின்றவர்கள். இருவரும் எஸ். எஸ். எல். சி. வகுப்புவரை படித்தவர்கள். பள்ளப் படிப்பு முடிந்தும் சுந்தரியும், சகுந்தலாவும் இணை பிரியா நட்பினராய் இருந்து வந்தனர்.

இருவரும் சேர்ந்தே ஆற்றுக்குச் செல்லுவர். ஆற்றிலிருந்து திரும்பும்பொழுது இருவரும் இன்பக் கோட்டைகள் பலவற்றைக் கட்டிக்கொண்டு நடந்து வருவர். தம் பிற்காலப் பெரு வாழ்வு எப்படி அமைந்திட வேண்டும் என்று அவர்கள் அப்போதே முடிவு செய்திருந்தார்கள்.

தமக்குக் கணவன் என்ற நினைவு எழுந்தபோதெல்லாம் அவர்கள் கண்கள்முன் தோன்றிய ஆடவன் கோட்டும், பாண்ட்டுமாக இருபதாம் நூற்றாண்டின் நாகரிகத்தின் சிகரமாகவே தோன்றினான்.

சுந்தரி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை, கட்டுக் குடுமியையும், வெற்றிலைப் பாக்கு வாயையும், பொடி போடும் மூக்கையும்!

தனிக் குடித்தனம் என்ற நினைப்பு எழுந்தபோதெல்லாம் அவளுடைய கண்முன் பெரிய மாளிகைபோன்ற இல்லமும், எல்லாக் காரியங்களைச் செய்வதற்கு வேலை ஆட்களும் தாம் தோன்றின!

அவள் கனவில்கூட இந்தப் பழையது சோற்றையும், ஒட்டு



வீட்டையும் நினைத்தது கிடையாது!

நாட்கள் ஓடின! இரண்டாவது முறை கோடை வந்து ஆற்று நீர் வற்றி பின் வெள்ளமும் வந்து விட்டது! அவளுக்கே வியப்பாக இருந்தது இரண்டாண்டுக் காலம் இவ்வளவு விரைவில் எப்படிச் சென்றது என்று!

அப்பா சுத்த கர்நாடகம்! எதற்கெடுத்தாலும் ஜாதகம்—விதி—சாஸ்திரம் இவைதாம்! அடுத்த தெருவிற்குச் செல்ல வேண்டும் என்றாலும் ஆயிரம் முறை சகுனம் பார்க்கும் 'அந்தக் கால' மனிதரைப் பார்த்துச் சிரித்தாள் சுந்தரி.

வீட்டில் திருமணப் பேச்சு துவங்கியது. சுந்தரிக்கு இருப்பே கொள்ளவில்லை. இன்னும் இரண்டே நாட்களில் தன்னைப் பார்க்கத் தன் வருங்காலக் கணவன் வரப் போகிறான் என்பதறிந்து இன்பக் கூத்து ஆடினாள். சகுந்தலாவிடம் சொல்லிக் களித்தாள். அவள் பரிகாசம் செய்தாள்.

'அகமுடையான் வருவதற்கு முன்பே இவ்வளவு கூத்தா? சரிதான்!' என்றாள் தன் குறும்புப் பார்வைக்கிடையே!

எப்படித் தன்னை அலங்காரம் செய்துகொள்வது என இருவரும் ஆராய்ந்தனர். ஆனால், அந்தப் பிள்ளையாண்டான் வந்த அன்றோ?—

நல்ல அம்மா வந்து வாய்த்தாள்!

'என்னடி இது? பெண் பார்க்க வரப் போகிறார்கள் என்றால் இப்படியெல்லாமா அரட்டை மாதிரி அலங்காரம் செய்துகொள்வது? இலட்சணமா, தலை வாரி, பூ வைத்து, குங்குமம் இட்டுக்கொண்டிருப்பாயா? எங்கேயிருந்தோ 'ஒரு வண்டி' செண்ட்டும், பவுடரும், ஸ்னோவும் கொண்டு வந்திருக்காயே? நல்ல பெண்தான்!' என்று தடுப்பாள்?

'சரி, நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் போலிருக்கிறது' என்று நினைத்துக்கொண்டு எரிச்சலுடன் அந்த அழகு சாதனங்களை எடுத்து ஓர் அட்டைப் பெட்டிக்குள் போட்டு வைத்தாள்!

மாலையில் 'திடு'மென ஓர் மாட்டு வண்டியில் 'ஜம்' என்று கட்டுக் குடுமியும், ஜரிகை வேஷ்டியும் கொண்ட ஓர் ஆடவன் இறங்குவதை ஒளிந்திருந்து ஜன்னல் வழியே நோக்கிய சுந்தரியைத் தூக்கிவாரிப் போட்டது.

வாழ்க்கையில் நாம் எண்ணிய படியெல்லாம் ஏன் நடப்பதில்லை? நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்க வேண்டும்? அதிர்ஷ்டத்தைத் தேடிச் செல்ல முயலும்போது இந்தப் பத்தாம் பசலி அப்பா வந்து வேண்டாம் எனத் தடுப்பாரா? ஒன்றும் புரியாத மனிதராய் இருக்கிறாரே! அவள் எண்ணி எண்ணி வருந்தினாள்.

அப்பாவிடம் வாயைக்கூடத் திறக்க முடியாது. வாயைத் திறந்து ஏதேனும் சொன்னால் அப்படியே எரித்து விடுவது போல் பார்க்கத் தொடங்கி விடுவார். மிஞ்சிப் போனால் 'இந்தக் காலப் பெண்களே இப்படித்தான்! படிப்பதால்தான் இத்தனைத் தொல்லை' என்றெல்லாம் கூறத் தொடங்கி விடுவார். யார் போய் இந்தப் பதினெட்டாம் நூற்றாண்டு மனிதரிடம் கூறுவார்?

எண்ணிய எண்ணமெல்லாம் நிறைவேறாதபடி அந்தக் குடுமி



நாதனுக்கே மனைவியானாள் சுந்தரி.

அவளுடைய வீட்டில் சாப்பாட்டுக்கும் குறைவில்லை, அன்புக்கும் குறைவில்லை. ஆனால், ஏதோ வேறு ஒரு குறை அவளை வதைத்துக்கொண்டிருந்தது.

ஆம்! அவர் நாகரிகம் என்றால் என்னவென்றே அறியாதவராய் இருந்தார். 'ஜாலி'யாக அவருடன் சேர்ந்து ஒரு சினிமா, டிராமா எனப் போகலாம் என்றாலோ அவர் கோவிலுக்குப் போக அழைக்கிறார். என்ன விந்தையான மனிதர்? கோவிலில் போய் கும்பிட்டால்தானா தெய்வம்?

இவர்களுடைய வாழ்க்கையும் ஒருவிதமாக நடந்துகொண்டிருந்தது.

சுந்தரியின் திருமணம் முடிந்து ஆறு மாதத்துக்கெல்லாம் சகுந்தலாவுக்குத் திருமணம் என அழைப்புக் கடிதம் வந்தது.


கடிதத்தை வைத்துக்கொண்டு நெடுநேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். மேசையில் வைத்து விட்டு உள்ளே சென்றாள்! அவளுடைய கணவர் வயலில் வேலை செய்து விட்டுத் திரும்பினார்.

வந்ததும், 'இதோ பாருங்கள்! என்னுடைய தோழி சகுந்தலாவுக்குத் திருமணமாம். நாம் இரண்டு பேரும் போயாக வேண்டும். ஆமாம். அவளே லெட்டர் எழுதியிருக்கிறாள்!' என்றாள்.

'என்றைக்குக் கல்யாணம் சுந்தரி?'

'வருகிற புதன்கிழமை' என்றபடி உள்ளே சென்றுவிட்டாள் அவள்.

'நாம் எப்படி சுந்தரி போவது? அன்றுதானே வயலில் அறுவடை?'




''டேய்! என்னோடு சண்டைக்கு வர்றியா?''

'' ஐயோ! உன்னோடா? என்னாலே முடியாதப்பா!''

''போடா மண்டு! சண்டை பார்க்க வர்றியான்னு கூப்பிட்டால்!''

---

'ஆமாம். நமக்கு என்றுதான் வேலையில்லை? தினம் ஒரு பிடுங்கல்!'

'சுந்தரி, அப்படிச் சொல்லாதே. இந்தச் செய்தி இன்னும் ஒரு வாரம் முன்னதாகத் தெரிந்திருந்தால் நான் அறுவடையைத் தள்ளி வைத்திருப்பேன். ஆனால், இப்போதோ நாள் வைத்தாகி விட்டது. ஆட்கள் வந்து நிற்பார்கள்! அவள் புக்ககம் போனவுடன் ஒருநாள் போய் பார்த்து விட்டு வரலாம் என்ன?'

'சரி உங்கள் இஷ்டம்!'

அத்தோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. இருவரும் தத்தம் வேலைகளைக் கவனிக்கச் சென்று விட்டனர்.

அவளுக்குத் திருமணம் நடந்து மாதம் ஒன்ருகி விட்டது.

ஒரு நாள் திடீரெனக் கிளம்பினர்கள் சுந்தரியும், அவள் கணவரும். சகுந்தலாவின் புக்ககம் நாற்பது மைல் தொலைவில் ஓர் சிற்றூரில் இருந்தது.

இருவரும் அங்கே சென்று சகுந்தலாவின் வீட்டிற்குள் நுழைந்தனர். அப்பொழுது அங்கு அவளுடைய கணவர் இல்லை.

'எங்கேடி உன் கணவர்?' என்ருள் சுந்தரி தன் தோழிக்கு அன்பளிப்பாக வாங்கி வந்த வெள்ளித் தம்ளரைத் தந்தபடி.

'வயலுக்குச் சென்றிருக்கிருர். நாற்பது ஏகர் நிலம் எங்களுக்குச் சொந்தம்! கொஞ்சம் கொஞ்சமாக அறுவடை ஆகிக்கொண்டு வருகிறது. மேற்பார்வைக்கு இவரே நேரில் போயிருக்கிருர்!' என்ருள் சகுந்தலா பெருமிதத்தோடு.

'பரவாயில்லை. புளியங் கொம்பாகத்தான் பிடித்திருக்கிருய்!' என்ருள் சுந்தரி சிரித்துக் கொண்டே.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது தெருப் பக்கம் 'ஜல் ஜல்' என வண்டி வரும் ஓசை கேட்டது.'

'அவர் வருகிருர்' என்று வெளியே சென்ருள் சகுந்தலா.

எப்படி இருக்கிருர் சகுந்தலாவின் கணவர் என்ற ஆவல் சுந்தரியைத் தூண்டியது. திரும்பிப் பார்த்தாள்.

அங்கே வாயிலில்—

வண்டிக்காரனும், சகுந்தலாவும் கையைப் பிடித்து அவரை வண்டியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தனர்.

'ஏனிப்படி இறக்க வேண்டும்?' என்று திகைத்தவளாய் அவருடைய கால்களைப் பார்த்தாள் சுந்தரி. அவற்றுள் ஒரு காலுக்குப் பதிலாக கட்டை தாங்கிக்கொண்டிருந்தது.

ஆம்! அவளுடைய கணவர் ஒரு காலற்றவர்.

சுந்தரியின் கண்கள் அவளையறியாது கண்ணீர் வடித்தன.

அவர் இவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று விட்டு உள்ளே சென்று விட்டார்.

சற்று நேரங்கழித்துச் சகுந்தலாவைத் தனியே அழைத்துக் கேட்டாள் சுந்தரி.

'ஏன் சகுந்தலா, உன் கணவருக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டதா?'

இக்கேள்விக்கு விடையளிக்கு முன் ஓர் முறை சிரித்தாள் அவள்.

'விபத்தினுல் அவருடைய கால்கள் அப்படி ஆகவில்லை சுந்தரி! அவருக்குப் பிறவியே அப்படித்தான்!'

'என்ன? தெரிந்துமா கல்யாணம் செய்து கொண்டாய்?'

'அது ஒரு பெரிய கதை சுந்தரி. உன் திருமணம் பெற்ருேர்களின் விருப்பப்படி, அவர்கள் மகிழ நடைபெற்றது. ஆனல், எனது திருமணம் பெற்ருேர் கண் கலங்க, பலத்த எதிர்ப்புக்கிடையே நடைபெற்றது.

'எனக்குத் திருமணம் என்ற பேச்சைத் துவங்கியவுடன் பலர் பிள்ளை தர முன் வந்தனர். என்னுடைய அத்தையும் ஓர் நாள் வந்தாள். என் பெற்ருேரிடம் கெஞ்சினுள்' எப்படியாவது என்னைத் தம் மருமகளாக்கிக் கொடுக்கும்படி என்னை ஒரு குறையுமின்றிக் காப்பதாகச் சத்தியம் வேறு செய்தாள்! ஆனல், எனது பெற்ருேருக்கு மனம் இடந்தரவில்லை!



ஆனல் அத்தையின் கதறல் என் நெஞ்சை உருக்கியது!

'நானும் சிந்தித்தேன்! அவருக்கு நான் முறைப் பெண் தானே? பாவம்! யார் அவரைக் கைப்பிடித்து மணாளனகப்பெற முன் வருவர்? கால் ஒன்று நொண்டியாய் இருந்தால் என்ன? நல்ல மனமும், தங்கக் குணமும் உடையவராயிற்றே அவர்? நான் அவரை மணக்க முடியாது என்று சொல்லியிருக்கலாம். ஆனல்... அவர்களுக்குப் பெண் கிடைக்காமல் போகாது. எங்காவது ஒன்றை இழுத்துக் கட்டிவிடுவார்கள். ஆனல், இருவருடைய வாழ்வும் கசந்ததாய்த் தானிருக்கும்! நானும், என் அத்தானும் மனமொத்து வாழ்வை நடத்தினல் ஒடிந்த காலொன்று குறையாகவே தோன்ருது என நினைத்தேன். வாழ்க்கை வெற்றிகரமாக நடக்கக் குணம்தான் தேவை சுந்தரி! எங்கள் பெற்ருேரிடம் எப்படியோ சண்டை பிடித்து முடிவில் என்னருமை அத்தானையே மணந்துகொண்டு விட்டேன். எனக்கென ஒரு குறையும் வைக்கமாட்டார் அவர்! நானும் என் தெய்வத்தைக் கண்கலங்க விடமாட்டேன்!' என்ருள் சகுந்தலா.

உண்மை அன்பு எப்படிப்பட்டது எனப் புரிந்துகொண்ட சுந்தரியின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அன்றிலிருந்து தன் கணவரிடம் சுந்தரி நடந்துகொண்ட விதமோ, 'அத்தான்' எனக் கனிவோடு அவள் புதுமையாக அழைத்தவிதமோ அவளுடைய கணவருக்கே வியப்பைத் தரும்படியாக இருந்தது!

☆



# வல்லத்துக் கோயில்

விக்கிரமன்

திருக்கழுகுக் குன்றத்துக் குடைவரைக் கோயிலுக்குப் பிறகு அதே பெரும்பாட்டையில், ஒரு காலத்தில் பல்லவ மாமன்னர்கள் பவனி வந்த நெடுஞ்சாலையில் செங்கல்பட்டை நோக்கிச் சென்றுமானால் செங்கல்பட்டிற்கு அருகே உள்ள குன்றின் பக்கச் சரிவில் மூன்று குடைவரை மண்டபங்களைக் காணலாம்.

இப்பொழுது செங்கல்பட்டு மாவட்டத்தில், செங்கல்பட்டுத் தாலுகாவில் வல்லம் விளங்குகிறது. பழைய சாஸனங்களில் 'களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டு வல்லம்' என்று இவ்வூர் கூறப்படுகிறது.

சாலையினின்று காணும்போது ஒரே குகைக் கோயில் இருப்பது போல் தோன்றினும் நெருங்கிக் காணும்போது மற்றுமிரு பூர்த்தியாகாத மண்டபங்கள் இருப்பது தெரியவரும். இவற்றை அடையச் செப்பனிடப்படாதபடிக் கட்டுகளும், குன்றின் அடிவாரம் அடைய ஒற்றையடிப் பாதையும் உள்ளன.

பூர்த்தியடைந்த குகைக் கோயிலின் முன்பாகத்தில் பிற்காலத்தில் செங்கல்லால் சுவர் எழுப்பிக் கதவு போட்டு பெரும் பூட்டையும் தொங்கவிட்டு விட்டார்கள். இதனால் பார்வையே கெட்டுவிட்டது. சிவபெருமான் வதியும் இக்கோயிலிலுள்ள ஆண்டவனுக்குப் பூசையுண்டு.

பஸ்ஸில் இருந்து இறங்கும் போதே பஸ் கண்டக்டர் 'அந்தக் கோயிலுக்கா போகிறீர்கள்? அதைத் திறந்து காட்ட பூசை செய்பவரைப் பிடிக்கமுடியாதே' என்றார்; அதன்படியே தான் ஆகி விட்டது. முற்றுப் பெறு இரு மண்டபங்களையும் கண்டுவிட்டுத் திரும்ப வேண்டித்தான் இருந்தது. ஆனால், அதற்குள்ளிருக்கும் சிற்பங்களைக் கற்பனை செய்து கொண்டோம். அதனுடன் பிரஞ்சுப் பேராசிரியர் டுப்ரேல் அவர்கள் முதன்முதலாக எழுதி வைத்த நூலில் எழுதியிருப்பதைப் படித்ததைக்கொண்டு வல்லத்துக் கோயிலில் இருப்பதைக் கூற முடிகிறது.

இக்கோயிலை அமைத்தவரும் மகேந்திரவர்மன்தான் என்பது இங்குள்ளக் கல்வெட்டினின்று அறிய முடிகிறது. அந்தச் சாசனம் வருமாறு:—

'பகாப்பிடுகு லளிதாங்குரன்
சத்துருமல்லன் குணபரன்
மயேந்திரப் போத்தரெசரு
அடியான்
வயந்தப்பிரி அரெசரு மகந்
கந்தசேனன்
செய்வித்த தேவகுலம்'

பகாப்பிடுகு, லளிதாங்குரன், சத்துரு மல்லன், குணபரன் எனும் பெயர்கள் யாவும் மகேந்திரவர்மனது சிறப்புப் பெயர்கள். அந்த அரசரது காலத்தில்



றீர்கள். உணவு வேளையில் இப்படித் தாங்கள் வந்து காத்துக் கொண்டிருப்பதன் காரணத்தையும் நானறிவேன். எதற்கும் தங்களுடைய வாய்மூலம் நான் அறியவேண்டுமல்லவா?'

'அறிய வேண்டும் மகா சக்கரவர்த்தி! நிச்சயம் அறிய வேண்டும்! என்னுடைய வீட்டில் ஏதோ தவறுதலாக நடந்த திருட்டின் காரணமாக சில நாட்களாகவே நான் நினைவு மயங்கி இருக்கிறேன். எதிலும்—'

தானைத் தலைவர் அரையர் இராசராசர் முடிக்கவில்லை—

'நாட்டமில்லை. பாசறையிலும் கூட பயிற்சி வேகம் குறைந்திருக்கிறது. ஏன்? வீட்டிற்கும் கூட சரிவர போவது கிடையாது என்றுதான் கேள்விப்பட்டேன்'.

ஊகம் நிறைந்த சக்கரவர்த்தி உடன் தொட்டு முடித்தார்.

'ஆம். மகா சக்கரவர்த்தி!'

அரையர் இராசராசர் குரலில் கம்மல் தெரிந்தது.

'அதற்காக இப்போது என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?'

'சோழர்ப் பூபதி! என்னுடைய மைத்துனன் தியாகராஜன் என்பவரை நிரபராதிஎன்றே நினைக்கிறேன். என்றாலும் என்னுடைய மனையாள் ஐயப்படுகிறாள். அவள் உடன் பிறந்தவனாயிருந்தாலும், உறவினனாயிருந்தாலும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற கண்டிப்புக்காரியாகஇருக்கிறாள். அவளுடைய சாட்சியத்தைப் பெரிதாகக் கருதாமல் தியாகராஜனை விடுதலை செய்யும்படிக் கோருகின்றேன். என்னுடைய வீட்டுத் திருட்டானாலும், நாட்டைப் பாதிக்கக்கூடியதுதான். எனினும் நான் பொறுப்பேற்றுப் பொறுத்தருள வேண்டுகிறேன்!'

தானைத் தலைவரின் நிலை கண்ட சோழ மகா சக்கரவர்த்தி மெல்ல நகைத்தார், அவருடைய நகைக்கான உட்பொருளை எவரும் உணர்ந்துகொண்டார்களில்லை, உணர்ந்துகொள்ளவும் முடியாது, ஆகவே. சோழ மாதேவி, இராசராசர்பக்கம் நின்று துணை பேசினாள். சக்கரவர்த்தியும் அமைதியான பார்வையுடன் நோக்கியவண்ணம் தியாகராஜனுக்கு விடுதலை தர ஆவன புரிவதாக வாக்களித்தார்.

## 2

தியாகராஜனை விடுதலைசெய்து கொண்டு வீடு திரும்பினார் அரையர் இராசராசர். அவருடைய வருகையில் இன்று மிடுக்கு காணப்பட்டது. உள்ளே நுழைந்த இருவரைக் கண்டதும் சாரதாதேவிக்கு உள்ளம் வெகுண்டது. தன்னுடைய தம்பி எப்படி விடுதலையானான் என்று எண்ணுவதை விட்டு, ஏன் விடுதலையானான் என்றே எண்ணலானாள். தியாகராஜனைக் கண்டதும் அவளுக்குத் திகைப்புமட்டுமல்ல, திடீர்ப் பயமும் முளைத்து விட்டது. எனினும் அவன் அப்பாவிதானே, என்றெண்ணிய வண்ணம் எதையும் காட்டிக் கொள்ளாமல் வரவேற்றாள்.

'சாரதா, உன் தம்பியை விடுதலை செய்யாதவரையில் . எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை'.

சற்றேறக்குறைய தமிழறிந்து கொண்ட சாரதா தேவியும், தட்டுத்தடுமாறிச் சொன்னாள்:

'எனக்குங்கூட அதே கவலை தான். என்னமோ, முத்துத் தோடு காணாது போன வேகம், தம்பியாக இருந்தாலும் காட்டிக் கொடுக்கச் சொல்லிவிட்டது

என் மனம் பிறகுதான் வருந்தினேன். திருடிய பாவி, சொல்லிவிட்டுத் திருடக்கூடாதா?'

அரையர் இராசராசர் பெருத்த குரலில் சிரித்தார்.

'பைத்தியக்காரா! இப்படித்தான் இருக்கும் உன் மூளையும். இல்லையென்றால், உடன்பிறந்த தம்பி, உன்னோடு துணைவந்த தம்பியைக் காட்டிக் கொடுத்திருப்பாயா? இனிமேல் இம்மாதிரியெல்லாம் நடக்காதே!'

எல்லாவற்றிற்கும் வாய் திறவாத தியாகராஜன் அமைதியாக ஆலோசனையில் மூழ்கியிருந்தான். இனி அவனுக்கு இந்த உலகமே இருண்டது



போல்தான். ஒழுக்கமாக நடக்க வேண்டுமென்று இதுவரை அவனுடைய வாழ்நாளில் நடந்து வந்தான். ஒழுக்கத்திற்கு உறைவிடமான "தமிழகத்திற்கு வர வேண்டுமென்ற கனவு, நனவானதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் சோழ நாட்டை அடைந்தான். ஆனால்?

சோழநாட்டுச் சிறை அவனைத் திருடனாக்கி விட்டது.

இரண்டு வார காலமாக அவன் இருளைத்தான் கண்டு வந்தான்.



இனி என்றும் இருள்தான் என்ற முடிவுக்கும் வந்துவிட்டான். என்ன உலகமோ, உலகம்! தராசுக்கு இரண்டு தட்டுக்கள் என்றால், இந்த நேர்முள்ளற்ற உலகிற்குப் பல தட்டுகள் போலும்!

கங்கைப் போர் நடந்துகொண்டிருந்த சமயம்.

வெற்றித் தேவதை மாவீரர் இராசேந்திர சோழ மகா சக்கரவர்த்திக்கு வாகை மேல் வாகை சூட்டிக் கழுத்தை நோகடித்தாள். அந்த அளவிற்குப் பெரு வெற்றி கண்டு வரலாற்றுப் புகழ் பெற்றார் இராசேந்திர சோழ தேவர். அவரைப்போலவே வீரப் புகழுக்குப் பாத்திரமானார் அரையர் இராசராசர்.

கங்கை நோக்கிச் செல்லும் போது, ஆதிநகர் இந்திரரதனை வென்று, பிறகு கோசல நாட்டைக் கைப்பற்றி கடைசியில் ஒட்டார தேசத்துக் காடுகளில் பாடி இறக்கப்பட்டது. தானைத் தலைவருடைய சங்கொலி கேட்டு அதிர்ந்து ஓடிவிட்டான் வங்க நாட்டு மன்னன் மகிபாலன் என்றால், ஒட்டார தேசத்தார் எம்மாத்திரம்? அவனைக் கொன்று அவனுடைய தம்பியைச் சிறைப்பிடித்து பன்மணிக் குவியல்களைத் திரைகொண்டார் சோழ மகா சக்கரவர்த்தி. அதன் பிறகு படை தண்டபுத்தி நோக்கிச் சென்றது. தண்டபுத்தி, ஒட்டார தேசத்துக்கும், வங்கத்துக்கும் இடையே தவழ்ந்தோடும் சுவர்ணரேகையாற்றுக் கரையில் உள்ள நாடு. இவைகளனைத்தையும் வென்று கங்கைக் கரையை நோக்கும்போதுதான், சுவர்ணரேகையாற்றங்கரையில் சாரதா தேவியைச் சந்தித்தார் அரையர் இராசராசர். மகா பேரழகியாய் விளங்கிய சாரதா தேவியின் இளமை, இராசராசருடன் கண்ணும்பொத்தி விளையாடத் தொடங்கியது. அது வாய்பொத்தா காதல் திருவிளையாடலில் கொண்டுவந்து நிறுத்தியது.

ஏறத்தாழ நாற்பதாண்டுகள் நிரம்பிய அரையர் இராசராசர் இளமைக் கோப்புக் கலையாமல் திடமான தோற்றத்துடன்விளங்கியவர். ஏற்கெனவே இருமுறை மணமானவர். எனினும் கொடுத்துவைக்காதவர். ஆகவே, தனிமை சுவர்ணரேகையாற்றின் கரையில் இனிமை தேட முனைந்தது. பிறகு இரு மனத்துக்குள் ஒரு முடிவு பிறந்தது. கங்கைப் போர் வெற்றிக் கண்டு திரும்பும் போது, பெற்ற பரிசில்களுடன், சாரதா தேவியையும் பெற்றார் அரையர் இராசராசர்.

பெற்றோர் அற்ற சாரதா தேவி அரையர் இராசராசரின் சோழகம் நோக்கிப் பயணமானபோது அவளுடன் அவளுடைய ஒரே தம்பியான தியாகராசனும் புறப்பட்டான். அவனுடைய வருகை அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இரக்க நெஞ்சம் கொண்ட தானைத்தலைவர் ஒப்புதலில் சாரதா தேவியால் மறுக்க முடியாமல் போயிற்று.

சோழகம் அடைந்த அரையர் இராசராசர் சாரதாதேவியை மணந்துகொண்டார். வடக்கு வனிதையை மணந்ததுபற்றி தலைநகரில் பலருக்கும் பிடிக்கவில்லை. அரசியல் அதிகாரிகள் நேர்முகமாகவும் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். என்றாலும், சக்கரவர்த்தியின் கண்ணோட்டத்தில் யாவும் சரிபட்டுப் போய்விட்டன.

## 3

ஓராண்டு உற்சாகமாகவே உருண்டது.



தியாகராசனுக்கு மட்டும் நாளுக்கு நாள் உற்சாகம் குறைந்து வந்தது. அது அவனுக்குத்தான் தெரியும். அப்படியான ஒரு மறைபொருள்.

திடீரென்று ஒருநாள் வீட்டில் விலையுயர்ந்த முத்துத் தோடுகள் காணாமற் போயின என்றும், கேட்டறியாத திருட்டுச் செய்தியைக் கேட்டுச் சோழநாட்டு மக்கள் அரண்டனர். பல சாமந்தகர்கள் புலன் விசாரிக்க முற்பட்டனர். பகுதி மன்றங்கள் கூட்டி ஆலோசனை நடத்தினர். அப்படியும் திருடன் யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை. கடைசியாக, சாரதா தேவி தமிழ் மக்கள் ஒருவரும் இக்காரியம்செய்ய உடன்பட்டிருக்க மாட்டார்கள். உடன்பிறந்தேகொல்லும் வியாதியான என்னுடைய தம்பிதான் இக்காரியத்தைச் செய்தவன் என்று பகிரங்கமாகக் கூறலானாள். அதன்பொருட்டுதான் தியாகராசன் குற்றம் சாற்றப்பெற்று சிறைவாசம் ஏற்றதும், இதுபற்றியதில் தெளிவான நம்பிக்கையில்லாக் காரணத்தால், அரையர் இராசராசர் சக்கரவர்த்தியிடம்முறையிட்டு அவனை மீட்டதும்.

அரையர் இராசராசருக்குத் தியாகராசன் நடத்தையில் அலாதி அன்பும், பற்றும் இருந்து வந்தன. இருந்து என்ன பயன்? வழித்துணைக்காரர்களிடம் வைத்த அன்பும், பற்றும் வாழ்க்கைத் துணையாக நின்று நெடும்பயணத்திற்கு உதவ முடியுமா?

உதவினான் தியாகராசன். வாழ்வின் தத்துவத்தை உடைத்தெறிய வல்லவர்களும் எங்கோ பிறக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் அனைவருமே தியாக புருஷர்கள்தாம்! நாட்டுக்கு ஒருவர் வீதம் நல்லவர்களாய்ப் பிறப்பவர்கள்! அவர்களுள் ஒருவன் தியாகராசன்.

தியாகராசன் விடுதலையாகி ஒரு வாரம் இறந்தது, மறுவாரம் பிறந்தது.

ஒருவார காலமாகவே தியாகராசன் ஊணுறக்கமின்றி இருந்தான். அவனுடைய மனத்தில் பலவிதமான எண்ணங்கள் எழுந்து எழுந்து அடங்கின. அக்கை சாரதாதேவி ஒருமுறை காட்சியளிப்பாள். அவள் மறைந்ததும், அத்தான் அரையர் இராசராசர் காட்சியளிப்பார். அவர் மட்டும் ஏனோ உடன் மறைந்து விடவில்லை. பலமுறை காட்சி தந்து அவனைத் தாய்மையாக்கிக் கொண்டிருந்தார். பிறகு, சில சமயங்களில் தண்டபுத்தியை ஆண்ட இரணசூரன் கெக்கலிக் கொட்டி நகைத்தவண்ணம் காட்சியளிப்பான். பல சமயங்களில் கீழ வங்கத்து கோவிந்த சந்திரன் எதிர்ப்பட்டு ஏளன நகைப்பொலியை எழுப்புவான். இத்தனையும் அடங்கிச் சில கணங்கள் கழித்து ஒருவன் கீழ் வெட்டுப் பார்வையுடன் காட்சி தருவான்! அவன்... அவன்... அவன்...

'சண்டமாருதா!'— என்று பெருத்த குரலில் கதறிய வண்ணம் துள்ளிக் குதித்து எழுந்தான் தியாகராசன். தன்னை மறந்த உணர்ச்சி வேகத்தைக் கண்டு பிறகே உதட்டைக் கடித்துக்கொண்டு உள்ளத்தை அடக்கிக்கொண்டான். தான் கதறியதை வேறு எவரேனும் கேட்டிருப்பாரோவென்று ஐயப்பட்டுச் சுற்றிலும் கவனித்தான். காவிரியாறு அமைதியாக தஞ்சை மண்ணைத் தங்கமாக்கிக் கொண்டிருந்தது. கருங் கும்மென்ற இருமாட்சியில் அங்கு

வேறு எவர் வந்திருக்க முடியும்?

தியாகராசன் எதிர்பார்த்த நேரமும் வந்துவிட்டது. இடுப்பில் கைவிட்டுத் துழாவிப் பார்த்துக்கொண்டான். குத்துவாள் 'இருக்கிறேன்' என்று அறிவித்தது. நேரே அவனுடைய கால்கள் தனிக்குளத்துப் பக்கத்து மேல வீதிக்குப் பயணமாயிற்று.

மினுக் மினுக்கென்று சிற்றொளியைப் பரப்பிய மாடவிளக்கொன்று அந்தச் சிறு வீட்டின் சாளரத்து வழியாகத் தெரிந்தது. எட்டிப் பார்த்தான் தியாகராசன். கருத்த பெருத்த இளமையுருவம்ஒன்று கனவுலகில் மோகினிக்குக் கதாநாயகன் வடிவம் தாங்கிக்கொண்டிருந்தது. அடுத்து ஒருமுறை சுற்றிலும் கவனித்துக்கொண்டான். தாமதியாமல் சுவரேறிச் சென்று உள்தாழ்வாரத்தில் துணிந்து இறங்கினான். அப்போது சடார் என்று ஏதோ ஒன்று பாய்ந்து வந்தது. அது ஒரு கரும்பூனை. மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அறையை நாடினான் தியாகராசன். உருவம் நன்றாகவே உறங்கிக்கொண்டிருந்தது.

அருகே சென்றான் தியாகராசன். ஒருகணம் சிந்தித்தான். சே! சே!! தூங்கும் பொழுது ஒருவனைக் கொலை செய்வது எவ்வளவு பெரிய பாவம்! எழுப்பினால் என்ன? ஒருவேளை வந்த காரியம் நம்மை வானுலகிற்கு அனுப்பிவிட்டால்?

சிந்தனையிலிருந்து மீண்டான் தியாகராசன். எப்படியும் விழிக்கச் செய்து மறுபடியும் விழிக்காத நித்திரைக்குக் குத்துவாளால் 'தாலோ' பாடுவதுதான் உத்தமம்.

'சண்டமாருதா!'

சண்டமாருதன், அணைத்துக் கொண்டிருந்த மோகினியை அப்படியே தள்ளிவிட்டு நிலைகொல்கிற்கு ஓடிவந்து, கண் விழித்தான். மறுகணம், 'தியாகராசா!' என்ற புலம்பலுடன் உயிர் நீத்தான். இனி அவனுக்குக் கனவில்லை; கதாநாயகிப் பாத்திரம் தாங்க மோகினியில்லை!

குத்துவாளை வீசி எறிந்த தியாகராசன் அறை முழுதும் அவசர அவசரமாகச் சோதனையிட்டான். பல ஓலை நறுக்குகள் தென்பட்டன. அவைகளனைத்தையும் சேகரித்து மாடவிளக்கில் மரண கீதம் பாட வைத்தான். அடுத்துப் பெட்டியைத் திறந்து சோதனையிட்டான். அவன் தேடி வந்த பொருள் கிடைத்துவிட்டது. நிறைவான புன்னகையுடன் வெளியேறினான். அப்போது...

சண்டமாருதன் கொலையுண்ட போது எழும்பிய கதறலைக் கேட்டு அக்கம், பக்கம் விழித்துக் கொண்டன. அதனால், பலர் ஓளிந்து கவனிக்கலாயினர். தியாகராசன் வெளியே வருவதைக் கண்டு 'பிடி, விடாதே!' என்ற குரலெழுப்பித் தொடர்ந்து ஓடினர். எனினும் இருட்டில் தியாகராசன் எப்படியோ மறைந்துவிட்டான்.

## 4

இளங்கதிரோன் புலரியைப் புன்னகை புரிந்தான்.

இரவு நடந்த நிகழ்ச்சி எங்கும் எதிரொலித்தது. அது சக்கரவர்த்தியின் காதுவரைக்கும் எட்டிவிட்டது.

அரண்மனை வீரர்கள் நாலாபுறமும் தேடத் தொடங்கினர். கடைசியில் தியாகராசன், தன்னுடைய நண்பன் வீட்டிலிருந்து கொண்டே சிறைபட்டான்.



கொலை நடந்த இடங்களை மேற்பார்வையிட்டுப் புலனறிய இரு தினங்கள் சென்றன. சண்டமாருதனுடைய உடல் தமிழ் மண்ணில் எடுக்கப்பட்டது.

பொது மன்றம் மூன்றாம் நாள் கூடிற்று. வழக்கு தொடர்ந்தது. யாருக்கும் எந்தவிதமான தொல்லை தராமல் தானே குற்றத்தை ஒப்புக்கொண்டான் தியாகராசன். அவன் அப்போது மரண தண்டனையில் பிறப்பின் சிரிப்பைப் பிறப்பித்தான் என்றாலும், கொலை செய்ததற்கான காரணத்தை அறியவேண்டும் என்று ஆயம் பிறப்பித்த உத்தரவை அவனால் மீற முடியவில்லை. மரணத்தை ஏற்கத் துணிந்தவன், உத்தரவை மதிக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. எனினும் அவன் தியாகராசனாயிற்றே!

சண்டமாருதன், ஒட்டார தேசத்தவனென்றும், தன்னுடைய பகைவனென்றும், ஒருநாள் கைகலப்பேற்பட்டதென்றும், அதன் காரணமாக அடித்துவிட்டானென்றும், அதனால் மானம் தாளாமல் கொலை செய்துவிட்டேனென்றும் மறுமொழியைப் பொறுமையாகக் கூறினான். பின் ஏன் அவன் பிடிக்க ஓடி வந்தவர்களிடமிருந்து தப்பிக்க முயல வேண்டும்? சண்டமாருதன் வீட்டுப் பெட்டியில் எடுத்த பொருளைக் காக்க வேண்டுமல்லவா?

மாவீரர் இராசேந்திர சோழ சக்கரவர்த்தியின் அத்தாணி மண்டபம்வரை வழக்கைக்




**சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி புகழ்கிறார்**

உங்கள் கவலை எதுவாயினும் சரி, விளக்கமாக ஜனன காலம் அல்லது கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பும்பொழுது பதிலுக்காகவும் கேட்லாக்கிற்காகவும் 25 np. ஸ்டாம்பு அனுப்பி வைத்தால், இலவச ஆத்மீக ஆலோசனை அனுப்பி வைக்கப்படும் அவர் ஈஸ்வர தியானத்தில் ஈடுபட்டு சக்தி பெற்றதினால் இவருடைய கவசங்கள் வெற்றியளிக்கிறது. இவருடைய தாந்திரீக கவசத்தை உலகத்தின் பல பாகங்களிலுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் அணிந்து எதிர்பாராத நன்மைகளை அடைந்து வருகிறார்கள். அவரை அணுகி வருங்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஹானரபிள் ஸ்ரீ Ch. ராகவ ராவ் 22—3—52ல் எழுதுவதாவது:—ஸ்ரீமான் R. T. தேவர் பெருங் கீர்த்தி வாய்ந்தவர். இவர் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமிக்கு ஆழ்ந்த பக்தர். வாழ்க்கையில் வெற்றி காணும் பொருட்டு ரக்ஷை தயாரிப்பது அவருக்கு பூர்ணமாக அடைந்த கலையாக விளங்குகிறது. ஸ்ரீ A. V. லோகநாதன், I. A. S., ஜில்லா கலெக்டர், தஞ்சாவூர்:—நான் புரபஸர் R. T. தேவர் அவர்களுடன் 1935-ம் வருடத்திலிருந்து தொடர்பு கொண்டு வந்திருக்கிறேன். தன்னுடைய அதிசயிக்கப்படும்படியான ஆன்மீக சக்தியால் தேவைப்படுகிறவர்களுக்கு பரிகாரம் தேடிக் கொடுக்கும் ஆற்றல் உடையவர் இவர். நான் மனக்கவலையுடன் இருந்த வேளையில் இவர் தயவு உடனே நிவாரணம் அளித்தது. தவிர, உத்தியோக உயர்வும் கிடைத்தது.

**புரபஸர் R. T. தேவர், தாந்திரீகர்,**

**தபால் பெட்டி என் 14, பழனி P. O. தென் இந்தியா.**

கொண்டு சென்றார் அரையர் இராசராசர். அவருக்கு நடந்த நிகழ்ச்சி பெரிதும் புதிராக இருந்தது என்றாலும், சக்கரவர்த்தி உண்மையை வெகு சீக்கிரமாகக் கண்டுபிடித்திருந்தார். தம்முடைய பார்வை வரை வழக்கு வரும் என்றும் எதிர் நோக்கினார். அப்படியே வந்தது. தியாகராசன் குற்றமற்றவன்தான் என்றாலும், அவனை விடுதலை செய்து விடமுடியாது என்று உள்ளூர திடமாக எண்ணிவிட்டார் சோழ சக்கரவர்த்தி. காரணம்?

மானம்!

தமிழர்களின் தங்கத் தாம்பாளம். அந்தத் தாம்பாளத்தில் கற்பெனும் அமுதுண்ட பெண்டிர்கள் இந்தப் பொன்பூமியில்தான் வாழ்கிறார்கள். அதிலே ஒரு பருக்கையைக்கூட உலக நாகரிகங்கள் கை நீட்டி ஏந்தியதாகக் காணோம்.

வழக்கைச் சோழ மகா சக்கரவர்த்தி விசாரித்தார். எப்படியும் தியாகராசன் நிரபராதி. அவன் செய்த கொலையால் நாடே ஒரு விதத்தில் காக்கப்பட்டது. நியாயமான கொலை. இத்தனையும் இராசேந்திர சோழர் அறிவார். எனினும் விடுதலை செய்யவில்லை. மரண தண்டனையையே அளித்தார். காரணம்?

மானம்!

அது நாட்டைக் காக்க வேண்டும். நாட்டின் தானைத் தலைவராக விளங்கிய அரையர் இராசராசரைக் காக்கவேண்டும். அதனால் அரசகுலத்துக்கு அவச்சொல் உண்டாகக்கூடாது. அப்படி உண்டானால் தானைத் தலைவர் இறந்து விடுவார். அந்த இறப்பைக் கேட்டு ஏற்பட்ட களங்கம் இறந்துவிடப் போவதில்லை. அது நிறையாயுள்கொண்டே பலரை வதைத்துவரும். எனவே, இத்தனை நன்மையைக் கருதி ஒரு உயிர் போவது—அல்ல, அல்ல; தியாகம் செய்வது நன்றே! உயிரினும் மானமே பெரிது! இப்படிக் கருதவில்லை என்றால், மயிர் நீப்பின் வாழாக் கவரிமான், மனித இனத்தைக் காட்டிலும் மேம்பட்டுவிடுமல்லவா? பின் வள்ளுவர் வாய்க்கு மதிப்பில்லை. திருக்குறள் திசை தெரியாமல் போய்விட வேண்டியதுதான்!

மரண மேடையில் தியாகராசன் புன்னகை அரும்பும் முகத்துடன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்குத்தான் எத்தனை மன நிறைவு!

'தியாகராசா! கடைசி நேரத்தில் யாரிடமாவது பேச வேண்டுமென்றால், அனுமதி உண்டு!' என்று சிறைச்சாலைத் தலைவர் கூறிவிட்டுச் சென்றார். வெகு தொலைவில் நின்றிருந்த தன்னுடைய அக்காளை அழைத்தான். சாரதாதேவியோ கால் பங்கு ரத்தபாச வருத்தத்தாலும், முக்கால்பங்கு ரத்த கொதிப்பின் வேகத்தாலும் அருகே வந்தாள்.

அனைவரையும் அப்புறமாகச் செல்லும்படி வேண்டினான். அதன்படியே நடந்தது. அது சக்கரவர்த்தியின் தனிச் சிறப்பாணை

அக்காளைக்கண்ட தம்பி, கண்ணீர் விட்டானில்லை. மாறாக, கொதிக்கும் கண்களுடன் முதலில் நோக்கினான்.

'அக்கா! இப்போது உனக்கு மகிழ்ச்சிதானே? நானிருப்பது உனக்குப் பெருந்தொல்லையாக இருந்தது. ஆனால், சண்டமாருதனிருப்பது எனக்குப் பெருந்தொல்லையாக இருந்ததே! எவனுக்கு மட்டுமா? இந்த நாட்டுக்கும் பெருந்தொல்லை விளைவிக்க இருந்தானே, அந்தப் பாவி! உன்னுடைய பழைய காதலைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டைச் சூறையாடும் நோக்கத்துடன் பல காரியங்கள் செய்து வந்தான். இதனையறிந்தும் நீ மறுபடியும் அவனை நேசித்தாய். இப்படிக் கேட்பதற்காக என்னை நீ பொறுத்தருளாவிட்டால் பரவாயில்லை. அதற்காக நான் கவலைப்படும் நிலையில் இப்போது இல்லை. ஏனென்றால், இன்னும் கொஞ்சம் நேரத்தில் கவலையற்ற உலகிற்குப் பயணமாகப் போகிறேன். போகட்டும். சுவர்ணரேகையாறு உனக்கு நல்ல வாழ்வை அளித்தது. சோழர்த்தானைத் தலைவர்க்கு மனைவியாகும் பாக்கியம் அவ்வளவு எளிமையானதன்று, எனினும் உன்னுடைய பழைய சொரூபத்தை மறைத்தாயில்லை. காரணம், வாடை! நல்லது, அக்கா! இதோ, இந்த முத்துத்தோடு நான் திருடியதாகத்தானே முதலில் குற்றம் சுமத்தி என்னைச் சிறைக்கனுப்ப முயன்றாய். அதை இப்போது திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். ஏனென்றால் விடுதலை இல்லா வான்சிறைக்குப் பயணமாகிறேன். ஏனிப்படி முத்துத்தோடுகளை அப்படி உற்றுக் கவனிக்கிறாய்? உன்னுடைய பழைய நண்பன் சண்டமாருதன் வீட்டுப் பெட்டியைக் கேள்! அது மறுமொழி கூறும். இனியேனும் கவனக் குறைவில்லாமல் நடந்துகொள்ள, வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொள்ள முயற்சி செய்! உன்னுடைய மானத்தைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், இந்த நாடு மானத்தை இதயக் கருவூலமாகக் கருதுகிறது. இந்த நாட்டின் தானைத்தலைவர் அத்தானுக்கு மாசு ஏற்படக்கூடாது. அவருடைய மனையாள் மானம் தவறி மாற்றானுடன் அதுவும் பகைவனிடம் உறவுகொண்டிருந்தாள் என்ற பழிச்சொல் ஏற்படக்கூடாது. அதற்காகவே அவனைக் கொன்றுவிட்டு, உனக்குப் பிடிக்காத நான் மரணத்தை ஏற்கிறேன். இனியும் நீ தவறி நடப்பாயேயானால், உன்னை நான் வானுலகம் சென்றும் விடமாட்டேன். நிச்சயம் பேயுருவிலாவது வந்து தண்டித்தே தீருவேன்! நேரமாகிறது விடை பெற்றுக்கொள். எனக்கும் வாழ்த்தி விடை கொடு. நீயும், உன்னுடைய பழைய எண்ணங்களுக்குத் தூற்றி விடை கொடுக்க மறந்துவிடாதே! அத்தானுடன் பண்பான முறையில் வாழக் கற்றுக்கொள். அது உன்னைச் சிறப்பிக்கும்!'

சாரதாதேவி, தன்னை மறந்து விசும்பி விசும்பி அழுது கொண்டே விடை பெற்றாள். தம்பியின் தியாகத்தை எண்ணித் தன்னைத்தானே நொந்துகொண்டாள். அவளுடைய கண்களில் சுவர்ண ரேகையாற்றின் தூயநீர் திரையிட்டது. அந்த நீர்த் திரையையும் மீறிய தாய்மை நிறைந்த கற்பாள காவிரியாள், தொலைவில் குதிரை மேல் நின்று கவனித்துக்கொண்டிருந்த சோழ மகா சக்கரவர்த்தியின் கண்களில் குடிகொண்டாள்!



## 9. விதியின் கை

அன்று 'லேடீஸ் கிளப்'பே புது டெல்லி ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் கூடியிருந்தது கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸின் ஒரு முதல் வகுப்புப் பெட்டியில் சென்னைக்கு மாற்றிப் போகும் திருவாளர் ரமணியும், அவர் மனைவி திருமதி மாலதி ரமணியும் உட்கார்ந்திருந்தார்கள். உண்மையில் அச்சமயம் பெட்டியில் மாலதி மட்டுந்தான் அவள் தோழிகளுடன் இருந்தாள். ரமணி பிளாட்பாரத்தில் அவன் ஆபீஸ் நண்பன் சோமுவுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான்.

'என்னால் நம்பவே முடியவில்லையே! எதற்காக நீயாகவே இந்த மாற்றலுக்கு உடன்பட்டாய், இங்குள்ள வீடு, நண்பர்கள் போன்ற வசதிகளை விட்டுவிட்டு! மேலும் இங்கேயே இருந்திருந்தால் அடுத்து உனக்கல்லவா ஆபீஸில் பிரமோஷன் கிடைத்திருக்கும்' என்றான் சோமு.

'நீ சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால், இவற்றையெல்லாம் உதறித் தள்ளக்கூடிய ஒரு பெரும் நெருக்கடி வீட்டில் ஏற்பட்டது. வேறு வழியின்றிதான் நானாகவே இந்த மாற்றலைக் கேட்டு வாங்கிக் கொண்டேன்' என்று புகார் போட்டான் ரமணி.

சியாமா

'அதென்னப்பா அப்படிப்பட்ட நெருக்கடி! உன் மனைவிக்கு உடம்புகிடம்பு அசௌக்கியமா?'

'அதோ பார் அவளை. அவள் தேக நலன் பாதித்திருப்பதாக உனக்குத் தோன்றுகிறதா என்ன?' என்றான் ரமணி.

'பின்னே காரணத்தைத்தான் சொல்லேன்' என்றான் பொறுமையை இழந்துகொண்டிருந்த சோமு.

'சரி இன்னும் ஐந்து நிமிஷங்களில் எனக்கும் டெல்லிக்கும் உள்ள தொடர்பு முடியப்போகிறது. ஆதலால், விஷயத்தை உனக்குச் சொல்வதால் தீங்கு போய்விடாது. இருந்தாலும் இந்த விஷயம் உன்னைவிட்டு மூச்சுவிடும் வேறொரு பிராணிக்கும் போகக்கூடாது; என்ன, உன்னை நம்பலாமா?' என்று பீடிகை போட்டான் ரமணி.

விஷயத்தைத் தெரிந்துகொள்ள சோமுவுக்கிருந்த ஆவலில் அவன் எந்த நிபந்தனைக்கும் உடன்படத் தயாராக இருந்தான்.

'என் மனைவிக்கு ஊரில் ஒரு சித்தப்பா இருக்கிறார் சில நாட்களுக்கு முன் இங்கு வந்து எங்களுடன் தங்கப் போவதாக அவர் ஒரு கார்டு எழுதியிருந்தார். அது என் மனைவி எழுதிய ஒரு கடிதத்திற்குப் பதில்தான். நல்லவேளையாக அவள் கைக்குப் போக வேண்டிய கார்டு, என் கையில் கிடைத்தது. அந்த மனுஷனை வரவொட்டாமல் எப்படி அடிப்பது என்று நான் குழம்பிக்கொண்டிருந்தபோது, ஆபீஸில் இந்த மாற்றல் பிரச்னை கிளம்பிற்று. நானே போகிறேன் என்று ஒப்புக் கொண்டேன்.'

'ஏன் அவர் வந்தால் அப்படி என்ன குடிமுழுகிப் போய்விடும்?'

'சரியான வார்த்தை சொன்னாய். குடியேதான் முழுகிவிடும். அந்தச் சித்தப்பாவிற்கு இந்தப் பெண்ணிடமும், இந்தப் பெண்ணிற்கு அந்தச் சித்தப்பாவிடமும் ஒரு அலாதி ஈடுபாடு உண்டு. தனித்தனியே இருவரும் நல்லவர்கள்தான்; ஆனால், ரெண்டுபேரும் ஒன்று சேர்ந்தால், காற்றும் நெருப்பும்தான்; என்ன நடக்கும், எப்போது



என்று கடவுளாலேயே சொல்லிவிட முடியாது.'

சோமு பொறுமையை இழந்தே விட்டான்.

'கொஞ்சம் புரியும்படிதான் சொல்லேன்.'

'எனக்கே சொல்லத் தெரிந்தால்தானே? ஒரு உதாரணம் சொல்கிறேன் கேள். முன்னொரு சமயம் உள்ளூர் பிரமுகர் ஒருவரின் போட்டோவை என் மனைவி இந்தச் சித்தப்பாவிடம் கேட்டிருக்கிறாள். காரணம், அந்த மனிதரின் மூஞ்சி பார்க்கக் காண்டாமிருகம்போல் எழில் நிறைந்து இருக்குமாம்; நாள் முழுவதும் அதைப் பார்த்தாலும் அலுக்காதாம்; அப்படிக் கேட்டவளை அதட்டி வாயை அடக்காமல், அந்தப் பிரகிருதி போட்டோவைத் திருடி இவளிடம் தந்ததாம்!'

'தமாஷ் பேர்வழியோ ஒருவேளை.'

'யாருக்குத் தமாஷ்? நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம் என்பார்களே அது போலல்லவா இருக்கிறது கதை. இங்கு வந்த இடத்தில் இவள் வைஸ்ராய் மாளிகையில் உள்ள ஒரு பண்டம் தனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லி, அது அதை அபேஸ் பண்ணி வச்சால்? அதன் பிறகு என் மானம் என்ன ஆகிறது?' என்றான் ரமணி, கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே.

'அப்படியும் இருப்பார்களா!' என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தான் சோமு.

'நான் சொல்லிப் பயனில்லை. நேரடியாக அந்த மனுஷனின் பரிச்சயம் இருந்தால்தான் உனக்கு விஷயம் புரியும்.'

'ஆமாம், ஊரில் நீ போகும் இடத்தில் அவர் வந்து தங்கினால்?'

'தெரிஞ்ச இடம். ஏதோ சமாளித்துக் கொள்வேன். ஆனால், இந்த டெல்லி நான் கௌரவமாக வாழ்ந்த இடம். இங்கு அந்த மனுஷனை வரவேற்க எனக்கு உண்மையிலேயே துணிவில்லை.'

ஊரைவிட்டுச் செல்ல ரமணி சொன்ன காரணம் சோமுவிற்கு இன்னும் நம்ப முடியாததாக இருந்தது. ஒருவேளை சரோஜாபற்றி சொல்லி, அவன் விஷயமாகத் தப்புத்தலக்க சித்தப்பா கிளம்பி வருகிறார் என்பதையும் சொல்லியிருந்தால், ஓரளவு ரமணியின் பயம் சோமுவிற்கும் விளங்கியிருக்கலாம். ஆனால், நல்ல வேளையாக அச்சமயம் ரயில் கிளம்ப மணி அடிக்க, ரமணியின் ரகஸ்யமும் பிழைத்தது......

முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கி ஜன்னலைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள் 'லேடீஸ் க்ளப்' அங்கத்தினர்கள். ஆனால், மாலதிரமணியின் மனமோ, கண்களோ அந்தக் கூட்டத்திலில்லை. அங்கில்லாத வேறு யாரையோ அவை தேடிக்கொண்டிருந்தன. ஆச்சு, ரயில் கிளம்ப இன்னும் இரண்டு, மூன்று நிமிஷங்கள்தான் இருக்கும். அப்போது ஸ்டேஷனுக்குள் நுழைந்த சரோஜா விரைந்து தோழியின் பக்கத்தை அடைந்தாள்.

'நல்ல வேளை, இப்பவாவது வந்தாயே; வராமலேயே போய்விடுவாயோ என்று பயந்தேவிட்டேன்' என்று ஆச்வாச மூச்சு விட்டாள் மாலதிரமணி.

'எனக்குக்கூட அதே பயந்தான். இன்னைக்கின்னு டாங்காவே கிடைக்கவில்லை' என்றாள் சரோஜா.

ஸ்டேஷன் மாஸ்டர் பச்சைக் கொடியை ஆட்டிக்கொண்டிருந்தார்.

'பார்வதியை வீட்டில் தேற்று பார்த்தேன். தனக்கு உடம்பு சௌகரியமில்லை, அதனால் ஸ்டேஷனுக்கு வரமாட்டேன் என்றாள். இத்தனைக்கும் ரௌஸ் அவன்யூ இங்கிருந்து கூப்பிடு தூரம் கூட இல்லை' என்றாள் மாலதி, குறை கூறுபவள்போல்.

'அவளுக்கு உண்மையிலேயே உடல் நலம் சரியில்லைதான்' என்றாள் சரோஜா.

'அவளுக்கா, அவள் கணவனுக்கா?'

சரோஜாவுக்குப் பேச்சைத் தொடர்ந்து நடத்த இஷ்டமில்லை. தலையை ஏதோ ஆட்டிவைத்தாள். இதற்கிடையே ரயில் பிளாட்பாரத்திலிருந்து நகர ஆரம்பிக்க, ஜன்னலின் அருகில் இருந்த ஸ்தீரீகள் ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு மாலதி ரமணியிடம் கைகுலுக்கி கடைசி நிமிஷ விடை பெற்றுக்



கொண்டிருந்தார்கள். தன் பேச்சைத் தொடர்ந்து நடத்த முடியாமற்போனதில் மாலதிக்குப் பெரும் ஏமாற்றம். இந்தப் பேச்சையே தவிர்க்கத்தான் சரோஜா அப்படிக் கடைசி நிமிஷத்தில் ஸ்டேஷனுக்கு வந்தாளோ என்றுகூட அவளுக்கு ஒரு சந்தேகம்.

'எனக்கு என்னவோ தோன்றுகிறது, இந்த டில்லியில் என்னென்னவோ பெரிய சம்பவங்கள் எல்லாம் சமீபத்தில் நடக்கப்போகின்றன என்று. இப்போ இங்கில்லாமல் ஊருக்குப் போவதில் எனக்கு எத்தனை வருத்தம் தெரியுமா? முக்கியமாக பார்வதியைக் கவனித்துக்கொள்' என்றாள் மாலதி ரமணி, ஓடும் ரயிலிலிருந்து...

ரயில் சென்று மறைந்து விட்டது. பிளாட்பாரத்திலிருந்தவர்களும் அநேகமாகக் கும்பல் கும்பலாக வெளி சென்று விட்டார்கள். ஆனால், சரோஜா மட்டும் இருந்த இடத்தைவிட்டு நகர முடியாமல் பிரமைபிடித்தவள்போல் நின்றுகொண்டிருந்தாள்.

'மாலதி ரமணியின் அந்தக் கடைசி வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்? டில்லியில் என்ன நேரவிருந்தன? அவற்றிற்கும் பார்வதிக்கும் என்ன சம்பந்தம்? உண்மையிலேயே மாலதிரமணிக்கு எந்த அளவிற்கு விஷயம் தெரியும்' என்றெல்லாம் கலங்கிக்கொண்டிருந்தாள்...

❖ ❖ ❖

சரோஜாவை அனுப்பிவிட்டு பார்வதி வீட்டிற்குள் நுழையும்போது, ஹாலிலிருந்த கடிகாரம் மூன்று மணி அடித்தது. டாக்டரிடம் விடைபெற்றுத் திரும்பும்போது, அவர்கள் வீட்டில் 'லஸ்ஸி' அருந்தியிருந்தபடியால் பார்வதி காப்பியோ, டீயோ சாப்பிட விரும்பவில்லை. அவள் கணவர் ஆபீஸிலிருந்து திரும்ப ஏழு, ஏழரை மணியாகிவிடும். இரவுச் சமையலுக்கு, அடுப்பை மாலை ஆறு மணிக்கு மூட்டினாற்போதும். அதுவரை என்ன செய்வது? ஒன்றும் தோன்றாமல் அறையைச் சுற்றி வந்தவள் தன் வழக்கமான சாய்வு நாற்காலியில் புகலிடம் கொண்டாள்.

அன்று டாக்டர் வீட்டில் நிகழ்ந்தவை ஒன்றன்பின் ஒன்றாக அவள் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. டாக்டரின் மனைவி சந்தோஷ் தேவியாரை அவளுக்குப் பிடித்திருந்தது. தாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு வார்த்தைகூடக் குறுக்கே சொல்லாமலிருந்தும் அந்த அம்மாளின் முகம் தன்பால் அன்பையும், அனுதாபத்தையும் அள்ளிச் சொரிந்துகொண்டிருந்தது அவள் நினைவிற்கு வந்தது.

அடுத்தபடியாக அந்த வீட்டுப் பூஜை அறை அவளைக் கவர்ந்திருந்தது. விஞ்ஞானக் கல்வி பயின்று, மருத்துவத் தொழிலையும் மேற்கொண்டிருந்த டாக்டர், அப்படியொன்றும் நாஸ்திகர் இல்லை, கடவுள் பக்தியுடையவர் என்பது அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பேச்சின் போக்கில் அவர் சொன்ன ஒரு விஷயம் அவள் நினைவிற்கு வந்தது.

'வாழ்க்கையில் நமக்குத் தெரியாத, புரியாத எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்கின்றன; அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளுவதும் தவறு, வெறும் பிரமை என்று ஒதுக்குவதும் பிசகு.'

ஆகா! எத்தனை பெரிய உண்மையை எத்தனை எளிதாகவும் அழகாகவும் சொல்லி விட்டார்!

உலகில் பெரும்பாலோர் இந்தத் தெரியாத புரியாத நிகழ்ச்சிகளின் காரணகர்த்தா கடவுளென்றும், அவரவர் வினைப்படி மக்கள் இவற்றை அனுபவிக்கின்றனர் என்றும் நம்புகிறார்கள். இதற்கு நேர் எதிரிடையாக, பகுத்தறிவு வாதியோ கடவுளே வெறும் ஒரு நம்பிக்கையென்றும், அந்நம்பிக்கையில் சிக்குண்டுதான் மக்கள் பாமரராய், விலங்குகளாய், குருடர்களாய் வாழ்கிறார்கள் என்கிறார். அநேக சந்தர்ப்பங்களில் துன்பம் தலைக்குமேல் போனாலும், தெய்வ நீதியில் நம்பிக்கை இழந்துள்ள மனிதனை, இந்தப் பகுத்தறிவு வாதமும் கலந்துகொண்டு முடக்கிவிடுகிறது.

படித்தவர்களில் அநேகரைப் பிடித்துள்ள இப்பகுத்தறிவு வாதம், பல சந்தர்ப்பங்களில் அவர்களை இருதலைக் கொள்ளி எறும்புகளாக்கிச் சோதனைக்குள்ளாக்குகிறது. அவர்கள் பயின்றுள்ள கல்வியால் விளைந்துள்ள அவ

ந்தை, மெய்மறந்து கடவுள் வழிபாட்டில் அவர்கள் ஈடுபடுவதற்குக் குறுக்கே நிற்கிறது. ஆனால், சோதனை சமயங்களிலோ பரம்பொருளின் உதவியை வேண்டாமென்று உதறித்தள்ள அதே அகந்தை போதவில்லை. நம்மில் அநேகர் இப்படித்தான் இரண்டும் கெட்டான்களாக இருக்கிறோம்.

ஆனால், இந்த டாக்டர்? படித்தவர், மெத்தப் படித்தவர் என்றுகூடச் சொல்லலாம். அப்படியிருந்தும் பக்தி, பூஜை இவற்றில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்! அது மட்டும் தானா? படைப்பில் நமக்குத் தெரியாத, புரியாத எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்றும் ஒப்புக்கொள்கிறார்! இவராலே முடியாவிட்டால் வேறு ஒருவராலேயும் தனக்கு விமோசனம் இல்லையென்று தான் பார்வதிக்குத் தோன்றியது. அவருடன் பேசியதை எல்லாம் வரிசைக் கிரமமாக தன் நினைவிற்குக் கொண்டு வர முயன்றாள். அப்போது அவர் சொன்ன ஒரு விஷயம் அவள் நினைவிற்கு வந்தது. போட்டோவில் எஞ்சியுள்ளவர்களில் எவருக்கேனும், அவள் கணவருக்கு முன் மரணம் சம்பவிக்குமானால், அந்த போட்டோவின் வினையிலிருந்து அவள் கணவர் விடுபடலாம் என்றார். அதில் ஏதோ உண்மையிருப்பதுபோல்தான் அவளுக்கும் தோன்றிற்று. ஆனால், தன் கணவனையும், ஏகாம்பரத்தையும் தவிர, பாக்கியுள்ள அந்த ஐவர்களின் சுகதுக்கங்களை அறிய அவர்கள் விலாசங்களை யாரிடமிருந்து, எப்படித் தெரிந்து கொள்வது? டாக்டர் சுலபமாக, 'இது தலை போகிற விஷயம். ஆகையால், எப்பாடு பட்டேனும் -அவர்கள் விலாசத்தைத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்' என்று சொல்லிவிட்டார். ஆனால், அது உண்மையிலேயே சாத்தியமாகிற விஷயமா?

அதுதான் போகட்டும்; தன் வீட்டிற்கு டாக்டர் வர விரும்புகிறார். வீட்டிற்கு வந்து தன் கணவரைக் கண்டால் தான் ஒரு முடிவுக்கு வரலாம் என்கிறார். அதற்குத்தான் சம்மதிக்கலாமா? எத்தனையோ நோயாளிகளைக் கையாண்டு அனுபவம் நிறைந்தவர் டாக்டர். தன் கணவரின் சந்தேகத்தைக் கிளப்பாமல் கேள்விகளை நாசூக்காகக் கேட்க அவருக்குப் போதிய சாமர்த்தியம் இருக்கலாம். ஆனால், அவள் பிரச்னையோ சாதாரண விஷயமல்ல. இயற்கைக்குக்கூட அது புறம்பானது, டாக்டரே அதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்கத் தன் கணவரும் டாக்டரும் சந்திக்கும்போது, எதிர்பாராத அசம்பாவிதம் ஏதேனும் நேர்ந்து தன்னை வாட்டிக் கொண்டிருக்கும் பயம் தன் கணவரையும் பிடித்துக்கொண்டுவிடுமோ என்று அஞ்சினாள். 'அப்படியே உன் கணவருக்குத் தெரிந்தால் தான் என்ன? அவனொரு குஷிப்பேர்வழி. நல்லதிலும் சரி, கெட்டதிலும் சரி, அவன் மனம் அப்படி ஒன்றும் நிரந்தரமாக ஒன்றிவிடாது. நீயாகக் குன்றை மலையாக்கி மலைக்கிறாய்' என்றது அவள் உள்ளுணர்வு. பார்வதி சஞ்சலமுற்றாள். அது உண்மையாக இருக்குமானால், டாக்டரையும் அவள் கணவனையும் தான் சந்திக்கவொட்டாமல் செய்வது மாபெரும் பிழையாகிவிடுமே என்று அஞ்சினாள்.

'அப்பப்பா, எத்தனை பயங்கரமான சிக்கல்!' என்று சிலிர்த்துக்கொண்டாள். அந்த எண்ணங்களை உதறித்தள்ளி அவற்றிலிருந்து விடுபட எண்ணியவள்போல் சாய்வு நாற்காலியிலிருந்து பதட்டத்துடன் எழுந்தாள். அப்பொழுது வாயிற் கதவின் அடியில் கிடந்த அந்தக் கடிதம் அவள் கண்களில் பட்டது. ஓடி, அதைக் குனிந்து எடுத்தாள். அது ஒரு கார்ட். தரியாகஞ்சிற்கு அவள் சென்றிருந்தபோது அது வந்திருக்க வேண்டும். ஆனால், எப்படி முதலில் அறைக்குள் நுழைந்தபோது, அது அவள் கண்களில் படாமற் போயிற்று! கார்ட், ஏகாம்பரத்திடமிருந்து வந்திருந்தது. கல்கத்தாவில் போஸ்ட் செய்யப்பட்டு இருந்த அவ் கார்டின் துவக்கத்தில் அடுத்த நாள் மாலை மெயிலில் டில்லிக்கு வருவதாக அவன் எழுதியிருந்தான். கார்டில் நுணுக்கி நுணுக்கி இன்னும் பல விஷயங்களையும் எழுதியிருந்தான்.

'இரண்டே மாதங்களில் ஊர் திரும்பலாம் என்றுதான் குன்னூரைவிட்டுக் கிளம்பினேன். இப்போது நான்கு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது. தீபாவளிக்கேனும், அவளுடனும், குழந்தைகளுடனும் இருப்போமா என்று ஏங்குகிறேன். இந்த லட்சணத்தில் அவளுக்குப் பிரசவமாகி ஆண் குழந்தை பிறந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. அருகில் அச்சமயம் இல்லாத என்னிடம் அவளுக்குக் கோபமிருந்தால் தவறென்ன? ஆனால், எஸ்டேட்டைப் பற்றியவரை என் பிரயாணம் வெற்றிகரமாகவே முடிந்துள்ளது. அஸ்ஸாமில் தேயிலை பயிர் செய்வதில் சில புது முறைகளைக் கண்டு பயின்றேன். இன்னும் கொஞ்ச நாள் தங்கி, அதை மேலும் அறிந்துகொள்ள ஆவல்தான். ஆனால், இங்குத் தேயிலைத் தோட்டங்களில் திடீரென்று காலரா நோய் கண்டு பரவியும் வருகிறது. அதான் ஊருக்குத் திரும்பிவிட்டேன்...' என்று கடிதத்தை முடித்திருந்தான்.

அந்தக் கார்ட் அனல்போல் பார்வதியைச் சுட்டது. அடுத்த நாள் மெயிலில் அவன் வரப்போகும் செய்தியைத் தவிர, வேறு ஒன்றுமே அவள் மனத்தில் படவில்லை. அவள் புலன்கள் பைத்தியக்கார வேகத்தில் சுழன்றுகொண்டிருந்தன. அந்த நடுக்கத்தைச் சமாளிக்க முடியாமல் நாற்காலியின்மீது குப்புற விழுந்துவிட்டாள். வேடனின் அம்பால் சிறகொடிந்து குற்றுயிராக்கப்பட்ட பட்சிபோல் அவள் உடல் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

அமைதியும், கனிவுமே உருவாக டாக்டரின் முகம் அவள் கண்கள்முன் அப்பொழுது தோன்றி முறுவலித்தது.

'வீட்டிற்கு வந்து தங்கள் கணவரை நேரில் கண்டால்தான் என்னால் இதில் ஒரு முடிவுக்கு வரமுடியும்' என்றது அந்த தகை முகம்.

'முடியவே முடியாது. நான் அதற்குச் சம்மதிக்கமாட்டேன்' என்று அலறினாள் பார்வதி.



'அப்படிப் பார்ப்பதால் அவர் உடல் நிலையை மட்டுமில்லை—பேச்சின் போக்கில் அவர் கை ரேகையைப் பார்த்து—அவர் ஆயுள்பற்றிக்கூடத் தெரிந்து கொள்ளுவேன்' என்றார் டாக்டர்.

'தெரிந்துகொண்டு?' இது பார்வதி.

'தெரிந்துகொண்டு... தெரிந்துகொண்டு...' டாக்டர் தடுமாறினார். 'எத்தனையோ தெரிந்து கொள்ளலாம். ஒருவேளை நீங்கள் பயப்படுகிறபடியும் அந்த போட்டோவின் சூசகப்படியும்—அடுத்து உங்கள் கணவருக்கு மரணம் நேருவதாக இருந்தாலும், அது உடனடியாக வருவானேன்? பல வருஷங்களுக்குப் பின், அவர் வாழ்வின் இயற்கையான முடிவில், அவர் மரணமும், அவருக்குப் பின் போட்டோவிலுள்ள மற்றவர் மரணமும் சம்பவிக்கலாமல்லவா? நீங்களாக அது சமீபத்தில் வரப்போவதாக முடிவு கட்டுவானேன்?' இப்போது டாக்டரின் குரலில் தடுமாற்றமில்லை.

தன்னால் அதை நம்பமுடியவில்லை என்பதற்கடையாளமாகப் பார்வதி தலையை அசைத்தாள்.

'ஏகாம்பரத்தின் முதல் கடிதம் வந்த தினம் அவர் கணவர் அத்தனை சஞ்சலத்திற்குள்ளாவானேன்? ஏகாம்பரமே இருபது வருஷங்களுக்குப் பின் டில்லி வருவானேன்? அப்படி வந்தவன் ஊருக்குக் கிளம்பிக்கொண்டிருந்த அந்தக் கடைசி நிமிஷத்தில் அந்த போட்டோ பற்றிப் பேசுவானேன்? இவைதான் போகட்டும்—அவரை அநேகமாக கொண்டே போகவிருந்த அந்த மலேரியா ஜுரம்? வாழ்வின் இயற்கையான முடிவில் அவர் மரணம் சம்பவிக்க இருந்தால், இந்த சூசகங்கள் இப்போது தோன்றுவானேன்?'

டாக்டரின் சிரித்த முகம் தன் வழக்கமான அமைதியுடன் சொல்லிக்கொண்டிருந்தது.

'வாழ்க்கையில் நமக்குத் தெரியாத, புரியாத எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றைப் புறக்கணிப்பது பிசகு...'

'நான் புறக்கணிக்கக்கூடாது என்று தானே அடித்துக்கொள்ளுகிறேன்' பார்வதி வாய்விட்டே அலறியேவிட்டாள்.

'சற்றுப் பொறுங்கள்' என்பதுபோல் டாக்டரின் முகம் அசைந்தது. 'இந்தத் தெரியாத, புரியாத நிகழ்ச்சிகளை அப்படியே நம்பி நம் நிதானத்தை இழந்துவிடக்கூடாது என்றுதான் நான் சொல்ல வந்தேன்' என்றார்.

'வெறும் ஆறுதல் வார்த்தைகள்' என்பதுபோல் உதட்டைச் சுளித்துக் கொண்டாள் பார்வதி.

'போட்டோவில் எஞ்சியுள்ளவர்களில் வேறு யாருக்கேனும் உங்கள் கணவருக்கு முன் மரணம் சம்பவிப்பதால், அதன் நியதி முறிந்து, உங்கள் கணவர் தப்பலாம்' என்றது டாக்டரின் முகம், கவலையுடன்.

'எனக்கு அவர்கள் ஒருவரையுமே தெரியாது என்றேனே? அதை மறந்து, நீங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னால்?' என்றாள் பார்வதி தீனக் குரலில்.

'தெரியாவிட்டால் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும், அதற்காகத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இது தலைபோகிற விஷயம் பாருங்கள்' என்றார் டாக்டர் பெருமூச்சுடன்.

'புரிகிறது. ஆனால், அவர்களை எப்படி, யார்மூலம் நான் தெரிந்துகொள்வேன்?' என்று விம்மினாள் பார்வதி.

'உனக்கு ஏகாம்பரத்தைத் தெரியும். அவர்மூலம் மற்றவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டால்...' எங்கிருந்தோ சரோஜாவின் குரல் கேட்டது.

'எந்த ஏகாம்பரம்?...' என்று முகத்தைச் சிணுங்கினாள், பார்வதி.

'அதான் டில்லிக்கு வந்த ஏகாம்பரம். நாளைக்கு மறுபடியும் வரவிருக்கும் ஏகாம்பரம்...' என்று குரல் கொடுத்தது, அவள் உள்ளுணர்வு.

'இவர்கள் க்ஷேமம்—உன் க்ஷேமமா? அல்லது இவர்கள் நாசம் உன் நலனா?' என்றது சரோஜாவின் குரல்.

'இவர்களில் ஒருவர் தொலைந்தால் தான் உனக்கு விடுதலை' என்றது அவள் உள்ளுணர்வு.

'ஐயோ...நான், நான்—என்ன நினைக்கிறேன். எத்தனை தகாத எண்ணமெல்லாம் எண்ணுகிறேன்?' என்று அழுது கொண்டே, பிளந்துகொண்டிருந்த தன்



தலையைத் தாங்கிக்கொண்டாள், பார்வதி.

சரோஜாவின் குரல் மீண்டும் கேட்டது. 'நாம் மலையைக் கெல்ல வந்தோம். கடைசியில் கொல்ல எலிதான் கிடைத்தது. ஆனால், இந்த வெள்ளைப் பாஷாணத்தை அளவுக்கு மீறி உட்கொண்டால் ஒரு ஆளைக்கூட அது கொன்றுவிடுமாம். மரணம் காலராவினால் சம்பவித்ததுபோல் வாந்தி, பேதி கண்டு நேரிடுமாம்...'

'இங்குத் தேயிலைத் தோட்டங்களில் காலரா கண்டு பரவியும் வருகிறது. அதனால்தான் நான் ஊருக்குக் கிளம்பிவிட்டேன்...' என்று ஏகாம்பரம் சாவதானமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

அந்தக் கணம்தான் பார்வதிக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்.

அவள் கணவன் தப்ப வேண்டுமானால் போட்டோவில் பாக்கியுள்ளவர்களில் ஒருவர் உடனே மடிந்தாக வேண்டும்.

அவளுக்குத் தெரிந்த அந்த ஒருவர் ஏகாம்பரம்தான். அவன் அடுத்த நாளே வந்துகொண்டிருந்தான், அல்லாமல் தோன்றியிருந்த காலராவிடமிருந்து தப்ப.

ஆனால், இங்கோ அவனுக்கு அதே முடிவு காத்துக்கொண்டிருந்தது.

திடுக்கிட்டு எழுந்தாள் பார்வதி. அப்போது திடீரென்று அறைக்குள் வீசிய காற்று கீழே கிடந்த ஏகாம்பரத்தின் கார்டை அடித்துச் சென்றது. ஒருவேளை அவளைக்கண்டு அஞ்சிதான் அது ஓடிற்றோ?

'ஐயோ, நான் கொலை செய்ய வேண்டுமா?' என்று எண்ணுபவள்போல் கைகளைப் பிசைந்து கொண்டாள் பார்வதி. நாற்காலியிலிருந்து எழுந்தவள், தட்டுத்தடுமாறிக்கொண்டே கணப்பின் அருகில் சென்று, அதன்மேல் விளிம்பைப் பிடித்துத் தன்னைச் சமாளித்துக்கொள்ள முயன்றாள். தன் கணவன் உயிரைக் காப்பாற்ற தெய்வம் தன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது என்று அவள் நம்பினாள். மேலும் தான் தாமதிப்பது—வெறும் சுயநலம், பயங்கொள்ளித்தனம, கணவரிடம் தனக்குப் போதிய அன்பில்லை என்




சலூன்காரர்:—பிசினெஸ் ரொம்ப 'டல்' லாயிருக்குங்க! அதனால் கடையை மூடிவிடலாம்என்று இருக்கிறேன்.

மற்றவர்:—அடடே! கடையை மூட வேண்டாமப்பா. உனக்கு பதிலாகக் கடைக்கு வேறு ஆளைப் போட்டுவிட்டு, நீ கடைப்பக்கமே வராமல் வீட்டிலேயே இருந்துடு. பிசினஸ் பிரமாதமா நடக்கும்.

பதைத்தான் காட்டும் என்று முடிவு கட்டிவிட்டாள்.

அப்போது கணப்பின் விளிம்பில், டாக்டரின் வீட்டிலிருந்து திரும்பிய அவள், வைத்து மறந்திருந்த அந்த 'க்ரூப் போட்டோ' அவள் கண்களில் பட்டது. அதைக் காணவே, கூசுபவள் போல் கண்களை மூடிக்கொண்டாள். அடுத்தகணம் ஒரு ஆவேசம் அவளை உந்த, அந்த போட்டோவை ஆத்திரத்துடன் கீழே தள்ளினாள், கண்களை மூடியபடியே.

போட்டோவுடன் வேறு ஏதோ விழும் சப்தம் கேட்டுக் கண்களைத் திறந்தவள், குனிந்து அது என்னவென்று நோக்கினாள். அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. சரோஜா மறந்துவிட்டுச் சென்றிருந்த வெள்ளைப் பாஷாணப் பொட்டணம் பிரிந்து, அதனுள்ளிருந்த பாஷாணம் நான்கு பக்கமும் சிதறியிருந்தது.

அதற்குப் பிறகு அவளுக்குச் சந்தேகமே இல்லை...... (தொடரும்)

# வேடனின் ரகசியம்



ஸ்ரீ கோதண்டராமன்

அன்றைய தினம் வேடன் தன் நாயுடன் கானகம் சென்றான். வழியில் பனஞ்சாறு கொஞ்சம் பருகுவதற்காக ஒரு பனைமரத்தின் மீது ஏறினான். மேலே தொங்க விட்டுச் சாறு நிரம்பியிருந்த குடுக்கை இவன் ஏறின அதிர்ச்சியினால் இப்படியும் அப்படியுமாக அசைந்து கயிறு அறுபட்டுப் பொத்தென்று கீழே விழுந்தது. குடுக்கையை எடுக்க அவன் கீழே இறங்கினான். ஆனால், அது அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. 'இந்த நாயால் என்ன பயன்? இது ஒரு மனிதனாயிருந்தால்...' என்று பெருமூச்சுவிட்டான்.

அந்த நாய் சாதாரணமானதொரு நாயல்ல. முற்பிறப்பில் அது மானிடனாகவே இருந்திருக்க வேண்டும். எசமானனின் சொற்களை அது நன்றாகக் கேட்டது. உடனே குடுக்கையைத் தேட ஆரம்பித்தது. அது அருகேயுள்ள முட்புதரின் மத்தியில் இருக்கக் கண்டது.

'என்னால் என்ன பயன்? எசமானரே, நான் அதைக்கொண்டு வரட்டுமா?' என்று மானிடக் குரலில் எசமானனைக் கேட்டு வாலை ஆட்டியது.

எசமானன் திடுக்கிட்டான். 'என்ன, உனக்குப் பேசவும் தெரியுமோ?' என்றான்.



'அதிருக்கட்டும். நான் அதைக் கொண்டு வரட்டுமா?'

'ஆகா' என்று அவன் தலையசைக்க, நாய் தான் அக்குடுக்கையைக் கண்டவிடத்திலிருந்து கவ்வியெடுத்துக்கொண்டு வந்து கொடுத்தது.

வேடன் தாக விடாய் தீர்த்துக் கொண்ட பின் நாயைத் தட்டிக் கொடுத்தான்.

'மனிதர்களின் பேச்சை நீ எவ்விதம் அறிவாய்?'

'அது பூர்வ ஜன்ம வாசனையாயிருக்கலாம். ஆனால், மனிதர்களின் பேச்சு மட்டுந்தானா? மிருகங்கள் சொல்லிக் கொள்வதெல்லாமும், பட்சிகளின் பாட்டெல்லாமும் நான் அறிவேன். என் குலத்திற்குரிய சிறப்பியல்பும் என்னிடம் விசேஷமாக உண்டு. காட்டிலுள்ள மிருகங்கள் செல்லும் வழியில் பரவும் வாசனையைக் கொண்டே என் முகரும் சக்தியினால் அவைகளின் இருப்பை அறிந்துகொள்வேன்.'

'அப்படியா! என் தொழிலில் நீ உற்ற துணைவனாகவே இருப்பாய். ஆயினும், உன் முகரும் சக்தி எனக்கும் இருந்தால் என் தொழிலை மிக நன்றாய் நடத்தலாம்.'

'அது ஆகாத காரியமில்லை. மிருகங்கள் செய்யும் சப்தங்களை அறிய ஒரு சிறு கருவியையும் மூக்கில் வாசனையறிந்து அவைகளைப் பிடிப்பதற்காக ஒரு கருவியையும் வைத்துக்கொண்டால் போதும்.'

'அப்படியானால், மிருகங்கள் பட்சிகளின் பாஷையையும் அறிந்து அவை போகும் வழியைக் கண்டுபிடிக்க முடியுமென்று சொல்லுகிறாயா?'

'ஆமாம், அப்படித்தான் சொல்லுகிறேன்.'

'ஆனால் அக்கருவிகளை என் காதுகளிலும் மூக்கிலும் வைப்பாயா?'

'வைக்கிறேன். ஆனால், இவையெல்லாம் தேவ ரகசியங்கள். பூர்வ ஜன்மங்களில் தவம் செய்து பெற்றவை. இவை உம்மை ஆபத்தில் கொண்டு வந்துவிடுமே என்றுதான் அஞ்சுகிறேன்.'

'என்ன ஆபத்து? அது எப்படி நேரும்?'

'இக்கருவிகள் உமக்குப் புதிய சக்திகள் அளிக்கும். உதாரணமாக, உமது கொல்லையிலுள்ள கோழிகள் தமக்குள் பேசிக் கொள்வதை நீங்கள் அறிவீர்கள். அறிந்தால் சும்மாயிருப்பீர்களா? இன்றியமையாது ஆச்சரியத்தினால் சிரிப்பீர்கள்.'

'அப்புறம்?'

'உமது அருகாமையில் நின்று நீர் சிரிப்பதைப் பார்க்க நேரிடும் உமது நாட்டாண்மைக்காரர், நீர் சிரிப்பதன் காரணத்தைக் கேட்பார். உமது மரியாதைக்குரிய அவர், கேட்கும்போது நீர் சும்மாயிருக்க முடியுமா? மிருகங்களின் ரகசியத்தை வெளியிடும் மனிதன் உடனே உயிர் துறப்பான்.'

'அப்படி நானொன்றும் சொல்லாவிட்டாலோ?'

'நாட்டாண்மைக்காரரிடம் சொல்லாமலிருந்து விடலாம். உம் நெருங்கிய நண்பர்களிடமோ, அருமை மனைவியிடமோ, அல்லது தவப் புதல்வனிடமோ சொல்லாமல் இருக்க முடியுமா?'

'அப்படியெல்லாம் நான் இருக்க மாட்டேன். நான் திடபுத்தியுள்ளவன்; உறுதியான பேர்வழி. சிரிக்காமல் இருக்கவும், நீ சொல்லப் போகும் ரகசியத்தை வெளியிடாமல் இருக்கவும் மிக

வும் முயல்வேன் என உறுதியாய்ச் சொல்வேன்.'



'சரி, இவ்வளவு தூரம் சொல்லுவதால் செய்கிறேன்.' அவனுடைய காதுகளுக்கும் மூக்குக்கும் கருவிகள் சரியாக இருப்பதன் பொருட்டு அவைகளின் அளவை நாய் எடுத்துக்கொண்டது.

தெய்வீக நாய் எதைத்தான் செய்ய முடியாது? அது கொண்டு வந்த கருவிகளைச் சரியாக மாட்டிக்கொண்ட பிறகு, வேடன் தான் விரும்பியவண்ணம் மிருகங்களை வேட்டையாடிப் பிடித்தான். மிருகங்கள் பதுங்கியிருக்கும் இடங்களையும் அவற்றின் ரகசிய மொழிகளையும் அறிந்தவன் அவற்றின்மீது பேராதிக்கங் கொண்டான். ஒருநாள் ஒரு காட்டெருமை, மற்றொரு நாள் ஒரு யானை, இன்னுமொரு நாள் ஒரு காண்டாமிருகம்-இப்படி தினந்தோறும் அவனுக்குக் கிடைத்து வந்தன. அவற்றின் மாமிசத்தைக் கடையில் விற்று விரைவில் பணக்காரனாய் விட்டான்.

அவன் மனைவி இதையெல்லாம் கண்டு பிரமித்துவிட்டாள். இதுவரையில் மிகச் சாமானிய வேடனாயிருந்த அவனுக்கு இவ்வளவு மிருகங்கள் எப்படித் திடீரெனக் கிடைத்தன என்பதை அறிய ஆவல் கொண்டாள்.

கணவன் மிகவும் கெட்டிக்காரத்தனமாக இருந்து யாதொன்றையும் வெளியிடாது சும்மாயிருந்தான். ஒருநாள் மாலை குடிசையில் தான் தனித்திருந்ததாக நினைத்துக்கொண்டிருக்கையில் ஒரு எறும்பு இன்னுமோர் எறும்புக்கு கீழ்க்கண்டவாறு சொன்னதை அவன் தன் செவிகளாலேயே கேட்டான். 'இன்று மாலை அவளைக் காலில் கடித்துவிடுகிறேன்; அப்பொழுதுதான் நான் வெயில் காய்கிற இடத்தில் இனி அவள் வந்து உட்காரமாட்டாள்.'

ஆண் எறும்பு இவ்விதம் பேசியது மனைவியைக் குறித்துத்தான் என்பது வெளிப்படை. இதைக் கேட்ட கணவன் சிரித்தான்.

சிரிப்பொலியை உள்ளிருந்து கேட்டுவிட்ட மனைவி வாயிற்படியண்டை வந்து, 'நீர் ஏன் சிரித்தீர்?' என்று கேட்டாள்.

'சும்மாதான் சிரித்தேன். இவ்வுலகில் எவ்வளவோ வேடிக்கையான விஷயங்கள் இருக்கின்றன என்ற எண்ணம் வரவே சிரித்தேன்.'

அவள் சொன்னாள்: 'நானும் ரொம்ப நாளாய்ப் பார்க்கிறேன். என்மேல் உமக்கு நம்பிக்கையேயில்லை. நீர் என்ன செய்கிறீர். என்ன எண்ணுகிறீர் என்பதைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியவில்லை. யாதொரு தயை தாட்சண்யமும் காட்ட வேண்டியிராத ஒரு அடிமையைப்போலவே என்னையும் நடத்துகிறீர். ஆயினும் நான் உமது சகதர்மிணி; உமக்கு ஆலோசனை கூறுபவள். உமது எண்ணம், யோசனைகளில் எனக்கும் உரிமையும் பங்குமுண்டு.'

இது சமயம் அந்தக் குறும்புத்தனமான ஆண் எறும்பு தன் பத்தினியைப் பார்த்துச் சொன்னது:

'அதைக் கேட்டாயா? சகதர்மிணியாம்! ஆலோசனை கூறுபவளாம்! இரண்டு தடவை இன்று



அவளைக் கடிக்கிறேன். இன்னும் ரொம்ப மிருதுவான இடத்தில்!'

இவ்வார்த்தைகளைக் கேட்ட அவ்வேடன் கொல்லென்று சிரிக்காமல் இருக்க முடியவில்லை. மனைவிக்குக் கோபமோ பொங்கி வந்தது.

'இதை நன்றாய்க் கேளுங்கள்!' என்றாள் அவள் மீண்டும்.

'இந்தக் கூத்து ரொம்ப காலமாக நடந்து வருகிறது. அது போதும். இன்றைய தினம் வரையில் பொறுமையுடனிருந்தேன். இந்த க்ஷணமே நீர் என்னுடன் சிரித்த காரணத்தைக் கூறாவிடில், என் பெற்றோர்கள் வீட்டுக்கு நான் போய்விடுகிறேன். நீர் உம் அவமரியாதைச் செயல்களைப் பொறுத்துக்கொள்ளக் கூடிய வேறொருத்தியைத் தேடி மணஞ்செய்து கொள்ளும். நீர் ஏன் சிரிக்கிறீர் சொல்லும் சொல்லுகிறீரா, இல்லையா?'

'நான் சொல்லுகிறேனே, சும்மா தான் சிரிக்கிறேன்.'

'சும்மா யாராவது ஒருவர் சிரிப்பாரா? சரி, நான் போய் விடுகிறேன்.'

வேடன் மனைவியை மிகவும் காதலித்தான். அவன் அவளுக்கு என்ன பதில் சொல்வது என்பதைப்பற்றி ஆலோசிக்க ஏழு நாள் தவணை கேட்டான். அவள் இன்னும் அதிகமாகக் கோபங்கொண்டு, 'முடியாது, இப்போதே எனக்குத் தெரிந்தாக வேண்டும்!' என்றாள்.

அவன் சொல்ல மறுப்பது மிக அவசியமெனக் கருதியது. மனைவியின் ஆவலை இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டது. அவளுக்கோ கோபம் மேன் மேலும் கொதித்தெழுந்தது.

எறும்பு கடிப்பதற்குச் சித்தமாயிருந்த அதே இடத்தில் அவள் அதுசமயம் உட்கார்ந்தாள்.

'அங்கே உட்காராதே!' என்றான் கணவன்.

'எனக்கு இஷ்டமான இடத்தில் உட்காருவதை ஏன் கூடாதென்கிறீர்?'

'ஏனெனில், ஏனெனில்...'

அதற்குள் எறும்பால் கடிக்கப் பட்டு, 'ஆ! ஆ!' என்று கத்தினாள் அவள். மேலும் கணவனும் இதற்கு ஏதோ ஒரு காரணமாயிருக்க வேண்டுமென்று நம்பி, அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்தாள்.

உடனே தன் மூட்டைமுடிச்சுகளைக் கட்டிப் புறப்படுவதற்குச் சித்தமானாள். கணவன் அவளைப் போகவிடுவானா?

'இதோ கேள், அது ஒரு ரகசியம். அதை ஒருவருக்கும் வெளியிடுவதில்லையென வாக்குக் கொடுத்தேன். நீ என்னைக் கட்டாயப்படுத்துவதால் இதோ சொல்லுகிறேன்!'

வேடன் தன் மனத்திலேயே வைத்துக்கொள்வதாக வாக்குக் கொடுத்ததை மனைவிக்கு வெளியிட்டான். அந்தோ!


அதுசமயம் நாய் வாசற்படியில் குரைத்தது.

'ஆமாம். நான் வாக்குறுதி செய்தது உண்மைதான்' என்றான்.

இன்னும் மேலே சொல்ல வாயெடுத்தான். அதற்குள் கண் உள்ளுக்கு இழுத்துக்கொண்டது. கீழே சாய்ந்துவிட்டான் வேடன்.

இது ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடையே நாடோடியாக வழங்கும் கதைகளில் ஒன்று.





# அவர் செய்த உதவி

கிச்சா

மஹாராஜா! மந்திரி உங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்கிறார்' என்றான் அரசனின் அந்தரங்க மெய்க்காப்பாளன் அபயங்கரன்.

'இப்பொழுது பார்க்க முடியாது! மத்தியானம் வரச் சொல்' என்றார் அரசர். பதினைலாவது மாம்பழத்தை நறுக்கி தன் பட்டமகிஷியுடன் ஒவ்வொன்றாக பங்கு போட்டுக்கொண்டு அருந்திக்கொண்டிருந்த சமயம். அரசருக்கு மாம்பழம் என்றால் உசிரு. இன்னும் நறுக்கி உண்ணவேண்டிய மாம்பழங்கள் எவ்வளவோ தட்டில் இருந்தன.

'இல்லை! ரொம்ப அவசரமான காரியமாம்! உடனே பார்க்க வேண்டுமாம்! காலதாமதம் பண்ண முடியாது என்று சொல்லுகிறார்!' என்றான் அபயங்கரன்.

'அவசரக் குடுக்கை! சமயாசமயம் தெரியாதவன்! சரி! வரச் சொல் தர்பார் மண்டபத்திற்கு' என்று சொல்லிவிட்டு எழுந்திருந்தார் அரசர்.

'மந்திரி! சத்ருக்கள் போருக்கு கிளம்பி வருகின்றனரா, என்ன?' என்றார் அரசர்.

'என்ன! போருக்கா? நான் மந்திரியாக இருக்கும்பொழுதா! ஒருகாலுமில்லை. எல்லா ராஜாக்களையும்தான் பெட்டியில் அடக்கின பாம்பு மாதிரி அடக்கி வைத்திருக்கிறோமே' என்றார் மந்திரி சிரித்துக்கொண்டே.

'ஜனங்கள் வரிகள் ஜாஸ்தி என்று கிளர்ச்சி பண்ணுகிறார்களா?'

'அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் சாம்ராஜ்யத்தில் அவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள். நீங்கள் பல்லாண்டு ஜீவித்திருந்து இந்த ராஜ்யத்தை ஆளவேண்டும் என்று கடவுளை தினமும் பிரார்த்திக்கிறார்கள்' என்றார் மந்திரி.

‘பின்னே ஏன் இங்கு என்னை அவசரமாகப் பார்க்க ஓடி வந்தீர்கள்!’ இப்ப என்ன தலைமுழுகிப் போச்சு’ என்றார் அரசர் கோபத்துடன்.

‘மஹாராஜா! எல்லாம் உங்கள் நலனைப் பற்றித்தான் நான் ஓடி வந்தேன். உங்கள் இளவரசர்...’

‘இளவரசர், ஏதாவது தனவந்தரின் பெண்ணுடன் காதல் நாடகமா? இல்லை! ஏதாவது தனவந்தரின் பெண்ணின் கற்பை சூறையாடிவிட்டானா? இவனால் நான் தலைகுனிய வேண்டியிருக்கிறது! அரச குடும்பத்திற்கே அவமானம்! இப்பொழுது என்ன சிக்கல்?’

‘ஒரு மீன் பிடிக்கும் செம்படவப் பெண்ணுடன்...’

‘செம்படவப் பெண்ணா?’ என்றார் அரசர் வெறுப்புடன்.

‘ஆமாம்! அவள் பெயரையும் இளவரசர் பெயரையும் சேர்த்து ஊரெல்லாம் ஒரே பேச்சாக இருக்கிறது. இப்பொழுதுதான் எனக்குத் தெரிய வந்தது. இளவரசர் ஒரு வாரமாக அவள் குடிசையை முற்றுகை போட்டுக் கொண்டிருக்கிறார். அவள் எங்கே போனாலும் அவள் பின்னாலேயே போய்க் கொண்டிருக்கிறார்’ என்றார் மந்திரி.

‘அவள் என்ன அப்படி அழகா?’ என்று வினவினார் அரசர்.

‘அவள் ரொம்ப ரொம்ப அழகி என்று எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்கள். அவள் அழகை சுலபமாக வர்ணிக்க முடியாதாம். அவளைப் போல் அழகான பெண்கள் பிறந்ததில்லை. இன்னும் பிறக்கப் போகிறதில்லை என்கிறார்கள். அரண்மனையில் பிறக்க வேண்டிய மாணிக்கம் குடிசையில் பிறந்துவிட்டது’ என்று வர்ணித்தார் மந்திரி.

‘என்ன! காளிதாசனின் சாகுந்தலத்தைப் படித்துவிட்டு வந்தீர்களா அல்லது மேகசந்தேசத்தைப் படித்துவிட்டு வந்தீர்களா! ஒரேதாக வர்ணிக்கிறீரே’ என்று கேட்டார் அரசர்.

‘ஆமாம்! காளிதாசன் இன்றைக்கு உயிருடனிருந்து இவளைப் பார்த்திருந்தால் தன் காவியங்கள் பரிபூரணமடையவில்லையென்று இன்னும் இரண்டு மூன்று ஸ்லோகங்கள் சேர்த்திருப்பான். அவள் கேசம் மயில் தோகை போல் குதிகால் வரையில் தொங்குகிறதாம்’ என்றார் மந்திரி.

‘ஒருவேளை அவள் மலையாள மங்கையோ?’ என்றார் அரசர் சந்தேகத்துடன்.

‘இல்லை. நான் விசாரித்துவிட்டேன். நம் ராஜ்யத்தில் பிறந்தவர்கள்தான். நம் ராஜ்யத்திலுள்ள தனவந்தர்களின் பிள்ளையெல்லாம் அவள் குடிசையைச் சுற்றி வட்டமிடுகிறார்கள். தினம் சாயந்திரம் குடிசையிலிருந்து மாந்தோப்பு வழியாகப் போய் குளத்தில் குளித்துவிட்டு வருகிறாள். அவ்வேளையில் மாந்தோப்பில் நம் ராஜ்யத்து இளைஞர்கள் அவ்வளவு பேரையும் பார்க்கலாம். அச்சுந்தரியின் தரிசனத்திற்காக அவர்கள் தபஸ் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அக்கூட்டத்தில் நம் இளவரசைப் பார்க்கும்பொழுது என் மனம் கொதிக்கிறது’ என்றார் மந்திரி.

‘இதனால் சமீபத்தில் ஏதாவது நெருக்கடி ஏற்படும் என்று எதிர்பார்க்கிறீர்களா?’

‘எப்படியும் இன்னும் ஒரு வாரத்திற்குள், அவளை இழுத்துக்



கொண்டு எங்கேயாவது ஓடிப் போய்விடுவார் என்பதே என் அபிப்பிராயம்’ என்றார் மந்திரி.

இது ஒருவாறு அரசருக்கு நிம்மதியைக் கொடுத்தது. இன்னும் ஒரு வாரமிருக்கல்லவா!

‘நம் தேசத்து இளைஞர்கள் கெட்டுப் போகாமல் காக்கவேண்டியது நம் கடமை. நீர் இன்றைய சாயந்திரம் போய் இன்னும் என்ன நடக்கிறது என்று கவனித்துவாரும். மேலே என்ன செய்வது என்று நாளைக்கு யோசிப்போம்’ என்றார் அரசர்.

மந்திரி கிளம்பிவிட்டார். அரசருக்கு ஏதோ ஒரு சபலம் தட்டியது! அவர்களுடைய முன்னோரில் ஒருவர் செம்படவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா! மந்திரியைத் திரும்பிக் கூப்பிட்டார்.

‘நிஜமாகவே அந்தப் பெண் அழகா?’ என்று அரசர் ஆவலுடன் கேட்டார்.

‘நான் இன்னும் அவளைப் பார்த்ததில்லை. ஆனால், அவள் ரொம்ப அழகு. ஊர்வசி, ரம்பையெல்லாம் அவளிடம் அழகுப் பிச்சை வாங்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள்’ என்று வர்ணித்தார் மந்திரி.

‘நம் அரண்மனையில் ஐம்பது ராணிகள் இருக்கிறார்களே, அவர்களைவிட அவள் அழகா?’ என்று வினவினார் அரசர்.

‘ஜனங்களுடைய எண்ணம் என்னமோ இவளைப் போல் அழகி உலகத்திலேயே இல்லை என்றுதான். இருந்தாலும் நான் இன்றைக்கு அவளைப் பார்த்துவிட்டு வந்து, நான் நாளைக் காலையில் சொல்லுகிறேன்’ என்று மந்திரி விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அடுத்த நாள் மந்திரி அரண்மனைக்கு வந்தார்.

‘எல்லாம் சுத்த ஹம்பக். இது மாதிரி பிரசாரம் பண்ணுவதற்கென்றே ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது. ஒன்று என்றால் நூறு என்று சொல்லுவார்கள்’ என்றார் மந்திரி.

‘அப்படியென்றால் இளவரசரைப் பற்றிச் சொன்னதெல்லாம் பொய் என்று சொல்லும். நான் அப்படித்தான் முதலில் நினைத்தேன்’ என்றார் அரசர் சந்தோஷத்துடன்.

‘நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள். இளவரசரைப் பற்றி ஜனங்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை. அந்தப் பெண்ணை ரொம்ப அழகு என்று ஒரு முழம் வர்ணிக்கிறார்களே, என்று போய்ப் பார்த்தேன். அது வெறும் பூதாகாரம்’ என்று சிரித்தார் மந்திரி.

‘நல்ல அழகு, நல்ல சிகப்பு என்று சொன்னீரே.’

‘எல்லாம் சிகப்புத் தோல், அவ்வளவுதான். சிகப்பு என்றால் அழகு என்று அர்த்தமா? இதைக் கண்டு மயங்கி நிற்கிறான்களே, அதை நினைத்தால் சிரிப்பு வருகிறது’ என்றார் மந்திரி.

‘அவள் மயிரைப் பற்றி பிரமாதமாக வர்ணித்தீர்களே?’

‘நானும்தான் ஏமாந்து போய்விட்டேன்! எலிவால் போல் மயிர்! எல்லாம் சவுரி’ என்று களுக்கென்று சிரித்தார் மந்திரி.

‘இவளைச் சுற்றியா இளவரசர் வட்டமிடுகிறார்! நம்ப முடியவில்லையே.’

‘மகாராஜ்! எல்லாம் காதல்தான்! காதலுக்குக் கண்ணேது! அரச குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற ஒரே ஒரு வழியிருக்கிறது. வேறு வழி எனக்குத் தோன்றவில்லை’ என்றார் மந்திரி.

‘என்ன?’

'இளவரசனை ஒரு வருஷம் தேச பிரஷ்டம் பண்ணிவிட வேண்டும். அதற்குள் அவளுக்கும் கல்யாணம் ஆகிவிடும். இளவரசனைப் பற்றியுள்ள வதந்திகளெல்லாம் மறைந்துவிடும். எவ்வளவோ ராஜாக்கள் தங்கள் பெண்களை இளவரசருக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க முன் வருவார்கள்' என்றார் மந்திரி.

தான் ஒரு குள்ள நரியென்றால், தன்னைவிட பெரிய குள்ள நரி அரசர் என்பதை அடியோடு மறந்துவிட்டார் மந்திரி.

அரசரின் மூளை விர்ரென்று வேலை செய்ய ஆரம்பித்தது. இதில் ஏதோ சூது இருக்கிறது என்று நினைத்தார். அவள் அழகில்லாதவளென்றால் அவளைச் சுற்றி இளவரசர் வட்டமிடுவாரா! அல்லது ராஜ்யத்திலுள்ள இளைஞர்களெல்லாரும் அவளிடம் மனதை பறிகொடுத்துவிட்டு அவள் தரிசனத்திற்காக ஏங்கிக் கிடப்பார்களா? அதெல்லாம் போகட்டும். இந்த அல்ப விஷயத்திற்காக இளவரசனை தேச பிரஷ்டம் பண்ணுவதா? ஒருவேளை மந்திரிக்கும் அவள் மேல் கண் இருந்தால்...!

அன்றைய சாயங்காலம் தானும் தன் அந்தரங்க மெய்க்காப்பாளனுடன் மாந்தோப்புக்கு போவதென்று முடிவு பண்ணினார் அரசர். 'அரசருக்குத் தலைவலி! படுத்திருக்கிறார்! ஒருவரும் அவரை பேட்டி காண முடியாது' என்று அரண்மனையில் தெரிவிக்கப்பட்டது. சாயங்காலம் ரகஸ்யமாக அரசரும் மெய்க்காப்பாளனும் மாறுவேடத்தில் மாந்தோப்பிற்குப் போய்விட்டனர். அங்கே



தான் எவ்வளவு குதிரைகள் மரங்களில் கட்டப்பட்டிருந்தன. எவ்வளவோ எவ்வளவோ பேர் மாறு வேடத்தில் அங்கு ஒளிந்து நின்று கொண்டிருந்தனர். என்ன சப்தம்! அதோ அவள் வந்துவிட்டாள்! ஏழெட்டு செம்படவப் பெண்களுடன் குளித்துவிட்டு இடுப்பில் குடமேந்திக் கொண்டு அவள் வந்து கொண்டிருந்தாள்! அவள் ரம்பையோ ஊர்வசியோ என்று வியக்கும்படி அவ்வளவு அழகாயிருந்தாள்! பதினேழு பதினெட்டு வயசுதானிருக்கும். அரசர் அவருடைய ஐம்பது வருஷ காலத்தில் எவ்வளவோ அழகிகளைப் பார்த்திருக்கிறார். அரண்மனையிலோ ஐம்பது ராணிகள் இருக்கிறார்கள். ஆனால், ஒருவளாவது இவளைப்போல அழகாக இல்லை. பிரம்மா இவளிடம் அழகையே பொழிந்து தள்ளிவிட்டான்! அதில் சந்தேகமேயில்லை. அரசரே அவள் அழகில் மயங்கிச் சொக்கி நின்றார். அவள் உடுத்தியிருந்த வெள்ளை நிற ஈரப்புடவை உடம்புடன் ஒட்டிக்கொண்டு அவளுடைய அங்க அவயவங்களின் அழகை எடுத்துக் காட்டி, பார்ப்போர்களின் மனதில் காமத்தீயை உண்டு பண்ணியது என்று சொன்னால் பொய்யாகாது. அவளுடைய நீண்ட கேசம் கார் மேகம் போல் பிரகாசித்துக் கொண்டு, பூமியைத் தொடலாமா கூடாதா என்று ஐயம் கொண்டது போல் குதிகாலை தொட்டுக் கொண்டிருந்தது. அவள் பத்தரைமாத்துத் தங்கம் போல் காக்ஷியளித்தாள்.



'என் அதிர்ஷ்டம்' என்றார் அரசர் ஆனந்தம் தாங்க முடியாமல்.

'இல்லை! என் அதிர்ஷ்டம்தான்' என்றான் அபயங்கரன் மெதுவான குரலில். நல்ல வேளை! அவன் குரல் அரசரின் செவியில் விழவில்லை.

'மந்திரி என்னிடம் ஒரேயடியாகப்புளுகிவிட்டார். இப்பொழுது இங்கிருந்தால் அவரைச் சிரச்

சேதம் பண்ணிவிட்டு மறுகாரியம் பார்ப்பேன்' என்றார் அரசர்.

இவ்வார்த்தைகளைக் கேட்க அபயங்கரனுக்கு ஏனோ ஆனந்தமாயிருந்தது. 'மந்திரிதானே! அதோ இருக்கிறாரே! அவரைக் கூப்பிடட்டுமா?' என்று ஒரு மூலையைக் காண்பித்தான். அரசரின் எண்ணம் உடனே நிறைவேற வேண்டும் என்ற அவா போல்! அவன் காட்டின மூலையில் அரசர் பார்த்தார்! மாறு வேடத்தில் ஒருவர் அப்பெண்ணை விழுங்கிவிடுபவர் போல் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவள் போனவுடன் கூட்டம் கலைந்துவிட்டது. அரசர் அபயங்கரனைக் கூப்பிட்டு, 'இவ்வட்டாரத்து தலையாரியை அழைத்துக் கொண்டு போய் இப்பெண்ணையும் அவள் தகப்பனாரையும் அழைத்து வா' என்றார்.

'யார் கூப்பிடுகிறார் என்று கேட்டால்' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் அபயங்கரன்.

'பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர் கூப்பிடுகிறார் என்று சொல்' என்றார் அரசர்.

அரசரின் மனம் ஆனந்தத்தினால் துள்ளிக் குதித்தது. அவளைத் தானே கல்யாணம் செய்து கொண்டுவிட்டால்! சிவசிவா! அதனால் அரண்மனையில் எவ்வளவு கலகங்கள், எவ்வளவு அனர்த்தங்கள் ஏற்படக்கூடும்! அவர் அரசராயிருக்கலாம்! ஐம்பது ராணிகளும் ஒன்று கூடி அவரை எதிர்த்தால், அக்கல்யாணத்தை எதிர்த்தால் அப்புறம் அந்த நரக வேதனையைச் சொல்ல வேண்டாம்! திடீரென்று ஒரு முடிவிற்கு வந்துவிட்டார். அரண்மனையில் ஒற்றுமை நீடிக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதானிருந்தது.

அபயங்கரன் தலையாரியுடனும் அப்பெண்ணுடனும் வந்துவிட்டான்.

'இத்தலையாரி நான் சொல்லுவதைக் கேட்க முதலில் மறுத்தான். கத்தியைக் காட்டின பிறகுதான்...' என்றான் அபயங்கரன்.

'அப்படியானால் அவன் நாளைக்கு தூக்கு மரத்தில் தொங்குவான்' என்றார் அரசர்.

'மன்னிக்கவேண்டும், மன்னிக்கவேண்டும்' என்று காலில் விழுந்தான் தலையாரி.

'சரி! நீ முன்னாலே போ! பின்னால் இந்தப் பெண்வரும்!' என்று சொல்லிவிட்டு, அப்பெண்ணைப் பார்த்தார் அரசர். மீண்டும் அவர், அழகில் மயங்கி ஒரு நிமிஷம் தவித்து நின்றார். ஆனால், அடுத்த நிமிஷம் மனதை திடப்படுத்திக்கொண்டு தன் கடமையை உணர்ந்து அவர்கள் பின்னால் நடக்கலானார். கொஞ்ச தூரம் சென்றிருப்பார்கள். பின்னாலேயிருந்து இரண்டு மூன்று குதிரைகள் பெரும் வேகத்துடன் வரும் சப்தம் கேட்டது. அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். இடி இடிக்கும் குரலுடன் ஒருவன் அரசரருகில் ஓடி வந்தான். கையில் வாளை உருவிக்கொண்டு வந்தான். அவன் முகத்தில் முகமூடியில்லை. அவன் இளவரசன்தான்.

'நில்! யாராயிருந்தாலும் சரி! என் காதலியை நெருங்கினால் அவனை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டுவிடுவேன்' என்று உறுமிக்கொண்டே அரசரருகில் வந்தான்.

'ஏ கிழமே! உனக்குத் தெரிகிறதா! அரசகுமாரனிடமா உன் வாலை ஆட்டுகிறாய்! உன் கதி என்ன ஆகும் தெரியுமா? ஏன் இன்னும் இங்கு நிற்கிறாய்? ஏன் அவளை இங்கு அழைத்து வந்தாய்? இந்தா என் பரிசு' என்று அரசரின் தாடையில் ஓங்கி ஒரு குத்து குத்தினான். அடுத்த நிமிஷம் அவன் திடுக்கிட்டான். அவர் கண் ஜாடையிலிருந்து மாறுவேடத்திலிருப்பது தன் தகப்பனார்தான் என்று அறிந்து திடுக்கிட்டான்.

'அப்பா! நீங்களுமா தினம் இங்கே' என்று ஒரு குண்டை வீசியெறிந்தான்.

அரசரின் மீசை துடித்தது! என்ன அவமானமான கேள்வி!

'உன் சினேகிதர்களை வீட்டுக்குப் போகச் சொல்! அதுதான் சரி' என்றார் அரசர். அவ்வார்த்தைகளைக் கேட்டதுமே அவர்கள் இளவரசரின் உத்தரவுக்குக் கூட காத்திராமல் சிட்டாய்ப் பறந்துவிட்டனர்.

'என்ன கேள்வி கேட்டாய்! வாயை அடக்கிப் பேசு! உன்னைப் பற்றி அவதூறுகள் நேற்றைக்குத்தான் கேள்விப்பட்டேன். எவ்வளவு தூரம் உண்மை என்று அறிய நானே மாறு வேடத்தில் இங்கு வந்தேன். எல்லாவற்றையும் கண்டேன்! சந்தோஷமடைந்தேன்! பூரிப்படைந்தேன்! போர்களில் எதிரிகளின் சேனைகளின் உள்ளே புகுந்து சூறையாட வேண்டியவன், இங்கே தன் சொந்த ராஜ்யத்திலேயே வாளேந்தி ஸ்திரீகளின் கற்பை சூறையாடுகிறான் என்று கண்டு ஆனந்தமடைந்தேன். உன் கடமையை நீ மறந்தாய்! உன் கடமையை உணர்த்தவே நான் இங்கு வந்தேன். ஜனங்களின் நன்மையை கவனிக்க வேண்டியவன், உன் சொந்த நலனையே குறியாகக் கொண்டிருக்கிறாய்! உன்னைப் பற்றி அவதூறுகள் உன் தாயாரின் காதில் விழுந்தால், இது மாதிரி பிள்ளையைப் பெற்றோமே என்று மனம் கொதித்து தீயில் குதித்துவிடுவாள்' என்றார்.

இளவரசரின் கண்களில் ஜலம் ததும்பியது. அச்சமயம் திடீரென்று பின்னாலேயிருந்து ஒரு சப்தம் கேட்டது. மாறு வேடமணிந்த ஒருவர் கையில் வாளேந்தி குதிரையின்மேல் வந்தார்.

'யாராயிருந்தாலும் சரி! என் காதலியை மனதில் நினைத்தாலும் சரி, இல்லை அவளருகில் நெருங்கினாலும் சரி, அவர்களுடைய ரத்தத்தை என் வாள் உறிஞ்சிவிடும். செம்படவ அழகியை எவன் தூக்கிக்கொண்டு போனாலும் அவனை என் வாள் வெட்டி வீழ்த்திவிடும்' என்று உறுமினான்.

'நீர் யார்?' என்று கேட்டார் அரசர்.

'நான் இந்நகரத்து மந்திரி' என்று முகமூடியைக் கழட்டினார்.

'நான் இளவரசர்! உமக்குத் தெரிந்திருக்குமே' என்றார் இளவரசர் இடக்காக.

'நான் இந்நாட்டு மன்னன்' என்று அரசர் முகமூடியைக் கழட்டினார்.

அரசரைப் பார்த்தவுடன் மந்திரி வெலவெலத்துப் போய்விட்டார்.

'மகாராஜா! இந்த செம்படவப் பெண்ணை இளவரசர் இன்றைய இரவு தூக்கிக்கொண்டு போவதாக திட்டம் போட்டிருந்தார். அதைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு பண்ணினேன். உங்

களைக் கலந்தாலோசிக்க அவ காசமில்லை' என்றார் மந்திரி.

'நானும் ஒரு முடிவிற்கு வந்து விட்டேன். உம்மைக் கலந்தாலோசிக்க அவகாசமில்லை' என்றார் அரசர் மீண்டும்.

'அபயங்கரா! இந்தப் பெண்ணை நேராக உன் வீட்டிற்கு அழைத்துப் போ! நாளைக் காலையில் புறப்படும் கப்பலில் பர்மாவிற்கு அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டுவிடு! உன் செலவிற்குப் பணம் தருகிறேன். நீ ராஜவிசுவாசமுள்ளவன் என்று தெரியும். என் கட்டளையை சரிவர நடத்துவது உன் கடமை' என்றார் அரசர்.

இளவரசர் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அரசரின் வார்த்தையை மீறிச் சொல்ல அவருக்கு தைரியம் வரவில்லை.

'இது சரியல்ல! கிளியை வளர்த்து பூனையிடம் கொடுக்கிற மாதிரி என்று மந்திரி முணுமுணுத்தார். இளவரசரை அவ்வூரைவிட்டு அகற்றிவிட்டால் அப்பெண்ணை தான் அடையலாம் என்ற ஆசையில் மண்ணை விழுவது! அவர் எண்ணம் அரசருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

'அபயங்கரா! யாராயிருந்தாலும் சரி! உங்களுக்கு எவ்வித இடையூறுகள் செய்தாலும் அவர்கள் ராஜ கோபத்திற்கு ஆளாவார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்' என்றார். மந்திரியின் முகம் சுண்டியது.

'அபயங்கரா! உனக்கு இந்த ஏற்பாடு சம்மதம்தானே' என்றார் அரசர்.

'உங்கள் சித்தம் என் பாக்கியம்' என்றான் அபயங்கரன்.

'ஆமாம்! அப்படித்தானுங்க' என்றாள் அவள் கைக்கூப்பிக் கொண்டு.

'உன் தகப்பனார் உன்னோடு வரவில்லையே என்றுதான் எனக்கு வருத்தம்' என்றார் அரசர்.

'அவர் உங்களுக்கு சேவை செய்யட்டும். நாங்கள் சமாளிச்சுப்போம்' என்றாள் அவள் சிரித்துக்கொண்டு.

ஃ ஃ ஃ

ஒரு வாரம் கழித்து பர்மாவில் ஒரு இந்திய வியாபாரி வட்டிக்கடை திறந்தான். அவன் பெரிய பணக்காரன் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், எல்லோரும் அவனுடைய மனைவியின் அழகைப் பற்றி புகழ்ந்தார்கள். தன் காதலுக்கு குறுக்கே இளவரசரும் மந்திரியும் மற்ற தனவந்தர்களும் இருக்கும் பொழுது தன் காதல் எங்கே நிறைவேறப் போகிறது என்று அந்த ஆசையை விட்டுவிட்டான். ஆனால், தங்களுக்குப் பூர்ணமாக ஒத்தாசை செய்து அந்த இளம் காதலர்களை ஒன்று சேர்த்து பர்மாவிற்கு அனுப்பின அரசரை அந்த அபயங்கர தம்பதிகள் இன்னும் பாராட்டுகிறார்கள். ஆனால், அவன் திரும்பி தாய்நாட்டுக்குப் போய் அரசரைப் பேட்டி காணவில்லை. ஆமாம்! ஆசை மனையாட்டியை தனியாக விட்டு விட்டு அவன் எப்படி போக முடியும்! மேலும் அவன் வட்டிக் கடை பெருத்துவிட்டதே!






திரையில் கண்டிராத காட்சிகள்

●

தொகுப்பு. புகைப்படம் எம்பியெஸ்

★

குசலகுமாரிக்கு என்றுமே மங்காத ஒரு மவுசு திரையில் இருந்து வருகிறது. அவரது குடும்பமே ஒரு கலைக் குடும்பம். தாய் எட்டடியானால் குட்டி பதினாறடி என்று சொல்லுவது உண்டு. இதை மெய்ப்பித்து விட்டார் குசலி. அவரது தாய் தமயந்தி அந்தக் காலத்தில் பெயர் பெற்ற நடிகை. அவர் ஈன்ற குசலி அவருக்குச் சோடை போனவரல்ல என்று நிரூபித்துவிட்டார்.

●

கயிறு தாண்டுதல் என்றால் இவருக்கு கொள்ளை ஆசை.



படப் பிடிப்புக்குச் செல்ல கார் வருவதற்கு முன்னாலேயே ஆயத்தமாக காத்திருக்கும் குசலிக்கு உடைப் பெட்டியை எடுத்துத் தருகிறார் அவரது தம்பியின் ஆங்கில ஆசிரியை.

வீட்டு வாசலில் கிருஷ்ண மண்டபம் ஒன்றை அழகாக கட்டியிருக்கிறார் நடிகை குசலகுமாரி



தம்பி சேகருக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்.





தன் அழகு மகளுக்கு தலைவாரி பூ முடித்து பார்ப்பதைவிட அந்த தாயுள்ளத்திற்குத்தான் வேறு என்ன ஆனந்தம் இருக்கமுடியும்?



பூ வேலை செய்வதில் அதிக உற்சாகம் உண்டு இவருக்கு. அவர் கையால் போட்டவைகளை எடுத்துப் போட்டார், மலையாகக் குவிந்தது.





கதைப் புத்தகத்தை எடுத்துவிட்டால் நேரம் போவதே தெரியாது குசலகுமாரிக்கு. பல தடவை ரயிலைக்கூடத் தவிர விட்டிருக்கிறாராம்



தன் தம்பியுடன் ரிங் டென்னிஸ் ஆடுகிறார். தம்பி சேகருக்கு எது பிடிக்குமோ அதுதான் அவருக்கும் பிடிக்கும். சேகருக்கும்அக்காவிடம் தான் அதிக ஆசை.

★



ரேடியோவில் ஏதோ சங்கீதம் கேட்கிறார். நல்ல சங்கீத ஞானம் உள்ள இவர் எப்போதும் 'பாக்கட்' ரேடியோவை கீழே வைப்பதில்லை சேகரின் ஒரு காது சங்கீதத்திலும் மற்றொரு காது பாடத்திலும் ஆழ்ந்து இருக்கிறது.

★



ஆகாரத்தை குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் சேர்ந்து சாப்பிட வேண்டும் என்பதை இப்போதும் அனுஷ்டித்து வருகிறார் தமயந்தி. குசலிக்கு காரம்தான் பிடிக்கும்.



# குட்டுவன்-மரந்தை

மா.ரா.இளங்கோவன்

**தோ**ழி கூற்றாக அமைந்துள்ள குறுந்தொகைச் செய்யுளில் புலவர் கொல்லிக் கண்ணனால் குட்டுவன், மரந்தை பற்றிய குறிப்புக்கள் தரப் பட்டுள்ளன.

திருமணம் நடைபெறப் போகின்றது. எனவே, ஊரார்க்கு அலர் தூற்ற வேண்டிய வேலை இனி இல்லை என்று கூறும் தோழி, குட்டுவனுக்குரிய மரந்தை என்னும் நகரைப் போன்ற தலைவிக்குரிய தலைவன் என்று அவனைச் சிறப்பிக்கின்றாள்.

குட்டுவன் என்பவன் குட்டநாட்டை உடையவன். குட்டநாடு மேலைநாட்டின் ஒரு பகுதி. குட்டுவன் என்னும் பெயர் சேரர்களுக்கு உரியது. செங்குட்டுவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் பெயரமைப்புக்கள் இதனைத் தெளிவுறுத்தும்.

மரந்தை என்பது, மேலைக் கடற்கரையின்கண் உள்ளதொரு நகரமாகும். அது இயற்கையழகு மிகுந்தது. மரந்தை என்பது தவறு என்றும், மாந்தை என்பதே சரியென்றும் திரு. ரா. ரா. அவர்கள் கூறுவார்கள். அவர் தம் கூற்றினைக் காண்போம்:

'முத்தொள்ளாயிரத்து மல்லனீர் மாந்தையார் மாக்கடுங் கோதைக்கு' என வெண்பாவடியில் வருதலால் இவ்வூர்ப் பெயர் மரந்தையாகாமை நன்கு துணியப்படும். மேற்றிசை யாத்திரிகரால் இவ்வூர் பின்னாளில் மாதையென வழங்கப்பட்டது. ஆய்வேட்டு உரிய பொதியிற் புறத்துக் கடலில்லாத அகநாட்டில் மாந்தை, முாந்தை எனப் பெயரியதோர் உண்மை. பூகோள நூலிற் கண்டதாம். அது கடற்றுறை ஊரில்லாமையால் இம்மாந்தை அதனின் வேறாய கடற்றுறைப் பட்டினமாதல் நன்குணரலாம். மாந்தை வருமிடங்களில் கடல் கூறப்படுதல் நோக்கியறிக' (குறுந்தொகை விளக்கம். பக்: 67–68.)

ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையங் குருகின் கான
லம் பெருந்தோ
ட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு
மவனே'

—(குறுந்தொகை 34.)

## பாடலி

படுமாத்து மோசிகீரனார் பாடிய தலைவி கூற்றாக அமைந்துள்ள செய்யுளில் பாடலி பற்றிய குறிப்புள்ளது.

தலைவனது வரவைப் பாணன் கூறக் கேட்டாள் தலைவி. அவன் பரத்தையரிடம் சென்று மீள்கின்றான் என்று பாணன் சொன்ன செய்தி அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆயினும் அவள் மனத்தில் ஐயம் குடிகொண்டது. பாண



னைப் பார்த்து 'நீ கண்டாயா?' என்று கேட்டாள். அடுத்து 'கண்டவர் சொல்லக் கேட்டாயா?' என்றாள். பாணன் கண்டவர் சொல்லக் கேட்டேன் என்றான். உடனே தலைவர் நினக்கு உரைத்தவர் கூறியது உண்மையானால், எனக்கு அதைச் சொல்லும் உன் கூற்றும் உண்மையானால் நீயும் நினக்குரைத்த அவரும் யானை சோணையாற்றிற்படியும் பொன்மலிந்த பாடலியைப் பெறுக என்று கூறினாள்.

கண்டபாணன் சொன்னமையும், கேட்ட பாணன் சொன்னமையும் பொய் என்று உணர்ந்தமையால்தான் தலைவி தன்னாலாகாத பெரும் கொடையை அவர்கள் பெறுக எனக் கூறினாள்.

சோணை—ஒரு ஆறு. இதுபற்றிய குறிப்பு சிலப்பதிகாரம் இந்திர விழாவூரெடுத்த காதையில் வருகின்றது. இதன் வடகரையில் உள்ள நகரமே பாடலிபுத்திரமாகும். இது பழையகாலத்தில் மகதநாட்டின் தலைநகரமாக இருந்தது. இது பாடலியெனவும் வழங்கும்.

'நீகண் டனையோ கண்டார்க்கேட்
டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணை
படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர்
வரவே'
—(குறுந்தொகை 75.)

## எழினி

ஔவையார் பாடிய பரத்தை கூற்றாக அமைந்துள்ள பாடலொன்றில் எழினி என்பானைப்பற்றிய குறிப்புள்ளது.

தலைவி தன்னைப் புறங் கூறினாள் என்று பரத்தை அறிந்தாள். அதனால் அவள் வெகுண்டாள். எனவே, அவள் தலைவி கேட்கும் வகையில் தன்னுடைய ஆற்றலை மிகுத்துக் கூறினாள். அவள் 'தலைவன் என்னோடு உறவு கொள்வதைக் குறித்துக் கலக்கம் கொள்வாளாயின், எழினியின் போர் முனையிடத்துள்ள பசுக் கூட்டத்தைப்போல, அவள் தன் சுற்றத்தாருடன் தன்னுடைய கணவனைக் காத்துக்கொள்ளட்டும் என்றாள். தலைவனைக் காத்துக்கொள்ளாத தலைவி, தன்னைப் பழிப்பது பிழை என்று எண்ணியது அவள் உள்ளம். எனவேதான், சுற்றம் சூழத் தலைவனைக் காத்துக் கொள்ளட்டும் என்று கூறினாள். எழினி தனக்குரிய நிரையைக்கொண்ட பகைவரிடத்திலிருந்து அதனைமீட்டுக் காத்தாற்போலத் தலைவி தலைவனைக் காத்துக் கொள்ளட்டும் என்று அவள் கூறும் பகுதி நயம் உடையது.

எழினி—அதியமான் அஞ்சியின் மற்றொரு பெயர் என்று கூறப்படுகிறது. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த அதியமான்களுள் எழினி என்பான் ஒருவன் என்றும், அவன் காலத்தே சேரநாட்டைச் சேரமான் பெருஞ் சேரலிரும்பொறை ஆண்டுவந்தான் என்றும், சேரமானுக்கும் எழினிக்கும் எவ்வகையாலோ பகைமையுண்டாயிற்று என்றும், அதனாலேற்பட்ட போரில் எழினி இறந்தான் என்றும் கூறப்படுகின்றது. எழினி, தன் நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து சென்ற பகைவர்களோடு போரிட்டு அவற்றை மீட்டுக்காத்தான் என்றும் வரலாறு அகநானூற்றுச் செய்யுட்களாலும், தகடூர் யாத்திரைச் செய்யுளாலும் அறியக் கிடக்கின்றது.



'கூந்த லாம்பன் முழுநெறி
யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்திறை
விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடுங் காக்கதன் கொழுநன்
மார்பே'

(குறுந்தொகை—80)

## பொறையன்-கொல்லிப்பாவை

பரணர் பாடிய பாடலொன்று தோழி தலைமகனுக்கு வாயில் மறுத்த வரலாற்றைக் கூறுகின்றது. அப்பாடலில் பொறையன், கொல்லிப்பாவை பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

தலைவி தலைவனுடைய பெயரை வள்ளைப்பாட்டில் அமைத்துப் பாடினாள். அதனைக் கேட்ட ஊரார் அலர் தூற்றினர். தலைவன் வழக்கம்போல வந்தான்; வேலிப்புறத்தே நின்றான், தோழி பேசலானாள்:

'சேரனுக்குரிய கொல்லிமலையில் உள்ள கரியகண்கள் கொண்ட தெய்வம்,





அம்மலையின் மேற்குப் பாக்கத்தில் இருந்த நல்ல இயல்புடைய பாவையைப் போன்றவளான தலைவி வள்ளைப்பாடும் பொழுது நின்பெயரைச் சொல்லிப் பாடினாள். அதனால் ஊரார் குறை கூறலாயினர். அறிவின்மையால் அவர் கூறும் கூற்றுக்கு வருந்தலால் பயன் இல்லை.'

பெரும்பூட் பொறையன் கொல்லி—கொல்லிமலை வல்வில் ஓரிக்கு உரியது. ஓரியைப் பொருது காரி வென்றான். அவன் அம்மலையைச் சேரனுக்களித்தான். எனவே அம்மலை சேரனுக்குரியதாயிற்று. இக்கருத்து அகப்பாடலிலும் காணப்படுகின்றது. இவன் பெரும்பூட் பொறையன் எனப்பட்டமைக்குப் பேராசிரியர் ரா. ரா. அவர்கள் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றார்கள்:

'ஏழரசரை வென்று அவரெழு முடியானுமாக்கிய பெரும்பூணையுடைய சேரன். இது சேரர்க்கு வென்றியான் எய்திய குலப்பூண் என்பது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலையும்

செங்குட்டுவனையும் பதிற்றுப்பத்துள் இவ்வணியால் சிறப்பித்தவாற்றான் அறிக.'

கொல்லிப்பாவை—இது கொல்லிமலையின் மேல்புறத்திலே தெய்வத்தால் அமைக்கப்பட்டது. இதனைக் கண்டோர் நெஞ்சம் கலங்கி மயங்கி விழுந்து உயிர்விடுவர். இப்பாவை, நகைத்துத் தன்முன் வந்தாரைக் கொல்லும் என்பர் சிலர்.

'பாவடி யுரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்க ளுவறலு நுவல்ப
அழிவ தெவன்கொலிப் பேதை
யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர்
கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை
யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடினள்
குறினே'

(குறுந்தொகை—89)

## வல்வில் ஓரி

கபிலர் பாடியுள்ள பாடலொன்று வல்வில் ஓரியைப் பற்றியும் கொல்லிப் பாவையைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவதாகச் செய்யுள் அமைந்துள்ளது.

'காந்தளை வேலியாகக்கொண்ட சிறு குடியில் உள்ள மக்கள் உணவின்றிப் பசிப்பராயின், யானையினது கொம்பை விற்று அதனால் வரும் விலையைக் கொண்டு உண்டுவாழும் இடமாகிய வல்வில் ஓரிக்குரிய கொல்லிமலைக்கு மேல் பக்கத்தில் உள்ள பாவையைப் போல அழகுடைய அந்தப் பெண்ணினுடைய பெரிய மூங்கிலொத்த தோள்கள் தழுவுவதற்கு அரியனவாகும்.'

வல்வில் ஓரி—இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவனைக் 'கொல்லியாண்ட வல்வில் ஓரி' என்று பெருஞ்சித்திரனார் குறிப்பிடுகின்றார். இவனை ஆதனோரி என்றும் அறிஞர் கூறுவர். இவன் இசைத்துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவன்; இரவலரைப் புரக்கும் புகழுடையவன். இவனைக் கபிலர், கல்லாடர், வன்பரணர், இடைக் கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார் முதலியோர் பாடியுள்ளனர்.

இவனைப்பற்றி வழங்கும் கதை ஒன்றினைக் காண்போம்:—

கொல்லிமலை ஓரிக்கு உரியது. கொல்லிமலையில் பலா, கருவாழை முதலிய கனி மரங்கள் பலவுண்டு. அங்குத் தெய்வங்கள் கூடி அழகுமிக்க பாவையொன்றைச் செய்து வைத்திருந்தனவாம். அம்மலையைச் சேரர் தமக்குரிமையாக்கிக் கொள்ள விழைந்தனர். தங்கள் விழைவைக் காரி என்னும் குறுநில மன்னனிடம் கூற, அவன் ஓரியை எதிர்த்துப் பொருதான். இருவரும் தத்தமக்குரிய காரி, ஓரி என்னும் குதிரைகளிலேறிப் பொருதனர். முடிவில் ஓரி காரியால் கொல்லப்பட்டான். காரி அம்மலையைச் சேரர்க்கு உரியதாக்கினான். இந்நிகழ்ச்சியைக் கல்லாடர்,

'......செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிற் கொன்று சேரர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு
கொல்லி

—(அகநானூறு, 209)

என்று கூறியுள்ளார்.








சுசீலா தன் மனதைத் திறந்து தன் எதிர்காலக் கணவனைப்பற்றி வருணித்த பிறகு, பிரும்மச்சாரி டாக்டர்களைத் தேடியலையத் தொடங்கிவிட்டார் என் தகப்பனார். வருகிற நவம்பருக்கு அவளுக்கு இருபத்து நான்கு பூர்த்தியாகிறது. பெண்ணைப் பெற்றவர்களின் தவிப்புக்குச் சொல்லவா வேண்டும்?

தன் கணவன் ஒரு டாக்டராகத்தானிருக்க வேண்டும். அதோடு, தான் டாக்டராக 'பிராக்டீஸ்' செய்வதையும் அவன் தடை செய்யக் கூடாது. ஐந்து வருடங்கள் அவள் வைத்தியக்

கல்லூரியில் படித்த படிப்பெல்லாம் அடுப்புப் புகையில் கலந்து மறைந்துவிடுவதற்கல்ல. எம். பி. பி. எஸ். என்ற எழுத்துக்கள் அவள் பெயருக்குப் பின்னால் வெறும் அலங்காரமாக விளங்கினால் போதாது. படித்ததன் பயன், தன் சேவை பலருக்குக் கிடைக்க வேண்டும்—இதுதான் சுசீலாவின் விருப்பம். நியாயமானதுதானே?

சில மாதங்களுக்குமுன் என் தங்கையைப் பெண் பார்க்க வந்த ஒரு ஐ. ஏ. எஸ். வரன், சுசீலா வீட்டோடு இருந்து பிராக்டீஸ் செய்யலாமேயொழிய, ஆஸ்பத்திரியில் சேர்ந்து உத்தியோகம் பார்க்கக் கூடாது என்று கூறிய தன் விளைவாகத்தான் சுசீலா மேற்கண்ட முடிவை வெளியிட்டாள்.

அன்று, தொழில்நிமித்தம் நான் மதுரை சென்றிருந்தபோது, தற்செயலாக என் நண்பன் சிவகுமாரனை ஆஸ்பத்திரி வாசலில் சந்தித்தேன். இண்டர் மீடியட் வகுப்புக்களில் நாங்கள் சேர்ந்து படித்தோம். ஹாஸ்டலில் ஒரே அறையில் வாசம். இண்டர் முடிந்ததும் மெடிகல் காலேஜில் சேர விரும்புவதாக அவன் கூறியிருந்தான். கோடை விடுமுறையின்போது பிரிந்த நாங்கள், அதன் பிறகு சந்திக்கவேயில்லை. ஸ்டெதஸ்கோப்பும் கழுத்துமாக இப்போது அவனைச் சந்தித்ததும், 'சுசீலாவுக்கு ஏற்றவன் இவன்தான்' எனத் தீர்மானித்துவிட்டேன்,

'இன்னும் பிரம்மச்சாரிதானா, குமார்? சர்க்கார் உத்தியோகமா? ஏன், சொந்தமாக பிராக்டீஸ் செய்தால் நல்ல வரும்படி வருமே?' என்றேன்.

'இன்னும் மூன்று வருடங்களுக்காவது ஒண்டிக் கட்டையாக இருப்பதாகத்தான் தீர்மானம். தனியாகத் தொழில் நடத்தினால், முதல் தேதிக்கு முதல் தேதி இப்போது நிச்சயமாகக் கிடைக்கக் கூடிய பணம் வருமென்பது என்ன நிச்சயம்? குடும்ப நிர்வாகம் இப்போது என் பொறுப்பிலுள்ளது' என்றான் குமார்.

'அவ்வளவு பண நெருக்கடியா உனக்கு? அப்பாவுக்கு 'பென்ஷன்' வேறு கிடைக்கிறது...?' என்று கேட்கையில் அவன் குறுக்கிட்டு, 'அப்பா இருந்தவரையில் கிடைத்தது, பென்ஷன்' என்றான்.

'அப்படியானால் உன் தகப்பனார்...?'

'ஆமாம். நான் மெடிகல் காலேஜில் கடைசி வருடம் படிக்கும்போது, அவர் காரியம் முடிந்துவிட்டது. அப்போது என்னைத் தேடி வந்த யமன், அப்பாவை அழைத்துக்கொண்டு போய்விட்டான்'—சிவகுமாரின் கண்கள் லேசாகப் பனித்தன.

'வருத்தமாயிருக்கிறது. என்ன நடந்தது, அப்படி?'

'சொல்கிறேன், வா. அதோ, பஸ் வந்துவிட்டது. என்னையும் இழுத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறினான்.

'ஒரு கார் வைத்துக்கொள்ளக் கூடாதோ? ஏன் இப்படிக் கருமியாகிவிட்டாய்? ஒரு மோட்டார் சைக்கிள்கூடவா உன்னால் வாங்க முடியவில்லை? அப்போதெல்லாம் எவ்வளவு ஊதாரியாக இருந்தாய்? ஹாஸ்டலில் டிபன் பிடிக்கவில்லையென்று என்னையும் இழுத்துக்கொண்டு மலைக்கோட்டை ஓட்டலுக்குப் போன குமார் தானா நீ?' என்றேன்.

அவன் மௌனமாகச் சிரித்தான்.



'சிரித்தால் என்ன அர்த்தம், குமார்? என்ன கஷ்டம் உனக்கு?' என்றேன் விடாமல்.

'அது அப்பாவின் பணத்தில் ஆடம்பர வாழ்க்கை நடத்திய காலம். இது...வரவுக்குள் செல்வை அடக்குவது எப்படி என்ற பயிற்சி. பணத்தின் அருமை அப்போது என் அப்பாவுக்கே தெரிந்ததில்லை என்பது என் அம்மாவின் கட்சி. ஊதாரித்தனமாக அவர் செலவு செய்துவிடவில்லை. அவர் தாராளமாகத்தான் செலவழித்தார். ஆனால், எதுவும் வீண் போய்விடவில்லை. எங்களுக்காக அவர் அதிகமாக ஏதும் சேர்த்து வைக்கவில்லை என்பது உண்மைதான். அது பற்றியும் நான் கவலைப்படவில்லை. அவர் பெயரை நிலை நிறுத்திக்கொண்டு இரு பள்ளிக்கூடங்கள் சேவை செய்து வருகின்றன. அது போதுமே?—இதைச் சொல்லும்போது சிவகுமாரின் மனம் நிறைந்திருந்ததை யுணர்ந்தேன்.

பஸ்ஸை விட்டு இறங்கிச் சிறிது தூரந்தான் நடக்க வேண்டியிருந்தது அவன் வீட்டுக்கு. தன் தாயாருக்கு என்னை அறிமுகம் செய்வித்தான், குமார். சுசீலாவைப்பற்றி அவன் தாயாரிடம் நான் கூறியதனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த குமார், வாயே திறக்கவில்லை. சுசீலாவுக்கு சிவகுமார் பொருத்தமானவன் என்று நான் கூறியபோது கூட, தனக்குச் சம்பந்தமில்லாத எதையோபற்றி நான் பேசுவதாகவே எண்ணி நடந்துகொண்டான்.

குமாரின் தாயார் கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு டம்ளரை மேஜைமீது வைத்தபோது கடிகாரம் ஏழடித்தது. ஏழேகால் மணிக்கு நான் என் தொழில் விஷயமாக ஒரு வியாபாரியைச் சந்திக்க வேண்டியது உடனே என் நினைவுக்கு வரவே, திடுக்கிட்டு எழுந்தேன்.

'குமார்! நான் இப்போதே கிளம்ப வேண்டும். தமிழ்ச் சங்கம் ரோடில் ஏழேகாலுக்கு ஒருவரைச் சந்திக்க வேண்டும். இன்றிரவே நான் ஊர் திரும்ப வேண்டும். சென்னை வந்தால் நீ அவசியம் என் வீட்டுக்கு வர வேண்டும். இதோ, என் விலாசம்'—தோல் பையிலிருந்து என் கார்டு ஒன்றை எடுத்து மேஜையின் மீது வைத்தேன்.

'சாப்பிடாமல் போகிறது நன்றாயில்லை' என்றாள் குமாரின் தாயார். என்னுடைய அவசரத்தை மீண்டும் விளக்கிவிட்டு, குமாரிடம், 'உன் முடிவு என்ன?' என்றேன்.

'மூன்று வருடங்கள்' என்று மூன்று விரல்களைக் காட்டினான், சிவகுமார்.

'பிடிவாதமாயிருக்கிறான்; ஆனால், அதுவும் ஒருவிதத்தில் நியாயந்தான்' என்றாள் அவன் தாயார்.

அவன் அனுஷ்டித்து வந்த விரதம் பூர்த்தியாக இன்னும் மூன்று வருடங்கள் பிடிக்கும் என்ற உண்மையைத்தான் தெரிந்துகொண்டேனேயொழிய, அதற்கான காரணத்தைக் கேட்டறிய எனக்கு அவகாசமில்லை.


'மூன்று வருடங்கள்வரை என் தங்கைக்குக் கல்யாணம் ஆகவில்லையென்றால், கண்டிப்பாக நீதான் அவளுக்குத் தாலியைக் கட்ட வேண்டும்!' என்றேன். அவன் சிரித்தவாறு சம்மதித்தான்.

'எப்போது வருகிறாய், சென்னைக்கு?' என்று கேட்டபடியே வெளியே வந்தேன்.

'சென்னை வரும்போது கண்டிப்பாக உன் வீட்டுக்கு வருவேன். ஆனால், ஒரு நிபந்தனை. கல்யாணத்தைப் பற்றிப் பேசி என்னை வற்புறுத்தாமலிருக்க வேண்டும்!' என்றான் குமார்.

'சுசீலாவைப் பார்த்த பிறகும் உன் உறுதி குலையாமலிருந்தால், நான் நிச்சயம் அந்தப் பேச்சையே எடுக்க மாட்டேன்!' என்று கூறி விடை பெற்றுக்கொண்டேன்.

மனிதர்கள் பூணும் உறுதியும் செய்யும் தீர்மானங்களும்—எல்லாம் நீர்மேல் எழுத்துக்கு நேர்தான்போலும்!



ஆறு மாதங்களுக்குப் பிறகு சிவகுமார் சென்னைக்கு வந்தபோது, என் வீடு தேடி வரத்தான் செய்தான். ஆனால், அப்போது நான் சென்னையிலில்லாததால் அவனைச் சந்திக்க முடியவில்லை. நான் அவனைச் சந்திக்க முடியவில்லை என்ற காரணத்தினால், எந்தக் காரியமும் தடைபட்டு நின்றுவிடவில்லை! 'கல்யாணங்களெல்லாம் தேவலோகத்தில் நிச்சயம் செய்யப்படுகின்றன' என்ற கூற்று முற்றும் உண்மையாகிவிட்டது. என் வற்புறுத்தலின்றியே சிவகுமார் முழு மனதுடன் அடுத்த நான்காவது மாதம் சுசீலாவின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டான். சுசீலாவின் நிபந்தனைகளை அவன் ஏற்றுக்கொண்டுவிட்டான். அவன் பிடிவாதத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டான். பரஸ்பரம் இரு டாக்டர்களும் மனம்விட்டுப் பேசித் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, சம்மதித்த பிறகுதான் திருமணம் நடைபெற்றது. சுசீலாவுக்கு நான் பார்த்த வரன்தான் நிச்சயமாயிற்று என்பதில் எனக்குப் பெருமைதான். ஆனால்,





அந்தப் பெருமை என்னவோ வெகுகாலம் நீடிக்கவில்லை. நிலையாமைக்குப் பெயர் போன இந்த உலகில், கண்ணில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் ஜீவனும் நிலையாமையின் சின்னமாகவே விளங்கி வரும்போது, என் பெருமை மட்டும் நித்தியமாக இருக்க முடியுமா என்ன?

சுசீலாவிடமிருந்து எனக்கு அவ்வப்போது வந்துகொண்டிருந்த கடிதங்கள் ஒவ்வொன்றும் என்னை முட்டாளாக்கிக் கொண்டு வந்தனபோல் தோன்றியது. எதைக் குறித்து நான் பெருமிதமடைந்தேனோ, அதே காரணத்துக்காக நான் வருந்தும் நிலையைத் தோற்றுவித்தன, என் சகோதரியின் கடிதங்கள். அவர்களுடைய தாம்பத்ய வாழ்க்கையில் ஏதோ ஒரு பெருங்குறை இருப்பது தெரிந்தது. அது என்ன? சுசீலாவும் வெளிப்படை

யாக எதையும் எழுதவில்லை. குமாரும் குறைபட்டுக்கொள்ளவில்லை. அல்லது அவனுக்கே ஏதாகிலும் குறை என்று தோன்றினும் அதை அவன் வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லையோ?

குமார் எப்போதாவது அபூர்வமாகத்தான் எனக்கு எழுதுவான். ஆனால், சுசீலா அடிக்கடி எழுதிக்கொண்டிருந்தாள். கல்யாணமாகி இரண்டு வருடங்களுள் அவள் எழுதிய கடிதங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. முதல் ஆறு மாதங்கள்வரை விசேஷமாகக் குறிப்பிடும்படி ஏதுமில்லை, அக்கடிதங்களில். அடுத்து வந்த கடிதங்களிலிருந்து சுசீலா எதற்காகவோ மன வேதனைப்பட்டது போலத் தோன்றியது. ஒரு தடவை நேரில் சென்று பார்த்து வந்தேன். குமார் ஓய்ச்சலின்றி உழைத்து வந்தான். எனினும் அவன் முகத்தில் கிலேசம் ஏதும் காணப்படவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து அவன் வீடு திரும்பியதும் சுசீலாவைத் தேடி வரும் 'கேஸ்'களில் சிலவற்றை அவனே கவனித்துச் 'சிகிச்சை செய்து அனுப்புவான். சுசீலா எழுதிக்கொடுக்கும் மருந்துச் சீட்டுக்களை வாங்கி அவனே மருந்துகள் கலந்து கொடுப்பான்.

'ஒரு கம்பௌண்டரை நியமித்துக்கொண்டால் என்ன? ஆஸ்பத்திரியில் நாள் பூராவும் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்தவனுக்குச் சற்றேனும் ஓய்வு வேண்டாமோ? நீயாவது இதைத் தடுக்கக் கூடாதோ?' என்று சுசீலாவிடம் கேட்டேன், நான்.

'எவ்வளவோ தடவைகள் சொல்லிப் பார்த்துவிட்டேன். அவர் கேட்டால்தானே? வீண் செலவு என்கிறார். கம்பௌண்டர் செய்கிற வேலையை நான் செய்கிறேன். அந்த அளவுக்குப் பணம் மிச்சந்தானே? என்று கேட்பவரிடம் என்ன சொல்லிப் பிரயோசனம்?' என்றாள் சுசீலா அலுப்புடன்.

'எதற்காக இவன் இவ்வளவு சிக்கனம் பிடிக்கிறான்? கடன் உபத்திரவம் ஏதாவது இருக்குமோ?' என்றேன், சந்தேகத்துடன்.

'அப்படியும் இருப்பதாகத் தோன்றவில்லை அண்ணா! சிக்கனம், சிக்கனம், சிக்கனம்! இதுதான் அவருக்கு சதா நினைவு. ஜாடையாக நான்கூட அவரிடம் பிரஸ்தாபித்தேன். 'இன்னும் ஒரு வருட காலம் பொறுத்துக் கொள். அதன் பிறகு உன் இஷ்டப்படி செலவு செய்யலாம்' என்று சொல்லுகிறார். கல்யாணத்துக்கு முன்பே என்னிடம் அவர் ஜாடையாகச் சொல்லியிருந்தார். அதாவது, இரண்டு மூன்று வருடங்கள்வரை சிக்கனமாயிருக்க வேண்டும், என்று. 'நான் எவ்வளவு சேமித்து வைக்கிறேன்; எதற்காக என்றெல்லாம் நீ என்னைக் கேட்டுத் தொந்தரவு செய்யக் கூடாது. இவ்வளவு வரும்படி வருகிறதே, தாராளமாகச் செலவழிக்கக் கூடாதா என்று எனக்கு உபதேசம் செய்யவும் கூடாது. உன் சம்பாத்தியத்தில் எனக்குப் பைசாகூடத் தேவையில்லை. இதெல்லாம் உனக்குப் பிடிக்கவில்லையென்றால், இன்னும் மூன்று வருடங்களுக்கு நம் கல்யாணத்தையே ஒத்திப் போடலாம்' என்று சொன்னார். அவர் இஷ்டம்போலவே இருக்க நான் சம்மதித்துவிட்டேன். என் ஆசைக்கும் அவர் குறுக்கே நிற்க விரும்பவில்லை. எனக்கு உதவியாகத்தானிருக்கிறாரேயொழிய,



நான் 'பிராக்டீஸ்' செய்வதை அவர் தடுக்கவில்லை. என் வரும்படியைப்பற்றியும் அவர் விசாரிப்பதில்லை. என்னுடைய சில்லரைச் செலவுக்குத் தேவையானதைமட்டும் வைத்துக்கொண்டு அன்றாடம் எனக்குக் கிடைக்கும் 'பீஸ்' முழுவதையும் அவர் தாயாரிடமே கொடுத்து வருகிறேன். ஆனால், அவருடைய போக்குதான் விசித்திரமாயிருக்கிறது! பஸ்ஸில் தினமும் அவர் ஆஸ்பத்திரிக்குச் செல்லுவதைப் பார்க்கும்போது, எனக்கு வருத்தமாயுமிருக்கிறது. கோபமும் வருகிறது. என் சிநேகிதிகள் கேட்கிறார்கள்—'இரண்டு பேர்களும் சம்பாதிக்கிறீர்களே—ஒரு கார் வாங்கக் கூடாதோ' என்று. அவரிடம் கேட்கவும் தோன்றவில்லை எனக்கு. அன்று அவர் எனக்கு அளித்த வாக்குறுதியை மீறாதபோது, நான்மட்டும் அவர் விஷயத்தில் குறுக்கிடுவது நன்றாயிருக்குமா? அவர் சொல்லுகிறமாதிரி இன்னும் ஒரு வருஷம் பொறுத்திருந்துதான் பார்க்கலாம் என்று தோன்றுகிறது'—சுசீலா தன் முகத்திலரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

எனக்கு ஒரே குழப்பமாயிருந்தது. சிவகுமாரின் செய்கை ஒரே மர்மமாகத் தோன்றியது.

'இதைப்பற்றி நானே அவனிடம் கேட்டுவிடுகிறேன். அப்படியென்ன பெரிய சம்சாரி ஆகிவிட்டானா, இவன்? எதற்காக இவ்வளவு கருமித்தனம்? யாருக்காகச் சேர்த்து வைக்கிறான்? நிஜமாகவே சேமித்துத்தான் வைக்கிறானா, அல்லது...ஒன்றும் புரியவில்லையே?' என்றேன் எரிச்சலுடன்.

'தயவு செய்து அப்படியொன்றும் செய்துவிடாதே, அவசரப்பட்டு. இவ்வளவு காலம் பொறுத்தாயிற்று. இன்னும் ஒரு வருடம். பார்க்கலாம். நீ கேட்டாலும்கூட, 'இதெல்லாம் உன் தங்கையிடம் நான் முன்பே சொன்ன சங்கதிதான். அவளும் சம்மதித்ததால்தான் கல்யாணத்துக்கு உடன்பட்டேன்' என்று அவர் சொல்லிவிட்டால், நீ மேற்கொண்டு என்ன சொல்ல முடியும்? எப்படி முடிகிறதோ, பார்க்கலாம். விட்டுவிடு' என்று கெஞ்சினாள், சுசீலா.

'உன் இஷ்டப்படியே கணவன் வாய்த்தான். உன் விருப்பத்தை மதித்து நடக்கிறான் என்றும் சொல்லுகிறாய். இருந்தாலும் உன் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாயில்லை என்பதும் தெரிகிறது. நான் குறுக்கிடுவதையும் நீ விரும்பவில்லை. என் குறுக்கீடும் எதிர்பார்த்த பலனை அளிக்காது என்றுதான் தோன்றுகிறது. கடவுள் சித்தப்படி நடக்கட்டும். உம்...மற்றபடி, உங்கள் வாழ்க்கையில் குறையொன்றுமில்லையே?' என்று கேட்டேன்.

'உம்...' மேலே ஏதோ சொல்ல நினைத்தவள் சொல்லாமலேயே விட்டுவிட்டாள்.

குழப்பத்துடன் சென்னை திரும்பினேன், நான். சிவகுமாரைவிடச் சிறந்த கணவன் என் தங்கைக்குக் கிடைக்கப் போகிறானா என்று முன்பெல்லாம் நான் கருதி மகிழ்ந்தது போக, இப்போது அதற்கு மாறான எண்ணங்களே என் மனத்தில் குடிகொள்ளத் தொடங்கின.

∴ ∴ ∴

தொழில்நிமித்தமாக ஐந்தாறு மாதங்கள் வட இந்தியாவில் சுற்றியலைந்துவிட்டுச் சென்னை திரும்பினேன். அதுவரை

என்னை அதிகம் பாதிக்காத நினைவுகள்—சுசீலாவின் இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி குடிகொள்ளவில்லையே என்ற ஏக்கம், மீண்டும் தலைதூக்கியது. சுசீலாவும் இந்த ஆறு மாத காலத்தில் எனக்கு அதிகமாகக் கடிதங்கள் எழுதவில்லை. ஏதோ ஒன்றிரண்டு வந்து சேர்ந்தன. அவற்றுக்கும் நான் பதில் எழுதவில்லை. சிவகுமாரின் போக்கு எனக்குப் பிடிபடவில்லை. சுசீலாவும் என்னிடம் எதையோ, கூற வேண்டியதைக் கூறாமல் ஒளித்து வைப்பதாகவே தோன்றியது. இரண்டு வருடங்களுக்கு முன்பு துவங்கிய அவ்விருவரது வாழ்க்கையில் புதிய ஜீவன் எதுவும் முளைக்கவில்லை. அப்படி எதுவும் சமீபத்தில் நிகழும் என்பதற்கான அறிகுறிகளும் இல்லை.

அந்த நிலையில்தான் சிவகுமாரிடமிருந்து ஒரு தந்தி வந்தது மறுநாட்காலை சுசீலாவுடன் அவன் சென்னை வருவதாக அறிவித்திருந்தான். வேண்டாவெறுப்பாகத்தான் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போனேன். என் தங்கையின் இன்ப வாழ்க்கையையே அவன் குலைத்துவிட்டதாகவும், அதற்கு நானே காரணமாக அமைந்ததாகவும் எண்ணி மருகியது என் உள்ளம். மூன்றும் வகுப்புப் பெட்டிகள் ஒவ்வொன்றாகத் தேடிக்கொண்டே வந்தேன். சிக்கனமே ஜீவநாடியாக வாழ்ந்து வரும் அந்தப் பிரகிருதி, முதல் வகுப்பிலா வந்துவிடப் போகிறான்?

கடைசிப் பெட்டியிலிருந்து யாரோ கைதட்டுவதுபோலிருந்தது. திரும்பிப் பார்த்தபோது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. முதல் வகுப்புப் பெட்டியின் எதிரில் சுசீலாவும் குமாரும் நின்றுகொண்டிருந்தனர். அந்தப் பெட்டிக்குள்ளிருந்து போர்ட்டர் ஒருவன் சுசீலாவுக்கு நான் வாங்கிக் கொடுத்திருந்த தோல் பெட்டியைக் கீழே இறக்கிக்கொண்டிருந்தான்.

'ஹலோ, குமார்! செளக்கியமா?' என்று கேட்டுவிட்டு, சுசீலாவின் பக்கம் திரும்பினேன். அவர்கள் இருவரது முகத்திலும் பொங்கித் திளைத்த குதூகலத்தைக் கண்டதும், என்னுடைய 'செளக்கியமா'வுக்கே அர்த்தமில்லை என்பது புலனாயிற்று.

வீடு போய்ச் சேரும்வரை என்னிடம் இருவருமே உற்சாகத்தோடு பேசிக்கொண்டு வந்தனர்.

வீட்டு வாசலில் காரைவிட்டு இறங்கியதும், சுசீலா என்னிடம் மெல்லிய குரலில் 'இவருடைய விரதம் இன்றோடு பூர்த்தியடைகிறது' என்றாள்.

'என்ன விரதம் அது?' என்று நான் வியப்புடன் கேட்டதற்கு அவள் பதில் சொல்லுவதற்குள் அம்மா அவளிடம் பேசத் தொடங்கிவிட்டாள்.

அவசரம், அவசரமாகக் குளித்துச் சாப்பிட்டு விட்டு வெளியே கிளம்பினான், சிவகுமார். எங்கே போகிறான், எதற்காக என்று எதுவும் கூறவில்லை. சுசீலாவுக்கும் தெரியாது. அவள்தான் அவன் விஷயங்கள் எதிலும் குறுக்கிடுவதே இல்லையே?

சுமார் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு பளபளவென்ற புத்தம் புதிய காரில் வந்து இறங்கின குமார், நேரே சுசீலாவிடம் வந்தான். 'வா, போகலாம். என் நண்பர் ஒருவரைப் பார்க்கப் போக வேண்டும்' என்று அழைத்தவன்



என்னிடம், 'உனக்கு வேலையொன்றுமில்லையே? நீயும் கிளம்பு' என்றான்.

'புதிதாகக் கார் வாங்கப் போவதாக என்னிடம் சொல்லவேயில்லையே?' என்று நான் கேட்கையில் அதே கேள்வியை சுசீலாவும் கேட்டாள்.

'இதை வாங்கத்தான் இவ்வளவு காலமும் நான் சிக்கனம் பிடித்தேன். என் சொந்தச் செலவுகளையெல்லாம் கூடியவரையில் குறைத்துக் கொண்டேன். சினிமா, டிராமா என்று எங்கேயும் சுசீலாவைக்கூட அழைத்துக்கொண்டு போய் உல்லாசமாகப் பொழுது போக்கவில்லை. கொக்குக்கு ஒன்றே மதி என்பதுபோல் என் லட்சியமெல்லாம் கார் வாங்குவதிலேயே இருந்தது' என்றான் குமார் திருப்தி நிலவிய முகத்துடன்.

'அது சரி, இதை இவ்வளவு ரகசியமாக ஒளித்து, மறைத்துச் செய்ய வேண்டிய அவசியமென்ன? கார் வாங்க வேண்டுமென்று சேமிப்பதாகச் சுசீலாவிடம் சொல்லியிருந்தால் அவள் தடுத்திருக்கப் போகிறாளா, என்ன?' என்றேன் வியப்புடன்.

அவன் பதில் சொல்லுமுன் வண்டி லாயிட் ரோடிலுள்ள ஒரு பங்களா வாசலில் நின்றது. வெளிச் சுவரில் காணப்பட்ட இலக்கத்தை ஒருகணம் உற்றுப்



பார்த்த குமார், 'இந்த வீடு தான்; உள்ளே ஓட்டிச் செல்' என்றான் டிரைவரிடம்.

முதலில் கீழே இறங்கிய குமார், வாசலில் நின்ற பத்து வயதுச் சிறுவனிடம், 'சங்கரலிங்கம் இருக்கிறாரா?' என்றான்.

'அப்பா வெளியே போயிருக்கார். இப்போ வந்துடுவாங்க. உள்ளே வந்து உட்காருங்க' என்று மரியாதையோடு அழைத்தான் எங்களை அந்தச் சிறுவன்.

'தம்பி நீ குமாரசாமிதானே?' என்று கேட்ட குமார் வேகமாக அவனை நோக்கி நடந்தான்.

'ஆமாம், சார்! நீங்க...?' என்று விழித்தான் சிறுவன்.

சிவகுமார் தாவிச் சென்று அவனை அணைத்துக்கொண்டான். 'குமாரசாமி! என்னைத் தெரியவில்லையா உனக்கு? நான்தான் 'குமார் அண்ணா.' அதற்குள் மறந்துவிட்டாயா? ஆனால்....நாலைந்து வருஷங்களாயிற்றே? அப்போது...நீ சின்னப் பையன். ஐந்து வயது தானிருக்கும் உனக்கு!' என்று கூறியவாறு சிறுவனை அன்போடு அணைத்தவாறு உள்ளே நுழைந்தான். நானும் சுசீலாவும் உடன் சென்றோம். அப்போது வாசலில் இன்னொரு கார் வரும் சப்தம் கேட்டது.

'அதோ, அப்பா வந்துட்டாரு.' என்றான் குமாரசாமி.

'அடேடே! குமாரா? அடையாளமே தெரியல்லியே? எப்ப வந்தே சென்னைக்கு? இவ்வளவு காலமா ஏன் தலை காட்டவேயில்லை இந்தப் பக்கம்? உம்...உன்னைச் சொல்லக் கூடாது. நான் தான் உன்னை வந்து பார்த்திருக்க வேண்டும். உன் கல்யாணத்துக்குக்கூட வர முடியாமல் அந்தச் சமயம் நாங்களெல்லாம் டெல்லியிலிருக்கும்படியாகிவிட்டது. சௌக்கியமாயிருக்கியா, தம்பி? இவங்கதான் உன்...' சுசீலாவைச் சுட்டி விசாரித்தார், அவர்.

நாற்பது வயதிருக்கும் அவருக்கு. சாந்தம் தவழ்ந்தது முகத்தில்.

'ஆமாம். பெயர் சுசீலா. இவளும் டாக்டர்தான். கல்யாணப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்களே? இவன்தான் என் மைத்துனன். என் கல்லூரி நண்பன். சொந்தத்தில் 'பிஸினஸ்' செய்கிறான்' என்று அறிமுகம் செய்வித்த குமார், சங்கரலிங்கத்தையும் தனது குடும்ப சிநேகிதர் என்ற முறையில் எங்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

சங்கரலிங்கம் உற்சாகத்துடன் தன் மனைவியைக் கூவியழைத்தார். மீண்டும் அறிமுகப்படலம். சற்று நேரம்வரை குசலப்பிரசனம். தொடர்ந்து 'டிபன்'. உபசாரமெல்லாம் பலமாக இருந்ததுடன், இதயபூர்வமாகவும் இருந்தது.

நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகையில், குமார் சங்கரலிங்கத்தினிடம், 'உங்கள் காரில் தயவு செய்து எங்களை வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியுமா?' என்றான்.

'ஓ! பேஷாக! இதென்ன பிரமாதம்? டிரைவர்!' என்று அழைத்தவர் எதையோ நினைத்துக் கொண்டவராக, 'ஆமாம்...நீங்கள் வந்த கார்...?' என்றார் தயக்கத்துடன்.

'அது இனிமேல் உங்களுடையது' என்றான் குமார் சிரித்தபடி.

சங்கரலிங்கம் திகைப்புடன், 'என்ன என்னுடையதா? என்ன



'தம்பி சொல்றே நீ...?' என்றார். சுசீலாவும் நானும்கூட, அவரைப்போலவே திகைத்து நின்றோம்.

'ஆமாம், சார்! உங்கள் வண்டியை நொறுக்கிப் பாழடித்தேனே—அன்று? அதற்கு நஷ்டஈடு இது. நல்ல காலம், குழந்தை குமாரசாமி தப்பிப் பிழைத்தான்! என் அஜாக்கிரதையினால் எவ்வளவு பெரிய நஷ்டத்தை உண்டாக்கிவிட்டேன், அன்று உங்களுக்கு? குழந்தையை ஆண்டவன்தான் காப்பாற்றினான். காரைத்தான் காப்பாற்ற முடியவில்லை. அதற்குத்தான் நான் நஷ்ட ஈடாக இதை அளிக்கிறேன். தயவு செய்து மறுக்காமல் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று கெஞ்சினான், குமார்.

'நல்ல காரியம் செய்தே, போ! தற்செயலா நடந்ததுக்கு...நஷ்டஈடாமே? இதெல்லாம் என்ன தம்பி? பேசாமே வண்டியை ஓட்டிக்கிட்டுப் போ. உன் மாமனார் விலாசத்தைக் கொடுத்துட்டுப் போ. நாங்க எல்லாரும் நாளைக்கு விருந்துக்கு வரோம்' என்றார் சங்கரலிங்கம்.

'இன்ஷ்யூரன்ஸ் தொகைகூட உங்களுக்கு வராதுபோலிருக்கு என்று பேசிக்கொண்டார்களே, சார்? என்னால்தானே இந்த நஷ்டமும் கஷ்டமும் வந்தது உங்களுக்கு?' என்றான் குமார் வேதனையுடன்.

'அது பழங்கதை, தம்பி! ஒரு வருஷம் இழுத்துப் பறிச்சுக்கிட்டு இருந்தப்புறம் இன்ஷ்யூரன்ஸ் பணம் ஆறாயிரத்தை வாங்கிட்டேன். நல்லாயிருக்கு, நீ கார் வாங்கிட்டு வந்தது!' என்றார் சங்கரலிங்கம் உரிமைக் கோபத்துடன்.

அரை மணி நேர வாக்குவாதத்துக்குப்பின் சங்கரலிங்கம் சொன்னார்: 'சரி, குமார்! உன் ஆசையையுந்தான் கெடுப்பானேன்? உன் வண்டியை நான் எடுத்துக்கறேன், உன் மனசுப்படியே. ஆனா என் வண்டியை நீ எடுத்துக்கணும். உனக்கு நான் கொடுக்கும் திருமணப் பரிசு இது. உன் கல்யாணத்துக்கு நாங்க வர முடியாமே போனதுக்கு நஷ்டஈடுன்னு வேணுமானாலும் வச்சுக்க. எப்படியோ—என் வண்டி இனிமே உன்னுடையதுதான்.'

அவர் அடித்துப் பேசியதைத் தட்ட முடியவில்லை, சிவகுமாருக்கு. அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சங்கரலிங்கத்தின் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டோம்.

நடந்ததெல்லாம் எனக்கும் சுசீலாவுக்கும் ஒரே புதிராயிருந்தது.

'இதெல்லாம் என்ன நாடகம், குமார்?' என்றேன்.

அவன் சொன்னான்: 'நான் மெடிகல் காலேஜில் கடைசி வருடம் படித்துக்கொண்டிருக்கையில், நிகழ்ந்த ஒரு சம்பவந்தான் இதற்கெல்லாம் காரணம். சங்கரலிங்கம் எங்கள் குடும்ப நண்பர். நான் வைத்தியக் கல்லூரியில் படிக்கும்போது அடிக்கடி அவர் வீட்டுக்குச் செல்வதுண்டு. எனக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் அவர் காரை உபயோகித்துக்கொள்ளுவேன். அவரோ, அவர் மனைவியோ தடை சொல்ல மாட்டார்கள். உடன் பிறந்த பிறப்பாகவே என்னைக் கருதி வந்தது, அந்தக் குடும்பம்.

ஒரு நாள் நான் எங்கோ செல்ல வேண்டி அவர் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். சங்கரலிங்கத்தின் மகன் குமாரசாமி—

அப்போது அவனுக்கு ஐந்து வயதிருக்கும்—தானும் என்னோடு வருவதாகக் கூறினான். நானும் அவன் பெற்றோர்களும் தடுத்துக் கூறியும் அன்று என்னவோ அவன் பிடிவாதம் செய்தான். சரி வரட்டும் என்று அழைத்துச் சென்றதன் பயன்...

தெருவின் திருப்பத்தில் ஒரு சைக்கிளில் இருவர் சவாரி செய்துகொண்டு வந்தனர். சைக்கிள் மணியையாவது அடித்திருக்கலாம். அல்லது இடது கைப் பக்கமாகவாவது ஒதுங்கிப் போயிருக்கலாம். சைக்கிளை ஓட்டியவன் எல்லாத் தவறுகளையும் செய்தான். அவர்கள்மீது கார் மோதிவிடாமலிருக்க எனக்கு ஒரே வழிதானிருந்தது. ரஸ்தாவின் வலதுபக்கம் வண்டியை ஒடித்துத் திருப்பினேன். அருகிலிருந்த குமாரசாமி உருண்டு வண்டிக்குள் விழுந்தான். எனக்கு நிதானம் தவறிவிட்டது. குழந்தையைத் தூக்கப் போனவன், 'ஸ்டியரிங்' சக்கரத்திலிருந்து இரு கைகளையும் எடுத்துவிட்டேன். அதன் விளைவு...படரென்ற ஓசையுடன் கார், ரஸ்தா ஓரத்திலிருந்த விளக்குக் கம்பத்தில் மோதியது.

அப்புறம்...பத்து நாட்களுக்கு நினைவிழந்து கிடந்தேன், ஒரு நர்ஸிங் ஹோமில். குமாரசாமி தெய்வாதீனமாக உயிர் பிழைத்துவிட்டான். எனினும் அவனுக்கும் பலமான அடி. விபத்தைப்பற்றி சங்கரலிங்கம் வெளியே பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. போலீஸ், கேஸ் என்றெல்லாம் வம்பில் அகப்பட்டுக் கொள்ளுவதைத் தவிர்க்க விரும்பினார், அவர்.

அந்த ஒரு மாதமும் சங்கரலிங்கமும் அவர் மனைவியும் என்னை எவ்வளவு அன்போடு கவனித்துக்கொண்டார்கள் என்பது எனக்குத்தான் தெரியும். தங்கள் சொந்தக் குழந்தை அடுத்த அறையில் சிகிச்சை பெற்று வருகையில் அவனைக்கூட அவ்வளவு அக்கரையுடன் கவனிக்கவில்லை, அவர்கள். என் விஷயமாக சுமார் நானூறு ரூபாய்க்குமேல் செலவழித்திருப்பார்கள், அவர்கள். என் பெற்றோர்களுக்குக்கூடத் தெரிவிக்கவில்லை, முதலில். கடைசியில் சிகிச்சை முடிந்து நான் குணமடைந்த பிறகுதான் என் தந்தைக்கு அவர் எழுதினார். தன் ஒரே மகனுக்குக் கார் விபத்து நேரிட்டது என்பதைப் படித்ததுமே, பாக்கி எழுதியிருந்ததைக்கூடப் படிக்காமல் அதிர்ச்சியில் உயிரிழந்துவிட்டார் என் தந்தை. என் தாயார் சொல்லித் தெரிந்துகொண்டேன். அதற்கு ஈடாகத்தான் சங்கரலிங்கத்துக்கு ஒரு கார் வாங்கிக் கொடுத்துவிடுவதாக அப்போதே சங்கல்பம் செய்துகொண்டேன்.

கார் விபத்தைப்பற்றி அவர் அம்பலப்படுத்த விரும்பாததால், காரை இன்ஷ்யூர் செய்திருந்த தொகையையும் பெற முடியாது. என்னால்தானே அவருக்கு இந்த நஷ்டம்? ஆனால், இப்போதுதான் அவர் சொல்லித் தெரிந்துகொண்டேன், இன்ஷ்யூரன்ஸ் பணத்தை அவர் வாங்கிவிட்டதாக. அதுகூட நிஜந்தானா என்பது எனக்குச் சந்தேகமே. என்னிடம் நஷ்ட ஈடு பெற விரும்பாத காரணத்தாலும் அவர் இப்படிச் சொல்லியிருக்கக்கூடுமல்லவா?'

முகத்திலரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டான், குமார்.



'எவ்வளவு வைராக்கியம், குமார், உனக்கு? உன் உறுதி குலைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நீ இதை எல்லாரிடமிருந்தும் மறைத்து வந்திருக்கிறாய். சுசீலாவுக்குக் கூடச் சொல்லாமலிருந்திருக்கிறாய். ஆனால், உன்னைப்பற்றி நான் என்னென்னவோ எண்ணிச் சந்தேகப்பட இடங்கொடுத்துவிட்டாய். இவ்வளவு நாளும் உன் முகத்தில் காணாத சந்தோஷத்தை இன்று காண்கிறேன்' என்றேன், மன்னிப்புக் கோரும் குரலில்.

குமார் சொன்னான்: 'மார்க்ட்வெயின் பலரிடம் கடன்பட்டிருந்தார். கடன்களையெல்லாம் கிட்டத்தட்ட அடைத்து முடித்தும், 'பணம் வாங்கும்போதெல்லாம் அடையாத மகத்தான சந்துஷ்டியை, இப்போது பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் தருவாயில் அடைகிறேன்' என்று. அந்த மன அமைதியை இப்போது நானும் அனுபவிக்கிறேன்' என்று கூறிவிட்டு சுசீலாவின்பக்கம் திரும்பி, 'இவ்வளவு நாட்கள் நீ பொறுமையோடிருந்து என் லட்சியம் பூர்த்தியாக உதவினாய். இனி நீ சிக்கனத்தை மறந்துவிட்டு தாராளமாகச் செலவு செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும்!' என்றான் மந்தகாசத்துடன்.

'எழுமை எழு பிறப்பும்
உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் நட்பு'

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் குமாரைப் போன்ற சிலர் உலகில் இன்றும் இல்லாமலில்லை.

★





# நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

## 23-வது தசகம்

### 7. ஸ்ரீ ஆதிசேஷன் அரசனுக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தது

*

तस्मै मृणाल धवलेन सहस्रशीर्ष्णा
रूपेण बद्धनुति सिद्धगणावृतेन ।
प्रादुर्भवन्नचिरतो नुतिभिः प्रसन्नो
दत्वाऽऽत्मतत्वमनुगृह्य तिरोदधाथ ॥

தஸ்மை ம்ருணாலதவலேன ஸஹஸ்ர
சீர்ஷ்ணா
ரூபேண பத்தநுதி
ஸித்தகணாவ்ருதேன
ப்ராதுர் பவன்னசிரதோ நுதிபி:
ப்ரஸன்னோ
தத்வா ZZத்மதத்வமனுக்ருஹ்ய
திரோததாத

பதவுரை:— ம்ருணாலதவலேன—தாமரைத் தண்டுபோல் வெளுத்ததும், ஸஹஸ்ரசீர்ஷ்ணா—ஆயிரம் தலைகளை உடையதும், பத்தநுதிஸித்தகணாவ்ருதேன—ஸ்தோத்ரம் செய்யும் ஸித்தர்களின் கூட்டத்தால் சூழப்பட்டதுமான ரூபேண—ரூபத்துடன், அசிரத:—சீக்கிரத்தில், ப்ராதுர்ப்பவன்—தோன்றியவரும், நுதிபி:—ஸ்தோத்ரங்களால், ப்ரஸன்ன: — ஸந்தோஷமடைந்தவருமான தாங்கள், தஸ்மை—அந்த அரசனின் பொருட்டு, ஆத்ம தத்வம்—ஆத்மதத்வத்தை, தத்வா—உபதேசித்து, அநுக்ருஹ்ய—அனுக்ரஹித்து, திரோத தாத—மறைந்தீர்கள்.

கருத்துரை: ஏ குருவாயூரப்பா, சேஷனின் ரூபம், தாமலைரத் தண்டுபோல் வெளுத்தும், ஆயிரம் தலைகளுடன் கூடியும், ஸ்தோத்தரிக்கும் ஸித்தர்களால் சூழப்பட்டுமிருக்கிறது. அத்தகைய ரூபத்துடன் சீக்கிரத்தில் தோன்றி ஸ்தோத்ரங்களால் ஸந்தோஷமடைந்தவராய் சித்ரகேதுவிற்கு ஆத்ம தத்வத்தை உபதேசித்து அனுக்ரஹித்து மறைந்தீர்களாமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் ஆம் என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்க உரை:— ஸ்தோத்திரங்களையும், மந்திரங்களையும் ச்ரத்தையுடன் ஜபித்தால் அதனால் கூறப்படும் தெய்வம் நேரில் தரிசனம் அளிக்கும். இப்படி மஹான்கள் ஜபம் செய்து தெய்வ ஸான்னித்யத்தை இன்னும் அடைந்து வருகின்றனர். ஸ்ரீ நாரதர் ஆதிசேஷனைக் குறிக்கும் ஸ்தோத்தரத்தையும், மந்த்ரத்தையும் சித்ரகேதுவிற்கு உபதேசம் செய்தார். அந்த தெய்வம் சித்ரகேதுவின் ஸ்தோத்ரத்திற்கும், மந்த்ரத்திற்கும் பயனாய் தரிசனமளித்தது. இப்படி தரிசனமளித்த தெய்வமான ஆதிசேஷனின் உருவத்தை நம்பூதிரி மனமுருகி வர்ணிக்கிறார். அந்த ஆதிசேஷனின் நிறமோவெனில் தாமரைத் தண்டுபோல் வெண்மையானது. மூர்த்தியோவெனில் ஆயிரம் தலைகளுடன் கூடியது. அந்த மூர்த்தியை ஸித்தர்களின் கூட்டம் ஸ்தோத்ரம் செய்துகொண்டு சேவிக்கிறது. இந்த ஸ்தோத்ரம், மந்த்ரம் இவற்றின் ஜபத்தால் மனம் குளிர்ந்து வெகு சீக்கிரம் தரிசனமளித்தார். தெய்வத்தின் மனதைக் குளிரச் செய்துவிட்டால், எல்லா பலன்களும் தானாகவே கிட்டிவிடும். வேதங்களும், உபநிஷத்துக்களும் 'எல்லா பயன்களுக்குள் சிறந்த பயன் ஆத்ம தத்வம்' என்றே கூறுகின்றன. அத்தகைய ஆத்ம தத்வத்தை ஆதிசேஷன் சித்ரகேதுவிற்கு அனுக்ரஹித்து மறைந்துவிட்டார். ஸ்ரீமத் பாகவதத்தில், ஆதிசேஷன் சித்ரகேதுவிற்கு அனுக்ரஹித்து தத்வ ஞானத்தை உபதேசித்த விவரம் ஸ்ரீசுகர் பரீக்ஷித்துக்கு சொன்னது வருமாறு:—

श्रीशुक उवाच :—

संस्तुतो भगवानेवमनन्तस्तम
भाषत ।
विद्याधरपतिं प्रीतश्चित्रकेतुं
कुरुद्वह ॥
6-16-49

ஸ்ரீ சுக உவாச:—

ஸம்ஸ்துதோ பகவானே
வமனந்தஸ்தம பாஷத
வித்யாதர பதிம் ப்ரீதச்
சித்ரகேதும் குருத்வஹ

இவ்வாறு மனமுருகி ஸ்தோத்ரம் செய்யப்பட்ட பகவானான ஆதிசேஷன் வித்யாதரர்களுக்குப் பதியான சித்ரகேதுவைப் பார்த்து சந்தோஷப்பட்டுச் சொன்னதாவது, ஸத்குருக்களான நாரதர், அங்கிரஸ் முதலியவர்களால் என் விஷயமான எந்த உபதேசம் செய்யப்பட்டதோ, அவ்வுபதேசத்தாலும், என் தர்சனத்தாலும் நன்கு சித்தி பெற்றவனாக இருக்கிறாய் என்று கூறிய விவரம் பாகவதத்தில் வருமாறு:—

श्री भगवानुवाच :—

यन्नारदोऽङ्गिरोभ्यां ते व्याहृतं
मेऽनुशासनम् ।
संसिद्धोऽसि तया राजन्विद्यया
दर्शनाच्च मे ॥
6-16-50

ஸ்ரீ பகவானுவாச:—

யந்நாரதோ Zங்கிரோப்யாம் தே
வ்யாஹ்ருதம் மே Zனுசாஸனம்
ஸம் ஸித்தோ Zஸி தயா ராஜன்
வித்யயா தர்சனாச்சமே

'ஜீவன் ஸ்வப்ன காலத்தில் தன்னிடம் பல தேசங்களையும் காணலாம். அவனே விழித்துக்கொண்டபொழுது தன்னை ஸ்வப்னத்தில் கண்ட தேசங்களுள் ஒன்றின் ஏகதேசத்திலிருப்பதாக அறிகிறான். இந்தப்படி இரண்டையும் கண்ட ஞானமே ப்ரஹ்மமாகும்' என்றெல்லாம் பல ச்லோகங்களால் ஆத்ம ஞானத்தை உபதேசித்தார். இவ்வாறு பாகவதத்தில் பல ச்லோகங்களால் கூறப்பட்டதை நம்பூதிரி

दत्वाऽऽत्मतत्वमनुगृह्य तिरोदधाथ

(தத்வா ZZத்மதத்வ மனுக்ருஹ்ய திரோததாத) என்று சுருங்கக் கூறி விளக்கியிருக்கிறார்.

## 8. சித்ரகேது பேரானந்தத்துடன் உலகில் ஸஞ்சரித்தல்

*

त्वद्भक्त मौलिरथ सोऽपि च लक्षलक्षं
वर्षाणि हर्षलमना भुवनेषु कामम्।
सङ्गापयन् गुणगणं तव सुन्दरीभिः
सङ्गातिरेकरहितो ललितं चचार ॥

த்வத் பக்த மௌளிரத ஸோऽபிச
லக்ஷ லக்ஷம்
வர்ஷாணி ஹர்ஷுலமனா
புவனேஷு காமம்
ஸங்காபயன் குணகணம் தவ
ஸுந்தரீபி:
ஸங்காதி ரேக ரஹிதோ லலிதம்
சசார

பதவுரை:- அத-பிறகு, த்வத்பக்த மௌளி:-தங்கள் பக்தர்களுள் சிரேஷ்டனை, ஸோபி-அந்த சித்ரகேதுவும், ஹர்ஷுலமனா:- ஸந்தோஷமடைந்த மனதை உடையவனாயும், தவ-தங்களுடைய, குணகணம்-குணக்குவியலை, ஸுந்தரீபி: — வித்யாதரஸ்த்ரீகளைக் கொண்டு, லலிதம்-மிக அழகாக, ஸங்காபயன்-பாடச் செய்பவனும், ஸங்காதிரேகரஹித:-அதிக விஷயப் பற்றில்லாதவனாயும் கொண்டு, லக்ஷ லக்ஷம்-பல லக்ஷம், வர்ஷாணி-வருஷங்கள், காமம்-தன் னிஷ்டப்படி, புவனேஷு-உலகங்களில், சசார-ஸஞ்சரித்தான்.

கருத்துரை:- ஏ குருவாயூரப்பா, சித்ரகேது தங்கள் பக்தர்களுள் சிறந்தவர். அவர் வித்யாதர ஸ்த்ரீகளைக் கொண்டு தங்களுடைய குணங்களைப் பாடச் செய்து, விஷயங்களில் பற்றை விட்டு மனம் தெளிந்து லக்ஷக்கணக்கான வருஷங்கள் உலகங்களில் ஸஞ்சரித்தாராமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் ஆம் என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகரித்தாராம்.

விளக்கவுரை:- ஸாதாரணமாய் ஸ்ரீ பகவானிடத்தில் பக்தி செய்கிறவர்களே திவ்ய போகங்களையும், மனச் சாந்தியையும் அடைகின்றனர். சித்ரகேதுவோ வெனில் நல்ல ஸத்குருக்களை அண்டி மந்த்ரோபதேசம் பெற்றவன். அதனால் தெய்வ ஸான்னித்யத்தையும் அடைந்தான். அந்த தெய்வம்தான் ஆதிசேஷன். அந்த ஆதிசேஷனோவெனில் ஸ்ரீ பகவானுடைய ரூபம். அத்தகைய தெய்வஸான்னித்யம் பெற்றதனாலேயே நம்பூதிரி சித்ரகேதுவை त्वद्भक्तमौलिः (த்வத் பக்த மௌளி:) 'தங்கள் பக்தர்களுள் சிறந்தவர்' என்று சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட சிறந்த பக்தருக்குத்தான் பகவத் ஸ்வரூபத்தை உள்ளே அனுபவிப்பது மட்டுமின்றி, பகவத் குணங்களை வித்யாதரஸ்த்ரீகளைக்கொண்டு பாடச் செய்து, ச்ரவணம் செய்யவும் ஆவல் உண்டாயிற்று. அதனாலேயே தன்னை வந்து அண்டிய வித்யாதர ஸ்த்ரீகளைக் கொண்டு ஸ்ரீ பகவானுடைய குணங்களைக் கானம் செய்யச் செய்தான். பல வித்யாதர ஸ்த்ரீகள் சித்ரகேதுவை அண்டிய காரணம் சித்ரகேது மந்த்ர ஸித்தியடைந்து வித்யாதரர்களுக்கு அதிபனானதேயாகும். தனக்கு போகங்களை அளிக்க வந்த வித்யாதர ஸ்த்ரீகளைக் கொண்டு பகவத் குணங்களைக் கானம் செய்யச் செய்ததுதான் உத்தம பக்தர்களுடைய மஹிமை. இத்தகைய குணங்களை ஒரே இடத்திலிருந்து கேட்காமல் பல தேசங்களிலும் ஸஞ்சரித்தவாறே கேட்க விரும்பியது. 'தேச பேதத்தால் ச்ரவணத்தில் ருசியும், ச்ரேயஸும் உண்டு' என்பதைக் காட்டவேயாகும்.

(தொடரும்)





# கனகாவின் கலியாணம்

'உம்!' என்று ஒரு பெருமூச்சு விட்டார் தன் பெண்ணுக்கு வரன் தேடுவதற்காக வந்திருந்த என் நண்பர் ஏகாம்பரம்.

'என்ன ஐயா, திடீரென்று அப்படி ஒரு பெருமூச்சு?' என்றேன் நான்.

'அதோ போகிறாளே, அவளையும் ஒருவன் கலியாணம் செய்து கொண்டுதானே இருக்கிறான்?' என்றார் ஏகாம்பரம்.

'வெறுமனேயா செய்து கொண்டான்? அவளுடைய பெற்றோர்களுக்குக் கலியாணச் செலவிற்காக நாலாயிரம் ரூபாய் கடன் கொடுத்து செய்துகொண்டான்!' என்றேன்.

'பையனுக்குக் கண்ணில் ஏதாவது...'

'கண்ணில் ஒருவித பழுதுமில்லை. நன்றாகப் பார்த்துத்தான் செய்துகொண்டிருக்கிறான். பையன் மன்மதன் மாதிரி இருப்பான். அத்துடன் பி. எஸ்ஸி. பாஸ் செய்திருக்கிறான்.'

'நூர் ஒன்று. கதை அளக்க ஆரம்பித்து விட்டால், அதில் உம்மை மிஞ்சுகிறவர்கள்தான் யாரும் கிடையாதே!'

'அப்படியானால் நான் சொல்வது பொய் என்கிறீரா?'

'சந்தேகமென்ன அதில்? பையன் மன்மதன் மாதிரி இருக்கிறானும். பி. எஸ்ஸி. பாஸ் செய்தவனும். போட்டி போட்டுக் கொண்டு இவளைக் கலியாணம் செய்துகொண்டு போய்விட்டானும். சரியான கதை அளக்கிறீர்களே, ஐயா. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்.

'சரி, நான் சொன்னால் அதில் நம்பிக்கை இல்லை உமக்கு' என்று சொல்லிவிட்டு, 'அம்மா!' என்று கூப்பிட்டேன்.

உள்ளேயிருந்து என் தாயார் வந்தாள்.

'சற்றுமுன் கோடி வீட்டுக் கனகா தெருவில் சென்றாள். 'இவர்களையெல்லாம்கூட ஒருவன் கலியாணம் செய்துகொண்டு தானே இருக்கிறான்!' என்கிறார். ஏகாம்பரம்' என்றேன் நான்.

'வெறுமனேயா செய்துகொண்டான்? கலியாணச் செலவுக்காக அவளுடைய தகப்பனுருக்கு நாலாயிரம் ரூபாய் கடன் கொடுத்து போட்டி போட்டுக்கொண்டல்லவோ செய்துகொண்டிருக்கிறான்! அவளுடைய அதிருஷ்டம் யாருக்கு வரும்?' என்றாள் என் தாயார்.

'என்ன ஐயா சொல்கிறீர் இப்பொழுது?' என்றேன் ஏகாம்பரத்தை நோக்கி.

ஏகாம்பரம் பதில் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

அவ்வளவு குரூபியாயுள்ள கனகாவை ஒருவன் அதுவும் ஒரு பட்டதாரி போட்டி போட்டுக்கொண்டு கலியாணம் செய்துகொண்டிருக்கிறானென்றால் அவருக்கு அதில் ஆச்சரியம் ஏற்படுவது சகஜந்தானே!

'அது ஒரு சுவாரசியமான கதை. சொல்கிறேன் கேளும்' என்று கனகாவைப்பற்றிய கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்.

❧ ❧ ❧

'உலகில் எல்லாருமே அழகாக இருந்துவிடுவதில்லை. குரூபிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இருந்தாலும், கனகாவைப் போன்ற ஒரு குரூபி இருப்பார்களா என்பது சந்தேகந்தான். தொட்டால் ஒட்டிக்கொள்ளுமோ என்று சந்தேகப்படும்படியான கருப்பு. கொத்தவரைக்காய் அளவுக்குக்கூட பின்ன முடியாத தலைமயிர். விரல் அகலம்கூட இல்லாத ஒரு நெற்றிக் கட்டு. இந்த லட்சணத்தில் வக்கரக்கண்வேறு' என்று நான் சொல்லிக்கொண்டு வருகையில், அப்படியானால் புரிந்துவிட்டது. இந்த வக்கரக் கண்தானய்யா அவளுக்கு அதிருஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது' என்றார் ஏகாம்பரம்.

'அம்மாகூட அதைத்தான் சொல்கிறாள். அது கிடக்கட்டும். மேற்கொண்டு சொல்கிறேன் கேளும்' என்று சொல்லிவிட்டு மேலும் சொன்னேன்:

'ஆனால் கனகாவின் தகப்பனார், ராமநாத ஐயர் கனகா இவ்வளவு குரூபியாக இருக்கிறாளே என்று கொஞ்சமும் வருத்தப்படவில்லை. பின்னும் நாலு காசை வீசி எறிந்தால், போட்டி போட்டுக்கொண்டு எவனாவது வந்து கலியாணம் செய்துகொண்டு போய்விடுவான் என்ற தைரியம் அவருக்கு. இன்றைய உலகில் பணம் தானே முக்கியம்! கனகாவின் தகப்பனார் கொஞ்சம் சுமாரான சொத்து உடையவர். முதலில் கனகாவைப் பற்றிய வரையில், அவளுடைய கலியாண விஷயம் 'மார்க்கெட்டில்' அவ்வளவாக எடுபடவில்லை. கொஞ்சம் 'டல்லாகவே' இருந்தது. ஏழாயிரம், எட்டாயிரம், ஒன்பதாயிரம், கடைசியாகப் பத்தாயிரம் வரை பேரத்தைக் கொண்டு விட்டார் ராமநாத ஐயர். ஆனால், அவர் எதிர்பார்த்த அளவுக்கு வரன் ஒன்றும் திருப்தியாக வரவில்லை.

'இதற்கிடையில் கனகாவின் வயதும் உயர்ந்துகொண்டேயிருந்தது. கனகாவுக்கு வயது இருபது ஆகிவிட்டது. 'சரி, மேற்கொண்டு ஆகாயத்தைப் பார்ப்பது தவறு! ஏதோ உள்ள வரன்களில் சற்று நல்லதாகப் பார்த்து முடித்துவிட வேண்டியதுதான்' என்று கனகாவின் பெற்றோர்கள் முடிவு செய்து விட்டார்கள்.

'இதற்குள் கனகாவுக்கு வயது இருபத்தி ஒன்றும் ஆகிவிட்டது' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கையில், 'பாவம்!' என்றார் ஏகாம்பரம்.

'பாவமாவது, பாகற்காயாவது! திடீரென்று 'மார்க்கெட்' சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது! இதுவரையில் இந்த பட்டதாரிகள் எங்குதான் ஒளிந்துகொண்டிருந்தார்களோ தெரியவில்லை. புற்றிலிருந்து ஈசல் கிளம்புகிற மாதிரி பி. ஏ., பி. காம்., பி. டி., பி. எஸ்ஸி., அது இது என்று



சொல்லிக்கொண்டு கலியாணத் தரகர்கள் ராமநாத ஐயரை முற்றுகையிட ஆரம்பித்து விட்டார்கள்' என்று நான் சொல்லுகையில், 'அதென்னங்காணும் அது, விசித்திரமாக இருக்கிறதே! பெண்ணுக்கு வயது ஏற ஏற மார்க்கெட்டில் மதிப்பு குறையும் என்பார்கள். நீர் சொல்வது நேர் விரோதமாக இருக்கிறதே!' என்றார் ஏகாம்பரம்.

'உண்மையான கேள்விதான்' என்று சொல்லிவிட்டு மேலும் சொன்னேன்:

'இதில் வேடிக்கை என்னவென்றால், அவளுடைய பெற்றோர்களுக்கு கனகா ஒரே பெண். வேறு பிள்ளைகள் எதுவும் கிடையாது. 'ஆ, ஊ' என்று சொல்லிக்கொள்ளும்படி இல்லாவிட்டாலும், அப்படி சோடியும் இல்லை, சுமாரான சொத்து. முதலில் ராமநாத ஐயருக்கு மேற்கொண்டு ஏதாவது குழந்தைகள் பிறக்குமோ என்ற சந்தேகம் இருந்து வந்தது. கனகாவுக்கு வயது இருபதுக்குமேல் ஆகிவிட்டது. இனிமேலா பிறக்கப்போகிறது என்ற எண்ணம் ஜனங்களிடையே தோன்ற ஆரம்பித்து விட்டது. கனகா அவளுடைய பெற்றோர்களுக்கு ஒரே பெண்ணானபடியால், பெற்றோர்களுக்குப் பிறகு அந்தச் சொத்து முழுதும் அவளுடையதுதானே! பணத்தையே முக்கியமாய் நினைப்பவர்கள் கண்ணில், இது மிகவும் உயர்ந்ததாகப் பட ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான். ராமநாத ஐயர் வரன்களைத் தேடிச் சென்றது போக, அவர்கள் இவரை முற்றுகையிட ஆரம்பித்துவிட்டார்கள். 'மனுஷ்யன் நல்ல கெட்டிக்காரர்!' என்னிடம் முப்பதினாயிரம் ரூபாய் இர ·றது. ஆனால், எல்லாவற்றையும் வட்டிக்கு விட்டிருக்கிறேன். எல்லாம் ப்ரோ நோட்டும், அடமானப் பத்திரமுமாக இருக்கிறது. இப்பொழுது முகூர்த்தத்தை வைத்துக்கொண்டால் கூட செலவுக்குக் கையில் பைசா கிடையாது. கடன்காரர்களில் ஒன்றிருவர் நாலைந்து மாதம் கழித்துப் பணம் தருவதாகச் சொல்கிறார்கள். அது கைக்கு வந்த பிறகுதான் முகூர்த்தத்தை வைத்துக்கொள்ள வேண்டும்' என்றார் பெண்ணைக் கேட்க வந்தவர்களிடம். ஒரு 'பணப் பிசாசு' யோசித்தது.

இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் இந்த சொத்து நம்மைத்தான் சேர வேண்டும். அதுவும் தாங்கவில்லை. வட்டியுடன் வந்து சேரப்போகிறது. ஆகவே, இப்பொழுது கையில் வரதட்சிணை என்று வாங்கினால்தான் உயர்த்தியா என்ன? எப்படியும் வருவது வரப்போகிறது. ஆகையால் வரதட்சிணையே வாங்காமல்தான் இருந்துவிட்டால் போகிறது!' என்று. இந்த யோசனைக்கு இவருடைய பிள்ளையும் சம்மதித்து விட்டான். அவன் ஒரு பி. எஸ்ஸி. என்று நான் சொல்லிக்கொண்டிருக்கையில்,

'அதுவும் ஒரு யோசனைதான்' என்றார் ஏகாம்பரம்.

'கனகாவின் தகப்பனார் இத்துடன் விட்டார்? மனுஷ்யன் லேசுப்பட்டவரில்லை. 'கலியாணச் செலவுக்குக்கூட இப்பொழுது திடீரென்று என் கையில் பணம் கிடைக்காது போலிருக்கிறதே!' என்றார். கலியாணச் செலவுக்கு உங்களுக்கு எவ்வளவு தேவையாக இருக்கும்?' என்றார் பிள்ளையின் தகப்பனார். அது நீங்கள் போட்டுத் தரும் 'ஜாபிதாவைப் பொறுந்

தல்லவோ இருக்கிறது?' என்றார் ராமநாத ஐயர். 'இதோ பாருங்கள்! ஏதோ நாம் ஒரு முடிவுக்கு வந்தாகி விட்டது. இனி நீங்கள் வேறு, நான் வேறு என்பதில்லை. நீங்களாயிற்று. உங்கள் மாப்பிள்ளையாயிற்று. ஏதாவது செய்தாலும் வரவேண்டிய பணத்தை வசூல் செய்து அதிலிருந்து தான் செய்யப்போகிறீர்கள். அதனால் வட்டி நஷ்டம்தானே! ஆகவே, சீர்வரிசை எல்லாம் உசிதமாக இருந்தால் போதும். ஆடம்பரமில்லாமல் ஒரு வேளை கலியாணம் செய்துவிடுங்கள். யாருக்காகவாவதா என்ன? நம் இருவர் மனதும் ஒப்பிவிட்டால் சரிதான். இதற்கு நாலாயிரம் ரூபாய் இருந்தால் போதுமென்று நினைக்கிறேன். அதை, இப்பொழுது அந்தத்தொகையை நான் கடனாகக் கொடுக்கிறேன். இதைப் பின்னிட்டு உங்கள் கைக்குப் பணம் வந்தபொழுது கொடுங்கள். என்ன சொல்கிறீர்கள்?' என்றார் பிள்ளையின் தகப்பனார், கோபால ஐயர். 'நான் சொல்ல என்ன இருக்கிறது? இனி எல்லாம் உங்கள்பாடு' என்று ராமநாத ஐயர், கோபால ஐயர் மீது முழு பாரத்தையும் போட்டுவிட்டார்.

கோபால ஐயர், ராமநாத ஐயரிடம் நாலாயிரம் ரூபாயைக் கொடுத்தார். உடனே ஒரு சுப முகூர்த்தத்தில் கனகாவுக்குக் கலியாணம் நடந்துவிட்டது. கலியாணத்தில் சம்பந்தி முடுக்கு, மாப்பிள்ளை முடுக்கு அது, இது என்று ஒரு தகராறு கிடையாது. 'கப், சிப்' காதோடு காது வைத்த மாதிரி எவ்விதப் புகாருமின்றிக் கலியாணம் நடந்துவிட்டது' என்றேன் நான்.





'கனகா அதிருஷ்டசாலிதான்!' என்றார் ஏகாம்பரம்.

'அதிருஷ்டசாலி என்றால் 'அப்படி இப்படி' அதிருஷ்டசாலியா? சொல்லி முடியாத அதிருஷ்டசாலி. சொல்லிவைத்த மாதிரி எவ்வளவு அழகாக முடிந்திருக்கிறது! இதுவே இன்னும் ஒரு ஆறு மாதம் தள்ளிப் போயிருந்தால்...' என்று சொல்லி வார்த்தையைச் சற்று நிறுத்தினேன்.

'ஆறு மாதம் தள்ளிப் போயிருந்தால்...' என்று கேள்வியைத் திருப்பிக் கேட்டார் ஏகாம்பரம்.

'கனகாவின் கலியாணம் எந்த தினுசில் போய் முடிந்திருக்குமோ?' என்றேன்.

ஏன்? என்ன சமாசாரம்?' என்றார் ஏகாம்பரம்.

'கனகாவுக்குக் கலியாணமான ஆறு மாதத்திற்கெல்லாம் கனகாவின் தாயார் கருத்தரித்துவிட்டாள்.'



'அட கடவுளே! அப்புறம்?'

'அப்புறம் என்ன? ராஜா மாதிரி கனகாவுக்கு ஒரு தம்பி பிறந்துவிட்டான்!'

'நிஜமாகவா?'

'பொய் எதற்குங்காணும் சொல்லப் போகிறேன் இதில்?'

'அப்புறம்?'

'என்ன அப்புறம்! விழுப்புரம் தான். இஞ்சி தின்ற குரங்கு என்று சொல்வார்களே, அந்த மாதிரி விழிக்கிறார்கள் கோபால ஐயரும் அவருடைய திருக்குமாரரும்.

'அதாவது கடன்கொடுத்துள்ள நாலாயிரம் ரூபாய் நல்லபடியாகத் திரும்பி வந்தால், அதுவே கோபால அய்யருக்குப் பெரிய அதிருஷ்டம்' என்று சொல்லும்! நான்தான் சொன்னேனே, வக்கிரக்கண் செய்துள்ள வேலை ஐயா இது என்று'

'அது வக்கிரக்கண்ணோ, சர்க்கரைக் கண்ணோ. இந்தமாதிரி பணத்தாசை பிடித்து அலையும் பிசாசுகளுக்குப் பெண்ணைப் பெற்றவர்களைப் பாடாய்ப்படுத்துகிறவர்களுக்கே சரியான தண்டனை இது. அதுமாத்திரமில்லை. குரூபியாக இருக்கிறதுகளே! இதுகளுக்குக் கலியாணம் என்று ஒன்று ஆனால் அதுவே பெரிய காரியம்' என்று யோசிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு அநேகமாக நல்ல இடமாகவே கிடைத்துவிடுகிறது, பார்த்தீர்களா? ஒரு வேளை இவர்களைக் குரூபியாக சிருஷ்டித்து விட்டோமே என்ற அனுதாபத்தினால் கடவுளே இவர்களுக்கு நல்ல இடமாகப் பார்த்து அமைத்து விடுகிறார் என்று தான் நினைக்கிறேன் நான். என்ன சொல்கிறீர்?' என்றேன்.


'இல்லாவிட்டால் கனகாவின் கலியாணம் இப்படி முடிந்திருக்குமா?' என்றார் ஏகாம்பரம்.

☆




சலூன் முதலாளி:—உங்களுக்கு எந்த 'ஸ்டைலில்' வெட்டிக்கணும்னு சொல்லுங்க! அதற்கு ஆள் தயாராக இருக்குது!





# நடனசிங்காரியின் துறவு

எம்.எஸ்.எஸ்

உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டி மிகவும் தருக்கி எழுந்தான், கிரேக்க வேந்தனான மகா அலெக்சாந்தர் என்பான். ஆசியா அருக்கி, பாரசீக தேசம் முதலிய பிரதேசங்களை வென்ற பின்னர், நமது பாரத பூமியின் வட மேல்கோடியில் தோன்றினன் அத் தனி வீரன். அப்போது நமது பூமியின் ஒரு பகுதியாக விளங்கிய காந்தாரம்,—இப்போது ஆப்கானிஸ்தானம்—என்னும் நாட்டிலே அவன் தலைகாட்டியதுதான் தாமதம்.

சாணக்கியன் எழுச்சி:— அந்நாட்டினை ஆண்டு வந்த ஆரியப் பிரபை என்னும் வீரமாதேவி அந்த அலெக்சாந்தரை வழிமறித்து நிறுத்தி, அரும்போர்த் தொடுத்தனள். அது பற்றி அவன் வேசாறி நிற்க நேர்ந்தது, அவளது கோட்டைக்கு அப்பால்! முடிவில் கொடுந் துரோகம் விளையவே, பகைவனுக்குப் பணிய விரும்பாத அப்பெருந்தேவி தீயில் குதித்து ஆவி விடுத்தனள். பின்பே, அவ்வேந்தன் சிந்நுமா நதிப்பிரதேசத்தில் புகுந்து சிற்சில நாடுகளைக் கைக்கொண்டனன்.

அச்சிந்துமா நதிக்கு மேற்கேயுள்ள நாடுகளே அவனது படைத் தலைவர் பெருமிதமாக ஆளத் தலைப்பட்டனர். அதுகண்டதும், சாணக்கியன் என்னும் சதுர்மறையோன் சீற்றம் மிகுத்து சந்திரகுப்த மௌரியன் என்பானை முன்நிறுத்தி, அக்கிரேக்கப் படை வெள்ளத்தைப் புரட்டி எறிந்தான். இப்பூமியிலே வல்லரசில்லாச் சிறுமைகண்டு, பாடலிபுரம் என்பதை இராஜதானியாக அமைத்து, மகதப் பேரரசை நிறுவி, அச்சந்திரகுப்தனையே சக்கரவர்த்தியாக்கினன்.

சாந்தி நிலவ:— அம்மகதப் பேரரசின் பெருமைதனை மேனாட்டார் தம் மனங்கொண்டமட்டும் புகழ்ந்து வரைந்துளர். அச்சந்திரகுப்த மௌரியனது வழிமுறையில் வந்தவனே அசோக மகாராஜன் எனப்படுவான். அசோகனது காலத்திலும் பாடலிபுரம் திசையனைத்தும் இசை பரப்பியது. பாருலகில் போர் என்பதே கூடாது. சாந்தியே நிலவுதல் வேண்டும், என்று முதன் முதல் பெரும் போதம் புகட்டியவன் அந்த அசோக மகாராஜனேயாம். அதுகருதியே அக்கொற்றவன் நான்கு திக்கிலும் தூதுவரை விடுத்தான் சாந்தோபதேசம் புரிய!

அப்பாடலிபுர நகரிலே பெருங் கணிகையர் வீதியில், வாசவதத்தை என்னும் வியன் மாது வசித்து வந்தனள். அவள் நடன சிங்கார நடையழகி. தனது வடிவழகால் நானிலமெங்கும் நற்புகழ்பெற்றவள். அவளது மாளிகையோ, ஏழு கட்டும், ஏழு அடுக்கும் வாய்ந்தது. ஏழாவது அடுக்கு மேக மண்டலத்தை அளாவி நிற்கும். மாளிகையின் ஒவ்வொரு கட்டும் ஓரொரு வீதியேபோல் தோன்றும். கட்டுதோறும் கண்கவரும் பூங்காவனங்கள்! செய்குன்றும் சிறந்து நின்று, ஆகாய வீதியை எட்டிப் பார்க்கும்.

மாளிகை மஹிமை:— பூங்காவனங்களிலே புள்ளிமான்கள் துள்ளி

யோடும். மயில் கூட்டங்களோ கலாபம் விரித்தாடும். இளமரங்களிலே எண்ணிறந்த குயிலினங்கள் இனிமையுடன் கூவிக்கொஞ்சும். பஞ்ச வர்ணக் கிளிகளோ மாந்தரைப்போல் உரையாடி மகிழும். கருங்குரங்குகள் தம் கூண்டுகளிலே இங்கும் அங்கும் ஓடி உலாவும். புனுகுப்பூனையும், சவ்வாதுப் பூனையும் காததூரம் நறுமணம் பரப்பும். நானாவிதமான மலர்ச் செடிகளும் தொலைதூரம் வாசனை வீசும். பூங்காவையும், செய்குன்றையும் பார்த்தால், சக்கரவர்த்தியின் சுகபோகஸ்தலம் என்றே எல்லாரும் எண்ணி நிற்க நேரும். ராஜநர்த்தகி என்னும் பட்டம் அவளுக்கே உரியது.

அவ்வாசவதத்தையின் வடிவழகைக் கண்டுகளிக்க, கனியூறல் போன்ற உரைகளைச் செவிமடுக்க, குயிலும் நாணத்தக்க குரலைக் கேட்டு உள்ளங் குளிர, அரசிளங் குமாரரும், பெருந்தனிகரின் தவப்புதல்வரும், சமயம் பார்த்துக் காத்து நிற்பரென்பது மிகையாகாது. ஒரு நாள் காலை, ஏழாவது மாளிகையின் சாளரத்தருகே அமர்ந்து நீண்டகன்ற வீதியை நோக்கலானாள் அவ்வாசவதத்தை. வைத்த கண் வாங்காமல் அவள் பார்த்து நிற்பதைத் தாதியர்





உணர்ந்து, ஆச்சரியத்துக்கு ஆளாயினர்.

காத்துக் கிடத்தல்:—கண் பெற்ற பலனை அடைய வேண்டி அழகிற் சிறந்த ஆடவர் பலரும் இவளையணுகக் காத்துக் கிடக்கையில், தன்னை மறந்து, யாரை நோக்குகின்றாள் இவள்? தாதியரும் அவ்வீதியை விசாலமான நயனங்கள் கொண்டு, அவளுக்குத் தெரியாமல் மறைந்து நின்று பார்க்க நேர்ந்தது. கண்ணையும் கருத்தையும் கவரவல்ல பொருளையோ, பூமானையோ அத்தாதியர் காணவில்லை. பின், ஐம்பொறிகளும் கண்ணே கொள்ள இவள் காண்பது யாது? என்று அவர்களுக்கு ஐயம் பிறந்தது. ஆவல் உதித்தது. அதிசயமும் வளர்ந்தது.

அவ்வேளை, நறுமணமொன்று வீசா நிற்க, அத்திசையை வாசவதத்தை நோக்கலானாள். தனது மேனியின் ஒளியால் அவ்விடத்தையும் கனகமயமாக்கி, விரிந்து பரந்த நெற்றியும், வளைந்து நீண்ட கருத்த புருவங்களும் விசாலமான நெடிய நயனங்களும், உன்னதமாக நீண்டு வளர்ந்த நாசியும், குன்றுபோல் திரண்ட தோள்களும், அழகு ஒழுகும் முகமண்டலமும், சீரிதும் வழுவாமல் மந்திரம் உச்சரிக்கும் பவழ வாயும் தாங்கிய உருவம் ஒன்று தென்பட்டது.

தாதியர் நினைவு:—அந்த உருவத்தைக் கண்டதும், யாரோ புத்த பிட்சு போகிறார் என்று தாதியர் எண்ணிக் கிடந்தனர். நடன சிங்கார நடையழகியோ பரவசங் கொண்டு பெருமூச்சு விட்டனள். அந்த உருவம் நெருங்க நெருங்க, அவளது நெஞ்சம் துடிப்புக் கொண்டது. உணர்ச்சியொன்று எழும்பி, அவளை அடிமை கொண்டது. அவளது உடலம் வியர்த்தது. உரோமங்கள் சிலிர்த்தன. உயிரோ ஊசலாடியது என்னலாம். அந்த உருவம் அவளது மாளிகை வாயிலில் நண்ணும் சமயம்,



தலையை மிதித்தவள்போல் துள்ளி எழுந்தாள் வாசவதத்தை. மாளிகையிலிருந்து கீழே குதிப்பவள்போல், படிக்கட்டுகளை நாலும் ஐந்துமாகத் தாண்டி, அடிவைத்து நடந்தாள் என்பதா? விரைந்து ஓடினாள் என்பதா? மேலிருந்து கீழே குதித்தவள்போல், தனது மாளிகையின் வாயில் புறம் சேர்ந்தாள். புத்தம் கச்சாமி, தர்மம் கச்சாமி, சரணம் கச்சாமி என்று அந்த உருவம் உச்சரிப்பதைக் கேட்டு உள்ளம் உடைந்தாள். சரணம் கச்சாமி என்று அவ்வடிவம் விளம்பியதும், கீழே நிலத்தில் விழுந்து வணங்கினாள்.

**அருள் ஒழுக:-** பின்னர் அப்பெண்பால் ஒருவாறு தேறி எழுந்து, அந்த வடிவத்தையே உற்று நோக்கி நின்றாள். உள்ளே புகுந்து, உவந்ததை ஏற்றருள்க, என்று உரைப்பதுபோல அவ்வடிவை ஏறிட்டும் பார்த்தாள். காவியுடையும் பிட்சா பாத்திரமும் இனி எதற்கு என்பாள்போல் அவளது உதடுகள் இரண்டும் அசைந்து கொடுத்தன. அழகின் அவதாரமான சரீரம் தினம் தினம் வீடுதோறும் பிட்சைக்காக நடந்து செல்வதேன்? என்று இரங்குவதுபோல், அவளது முக ஒளி தோன்றலாயிற்று. அனைத்தையும் உணர்ந்தார் அத்துறவி. அருள் ஒழுக அவளை நோக்கினார். நோக்கவே, வாசவதத்தையின் உள்ளம் குளிர்ந்தது.

உடனே, 'உள்ளே வருக, உண்டி கொள்க, அடியாளை ஆட்கொள்க,' என்பாள்போல் மீண்டும் துறவியை மீதூர நோக்கினாள். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். இருவர் மனமும் ஒருமனதாயின், உலகிலே உன்னக் கிடப்பது ஒன்று உண்டோ? என்று வாய்திறந்து கூற அவளுக்கு ஆசைதான்! ஆனால், வெட்கம் என்பது வந்து குறுக்கே நின்றது. யாது செய்வாள் அப்பெண்பால்! பேதை மனத்தளாய் மாழ்கி மறுகி நின்றனள். கைலாகு கொடுத்து அவரை உள்ளே இழுத்துச் செல்ல அத்தையலாள் கருதியும் என்னை?

**காலம் அறிந்து:—** பார்த்தார் அத்தூய மனத் துறவி. 'பெண்ணே! பேதுறேல், நான் ஒரு பிட்சுகன். நீயோ நடன மாது காரிகையர் குலம். இருவருக்கும் பொருத்தம் ஏது? உனது உள்ளத்தை அறிவேன்; துடிப்பையும் உணர்வேன். துறவியாகிய நான் உன்னையணுக, உன்பால் வந்து சேர, காலம், இடம் கருதவேண்டாமா? காலமும் இடமும் வாய்க்கும்போது கண்டிப்பாக வருவேன். கவலை வேண்டாம். பிட்சா பாத்திரத்தில் ஏதேனும் இடுக!' என்று மெல்லிய குரலில் இனிமையாக மொழிந்தார்.

'எனது உள்ளன்பைத் தவிர, உண்மையன்பைத் தவிர, அடியாள் இப்பாத்திரத்தில் எதனை இட முடியும்!' என்று கூறி நாணி நின்றாள் அவ்வாசவதத்தை. உடனே, 'காலமும், இடமும் கருதி, உன்பால் வந்தணைவேன்,' என்று கூறி, அகன்று விட்டார் அப்பெரியார். அப்பெண்பாலும் மனமகிழ்ந்து தனது மாளிகையின் உள்ளே மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்தாள். சேடியர் கடுகி வந்து கைலாகு கொடுத்து, அவளை உப்பரிகையின் மீது அழைத்துச் சென்றனர்.

**ரிஷிபத்னியர்:—** வந்த துறவியோ உபகுப்தர் என்னும் பெயருடையவர். அசோக மகாராஜனது ஆசாரிய பீடமாகத் துலங்குபவர். வயது உத்தேசம், இருபத்தைந்து இருக்கும். குழந்தைப் பருவத்திலேயே கடுந் துறவு பூண்டவர். பருவத்திற்கு ஏற்ற முக விலாசமும் சரீர அமைப்பும் வாய்ந்தவர். பிரம்மசரிய விரதம் ஒருபுறம், சதா வேதம் ஓதுதல் ஒருபுறம், எக்காலத்தும் யாருக்கும் நலமே நினைக்கும் நெஞ்சம் ஒருபுறம். எல்லாம் சேர்ந்து, அவரது தேஜஸை—அழகை—வளர்த்து வந்தன. அவரது முக விலாசமும், தோற்றமும் கண்டு வாசவதத்தை எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுதல் இயற்கைதானே! சிவபெருமானது பிட்சாடன வேஷங் கண்டு, தாருகாவனத்து ரிஷி பத்தினியர் முன்னம் மயங்கினான்றோ?

அன்று அந்தி மாலை புகுந்தது. 'காலம் இடம் கருதி வருவதாக அவர்



சொல்லிப் போனாரே. பெரியாரின் வாக்கிலே பொய் வாராது. அவர் கட்டாயம் வருவார்;' என்று வாசவதத்தை எண்ணிவிட்டாள். எண்ணிவிடவே, தாதியரை அழைத்து, 'இன்று அவர் வருவார். ஆதலின், சயன அறையை செம்மை செய்க,' என்றனள். அவ்வளவில் தாதியர் விரைந்து சென்று, படுக்கை அறையையும் மஞ்சத்தையும் அலங்கரித்தனர். எங்ஙனம் என்றால்—

**பஞ்ச வர்ணனை:-** அன்னத்தின் தூவியால் ஆகிய பட்டு மெத்தை மூன்றை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி அமைத்தனர். அவற்றின் மீது அரிய பூ வேலையும், இனிய ஜரிகை வேலையும் வாய்ந்த காஷ்மீர சால்வையை விரித்தனர். நவரத்தினங்களும் வைத்து இழைத்த வெண்பட்டு விதானம் ஒன்றை மஞ்சத்தின் மீது கட்டினர். வானவீதியிலே சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளி வீசுவதே போல், அவ்விதானமும் ஒளி வீசிற்று. மஞ்சத்தின் நான்கு புறங்களிலும் திவ்ய புருஷரின் ஓவியங்கள் தீட்டப் பெற்ற படுதாக்கள் தொங்க விட்டனர்.

முன்னால் தொங்கும் படுதாவை அழகுற மடித்துக் கட்டி, ஆணிமுத்துச் சரங்களைத் தொங்கவிட்டனர். மஞ்சத்தின் மீது நான்கு மூலைகளிலும் மரகதத்தினால் ஆன கிளிகளைப் பொருத்தி வைத்தனர். மஞ்சத்தின் அருகே தந்தத்தாலான மேஜைமீது பன்னீர், புனுகு, சவ்வாது, வாசனைச் சுண்ணம் இவற்றை வரிசையாக வைத்தனர். தங்கத் தட்டிலே வாசனைத் திரவியங்களும், வெள்ளித் தட்டிலே கொழுந்து வெற்றிலையும் வைக்கப்பெற்றன. நாவுக்கு இனிய நானாவிதமான தின்பண்டங்களும், ஆவின் அரும் பாலும் கொம்புத் தேனும் அரதனப் பாத்திரங்களில் ஒழுங்காக வைக்கப்பெற்றன.

**அனல் காற்று:—** பள்ளியறையின் பேரலங்காரங் கேட்டு, வாசவதத்தை மனமிக மகிழ்ந்தனள். இரவு புகுந்து முதல் யாமம் ஆவதைக் கணக்கிட்டாள். இரண்டாவது யாமம் புகுந்து விட்டது. அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒரு மஞ்சத்தில் சற்றே அமர்ந்தாள்; படுத்தும் பார்த்தாள். இப்படியும் அப்படியும் புரண்டு கொடுத்தாள். வெப்பம் வீசுகிறதே என்று வெடுக்கென எழுந்தாள். தாதியர் அக்கணமே பன்னீரைத் தெளித்தனர். மாந்தளிர் கொண்டு மிருதுவாக விசிறினர். 'என்ன அனல் காற்று இது!' என்று அவள் கடுகடுக்க நேர்ந்தது.

தாதியர் என்ன செய்வர்? மகரந்தப் பொடியை வாரி இறைத்தனர்; மயில் விசிறி கொண்டு இழைய விசிறினர். ஈசன்மீது இனிய கானம் பாடினர். யாழ் எடுத்து, தேனொழுக்கேபோல் நாதம் எழுப்பினாள் ஒருத்தி. சிவ லீலைகளைக் கதைபோல் கூறி வந்தாள் ஒருத்தி. சந்தனக் குழம்பை வாரி வாரி வீசினாள் மற்றொருத்தி. அவ்வேளை, 'என்னை ஆட்கொள்ளும் ஐயன் வந்தாரா' என்று நடன சிங்கார நடையழகி வினவினாள். வருவார் சிறிது நேரத்துக்கெல்லாம், என்று ஒரு சேடி பதில் உரைத்தனள்.

**உருவெளி:—** உபகுப்தரது உருவெளித் தோற்றம் கண்டாள் வாசவதத்தை. கலி தீர்ந்தது, கதி கிட்டியது என்று களித்தாள். அத்தோற்றம் கைக்கு அகப்படவில்லை. கனவோ என்று அவள் கருத்தழிந்தாள். அப்பால், சிறிது நேரத்துக்கெல்லாம் அயர்ந்து படுத்து விட்டாள். ஆனால் உறக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்கள் உதித்தன. அரைத் தூக்கமாக அவள் கண் வளர்ந்த சமயம் கனவொன்று கண்டனள். கருத்துக் குலைந்தனள். கண்ணீர் வடித்தனள். இதுவும் என் தலைவிதியோ என்று ஏங்கினள்.

பாடலிபுரத்தின் நகர்ப்புறத்தே ஒரு மயானம். அதன் அருகே கல்லும் மண்ணும் நிறைந்த கட்டாந்தரை. அத்தரையிலே வாசவதத்தை படுத்துக் கிடக்கிறாள். உடம்பெல்லாம் தொழுநோய். சீழும் ரத்தமும் வடிகின்றன. புழுக்கள் புண்ணுக்கு வெளியே புறப்படுகின்றன. அப்புழுக்களைக் கொத்தித் தின்ன பறவைகள் வட்டமிடுகின்றன. சீழ் வடியும் இடத்திலே ஈயும் எறும்

பும் வந்து மொய்க்கின்றன. அவற்றை ஓட்டலாம் என்றாலோ கையைத் தூக்க இயலவில்லை.

கழுகு வட்டமிடல் :— இது இப்படியிருக்க ஆகாயத்திலே கழுகுகள் வட்டமிடுகின்றன. கழுகொன்று பறந்து வந்து அவளது மார்பைக் கொத்துகின்றது. மற்றொரு கழுகோ அவளது தொடையைக் கொத்தி இழுக்கின்றது. நரிகள் எட்ட நின்று ஊளையிடுகின்றன. நாய்களும் இறைச்சிப் பிண்டத்தை நச்சி அருகே நிற்கின்றன. யாரும் அற்ற பாவியானேனே என்று அவள் கதறுகின்றாள். கதறவும் சக்தியில்லை. நெஞ்சம் பதைக்கின்றாள்.

எனது வடிவழகு எங்கே? தளதள என்னும் இளமை எங்கே? மாடமாளிகைகள் எங்கே? திரண்ட செல்வம் எங்கே? அரசிளங்குமாரரையும் தனிக வாலிபரையும் திரிய வைத்த மேனி எங்கே? சந்நியாசியரையும் கலங்கப் பண்ணிய ஒய்யார நடையழகு எங்கே? அரங்கில் ஏறி அனைவரையும் மயக்கிய ஆடல்பாடல் எங்கே? ஏழடுக்கு உப்பரிகை எங்கே? பலவகை இரத்தினங்களும் வைத்திழைத்த பூஷணங்கள் எங்கே? பட்டுப் பட்டாடைகள் எங்கே? நீரில்குமிழ் இளமை, என்றனரே பெரியோர்! நீரின் கோலம் போன்றது வனப்பு என்று நூல்கள் நுவலுமே! நாய்க்கும், நரிக்கும், காக்கைக்கும், கழுகுக்கும் இரையாகும் உடலைச் சதம் என்று இருந்தேனே ஈசா!

புலம்புகையில் :— அவ்விதமெல்லாம் வாசவதத்தை புலம்பும் காலையில், வாசவதத்தை, வாசவதத்தை என்னும் இனிய குரல் எழுந்தது. 'இந்த அனாதையையும் வாசவதத்தை என்று கூப்பிடுவார் உண்டோ? என்ன கனவு இது? கனவு அன்று, மதிமயக்கம் சுடுகாட்டிலே தொழு நோயால் ஆவி துறக்கும் காலத்திலே ஆதரவுடன் அழைப்பாரும் உண்டோ?' என்று அவள் ஏங்கும் காலையில் வாசவதத்தாய் என்ற குரல் மீண்டும் காதில் பட்டது. யார் அது?' என்றாள் அவள்.

'காலம், இடம் அறிந்து வருவேன் என்று நான் சொல்லவில்லையா? சமயத்தில் வந்தேன். கலங்காதே கடவுள் இருக்கிறார்' என்று உபகுப்தர் உரைத்து, அவளது உடம்பெல்லாம் தடவிக் கொடுத்தார். கொடுக்கவே, நாயும் நரிகளும், காகமும் கழுகுகளும் ஓடி அகன்றன. சீழும் புழுவும் சிக்கென மறைந்தன. தொழுநோயும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது. பழைய உடம்பும் நல்லுணர்வும் வந்தன. எழுந்து நின்று உபகுப்தரை இருபாதமும் தொட்டு வணங்கினாள் அவள். நல்ஞானம் உதிக்குமாக என்று அவரும் ஆசீர்வதித்தார்.

துறவு எய்தல் :- உடனே கண் இரண்டையும் துடைத்துக்கொண்டு பார்க்க, மயானத்தையும் காணோம் உபகுப்தரையும் காணோம். தனது மாளிகையிலே படுக்கை அறையில் இருப்பதாக அவள் கண்டுகொண்டாள். கொள்ளவே, 'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம், இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா; உற்றாரும் உறவினரும் சந்தையில் கூட்டம்' என்று வாசவதத்தைக்கு ஞானம் பிறந்தது. அக்கணமே சொத்தனைத்தையும் தர்மத்துக்கு எழுதி வைத்தாள் அவள். துறவுக்கோலம் பூண்டாள்; சமூக சேவகம் புரிய புறப்பட்டு விட்டாள்!







# மந்திரவாதி

கல்வி கோபாலகிருஷ்ணன்

## 2

மந்திரவாதி மாயமாய் மறைந்த ஒரு நாள் பூராவும் அரண்மனை முழுவதும் புகையாயிருந்தது. அரசர், முதல் மந்திரியை அழைத்து புகையை விரட்ட வழி என்ன என்று கேட்டார்.

'இப்புகையுடன் போனால் பாதகமில்லை. மாயமாய் மறைந்த மந்திரவாதி நம்மண்டைகளை உருட்டாமலா போகப்போகிறார். இன்னும் என்னென்ன கேடுகள் விளைவிக்கப் போகிறாரோ? மந்திரவாதிகள் முன்கோபக்காரர்கள். இவர்களின் கோபத்திற்கு நாம் ஆளானது முதலில் சரியல்ல' என்று முணுமுணுத்தார் முதல் மந்திரி.

'உம்; நம் ராணி அம்மாள் கோபத்திற்கு உறை போடக் காணாது எவர் கோபமும்' என்று விட்டுக் கொடுக்காமல் கம்பீரமாகப் பேசினார் அரசர்.

'உம்; அவரை எவ்விதத்திலாவது கண்டுபிடித்து தக்க மரியாதை செய்து நாட்டை விட்டு நல்லபடியாகப் போகச்சொல்வது மேல்' என்றார் பிரதம மந்திரி.

'அவரை எங்கே கண்டுபிடிப்பது?' என்று கேட்டார் அரசர்.

'கொலு மண்டபத்தில் குபீர் என்று மறைந்த மந்திரவாதி ஒருவேளை புகைரூபத்தில் அரண்மனையில் நடமாடுகிறார்போலும்' என்றார் பிரதம மந்திரி.

'ஐயோ, பயமாய் இருக்கிறதே. தூங்கும்பொழுது மூச்சுத்திணற அடித்துவிட்டால் என்ன செய்வது' என்று அரசர் தன் கையைப் பிசைந்து பயத்தைக் காட்டினார்.

'எதற்கும் குண்டுக் கோமாளி குண்டுமணியை அனுப்பி அவரைத் தேடி வர உத்தரவிடுங்கள். நாளைக் காலைக்குள் தேடி வராவிட்டால் தலை தப்புவது இய

லாது என்று பயமுறுத்துங்கள்' என்றார் முதல் மந்திரி. அப்படியே அரசரும் குண்டுமணியிடம் மந்திரவாதியைத் தேடி வரும்படி உத்தரவிட்டார். தலைபோகும் விஷயத்தை அரசர் மூலம் கேள்விப்பட்டதும் குண்டுமணி தன் தலையைச் சட்டைக்குள் அடக்கிக்கொண்டான். அவ்வாறு தலையைச் சட்டைக்குள் வைத்தபடியே அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

புகை சூழ்ந்துகொண்டிருந்த அரண்மனைக்குள் அரசராலும், அவர் குடும்பத்தாராலும் தங்க முடியவில்லை. 'கோமாளி குண்டுமணி மந்திரவாதியை அழைத்து வரும்வரை யாவரும் அரண்மனையை அடுத்த நந்தவனத்தில் தங்கலாம்' என்று யோசனை கூறினார் பிரதம மந்திரி.

அரசர், இராணி, அவர்களின் மூன்று பிள்ளைகள், பிரதம மந்திரி முதலியவர்கள் அரண்மனையை அடுத்த நந்தவனத்தில் வந்து தங்கினர்.

ராணி தான் செய்த தவறினால்தான் அந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது என்பதையேமறந்து 'இந்த நாட்டில்தான் இவ்வித அநியாயங்கள் நடக்கும். முட்டாள் மந்திரியை வைத்துக் கொள்வதன் பலன்தான் இது' என்று முதன் மந்திரியைப்பற்றி அநாவசியமாகப் பேசினாள்.

அரசர் முதன் மந்திரி போய் விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் 'உம்,...இல்லை,...இல்லை. ...உகும்...' என்று மென்று விழுங்கினார்.

'என்ன! இல்லையாவது? உண்டாவது? முட்டாள்தனத்தினால் தான் நாம் நந்தவனத்தில் நடமாடும்படி. ஏற்பட்டுள்ளது' என்று அடித்துக் கூறினாள்.

முதன் மந்திரிக்கு அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. மூக்கு சிவந்தது. உதடு துடித்தது. 'ஆம்; முட்டாள்தனத்தால்தான் இந்த கதிக்கு நாம் வந்துள்ளோம். யாருடைய முட்டாள் தனம் என்பதை அரசரே எடுத்துக் காட்டுவார்' என்று போட்டு வைத்தார்.

'யாருடைய முட்டாள்தனம் என்று கூறுகிறீர்கள். யாரைக் குறித்து மறைமுகமாகப் பேசுகிறீர்கள். உம்; ஜாக்கிரதை. நாக்கை அடக்கிப் பேசும். ராணி என்பதை மறந்துவிடாதேயும்' என்று கோபத்தோடு பேசத் தொடங்கினாள் ராணி.

'உம்...உகும்...உம். உன்னை என்று சொல்லவில்லை. அந்த முட்டாள் மந்திரவாதியால்தான் இவ்வளவு கஷ்டத்திற்கு நாம் ஆளாகி உள்ளோம் உம்..., கவலைப்படாதே, கோமாளி குண்டுமணியை அனுப்பி இருக்கிறேன்...' என்று மெல்ல மழுப்பத் தொடங்கினார் அரசர்.

'கோமாளி குண்டுமணியை எங்கே அனுப்பினீர்கள்? எதற்காக அனுப்பினீர்கள்? யாரைக் கேட்டு அனுப்பினீர்கள்?' என்று மடமடவென்று கேள்விகளைத் தொடுத்தாள் பாருங்கள், அரசர் பீதியால் பிரதம மந்திரியை பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தார். பிரதம மந்திரி அரசரை வெறுப்புடன் பார்த்தார்.

'ஒன்றுமில்லை...உம்... அரண்மனை முழுவதும் புகையாய் அடித்துவிட்டு மறைந்தாரே மந்திரவாதி, அவரை அழைத்துவந்து புகையை விரட்டியடிக்கத்தான்





குண்டுமணியை அனுப்பியிருக்கிறேன்' என்றார் அரசர்.

'முதல் மந்திரியும், மற்ற மந்திரிகளும் என்ன செய்கிறார்கள்? புகையை ஓட்ட வழி தெரியாதவர்களை முதல் மந்திரியாக வைத்துக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் எப்படித்தான் செய்யப்போகிறீர்களோ...' என்று கடிந்து கொண்டாள் ராணி.

ராணியை எதிர்த்துக் கேட்க அரசருக்கு தைரியமில்லை. மரியாதை இல்லாமல் ராணி பேசுவதைப் பொறுக்க முடியாமல் முதல் மந்திரி வெளியேறினால், தன் கதி என்ன ஆவது? என்ற பயம் ஒரு பக்கம் அவரை வாட்டியது.

'மந்திரவாதி மாயத்தால் கிளப்பிவிட்ட புகையை முதன் மந்திரியால் எப்படிப் போக்க முடியும்? அந்த மந்திரவாதியே வந்தால்தான் முடியும். மந்திரவாதியே மாய சக்தியால் புகை ரூபமாக மாறியிருக்கலாம் என்று கூட நினைக்க இடமிருக்கிறது' என்று அரசர் ராணியிடம் கூறினார்.

'ஓ! முதல் மந்திரியால் அந்தப் புகையை விரட்டியடிக்க முடியாதா? முட்டாள்களை முதன்

மந்திரியாக இதற்குத்தான் நியமிக்கக்கூடாதென்று முட்டிக்கொள்கிறேன். துடைப்பத்தைக் கொண்டு வீசினால் பேய் பிசாசுகளே மிரண்டு ஓடுகின்றதென்றால், இந்த மாயஜாலக்காரன் கிளப்பிய புகையா துடைப்பத்துக்கு மசியாமல் போகும். இதோ ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று அரண்மனை சிப்பந்திகளுக்கெல்லாம் தலைக்கு ஒரு வார்கோல் கொடுத்து தானும் ஒரு வார்கோலுடன் அறை அறையாய்ப் புகுந்து வார்கோலால் தும்புதூசிகளைப் பெருக்குவதுபோல் புகையைத் தள்ளிக்கொண்டே வந்தாள்.

இதைக் கண்ட பிரதம மந்திரி 'ஐயோ, மந்திரவாதியை இவ்விதம் அவமதித்தால் என்ன நேரிடுமோ?' என்று அஞ்சிப் புலம்பினார்.

'என்ன செய்யலாம்?' என்று கேட்டார் அரசர்.

'இனி என்ன செய்யவிருக்கிறது? மந்திரவாதியின் கோபத்திற்கு ஆளாக வேண்டியதுதான். அதிலிருந்து தப்ப இனி வழியேது' என்று முதன் மந்திரி சொல்லுவதற்குள் மகாராணி தான் ராணி என்பதையும் மறந்து கையில் வார்கோலுடன் அரசரும், முதன் மந்திரியும் இருந்த இடத்தை வந்தடைந்தாள்.



'ஓ! முதல் மந்திரியாம் முதன் மந்திரி. என்ன ராஜ்ய பரிபாலனம் செய்கிறீர்கள்? அதோ போய் அரண்மனையைப் பாருங்கள். வார்கோலுடன் உள்ளே நுழைந்ததும் புகை சூரியனைக்கண்ட பனிபோல் கண் மூடி கண் திறப்பதற்குள் மாயமாய் அரண்மனையை விட்டு வெளியேறிவிட்டது' என்று கூறி வாயை மூடுவதற்குள்...'

'ஐயோ' என்ற அலறல் நாலாபுறங்களிலிருந்தும் கேட்டது. பிரதம மந்திரியும், அரசரும், ராணியும் திடுக்கிட்டுப் பேந்தப் பேந்த விழித்தனர்.

முதல் அரசகுமாரன் 'அதோ பாருங்கள், அதோ பாருங்கள்' ஐயோ வானம் இடிந்து விழுகிறதே! வானம் இடிந்து விழுகிறதே! எனக் கத்தினான். ஆகாயத்தைச் சுட்டிக் காண்பித்தான்.


யாவரும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தனர். அவர்கள் கண்ட காட்சிதான் என்ன! ஆகாயத்தில் இருந்த மேகங்கள் மடமடவென்று கீழே உதிரத் தொடங்கின. 'மேகம் உதிருவதாவது என்று கேட்கிறீர்களா?' அதுதான் விந்தை! மந்திரவாதியின் மாயஜால வித்தையின் மகிமை அதுதான்! மேகங்கள் ஆகாயத்திலிருந்து உதிர்ந்து தரை மட்டத்தில் இறங்கி இவர்களின் கழுத்தளவில் நின்றன. அரசர், ராணி, முதன் மந்திரி, ராஜகுமாரர்கள் இவர்களின் தலைகள் தெரிந்ததே ஒழிய அதற்கடியில் உடல் பாகம் முழுவதும் மேகத்தால் மூடப்பட்டது கேட்பானேன்! அரசர் ராணி முதன் மந்திரி, ராஜகுமாரன் இருந்த இடத்தைவிட்டு நகர முடியாமல் தவித்தனர்!

கரு மேகங்களும், வெண் மேகங்களும் இவர்களைச் சூழ்ந்து கொண்டபடியால் இருந்த இடத்தை விட்டு நகர முடியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றனர்.

(தொடரும்)

## மூளைக்கு வேலை

★



### இரண்டே சதுரங்கள்

படத்தில் பன்னிரெண்டு தீக்குச்சிகளைக் கொண்டு நான்கு சதுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் இரு தீக்குச்சிகளை மட்டும் எடுத்து விட்டு இரு சதுரங்கள் மட்டும் இருக்கும்படி உங்களால் மாற்ற முடியுமா? இரு தீக்குச்சிகளை மட்டும் எடுக்கலாமே ஒழிய உள்ள உருவத்தை எவ்விதத்திலும் மாற்றி அமைத்தல் கூடாது!

படத்தில் உள்ளபடி தீக்குச்சிகளை வைத்து இந்த நான்கு சதுரங்களை அமைத்துக்கொண்டு இதைச் செய்து பாருங்கள்!


சுதந்தர யானை
2
யானைக்குட்டி புலிவேட்டையாட தனியே புலியைத்தேடிச் செல்கிறது
போகும் போது 'உர், என்ற சத்தத்தைக்கேட்டு, தேடிப்போன புலிதான் வந்துவிட்டதோ என்று தயங்கி நிற்கிறது....
சுற்று முற்றும் பார்க்கும் போது ஒரு காட்டுப்பூனை யானைக்குட்டியின் மேல் பாய்கிறது....
பூனை, மேலே விழுந்ததும் உளறி அடித்துக் கொண்டு 'புலி... புலி... என்று கதறிக் கொண்டு ஓடுகிற


காட்டுப்பூனை யானைக்குட்டியை மடக்குகிறது. குட்டியால் மேலே ஓட முடியாமல் நின்று விடுகிறது...
பூனை:- இங்கே எங்கே வந்தாய்?
யானைக்குட்டி:- புலிவேட்டையாட...,
"ஹூம்... புலியையா வேட்டையாடப் போகிறாய்!...." என்று கேட்டு பூனை யானைக்குட்டியின் துதிக்கையில் பிராண்டி விடுகிறது...."
தொடரும்
"ஐயோ புலி... ஐயோ புலி.. என்று கதறிக்கொண்டு மறுபடியும் தன் அம்மாவைத்தேடி ஓடி விடுகிறது...


# பாலர் கலைக்களஞ்சியம்

## வண்டின் வகைகள் :

பூச்சி இனத்திலேயே அதிக வகைகள் காணுவது வண்டினமே! இதில் இதுவரையில் 500,000 வகைகள் கணக்கிட்டிருக்கிறார்கள்! இதில் மிகச் சிறியன குண்டூசியின் தலை அளவிலிருந்து மிகப் பெரியவை ஆறு அங்குலம் நீளமுள்ளதாகவும்காணப்படுகின்றன. வண்டுகளுக்கு விஞ்ஞானிகள் வைத்துள்ள பெயர் தெரியுமா? 'உறை இறக்கையர்' என்பதே அது! பூச்சிகளுக்குஇரு ஜதை இறக்கைகள் உண்டு. வண்டுகளும் பூச்சி இனத்தைச் சேர்ந்ததால், அதற்கும் இரு ஜதை இறக்கைகள் உண்டு. ஆனால் இதன் நான்கு இறக்கைகளில் மேல் இரு இறக்கைகள் கடினமான ஓடுபோல் தென்படுவதால் அவை நமக்கு இறக்கையாகத் தோன்றுவது இல்லை மேலே உள்ள ஓடு போன்ற இரு இறககைகள் அதன் கீழ் காணும் மெல்லிய இறக்கைகளைக் காப்பாற்றும் உறையாக உதவுகிறது.

வண்டினத்தின் உருவத்திலும் பல விநோதங்களைக் காணலாம். சில வண்டினங்களின் தலைபாகத்தில் மான் கொம்புகளைப்போலவும், வேறு சிலவற்றின் முகத்தில் காண்டா மிருகத்தின் முகத்தில் உள்ள கொம்பைப் போலும் காணலாம். இவைகளின் உடல் கருமையிலிருந்து பொன் நிறம் வரை உலகிலுள்ள எல்லா நிறங்களையும் காணலாம்!







அண்ணாமலை பல்கலைக் கழக விவசாயக் கல்லூரியை மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் சமீபத்தில் திறந்து வைத்தார்.



...ன்ற 11-ந்தேதி மயிலை ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் ...ன்னை கவர்னர் மேதி நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியாருக்கும் கலாக்ஷேத் ...த்தைச் சேர்ந்த கௌரி அம்மாளுக்கும் தேசிய அகாடமிப் பரிசுகளை வழங்கினார்.

Printed and published By N. Rajagopalan at The 'Swadesamitran' press, 'Victory House' Mount Road Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 2514.
The Swadesamitran ...
Registered as a Newspaper in CEYLON

# சுதேசமித்திரன் புத்தக சாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

208219

அடியிற்கண்ட ரயில்வே ஸ்டேஷன்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள் :

1. பெங்களூர் கண்டோன்மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்
3. கோயமுத்தூர் ஜங்
4. திண்டுக்கல் ஜங்
5. ஈரோடு ஜங்
6. காரைக்குடி ஜங்
7. கும்பகோணம்
8. மதராஸ் பீச்
9. மதுரை ஜங்
10. மானாமதுரை ஜங்
11. மாயவரம் ஜங்
12. ஒலவக்கோடு ஜங்
13. பொள்ளாச்சி ஜங்
14. ரெயச்சூர்
15. தாம்பரம்
16. தென்காசி ஜங்
17. திருநெல்வேலி ஜங்
18. திருப்பதி (கிழக்கு)
19. திருவாரூர் ஜங்
20. திருச்சி ஜங்
21. தூத்துக்குடி
22. விழுப்புரம் ஜங்
23. விருதுநகர் ஜங்
24. விருத்தாசலம் ஜங்

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும், தினசரி, வாரப்பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப்பத்திரிகைகளும் கிடைக்கும்

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.